
# தமிழரசு

ஜனவரி 1-31, 1999 ரூ.6



பொங்கல்
சிறப்பு மலர்



முதல்வர் கலைஞரின்
சிங்கப்பூர் - மலேசியா
பயணச் சிறப்பிதழ்







## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# தமிழரசு

பொங்கல் சிறப்பிதழ்
முதலமைச்சர் கலைஞரின்
சிங்கப்பூர் – மலேசியப் பயணச் சிறப்பிதழ்
திருவள்ளுவராண்டு 2030
மார்கழி – தை
ஜனவரி 1–31, 1999
மலர் : 30 இதழ் : 13&14
விலை ரூ.6


## இந்த இதழில்...


★ முதல்வர் கலைஞரின் பொங்கல் வாழ்த்து .......... 2
★ இந்நாள் திருநாள் .......... 3
★ அறிவியல்–தொழில்நுட்பப் பயன்களை கிராமத் தொழில்களுக்கும் கொண்டு செல்வோம் .......... 5
★ உலக மனிதனை உருக்கி வார்க்க .......... 7
★ பொங்கட்டும் நன்மைகள் .......... 8
★ தமிழினத் திருநாள் .......... 9
★ திருவள்ளுவர் திருநாள் .......... 10
★ புதுப் பொங்கல் .......... 13
★ தமிழ்த்திருநாள் கண்ட நமச்சிவாயனார் .......... 14
★ சிங்கப்பூர் – மலேசியாவில் கலைஞர் .......... 17

**சுற்றுப்பயணத்தின் வண்ணப்படத் தொகுப்பு I-VIII**

★ சிங்கப்பூர் – மலேசியாவில் சங்கத்தமிழ் .......... 56
★ பாவேந்தரின் தமிழ் மொழியுணர்வு .......... 60
★ பொங்கல் போற்றுவோம்! .......... 62
★ இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு தரும் இனிய நினைவுகள் .......... 63
★ இந்த மாதத்தில் .......... 67
★ மனிதம் பேணுக .......... 70
★ வள்ளுவரின் அறிவியல் .......... 71


**முதல் பக்க அட்டையில்**

சிங்கப்பூர் – மலேசிய பிரதமர்களுடன்
முதலமைச்சர் கலைஞர்

**கடைசிப் பக்க அட்டையில்**

கோலாலம்பூர் வரவேற்பில்
முதலமைச்சர் கலைஞர்
உரையாற்றுகிறார்.





## முதல்வர் கலைஞரின்

# பொங்கல் வாழ்த்து

**பொ**ங்கல் விழா!

தமிழர்களின் பொன்னான விழா!

புன்னகை தவழும் விழா!

குழலும் யாழும் குழந்தையின் மழலையும்,
கோதையர் ஆடலும்,

குமரர்கள் வீரமும் எங்கும் நிறைந்திடும் இனிய விழா!

"அமிழ்தே வா! தைப்பொங்கல்

திருநாளே வாவா!

அகமகிழ்ச்சி கொண்டு வா

எல்லோர்க்கும் இங்கே!"

— என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் அன்பொழுக அழைத்து இன்பம் கண்ட இனிய விழா!

எந்த ஒரு விழாவின் பெருமையும், உழைப்பின் விளைவாகத்தான் அமைய முடியும். அந்த உழைப்பும், உறுதியும் பெருகிட இந்தப் பொங்கல் விழா ஊக்கமளிக்கிறது.

தமிழகம் முழுவதும் சீரான மழை — செழிப்பான விளைச்சல் என இந்த ஆண்டில் வேளாண்மையின் வளம் பெருகியுள்ள வேளையில் மகிழ்ச்சியுடன் பொங்கல் விழாவினைக் கொண்டாடிடும் தமிழக மக்கள் அனைவருக்கும் தமிழக அரசின் சார்பில் என் நெஞ்சார்ந்த பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உழைத்த உழைப்பின் பயன்கண்டு — அப்பயனை உற்றார் உறவினர்களுக்குப் பகிர்ந்து வழங்கி — வேளாண் பெருமக்கள் தமது உழைப்பில் உதவிய கால்நடைகளுக்கும், கதிரவனுக்கும், வான் மழைக்கும் நன்றி உணர்வினை வெளிப்படுத்திடும் அரிய பண்பாட்டுத் திருநாளாக தமிழ்ச் சமுதாயத்தினால் கொண்டாடப்பட்டு வரும் இந்தப் பொங்கல் திருநாளில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் உலகளாவிய மனித நேயம் வளர்ந்திட — "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" எனும் உயரிய சித்தாந்தம் கோலோச்சிட சாதி— மத வேறுபாடுகள் மறைந்து — சமதர்மச் சிந்தனைகள் மலர்ந்து மணம் பரப்பிடத்தக்க சூழ்நிலைகள் உலகம் முழுதும் பெருகிட அனைவரும் ஒன்றுபட்டு உழைத்திடுவோமெனச் சூளுரைப் போமாக!



# இந்நாள் திருநாள்

– பேரறிஞர் அண்ணா

இன்று திருநாள்! இல்லந்தோறும் இளைஞரும் முதியோரும், இருபாலரும், 'பொங்கலோ பொங்க'லென்று மகிழ்ச்சியுடன் குரலெழுப்பி, தாமும், தம்மைச் சூழ இருப்பவரை யாவுமே புதியதோர் பொலிவு பெற்றிருப்பது கண்டு, 'நலிவெலாம் ஒழிந்தது; நல்லன யாவையும் இனிக் கிடைத்திடும்' என்று நம்பி, அந்த மகிழ்ச்சிப் பெருக்குடன் மற்றையோரும், மனைதோறும் மனைதோறும் இருத்தல் கண்டு, நாடே விழாக்கோலம் பூண்டுள்ளது என்று பெருமிதம் கொள்வதற்கே அமைந்த விழாநாள்! 'பால் பொங்கிற்றா?' – என்று, அன்பு பொங்கக்கேட்டு, அகமகிழச் செய்யும் நன்னாள்! இன்பம் பொங்கும்! மனையெல்லாம் வழியும்! புத்தம் புதுக்கோலம் பெற்று, இல்லமெல்லாம் எழிலோவியமாகும்; அன்பு மணம் எங்கும் கமழும்; பூங்கா சென்ற புள்ளினமும், மலரிடை உலவும் வண்டினமும் 'கானம்' கிளப்பிடுவது போன்றதோர் களிப்பொலி' எங்கும் எழும்! பனி தொலைந்தது; பரிதி அப்பகையினை விரட்டினான்! நில மடந்தைக்குப் புதிய எழிலூட்டினான் – நடுக்கும் குளிர் இனி இல்லை; வாழ்வை நொறுக்கும் கேடுகட்கு இனி ஆதிக்கம் இல்லை!

விளைந்தது குவிந்திடக் கண்டோம்; வினையின் பயனைக் கொண்டோம்; செயலின் செழுமை விளங்கிற்று; செய்தொழிலின் மேன்மை துலங்கிற்று; உழவன் பெருமையை உலகே புகழ்கிறது; உலகுக்கே அத்தொழில் அச்சாணி என்று உளமகிழ்ந்து உரைக்கின்றனர் அறிஞர் பெருமக்கள்.

அவன் காலில் படிந்த 'சேறும் சகதியும்' வாழ்வுக்குச் சந்தனமாகி மணம் அளிக்கிறது. அவன் பூட்டிய ஏர் அளித்த வளம்,



பெருந்தேரோடும் நிலையை அரசர்க்கே அளிக்கிறது எனில், மற்றையோர் ஏற்றம் பெறாதிருப்பரோ! அவன் 'கஞ்சி' தான் குடித்தான்; கலயமோ மண்ணாலானது; கழனிப் பக்கம் அமர்ந்து கடும் உழைப்புக்குப் பிறகு, உச்சிப்போதிலே அவன் 'இச்சைக்கினியாள்' தந்தது!

இதோ, அவன் இஞ்சியும், மஞ்சளும், வாழையும், பலாவும், மாவும் பிறவும் அளித்து, தன் திறமையையும், வள்ளற்றன்மையையும் எடுத்துக் காட்டுகிறான், கல்லிலும், முள்ளிலும் நடந்தான் – காரிருள் கலையும் நேரமறிந்து எழுந்தான் – பகலெல்லாம் பாடுபட்டான் – முளைவிட்டதும் மகிழ்ந்தான் – களை கண்டு கவலை கொண்டான்; உழைத்தான், உழைத்தான் – கழனி பச்சை நிறம் பெற்றது; மீண்டும் பாடுபட்டான்; இதோ, பொன்னாடை போர்த்துக் கொண்டு புவிப் பெண்ணாள், செந்நெல்மணி மாலைகள் அணிந்து தென்றலாளுடன் தேனொழுகப் பேசி, தெவிட்டாது பாடி, கோலம் காட்டி நிற்கிறாள்!

ஓவியன், நீல நிற வானிலே பல்வேறு உருவமாக உலவிடும் கார் கண்டு, தீட்டு கோல் எடுப்பான்; ஏரடிக்கும் சிறு கோலுடைய உழவுப் பெருமகனோ, அண்ணாந்து பார்க்கிறான்; அகமகிழ்கிறான். எதன் பொருட்டு? தன் வாழ்வு சிறக்கும் வகை கண்டோம் என்பது பற்றி எண்ணி அல்ல; நாட்டில் நல்லறிவாளர் படித்து இன்புறும் ஏடுகள் குறித்து அல்ல; அவனைப் பற்றித் தமிழ்ப் பேரறிவாளர்கள் – மூதறிஞர்கள் கூறிச் சென்ற பொன்னுரைகள், அகத்திலும் புறத்திலும், தொகையிலும் கலம்பகத்திலும் ஏராளம், ஏராளம், அவன், அவை பற்றி ஏதும் அறியான்! அவனுக்காக வாதாடிய புலவர்களை அவன் கண்டானில்லை; கருத்தூட்டமளிக்கும் கவிவாணர் பலர் அவன் செய் தொழிலின் சிறப்பு குறித்துச் செப்பியுள்ள ஒப்பில் புலமை நிறை மணிகளை அவன் கண்டானில்லை; சேரன் அவையின் சிறப்பு, பாண்டியன் பாசறை அமைந்த பெருமை, சோழ நன்னாட்டான் பாடியும் மாடியும் கண்ட அருமை இவை பற்றி அவன் அறியான்; 'கருக்கலிலே போக வேண்டும் – பசுந்தழை பத்து வண்டி வேண்டும் – பண்ணையாரிடம் இன்னது

கூறவேண்டும் — வேலியை இவ்விதம் சரிசெய்ய வேண்டும்' என்ற இவை பற்றித்தான் பேசுகிறான். 'பயிர் எவ்வளவு காணும்' என்பதை உரைக்கிறான் — 'மணி' அவனுக்கல்ல என்பது தெரிந்தும் மகிழ்ச்சியுடன். அவன் அளித்திடும் 'அம்பாரம்' பண்ணையாரைப் பொன்னார் மேனியராக்குகிறது — புவியாளும் வாய்ப்பினைத் தருகிறது! அவன் தன் கண்ணாரப் பயிர் ஏறுவது கண்டு களிப்பெய்துகிறான் — தன் உழைப்பு நற்பலனைத் தந்தது என்பதறிந்து!

'உழவர் திருநாள், இப்பொங்கற் புதுநாள்' — என்பதை அனைவரும் இன்று அறிந்து போற்றுகின்றனர்.

பண்படுத்திப் பரம்படித்து, எருவிட்டு ஏர்பிடித்து, விதை தூவி நாற்று நட்டு, களை எடுத்து, கதிர் முற்றிடக் கண்டு அறுத்தெடுத்துப் புடைத்துக் குவித்து உணவுப்பொருளை உலகோர்க்கு உழவர் அளிக்கும் இவ்விழாதான், நாம் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் கொண்டாடும் ஒரே விழா!

ஒருநாள் — ஊரெல்லாம் விழா! ஒரு திங்களும் போதுமானதாக இல்லை — நமக்கு, நாட்டவரிடம் இவ்விழாவின், மாண்பினைக் குறித்து, வியந்து விரித்துரைத்திட!

ஊர், விழாக்கோலம் கொள்ள வேண்டும்; இசையும் கூத்தும், உடற்பயிற்சி விளையாட்டுகளும் இன்ன பிறவும் நடைபெற வேண்டும்; தமிழரின் தொன்மை பற்றியும், மூதாதையர் காலத்தில் இருந்த பொலிவு பற்றியும், அஃதே பிறகு நலிவாக மாறிவிடும்படி செய்த நயவஞ்சகர் போக்கு பற்றியும் முத்தமிழ் மூலம் ஆர்வமூட்டிவருதல் வேண்டும்.

பிற எந்த விழாவும், வீட்டோடு அமையும்; அல்லது, கோயிற் பெருவெளியில் நிகழும். மக்கள் மன்றம் கூடி, மகிழ்ச்சிப் பெருக்குடன் கலந்து களிப்பதற்கான விழாவாக இப்பொங்கல் புது நாளே அமைந்திருக்கிறது.

இந்த ஆண்டும், நாம் விழா கொண்டாடியும், மன்றமதில் நின்று மறத் தமிழன் மாண்பினைக் கூறியும், இன்று வந்துற்ற இழிநிலையைப் போக்குவது குறித்தும் எடுத்தியம்பத்தான் போகிறோம்.

செங்கரும்பு, பலா, மா, வாழை, செந்நெல், ஆவின்பால், புத்தாடை — ஏதேதோ தரலாம், தம்பி, உனக்கு! ஆனால் என்ன செய்வது! இவைகளை எல்லாம்விட என் 'அன்பு' இம்மலர் மூலம் உனக்குக் கிடைத்திடச் செய்தலே முறை என்று எண்ணினேன். உன்னிடம் கூறவேண்டுமென்று எண்ணிய கருத்துக்கள் பல; பலப்பல; ஒரு சிலவற்றைத்தான் கதை, கட்டுரை வடிவாக்கி அளித்திட முடிந்தது. இவற்றினைப் பார்க்கும்போது, உன் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் வேறு பல நற்செயலுக்கு உறைவிடமாக்கி, நமது நாட்டினுக்கு நல்கி, பொங்கலன்று காணும் மகிழ்ச்சி நாட்டின் பொதுமகிழ்ச்சி ஆவதற்கான நற்பணியாற்றிட வரவேண்டும் என்று அழைகிறேன் — உரிமையுடன் நம்பிக்கையுடன்.

'இன்று கூடவா, அண்ணா!' என்றா கேட்கிறாய்?

சரி, சரி, போ! போ! அதோ பொங்கும் இன்பத்தைப் பெறு, பொலிவு கண்டு அகமகிழ்ந்திரு; உள்ளம் நிறைந்திடும் உவகையுடன் உரையாடி களிப்புற்று இரு. நின் இல்லம் இன்பப் பூங்காவாகத் திகழட்டும்; அங்கு அறிவு மணம் கமழட்டும்; அன்பு பொங்கட்டும். அறம் தழைத்திடத்தக்க அரும்பணியாற்றிடும் ஆற்றல் எழட்டும்.

பொங்கற் புதுநாளன்று என் அன்பு நிறைந்த வாழ்த்தினை, வழங்கி மகிழ்கிறேன்.

அதோ, பெற்றோர் அழைக்கிறார்கள் போலும்; சென்று, செங்கரும்பின் சாறன்ன அன்புரை பெற்று இன்புற்றிரு!

*(1956 திராவிடநாடு பொங்கல் மலரிலிருந்து)* ★

## வாழ்த்தும் — வணக்கமும்

*'தமிழரசு'*
*வாசகர்களுக்கு...*
*முகவர்களுக்கு...*
*சந்தாதாரர்களுக்கு...*
*எழுத்தோவியங்களை*
*வழங்கிடும்*
*அறிஞர் பெருமக்களுக்கு...*
*எங்கள்*
*ஆக்கப் பணிகளில்*
*துவளாது துணையிருந்து*
*ஊக்குவிக்கும்*
*நண்பர்களுக்கு*
*அன்பார்ந்த*
*புத்தாண்டு — பொங்கல்*
*நல்வாழ்த்துக்களையும்,*
*வணக்கங்களையும்*
*தெரிவித்துக் கொள்கிறோம்.*

*— ஆசிரியர்*



# அறிவியல் – தொழில்நுட்பப் பயன்களை

# கிராமத் தொழில்களுக்கும் கொண்டு செல்வோம்

— முதலமைச்சர் கலைஞர்




"நமது பாரதப் பிரதமரை வரவேற்பதில் நான் பெருமகிழ்வெய்துகிறேன். அவர், இந்திய அறிவியல் காங்கிரசின் 86—வது கூட்ட தொடக்க விழாவிற்காக இங்கு வருகை புரிந்துள்ளார். அறிவியலுக்கும், அறிவியல் வளர்ச்சிப் போக்கிற்கும், விஞ்ஞானிகளுக்கும் ஊக்கம் அளிப்பது நமது நாட்டின் பொறுப்பாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த அறிவியல் கருத்தரங்கில் பாரதப் பிரதமரும் மற்ற தலைவர்களும் கலந்து கொள்வதிலிருந்தே இது வெளிப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் இந்தியாவிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் விஞ்ஞானிகள் பலர் கலந்து கொள்வதன் மூலம் இவ்விழாவினைச் சிறப்படையச் செய்வது கண்டு நான் மகிழ்வடைகிறேன். அதிலும் குறிப்பாக, உயிரியல் மற்றும் மருத்துவத்தில் நோபல் பரிசுகளைப் பெற்ற பேராசிரியர் ஜே.டி. வாட்சன், பேராசிரியர் ஃப்ரெட்ரிக் ராபின்சன் ஆகிய இருவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். சென்னை மாநகரத்தில் இத்தகையதொரு அறிவியல் கருத்தரங்கு 40 ஆண்டுகளுக்குப் பிறகு நடப்பது மேலும் மகிழ்ச்சி அளிக்கிறது.

இன்று அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் அதாவது உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் இந்தியாவில் அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் நன்கு வேரூன்றியுள்ளது. பூச்சிக் கொல்லிகள் மற்றும் ரசாயன உரங்கள் ஆகியவற்றிற்குப் புதிய மாற்றுப் பொருட்களைக் கண்டுபிடித்து செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது என்பதை அனைவரும் அறிவர்.

நாம் அடுத்த நூற்றாண்டை நோக்கி அடியெடுத்து வைப்பதால் இக்கருத்தரங்கின் நோக்கம், அதாவது புதிய உயிர் — அறிவியல் வாய்ப்புகளையும், சவால்களையும் எதிர்நோக்க ஏற்புடையதாய் அமைந்துள்ளது.

தமிழ்நாடு இத்துறையில் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்துள்ளது. மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவரால் 29.7.1998 அன்று மகளிருக்கான பொன்விழா உயிர் தொழில் நுட்பவியல் பூங்கா நிறுவப்பட்டது.

டானிடெக் (TANITEC) மூலம் கொண்டு வரப்பட்ட கல்வித்திட்டங்களும் டிட்கோவால் அமைக்கப்பட்ட டைடல் பூங்காவும் தமிழக அரசால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

தமிழ்நாட்டில் அறிவியலுக்கும், தொழில் நுட்பவியலுக்கும் எப்போதும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. நமது மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்விக்கு அளிக்கப்பட்டு வரும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இந்நாட்டிலேயே மிகவும் சிறந்ததாக உள்ளது என்பது யாவரும் அறிந்ததே. உயிர் தொழில் நுட்பவியல் மற்றும் தொழில் வளர்ச்சியில் திறன் பெற இது பெரிதும் உதவியாக அமையும். உலக அளவில் ஈடுகொடுக்க இம்முயற்சி பெரிதும் உதவும்.

அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர்களான திரு. இராமானுஜம், திரு.ஜி.என். இராமச்சந்திரன் திரு.ஏ.இராமச்சந்திரன், திரு. நாயுடம்மா, திரு. சி.வி. இராமன், திரு. கே.எஸ். கிருஷ்ணன், திரு.எஸ். சந்திரசேகர், திரு. என்.வர்கீஸ் குரியன், திரு. அப்துல் கலாம் ஆகியோருக்கும், மற்றும் பலருக்கும் நாம் பல வகையில் கடமைப் பட்டுள்ளோம்.

இப்பெருந்தகையாளர்கள் அனைவரும் இம்மாநிலத்தில்தான் கல்வி கற்றார்கள். அவர்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் உலகிற்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

நமது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் நமது பொது மக்களிடையே பல ஆண்டுகளுக்கு முன்பு நிலவிய சூழ்நிலையைப் பின்வருமாறு விளக்கியுள்ளார் :

"எமதர்ம ராஜாவின் வாகனம் உங்களுக்குத் தெரியுமா?" என்று நமது மக்களைக் கேட்டால், அவர்கள் "எருமை" என்று உடனடியாக பதிலளிப்பர்.

ஆனால், "வானூர்தியைக் கண்டுபிடித்தது யார்"? என்று கேட்டால் அவர்கள் தெரியாது என்று பதிலளிப்பர்".

தற்போது நிலைமை முற்றிலுமாக மாறியுள்ளது. மிகவும் உட்பகுதியில் அமைந்துள்ள கிராமத்தில் உள்ள சாதாரணமான ஒருவர், அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக்கூட நன்கறிந்துள்ளார். அவர்கள் கணினி மற்றும் இணையம் போன்ற சாதனங்களைப் பற்றி அறிந்துள்ளதுடன் மட்டுமல்லாது போக்ரான் மற்றும் அணுகுண்டு பற்றியும் அறிந்துள்ளனர்.

தகவல் —தொழில்நுட்பவியல் இந்த உலகத்தை ஒரு "உலக கிராமமாக" மாற்றியுள்ளது.

இவ்வாறாக அறிவியலும், தொழில்நுட்பவியலும் தற்போது அதன் உச்ச நிலையை எய்தியுள்ளன.

இப்போதும் கூட பொதுமக்களுக்கும் அவர்கள் அறிவியல் குறித்துப் பெற்றுள்ள ஞானத்திற்கும் இடையே பெரிய இடைவெளி உள்ளது. எனவே, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியலின் பயன்களைப் பெரிய தொழில்களுக்கும் கிராமத் தொழில்களுக்கும் கொண்டு செல்ல நாம் தொடர்ந்து முயற்சி செய்யவேண்டியுள்ளது.

"அறிவியல் மாநகருக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிப்பதற்காக நமது அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கருத்தரங்குகளுக்கும் பொருட்காட்சிகளுக்கும், தொழில் நுட்ப வளர்ச்சிப் பூங்கா, குழந்தைகளுக்கான அறிவியல் பூங்கா, அறிவியல் தொழில் நுட்பத் தகவல் கட்டமைப்பு போன்றவற்றிற்காக உலகத் தரத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ள கருத்தரங்கு மையமும், இவற்றில் அடங்கும். இந்த முயற்சிகள் சென்னையில் உள்ள அனைத்து நிறுவனங்களின் உடனுழைப்புடன் திட்டமிடப்பட்டுள்ளன. அவர்கள், தற்போது இந்தப் பெரிய அளவிலான கருத்தரங்கை நடத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

இத்தகவல்கள் அனைத்தும் கிராம மக்களுக்குச் சென்றடையும் வகையில் கிராமங்களுக்குக் கணினி இணைய வசதிகளைச் செய்து கொடுக்கும், அதிலும் குறிப்பாக, தமிழில் செய்து கொடுக்கும் முயற்சி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தகைய நவீன தகவல் தொடர்பு சாதனங்கள், கம்பியில்லாத் தந்தி மற்றும் கணினி இணையத் தகவல் தொடர்பு ஏற்பாடுகள் இந்த மாநாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையறிந்து நான் உண்மையில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்திய அறிவியல் காங்கிரஸ் அசோசியேஷனுக்காகக் கணினியில் தனியிடம் (Home Page) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இராமானுஜம் கணினி மையம், இத்திட்டத்திற்கெனப் பதிவு செய்துள்ள பல நிறுவனங்களைக் கணினிமயமாக்கும் பணியில் மிகவும்தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இத்துடன், சென்னைப் பல்கலைக் கழகம், கணித அறிவியல் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து சென்னையைச் சேர்ந்த புகழ்பெற்ற கணித மேதையின் பெயரில், "இராமானுஜம் அருங்காட்சியகம்" ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை நான் அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், மத்திய அரசின் ஆதரவை அளிப்பதன் மூலம் இந்த அருங்காட்சியகத்தைத் தேசிய சொத்தாக்குவது குறித்து பரிசீலிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

விருது பெற்றுள்ள அனைவருக்கும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்களனைவரும், இனிவரும் ஆண்டுகளில் நாட்டிற்குச் செய்யும் தொண்டினைத் தொடர்ந்து ஆற்றிவர வேண்டுமென்றும், நம் நாட்டை உயரளவில் ஒளிபெறச் செய்வீர்கள் என்றும் நாம் நம்புகிறேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த விழாவில், விழா மலரை வெளியிடுவது குறித்து மிகவும் மகிழ்கிறேன்.

— மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 3.1.1999 அன்று இந்திய அறிவியல் கருத்தரங்கின் 86வது கூட்டத்தின் தொடக்க விழாவில் 'விழா மலரை' வெளியிட்டு ஆற்றிய உரை.

★ ★ ★

# உலக மனிதனை உருக்கி வார்க்க...



- தமிழன்பன்

சூரியனையும் பூமியையும்
தொட்டுக் கொண்டு பேசினான்
கணியன் பூங்குன்றன்
தமிழ் அவன் சொற்களுள் புகுந்து
திசைகளை விரிவு படுத்தியது.

எல்லா நாட்டு
அருவிகளிலும் நதிகளிலும்,
மனித இரத்தம் ஒன்றே என்று
ஒருகோடி உதடுகளை இயற்கை திறந்தது.

ஊர் ஒவ்வொன்றிலும் வீடு ஒவ்வொன்றிலும்
கதவில்லா உறவுகள்
காத்திருந்தன மனிதன் வருகைக்காக.

பூங்குன்றன் வாக்கியங்களுக்குள் வந்து
பொன்னும் மணியும் வைரமும்
வெளிச்சம் அருந்தி வெளியே புறப்பட்டன.

அவனுடைய அகவலோசையில் அன்பின்
இதயவாசம் கமழ்ந்தது
சந்தனமும் பன்னீரும் சவ்வாதும்
'எப்படி அன்பைக் கமழ்வது?'
இப்படி எண்ணத் தொடங்கின.

பூங்குன்றன் கண்கள் இரண்டிலும்
சமமாய் உட்கார்ந்தனர்
சிறியவரும் பெரியவரும்.

தராசுகள் தயாரித்த பார்வைகளைச்
சமத்துவம்
சமூக வீதிக்குக் கொண்டு வந்தது.

வியத்தலும், மகிழ்தலும், இனிமேல் தங்களுக்கு
வேலையில்லை என்று
விலகியபோது
ஊரார் வைத்திருந்த சிலுவையும் தொட்டிலும்
உபோயகம் இழந்தன.

தீதும் நன்றும்
எங்கென்று தேடியவர்கள்
அவன் காட்டிய வழியில் நடந்து
திரும்பி வந்தனர் தங்களுக்கு உள்ளேயே.

சுரமும் வழுச்சுரமும்
இருப்பது பாடலில் இல்லை; தங்கள்
குரல்களில் என்று உணரத் தொடங்கினர்.

பட்டாம்பூச்சிச் சிறகுகளில்
ஒட்டிக் கொண்டிருக்கும் புன்னகையும்,
மழைவில்லில் தில்லானா பாடும் வண்ணங்களும்
குழந்தைகள் விழிகளைச்
சித்திரப் படுத்தும் நட்சத்திரங்களும்
திரைமறைவுகளில் ஆலோசனை செய்வதே இல்லை!
ஆனால்...

அர்த்தங்களை மாற்றி வைத்து
வார்த்தையை, வாழ்க்கையை
அழுக்காக்கி விடுகிறான் மனிதன்!
திசை மாற்றி வைப்பானோ மனிதன் என்று
தினம் தினம் விடியல்கூடத்
தடுமாறி விடுகிறது!

மழை, நெருப்பு, காற்று, நிலா
ஆகியவை
பேசும் மொழிகளில் தாமும் இருக்கின்றன
ஈரம், வெப்பம், இசை, ஒளி
என்பனவும் இருக்கின்றன.
மனிதன் பேசும் மொழிகளில்
வெறியும் சுயநலமும், அச்சமும் வீம்பும்
இருக்கின்றன.
மனிதன் மட்டுமே இல்லாமற் போகிறான்.

எங்கெங்கும்

இந்தப் பூமியின்தோல் ஒன்றேதான்
என்ற பாப்லோ நெருடாவும்,
மனிதனைப் பாடுவேன் என்று கவிதையால்
உலகைக் கழுவிவைத்த
வால்ட்விட்மனும்
பூங்குன்றன் எழுத்தாணியைப்
புதுப்பித்துக் கொண்டவர்கள்.

இங்கும்

உலகமனிதனை உருக்கி வார்க்கக்
கொல்லுப் பட்டறை திறந்தனர்
பூங்குன்றன் பேரர்கள்!
இதோ
சத்தியச் சுத்தியல், சம்மட்டி ஓசை—
'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'


# பொங்கட்டும் நன்மைகள்

- கொடுமுடிக் கவிஞர் க.அ. பிரகாசம்.

★ வெயிலென்றும் மழையென்றும் பகலென்றும் இரவென்றும்
பாராமல் உழைத்த மக்கள்
வெற்றியுடன் கொண்டாடும் பொங்கலோ பொங்கலிது
விளையட்டும் நன்மை பலவே!

★ உயிர்தரும் ஐம்பூத வகைகளும் ஆனிரைக்
குலங்களும் உயர்வு பெறவே
உலகெலாம் பொதுவாகப் போற்றிடும் பொங்கலிது
உள்ளத்தில் மகிழ்ச்சி யுறவே!

★ துயிலாமல் அயராமல் உழைப்பைநிலை யாக்கிடும்
தூயவர்கள் காணும் பொங்கல்!
துளியளவும் மாசுமரு வில்லாமல் குமுகாயம்
துலங்கவே வளரும் பொங்கல்!



★ மயிலாடக் குயில்பாட மலர்ச்சோலை தளிர்த்திட
மழைவளம் பெருக வேண்டும்
மாந்தர்கள் இயற்கையைக் காத்திடும் முயற்சியில்
மனதார இறங்க வேண்டும்!

★ தெருவெங்கும் ஊர்வலம் திருவிழாக் கோலங்கள்
தெவிட்டாத காட்சி யின்பம்
செந்நெல்செங் கரும்போடு வாழையும் மஞ்சளும்
இஞ்சியும் குவியும் எங்கும்!

★ அருமையுற இல்லங்கள் தோறும்எழில் குடிகொள்ளும்
அமைதியும் அன்பும் தோன்றும்
ஆவாரை பூலப்பூ வேம்பினைக் கூட்டியே
அருட்காப்புக் கட்டு வார்கள்!

★ பெருமையுறப் பைந்தமிழ்ப் பண்பாடு பாரெலாம்
பிறங்கவே பொங்கல் பொங்கும்
பிணியற்ற இயற்கைநல் வாழ்க்கையால் பிறர்நலம்
பேணிடும் தன்மை வேண்டும்!

★ பொருந்தியன போற்றியே பொருந்தா தனவற்றைப்
போக்கியே நல்ல நிலைமை
பொங்கவே நன்மைகள் தங்கவே இவ்வேளை
பொங்கட்டும் பொங்கல் தானே! □



# தமிழினத் திருநாள்

- கவிஞர். சாமி.பழனியப்பன்



மனிதனைத் தெய்வ மாக்கி
வானகந் தன்னை இங்கே
இனிதுற மலர்விக் கின்ற
இன்னருங் குறளைத் தந்த
நனிபுகழ் வள்ளு வர்க்கு
நாம்விழா எடுப்ப தல்லால்
தினையள வேனும் வாழ்வில்
திருக்குறள் மணங்கண் டோமா?

குறள்வழி வாழ்வு கண்டால்
கொடுமைகள் மாளும்; இங்கே
அறநெறி தழைக்கும்; நல்ல
அருள்மணம் கமழும்; இன்பம்
குறைவிலா தோங்கும்; நந்தம்
குறுமனம் விரியும்; இம்மண்
குறள்தந்த மண்ணென் றேத்திக்
கூறுதல் மிகப்பொ ருந்தும்!

வான்மறை தந்தே இந்த
வையத்துப் புகழைக் கொண்ட
தேன்தமிழ் நாடென் றேநாம்
சிறப்புறப் பேசு கின்றோம்.
வான்மறை வகுத்துத் தந்த
வாழ்வியல் கொளம றந்தோம்
வீண்புகழ் பேசி நாளை
வீணுறக் களிக்கின் றோமே!

அறுபதாண் டென்கின் றோமே
அறுபதும் கழிந்த பின்னர்
மறுபடி பிறக்கும் ஆண்டு
மறுகணக் காகுமல்லால்
அறுபத்தொன் றாவ தில்லை!
ஆதலால் தமிழ ராண்டைக்
குறள்தந்த புலவன் பேரால்
கொள்வதே முறைமை ஆகும்!

தைத்திங்கள் முதல்நாள் தன்னைத்
தமிழாண்டின் தலைநா ளாக்கித்
தைப்பொங்கல் திருநாள் தன்னைத்
தமிழினத் திருநா ளாக்கி,
வித்தப் பொங்கல் நாளில்
விரிபுகழ் குறளுக் கிங்கே
நித்தில உரையாய் வாழ
நெஞ்சிலே உறுதி கொள்வோம்!



திருவள்ளுவர் திருநாள் விழா 16.1.99 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. அவ்விழாவில் திருவள்ளுவர் விருதினை டாக்டர் வா.செ. குழந்தைசாமிக்கு வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...

நம்முடைய பெருமதிப்பிற்குரிய அறிஞர் பெருந்தகை குழந்தைசாமி அவர்களுக்கு திருவள்ளுவர் விருது வழங்கியது மாத்திரம் இல்லாமல், சிறந்த நூல்கள் எழுதிய ஆசிரியப் பெருமக்களுக்கு, எழுத்தாளப் பெருமக்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பரிசுத் தொகையும் கடந்த ஆண்டினை விட இந்த ஆண்டு அதிகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

**நூல்களின் பதிப்பகத்தாருக்கும் பரிசுத்தொகை**

நூல்களை பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டன. அவர்கள் வரிசையாக மேடைக்கு வந்து சான்றிதழ்கள் பெறும்போதுதான், அமைச்சர் தமிழ்க்குடிமகனைப் பார்த்து – "இவர்களுக்கு எவ்வளவு பரிசுத் தொகை" என்று கேட்டேன். "இல்லை சான்றிதழ் மாத்திரம்தான்" என்றார்.

அடுத்த ஆண்டு முதல் பதிப்பாளர்களுக்கும் – வெளியீட்டாளர்களுக்கும் பரிசுத் தொகை வழங்கவேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அது ஆணையாக விரைவில் வெளியிடப்படும் என்ற உறுதியையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

குழந்தைகளுக்குப் பரிசை வழங்கிவிட்டு, பெற்றவளுக்கு அல்லது காப்பாற்றியவளுக்குத் தரவில்லை என்றால் அது தவறாகிவிடும். வெளியீட்டாளர்கள் ஒரு அழகிய நூலை மக்களுக்குத் தருகின்ற அந்த வாய்ப்பினைப் பெற்றவர்கள். அவர்கள் அமர்ந்திருக்கும்போதே அவர்களால் வெளியிடப்பட்ட புத்தகங்களுக்கு அல்லது அதை எழுதிய ஆசிரியர்களுக்குப் பரிசளிக்கும்போது நமக்கு வெறும் சான்றிதழ்தானா என்று அவர்கள் எண்ணி, கவலைப்படுவதேகூட பரிசுத்தொகை பெறுகின்றவர்களுக்கு நல்லதல்ல என்பதால் புத்தகங்களை வெளியிடுகின்ற பதிப்பகத்தாருக்கும் ஒரு உரிய தொகையை வழங்கவேண்டுமென்ற என்னுடைய ஆசை அடுத்த ஆண்டு நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

அமைச்சர்கள் கலந்துகொள்கின்ற விழா என்றாலே அதிலே முறையீடுகள், கோரிக்கைகள் வைக்கப்படுவது வாடிக்கை. அதற்கொப்ப என்னுடைய தம்பி கவிஞர் வைரமுத்து அவர்கள் ஒரு வேண்டுகோளை இந்த அவையின் முன் வைத்தார். "இதுதான் சரியான நேரம், காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்று எங்கேயோ சொல்லவேண்டியதை – யாரோ செய்து கொண்டிருப்பதை என்னைப் பார்த்துச் சொல்லி "திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்க முழக்கமிடு" என்று கேட்டுக் கொண்டார்.

திருக்குறள் தேசிய நூலாக ஆக்கப்படுமேயானால், – அதற்காக நான் மகிழ்ச்சி அடையமாட்டேன். உலக நூலை, ஒரு தேச அளவில், சுருக்குவதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அது உலகப் பெருநூல், உலகத் திரு நூல். அதை தேச அளவில் மட்டும், ஒரு நாட்டு அளவில் சுருக்குவது என்னால் ஏற்றுக்கொள்ள முடியாதது. நான் இப்படிச் சொன்னதற்காக அவர்கள் திருக்குறளை தேசிய நூலாக ஆக்குவார்களேயானால், கவிஞர் வைரமுத்து போன்றவர்கள் மகிழ்ச்சியடையட்டும், நான் அனுமதிக்கிறேன்.


**தமிழைச் செம்மொழியாக ஆக்க மத்திய அரசுக்கு வேண்டுகோள்**

ஒரு கோரிக்கை – தமிழக அரசால் நீண்ட நெடுங்காலமாக மத்திய அரசுக்கு தொடர்ந்து வைக்கப்பட்டு வருகின்றது. தமிழைச் செம்மொழி (Classical Language) என்று ஆக்க வேண்டும். அழைக்க வேண்டுமென்ற இந்த முறையீட்டை நான் நேரிலும் மத்திய அமைச்சர்களிடம் சொல்லியிருக்கிறேன். மடல்கள் வாயிலாகவும் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறேன். அதனை மத்திய அரசு விரைவில் செய்திட வேண்டுமென்ற வேண்டுகோளை அறிஞர் பெருந்தகை குழந்தைசாமி அவர்களுக்கு விருது வழங்குகின்ற விழாவில் மத்திய அரசின் காதிலே விழுமென்ற நம்பிக்கையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் செம்மொழி என்பதற்கு எந்தவிதமான பட்டிமன்றமும் நடத்தத் தேவையில்லை. அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு பேருண்மை அது. அந்த உண்மைக்கு, நாங்கள் விடுக்கின்ற வேண்டுகோளுக் கிணங்கி தமிழைச் செம்மொழியாக ஆக்குகின்ற – அறிவிக்கின்ற இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்க வேண்டுமென்று மீண்டும் மீண்டும் இந்த அவையில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு திருவள்ளுவர் விருதைப் பெறுகின்ற குழந்தைசாமி அவர்கள் கலைஞருடைய கரங்களால் இதைப் பெறுவதால் தான் பெருமை அடைகிறேன் என்று சொன்னார்கள். இது ஒரு அவை அடக்கம் என்றுதான் நான் எடுத்துக் கொள்வேனேயல்லாமல் நிச்சயமாக ஒரு துளி அளவுகூட எனக்கு ஆணவத்தை அது வழங்காது என்பதை அறிஞர் குழந்தைசாமி அவர்களே நன்கறிவார்கள்.

எழுத்தை முதலிலே வைக்கவில்லை. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப என்று தான் தொடங்குகிறான். அது அடுத்து வருகின்ற கண் என்ற சொல்லுக்காக – எதுகை, மோனை என்பார்களே அதற்காக வைக்கப்பட்டது என்று சொல்லப்படும் சொல் அல்ல. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப என்று அவர் சொல்வதில் இருந்தே அவர் எழுத்தை முன்வைக்க முயன்று அதிலே இலக்கணம் சரியாக வராத காரணத்தால் எண் என்று சொன்னார் என்று யாராவது சொல்வார்களேயானால் அதற்கு தான் தருகின்ற விளக்கம் இதுதான் என்று குறிப்பிடுகிறார் – எண்ணென்ப ஏனை எழுத்தென்ப என்று சொல்வதிலிருந்தே, எண்தான் மிகவும் முக்கியமானது. ஏனையவைகளில் ஒன்று எழுத்து என்று வெகு அழகாகக் குறிப்பிட்ட, அந்த வாக்கியத்தைப் பார்த்து நான் மலைத்துப் போனேன்; எவ்வளவு மதி நுட்பத்தோடு, சிந்தனை ஆற்றலோடு இந்தக் கருத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று.



## அறிஞர்களுக்கு விருது வழங்குவதில் நான் பெருமை அடைகிறேன்

அவரைப் போன்ற பெரியவர்களுக்கு, பெருந்தகைகளுக்கு, அறிஞர் பெருமக்களுக்கு விருது வழங்குவதால் நான் சிறப்படைகிறேன். பெருமையடைகிறேன். என்னுடைய சுயநலத்தின் காரணமாகத்தான் அவரைப் போன்றவர்களுக்கு இத்தகைய விருதுகள் வழங்கப்படுகின்றன என்ற உண்மையை – உண்மையான உண்மையை நான் இங்கே தெரிவிக்கிறேன்.

அவர்கள் "வாழும் வள்ளுவம்" என்கின்ற ஒரு நூலை எழுதியிருக்கிறார்கள். அந்த நூலில் எண், எழுத்து என்ற இந்த இரண்டு கருத்துக்களையும் குறித்து குறிப்பிடும்போது, வள்ளுவன் எண், எழுத்து என்பதிலே

## பதவிகளுக்கு மேலும் சிறப்பு தேடித் தந்தவர்

அவருடைய சிறப்புக்கள், அவருக்குக் கிடைத்த புகழ், பெருமை குறித்தெல்லாம் தம்பி வைரமுத்து அவர்களும், விழாத் தலைவர் தமிழ்க்குடிமகன் அவர்களும், தம்பி துரைமுருகன் அவர்களும் வெகுவிளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பொறியியல் துறையில், தொழில்நுட்ப இயலில் பல பட்டங்களைப் பெற்றவர் அவர். நீர் வளத்துறையில் முனைவர் பட்டம் பெற்றவர் அவர். யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகம், புதுவை மையப் பல்கலைக்கழகம் இவற்றால் டி.லிட். பட்டம் பெற்றவர் அவர்.

நீர்வளத் துறையின் பேராசிரியராகவும், தொழில்நுட்பத் துறையின் இயக்குநராகவும் விளங்கியவர். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்,

அண்ணா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், இந்திராகாந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தினுடைய துணைவேந்தர் ஆகிய பொறுப்பு மிகுந்த, சிறப்பு நிறைந்த பதவிகளையேற்று, அந்தப் பதவிகளுக்கு மேலும் சிறப்பு தேடித் தந்தவர்.

## குழந்தைசாமி மாதிரியே தமிழ் இளைஞர்கள் வளரவேண்டும்

இவருடைய கண்டுபிடிப்புகளிலே ஒன்று இங்கே குறிப்பிட்டார்கள் – அதற்குப் பெயர் "குழந்தைசாமி மாதிரி" என்று சொன்னார்கள். அது நீர்வளத்துறை கண்டுபிடிப்பு. 'குழந்தைசாமி மாதிரி' நீர்வளத்துறை கண்டுபிடிப்பு மாத்திரம் இருந்தால்போதாது. குழந்தைசாமி மாதிரியே தமிழகத்திலே உள்ள இளைஞர்கள் எல்லாம் வளர வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை.

அடக்கம், அறிவுத் திறன், ஆற்றல், இவைகள் எல்லாவற்றையும் மீறிய நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று, சமுதாயம் மேலோங்க வேண்டுமே என்ற ஆசைக் கனவில் அன்றாடம் மிதந்து கொண்டிருக்கின்ற ஒரு அரிய மனிதரைக் காண வேண்டுமேயானால் அந்த மனிதர் குழந்தைசாமிதான் என்று நான் அடையாளம் காட்டுவேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இங்கே பேசிய சில நண்பர்கள் குறிப்பிட்டதைப் போல் இந்த திருவள்ளுவர் விருது வழங்குகின்ற இந்த நிகழ்வு தமிழக அரசு கொண்டு வந்த திட்டம் என்றாலுங்கூட – இன்றைக்கு நான் இந்த விருது வழங்குகின்ற காரணத்தால், நான் கொண்டு வந்த திட்டம், என்னுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்த திட்டம் என்று யாரும் தவறாக எண்ணி விடக்கூடாது. என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த நேரத்தில்தான் 1986ஆம் ஆண்டு திருவள்ளுவர் விருது வழங்குகின்ற இந்த நிகழ்வு உருவாக்கப்பட்டு, தொடர்ந்து பல அறிஞர் பெருமக்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

விருது வழங்கும்போது அளிக்கப்பட்ட தொகை பத்தாயிரம் இருபதாயிரம் என்றிருந்து இன்றைக்கு ஒரு இலட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கின்றது. அதைக்கூட குழந்தைசாமி அவர்கள் – அரசின் சார்பிலே ஒரு இலட்சம் என்று வழங்கிவிட்டால் பிறகு அரசினுடைய கருவூலம் என்ன ஆவது என்ற ஒரு கேள்வியை எழுப்பி உங்களையெல்லாம் திடுக்கிட வைத்தார்.

அரசின் கருவூலத்திலிருந்து கோடி கோடியாகப் போனபோதெல்லாம் கவலைப்படாத மக்கள் வாழும் இந்த நாட்டில் ஒரு இலட்சம் ரூபாய் நல்ல காரியத்திற்காக – பல குழந்தைசாமிகளை தமிழகத்திலே உருவாக்குவதற்காக பல விஞ்ஞான வித்தகர்களை, பல அறிவுலக மேதைகளை தமிழகத்திலே படைப்பதற்காக இலட்சம் ரூபாய் ஆண்டுக்கு ஒரு முறை என்ன, மாதாமாதம் கூட ஒரு இலட்சம் ரூபாய் வழங்கலாம்.

## திருவள்ளுவர் அறிவுரைகளை ஏற்று சமுதாயம் சீர்பட முடியும்

திருவள்ளுவரின் மேன்மைகளை, குறளின் சிறப்புக்களை என்னுடைய தம்பி கவிஞர் வைரமுத்து இங்கே எடுத்துச் சொன்னபோதும் நம்முடைய குழந்தைசாமி அவர்களும், தமிழ்க்குடிமகன் அவர்களும், தம்பி துரைமுருகனும் இங்கே எடுத்துச் சொன்னபோதும் எத்தகைய வழிகாட்டியை இந்தத் தமிழகம் பெற்றிருக்கிறது என்பதை எண்ணியெண்ணி நாம் பெருமையடைகிறோம். அந்த வழிகாட்டியின் பெயரால் ஒரு விருதை வழங்குவதும் – இன்றைக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்று வழங்குவது மூக்கிலே விரல் வைத்து ஆச்சரியப்படத்தக்கதாக இருந்தாலுங்கூட, எதிர்காலத்திலே இந்தத் தொகையும்கூட இரட்டிப்பாக – மும்மடங்காக ஆகலாம் என்ற அளவிற்கு உயர்ந்தால்தான் திருவள்ளுவருடைய நெறிகளை, முறைகளை, அவருடைய அறிவுரைகளை இந்தச் சமுதாயம் ஏற்றுச் சீர்பட முடியும்.

திருவள்ளுவருக்கு நாம் செய்துள்ள சிறப்புகள் நமக்காகத்தான். திருவள்ளுவரை பெருமைப்படுத்துவதற்காக அல்ல. திருவள்ளுவருக்கு கோட்டம் கட்டினோம் என்றால், திருவள்ளுவருக்கு குமரி முனையிலே சிலை வைக்கிறோமென்றால், திருவள்ளுவருடைய படங்களை பேருந்துகளிலே தொங்கவிட்டு, ஒவ்வொரு படத்தின் கீழும் ஒரு திருக்குறளை எழுதினோமென்றால் இதற்கெல்லாம் காரணம், அந்த வழியிலே இந்தச் சமுதாயம் மலர வேண்டும் என்பதற்காகத்தான். அந்த மறுமலர்ச்சியை நாம் பெற்றாக வேண்டும்.

## இனிவரும் உலகத்திற்காக திருவள்ளுவர் சொன்ன அரிய கருத்துக்கள்

திருவள்ளுவர் காலத்திலே இல்லாத முன்னேற்றம் இல்லாத விஞ்ஞானம் இன்றைக்கு இருக்கிறது. இதை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இவைகள் எல்லாம் இல்லாத காலத்திலேயே திருவள்ளுவர் இனிவரும் உலகத்திற்காக பலவற்றைச் சொல்லியிருக்கிறார். அந்த இனிவரும் உலகத்திற்காக அவர் சொல்லியிருக்கின்ற அரிய கருத்துக்களையெல்லாம் நாம் வீணாக்கி விடாமல் அவைகளையெல்லாம் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வேண்டுகோளோடு என் உரையை நிறைவு செய்து நம்முடைய அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய குழந்தைசாமி அவர்களுக்கும், இங்கே பரிசு பெற்ற நூலாசிரியர்களுக்கும் எழுத்தாள நண்பர்களுக்கும், பதிப்பகத்தாருக்கும் என்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ★

# புதுப் பொங்கல்

- பந்தல்குடி. சு. சுப்பையா



செங்கதிர் தொழுது நாளும்
செம்புலம் உழுத தோழா!
மங்கலம் உயர்ந்து மண்ணில்
மாண்புறு உவகை பொங்க
எங்கணும் சிறந்து நன்றாய்
ஏற்றமே தழைப்ப தற்கு
பொங்கலை வேண்டி நீயும்
பொழுதெலாம் உழைத்து நின்றாய்!

சேற்றிலே ஏரைப் பூட்டி
செழுவயல் கலக்கி நல்ல
நாற்றுகள் நட்டு பயிரை
நன்றாகக் காத்து மக்கள்
சோற்றையே விரும்பி அள்ள
சோம்பலும் சிறிதும் இன்றி
ஊற்றிலே சுரத்தல் போல
உயிரெனும் உணவு தந்தாய்!

சித்திரை மாதம் தொட்டே
சீர்மிகு வாழ்வை எண்ணி
நித்திரை ஏதும் இன்றி
நீங்கா துழைத்த தாலே
எத்தனை விளைச்சல் இங்கே
எண்ணியே உள்ளம் துள்ள
இத்தரை மீதில் தந்தாய்
இனிதாக வாழ்த்து கின்றேன்!

கனிமிகு வாழை என்றும்
கரும்புடன் மஞ்சள் என்றும்
நனிமிகு செந்நெல் என்றும்
நறுமண இஞ்சி என்றும்
பனிமிகு துயரம் நீக்கி
பற்பல காய்கள் என்றும்
அணிபெற உழைத்து ஈந்தாய்
அன்பொடு வாழ்த்து கின்றேன்!



உள்ளமெனும் பானை தன்னில்
உழைப்பெனும் அரிசி இட்டு
கள்ளமிலா அன்பு என்னும்
கனிச்சாறு வெல்ல மிட்டு
சொல்லரிய ஒருமை என்னும்
சுவைப்புதுப் பொங்கல் வைப்போம்;
நல்லதை நாடும் நாளில்
நானிலம் உண்ணப் படைப்போம்!

*பொங்குக பொங்கல் பொங்குக எங்கணும்!*
*பொங்குக பொங்கல் இன்பமே எய்துக.*
*பொங்கற் புதுநாள் போந்தது போந்தது*
*எங்கணும் எவர்க்கும் இன்பமே எய்துக!*
*பொங்குக பொங்கல், பொங்குக பொங்கல்!*
*ஒக்கலும் மக்களும் உவந்துடன் உண்க!*
*மக்கள் அனைவரும் மகிழ்ந்தே உண்க!*
*புத்துடை உடுமின்; புத்தணி அணிமின்!*
*பக்தி கொண்டே பரமனைப் பணிமின்!*
*நந்தம் தமிழ்மொழி நலம்பெற்றோங்கிட*
*எந்தக் காலும் இன்புற வாழ்த்துக!*
*தண்கடற் பரப்பிற் சாரும் மணலிலும்*
*பண்புற வானில் பரவும் மீனினும்*
*வாழ்க அனைவரும் வாழ்க பல்லாண்டு!*
*வாழ்க பல்லாண்டு வளமெலாம் படைத்தே!*

முதன்முதலாகப் பொங்கல் விழாவைத் தமிழ்த் திருநாளாகக் கொண்டாடத் தலைப்பட்ட தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாயனார் வழங்கிய திருநாள் வாழ்த்து இதுவாகும்.



உரியதாயும் அமைதலைக் கண்டறிந்தார். வாழ்கின்ற தமிழ் மக்கள் எல்லோரும், தாய்மொழிப் பற்றும் தமிழ் மொழித் தெளிவும் கொள்ளுதற்கு இத்திருநாளே ஏற்ற நன்னாள் எனக் கொண்டார்.

பண்டைத் தமிழரின் பெருவாழ்வை – சங்கத் தமிழ் இலக்கிய மாட்சியை – தமிழர்கள் பயின்ற கூத்தை – இத்திருநாளில் விளக்கியுரைத்தும், பாடிக் கேட்டும், ஆடிக் கண்டும் மக்கள் அறிந்து மகிழ வேண்டும் என்று விரும்பினார்.

அதன் பயனாகவே, பழந்தமிழ்ப் பொங்கல் விழா, உழவரும் பிறரும் மகிழ்ந்த கொண்டாட்டம், முத்தமிழ் முழங்கும் தமிழ்த் திருநாளாய் வண்ணங் கொண்டது. நமச்சிவாயனார் தொடங்கி வைத்த தமிழ்த் திருநாளே, தென்னவர் எழுச்சிக்கு உரமூட்டும் திராவிடர் திருநாளாகவும் கொண்டாடப்படுவதாயிற்று.

# தமிழ்த் திருநாள் கண்ட நமச்சிவாயனார்

**-பேராசிரியர் க. அன்பழகன்**

இந்த நூற்றாண்டின் முதற்பகுதியில் தமிழ் மக்கள் வாழ்வு தமிழர் என்னும் உணர்வற்றுத் தட்டுத் தடுமாறி நின்றது. தமிழ் மரபு, தமிழர் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு என்பவை குறித்துத் தெளிவின்றி நிலை கெட்டு நின்றனர் தமிழர். தமிழ் கற்ற புலவர்களிலேயே பலர், சமயச் சார்பால் கருத்துக் குழம்பிக் கிடந்தனர் எனில் மக்களைப் பற்றிக் கூறவா வேண்டும்? தமிழ் கற்றார் சிலர், கற்றாருள்ளும் தெளிந்தார் மிகச் சிலர், அவருள்ளும் தெளிந்ததனை வெளியிடும் துணிவுடையாரோ அரியர்.

அந்நிலையை தெளிந்தார் **நமச்சிவாயனார்.** மக்களிடையே விளங்கிய பல்வேறு விழாக்களும், சில நம்பிக்கைகளும் சமயச் சார்பான கதைகளையும் வடமொழிவழி எழுந்த வழக்குகளையும் ஒட்டியே கைக்கொள்ளப்பட்டனவாதலையும், பொங்கல் விழா ஒன்று மட்டுமே தமிழர் மரபொடு பொருந்தியும், இயற்கை நெறியோடும் உழவுத் தொழிலோடும் வேளாண்மைப் பண்போடும் விழாச் சூழலோடும் விளங்கியும், சமய வேற்றுமை கடந்து தமிழர் யாவர்க்கும்

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மக்களிடையே தமிழ்ப் பற்று இல்லை. மாணவரிடையே தமிழ் கற்கும் ஆர்வம் இல்லை. அறுநீர்க் குளத்தில் ஆம்பல் பூக்குமோ? காயும் வெயில் எரிக்கையில் அல்லிதான் மலருமோ? தமிழகத்தின் தலையாய பல்கலைக் கழகத்திலும் ஒரு வட்டாரப் பேச்சு மொழி என்னும் பெயருடன் செந்தமிழ் ஓர் ஒதுக்கிடத்தில்தான் நிறுத்தப்பட்டிருந்தது. தமிழர்கள் தமிழ் நூல்களைக் கற்றுத் தமிழ்ப் புலமை எய்துதற்குப் பல்கலைக்கழகத் தேர்வு முறையிலேயே இடமில்லை. வடமொழியும் கற்றார்க்கே தமிழ்ப் புலமை உடையார் என்னும் தகுதி கிடைக்கும் என்னும் இடர்ப்பாடும் இழுக்கும் அடர்ந்து நின்றன. பள்ளிச் சிறார் தம் வயதுக்கும் வகுப்புக்கும் ஏற்பக் கற்றற்கான நடையில் எழுதப்பட்ட ஏடுகளும் இல்லாது தமிழ்த் துளிர்கள் கருகிக் கொண்டிருந்தன.

அந்நிலையில் இந்தக் குறைகளைக் களைவதில் முன்னின்று, தமிழுக்குப் பல்லாற்றானும் தொண்டாற்றியவர் பேராசிரியர் நமச்சிவாயனார்.

தொண்டை மண்டலத்தில் உள்ள காவேரிப் பாக்கத்தில் 1876ஆம் ஆண்டில் பிறந்து, இளமையிலேயே தமிழ்க் கல்வி கற்று, சென்னையில் ஒரு தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து, பெரும் புலவர் (மகா வித்துவான்) சண்முகம் பிள்ளை என்பாரிடம் தம்மை மாணவராக ஆக்கிக் கொண்டு, தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கேட்டுத் தெளிந்தார். பின்னர் உயர்நிலைப் பள்ளிகள் சிலவற்றிலும் மேரி அரசியார் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றிப் புலமைத் திறத்தாலும், தமிழ் ஆர்வத்தாலும் தம்மிடம் பயின்ற மாணவ மாணவியர்க்குத் தமிழ் அமுதூட்டி, இலக்கியத் தேன்சுவை பயிற்றி இளந்தமிழ் உள்ளங்களில் தமிழ் ஆர்வப் பயிர் தழைத்தோங்கச் செய்தார். அதுகாறும், தமிழ் மாணவர்கட்குத் தமிழ் வகுப்பு என்றாலே வேண்டப்படாத வேம்பாக, கசப்பு மருந்தாக இருந்தது போக, அவரது தமிழ் இனிமையால், அதுவே விரும்பிச் சுவைக்கும் கரும்பாக, இனிப்புக் கட்டியாக மாற்றங் கொண்டது என்றால் மிகையாகாது.



அக்காலப் புலவர்கள் சமய நோக்கத்துடனேயே தமிழ் ஏடுகளைப் பயின்றதன் பயனாக, அவர்களிடையே சமய வேற்றுமை தலைதூக்கி நின்றது. சாதி பற்றிய மூடநம்பிக்கையாலும் வெறுப்பு வளர்ந்தது. இவற்றால் பிறந்த சண்டைகளும், தாக்குதல்களும் பலப்பலவாதலின், புலவரிடையே ஒற்றுமையும் புலமையிலே மொழிப் பற்றும் அரிதாயின. அவர்களால் தமிழ் தழைத்து வளரத்தான் கூடுமோ? நமச்சிவாயனாரோ, தம்முடைய ஆசிரியரான பெரும் புலவர் சண்முகனாரிடம் கற்கப் புகுந்த காலத்திலேயே, தாம் சமயச் சண்டையிலும், சாதிப் பிணக்குகளிலும் ஒரு நாளும் தலையிடாதிருப்பதாக அவர் விதித்த கட்டளையை உளமார ஏற்றிருந்தார். பின்னாள்களில் அவரது எண்ணமும் செயலும் பொது நோக்குடையனவாகச் சிறக்க அஃது ஏதுவாயிற்று எனலாம். அவர், சைவந் தழுவி நின்றபோதிலும், அவரது தமிழ்த் தொண்டு, ஒரு பக்கச் சார்புடையது ஆகாது. புலவர்களிடையே தமிழ் அடிப்படையினின்று எழும் பொது உணர்ச்சியும், ஒற்றுமையும் உருவாகத் துணையாயிற்று.

தமிழ்ப் புலவர்கள் ஒன்று கூடுவதற்கும், ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கும் வாய்ப்பில்லாதிருந்த நிலையில் அவற்றிற்கு வாய்ப்பாக முதன்முதலாகப் புலவர் சங்கம் ஒன்று தோற்றுவிக்க முனைந்தார் அவர். சென்னைத் தமிழ்ப் பண்டித் சங்கம் பிறந்தது. புலவர்கள் ஒன்றுகூடி, உரையாடி மகிழக் கருத்து விருந்து நுகரத் தம் குறைகளை அரசினருக்கு எடுத்துக்கூறிக் களையுமாறு கேட்க, தமிழாசிரியர் தம் மதிப்பைக் கல்வித் துறையிலும் சமுதாயத்திலும் உயர்த்திக்கொள்ள இச்சங்கமே உறுதுணையாயிற்று.

அக்காலத்தில் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய தமிழ் ஆசிரியர்கள் சிறந்த புலவர்களாயினும், குறைந்த ஊதியமே பெற்று வருந்தினர். நமச்சிவாயர், அரசாங்கத்தை வற்புறுத்தித் தமிழாசிரியர் தம் ஊதியத்தை உயர்த்தச் செய்தார்.

பேராசிரியர் 1917ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழித் தேர்வுக் குழுவின் தலைவராகவும் 1920ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் தமிழ்க் கல்விக் குழுத் தலைவராகவும் அமர்ந்தார்.

அந்நாள்களில் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம்பெற விரும்பும் ஒரு தமிழ்மகன், தமிழேயன்றி வடமொழியிலும் தேர்ச்சி பெற வேண்டும் என விதி இருந்தது. வடமொழியை ஒதுக்கின் பிறிதொரு மொழியில் தேர்ச்சி பெறவேண்டும். அதன் பயனாகத் தமிழ்நாட்டில் வாழும் பிற மொழியாளர்கள் 'வித்துவான்' ஆவதற்கு இருந்த எளியவாய்ப்பு தமிழர்க்கு இல்லை. 'வித்துவான்' பட்டம் பெற்றவர்களும், அச்சொல்லின் வடிவுக்கேற்பப் பெரும் பாலும் வடமொழி பயின்றவர்களே! வடமொழியும் கற்றவர் என்று கூறுவது பொருந்தாது. தமிழும் கற்றவர்கள் எளிதாகத் தமிழ் வித்துவான்கள் ஆனார்கள். உண்மையான தமிழ்ப் புலமை யுடையார் பலரும், 'வித்துவான்' பட்டம் பெறுவதற்கு இடமில்லாத நிலை! என்னே தமிழ்த் தாயின் அவலம் இருந்தவாறு!

நமச்சிவாயர் கல்விக்குழுத் தலைவராக அமர்ந்த பின்னரே, பல்கலைக்கழகத்தில், தமிழ்ப் புலமையும் அமர்வதாயிற்று. தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு, இத்தேர்வு விதிகள் இடையூறாகும் வகையை அரசினருக்கு விளக்கிக் கூறி, வலியுறுத்தி அதனை மாற்றுவதற்கு இசைய வைத்தார். அதன் பயனாகவே தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை முறையாகக் கற்ற அளவில், வித்துவான் பட்டம் பெறலாகும், நீதி பிறந்தது.

**சாதி ஒழிப்பிற்கு நேரானவழி கலப்பு மணமே. இரத்தக் கலப்பினால் உறவு உணர்ச்சி சகோதர உணர்ச்சி உண்டாகும். சகோதர உணர்ச்சி தோன்றாதவரை வேற்றுமை உணர்ச்சி இருந்து கொண்டுதான் இருக்கும்.**

**- அம்பேத்கர்**

இக்காலத்தில் தமிழ்ப் புலமையுடையார் பலராகப் பெருகி வாழ்தற்கு வழியமைத்துத்தந்த பேரறிவாளர் அவரே.

தமிழ்மொழி காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் ஒவ்வொரு துறையிலும் சிறக்க வேண்டுமென விரும்பி அவர் ஆற்றிய பணிகள் பல.

பள்ளியில் அடியெடுத்து வைக்கும் குழந்தைகள் படித்ததற்கு ஏற்ற சிறுவர் ஏடு முதல் உயர்நிலைப் பள்ளி, கல்லூரி வகுப்புகள் முடிய ஒவ்வொரு நிலையிலும் வகுப்பிலும் உள்ள மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற, உற்ற பாட நூல்கள் வரை, ஆங்கில மொழியில் அமைந்தவற்றிற்கு ஈடான பல ஏடுகளை எழுதினார் பேராசிரியர். எளிதான சில சொற்களில் தொடங்கி, வளமான கருத்துச் செறிந்த செந்தமிழ்க் கட்டுரை வரையில் இயற்றி, தமிழ்க் கல்விப் பயிர் வேர்விட்டு வளர நீர்பாய்ச்சினார். கற்றார் பலரும் படித்ததற்கு ஏற்ற நூல்களும் எழுதினார்.

நாடகத் துறையில் மேல்நாட்டு இலக்கிய வளர்ச்சியைக் கண்ணுற்ற அவர், சில நாடகங்களும் (கீசகன்; பிருதிவிராசன்) இயற்றினார். நல்ல தமிழ் நடை வளரவும் இலக்கியப் பயிற்சி செழிக்கவும், ஒரு திங்கள் ஏடு தேவை எனக் கண்டு 'நல்லாசிரியன்' என்னும் இதழைத் தொடங்கிப் பதினைந்து ஆண்டுக் காலம் பயனுற நடத்திப் பலருக்கும் அத்துறையில் வழிகாட்டியானார்.

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதிலும் அவர் ஆர்வம் கொண்டார். இளம்பூரணர் உரையோடு தொல்காப்பியத்தின் சொல்பொருள் அதிகாரங்களையும் இறையனார் களவியலையும் வேறு சில இலக்கியங்களையும் அவர் பதிப்பித்தார்.

அவரது தமிழ்ப் பணியின் அருமையும் பெருமையும் அவர் மறைந்த ஞான்று, தமிழ்ப் பெரியார், திரு.வி.க. அவர்கள் உள்ளங் கரைந்து பாடிய இரங்கற்பாவின் அடிகள் சிலவற்றால் விளங்கும்.

*'அருந்தினை தமிழைப் பொருந்தி அமிழ்தென*
*என்றும் இன்மொழி நன்றே வழங்கினை*
*சாதியை யொழித்து நீதியில் நடந்தனை*
*செந்தமிழ்த் தாயின் சிந்தை மகிழக்*
*கால ஒப்பனை சாலச் செய்தனை*

.....................................................................

*நின்மொழி யுன்ன நின்செயல் எண்ண*
*உள்ளங் குழையும் ஊனுங் கரையும்*
*என்பு நெக்குறும் அன்புக் கடலே*
*பெரிதே துன்பம் பெரிதே*
*காண்ப தென்றோ*
*மாண்புறு முகமே!'*

இவ்வாறு தமிழ்ப் பெரியார் உள்ளத்தில் இடம் பெற்ற நமச்சிவாயர் தமது உள்ளத்தில் தமிழுக்குத் தந்திருந்த இடம்தான் என்னே?

*'தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!*
*தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!*
*ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!*
*உணர்வினுக குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!*
*வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!*
*மாந்தருக் கிருகணாய் வயங்குநன் மொழியே!*
*தரணியில் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!*
*தனித்தனி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!'*

தனித்தினிது ஓங்குவாய் எனத் தமிழை வாழ்த்தி, தமிழ் உணர்வு வளரும் வழி போற்றித் தமிழ்த் திருநாள் விழா எங்ஙனும் தேர்ற்றித் தமிழனாக வாழ்ந்த பேராசிரியர் நினைவு தமிழொடும் வாழாதோ?

*- 'நம்நாடு' பொங்கல் மலர் 1978லிருந்து.* ★

**சமூகத்தில் அங்கம் பெற்றிருக்கும் உறுப்பினர் பரஸ்பரம் நீக்கமறக் கலந்து கொள்வதற்குச் சமூக அமைப்பில் இயல்பாகவே இடம் இருக்கவேண்டும். இதுவே உண்மையான சகோதரத்துவம் ஆகும்.**

**- அம்பேத்கர்**

# சிங்கப்பூரில் கலைஞர்

சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் ஆறு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு **4–1–1999** அன்று விடியற்காலை சிங்கப்பூர் விமான நிலையம் வந்தடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு சிங்கப்பூரில் உள்ள தமிழ் அமைப்புகளின் சார்பிலும், இந்திய தூதுவரகத்தின் சார்பிலும் வரவேற்பளிக்கப்பட்டது.

வர்த்தக வளர்ச்சிக் கழகம் சார்பில் முதலமைச்சர் கலைஞருக்கு டான் வீ வென், ஓங் பூன் குவான் ஆகியோர் பூங்கொத்துக் கொடுத்து வரவேற்றனர்.

இந்தியத் தூதுவரகத்தின் சார்பில் சிங்கப்பூரில் உள்ள இந்தியத் தூதுவர் திரு.பிரேம்சிங், தூதரக இரண்டாம் நிலை அதிகாரி திரு. சந்திரசேகரன் ஆகியோரும் முதலமைச்சரை வரவேற்றனர்.

பல்வேறு தமிழ் அமைப்புகளின் சார்பில் தமிழ் முரசு ஆசிரியர் திரு. திருநாவுக்கரசு, தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் திரு. அமலதாசன், தமிழ் மொழிப் பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு. அரிகிருஷ்ணன் மற்றும் திரு. நா. ஆண்டியப்பன், கிருஷ்ணன், இந்திரா கிருஷ்ணன் ஆகியோரும் முதலமைச்சருக்கு பூங்கொத்து அளித்து வரவேற்றனர்.

முதலமைச்சரின் மகள் கனிமொழியும் மருமகன் அரவிந்தனும் விமான நிலையம் வந்திருந்தனர்.

விமான நிலையத்தில் தமிழ் முரசு இதழ் சார்பில் முதலமைச்சர் கலைஞரின் சிங்கப்பூர் பயணம் குறித்து கருத்து கேட்டபோது முதலமைச்சர் கலைஞர் கூறியதாவது:–

"நீண்ட காலமாக தமிழகத்திற்கும் சிங்கப்பூருக்கும் கலாச்சாரத் தொடர்பு இருந்து வருகிறது. இந்தத் தொடர்பை மேலும் உறுதிப்படுத்துகின்ற வகையில் என்னுடைய இந்தப் பயணம் அமையும் என்று நம்புகிறேன். இந்தப் பயணத்தில் இங்குள்ள தமிழக மக்களைச் சந்திப்பதிலும் பொதுவாக சிங்கப்பூர் பொதுமக்களைச் சந்திப்பதிலும் மிகுந்த மகிழ்ச்சி அடைவதோடு – அரசாங்கத்தின் முக்கியப் பிரமுகர்கள், தொழில் முனைவர்களுடனான சந்திப்பும் பயன் உடையதாக இருக்குமென்று கருதுகிறேன்.

சிங்கப்பூர் பயணம் என்பது என்னுடைய நீண்டக்காலக் கனவு. இது இன்று நிறைவேறுவதில் பூரிப்புக்கொள்கிறேன்".

### *சிங்கப்பூர் இந்திய வர்த்தகக் குழுத்தலைவருடன் சந்திப்பு*

முதலமைச்சர் கலைஞர் அவர்களை அவர் தங்கியுள்ள மாண்டரின் ஹோட்டலுக்கு வந்து, சிங்கப்பூரில் உள்ள இந்திய வர்த்தகக் குழுவின் தலைவர் திரு. தேவேந்தர்சிங் 4–1–99 அன்று சந்தித்தார். சந்திப்பின்போது சிங்கப்பூரில் உள்ள இந்தியத் தூதுவர் திரு.பிரேம்சிங், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி, தொழில்துறைச் செயலாளர் திரு.எம்.எஸ். சீனிவாசன் ஆகியோர் உடனிருந்தனர்.

திரு. தேவேந்தர் சிங், இந்திய அரசின் தொழில் மற்றும் வளர்ச்சிக் கொள்கை, அந்நிய முதலீட்டை ஈர்க்கும் நோக்கத்துடன் பல்வேறு மாநில அரசுகள் உருவாக்கிவரும் கொள்கைகள் ஆகியவை பற்றிச் சரியான தகவல் சிங்கப்பூர் நாட்டில் உள்ள முதலீட்டாளர்களுக்கு, குறிப்பாக இங்கு வாழும் இந்திய வர்த்தக முதலீட்டாளர்களுக்குக் கிடைப்பதில்லை என்றும் இந்த நோக்கில் பார்க்கும்போது தமிழக முதலமைச்சரின் வருகை மிகவும் வரவேற்கத்தக்கதாகும் என்றும் அவரிடமிருந்து இவை குறித்து அறிய இந்திய வர்த்தகக் குழுவின் உறுப்பினர்கள் மிக ஆவலுடன் இருப்பதாகவும் கூறினார். கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழக அரசு பல்வேறு வகைகளிலும், தொழிற்கொள்கையைச் சீர்திருத்தி அமைத்திருப்பதையும், வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றிருப்பதையும் முதலமைச்சர் கலைஞர் எடுத்துரைத்தார்.

### *சிங்கப்பூர் தகவல் தொடர்புத்துறை அமைச்சருடன் சந்திப்பு*

பிறகு 4–1–99 அன்று பிற்பகல் 3 மணிக்கு சிங்கப்பூர் நாட்டுத் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு.மா போ டான் அவர்களை முதலமைச்சர் கலைஞர் சந்தித்து உரையாடினார். தகவல் தொழில்நுட்பத்துறையில் சமீபத்தில் தமிழக அரசு எடுத்துவரும் பல்வேறு முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் விளக்கிய முதலமைச்சர், இத்துறையில் மிக வேகமாக முன்னேறியுள்ள சிங்கப்பூர் நாட்டு அனுபவங்கள் தமிழக அரசின் செயலாக்கத்திற்கு மிகப் பயனுள்ளதாக அமையும் என்று கூறினார். இந்திய நாட்டில் பெருமளவில் கிடைக்கும் தகவல் தொழில் நுட்பத்துறையின் நிபுணத்துவத்தைக் கோடிட்டுக் காட்டிய சிங்கப்பூர் நாட்டு அமைச்சர், இந்திய நாட்டுடன் அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவுடன் இணைந்து இத்துறையில்

செயலாற்றுவதில் சிங்கப்பூர் அரசு ஆர்வமாக இருப்பதாக உறுதி அளித்தார்.

### *சிங்கப்பூர் துறைமுகக் கழகத் துணைத்தலைவர் சந்திப்பு*

அடுத்து சிங்கப்பூர் துறைமுகக் கழகத்தின் துணைத் தலைவர் கூன் கோக் லூன் அவர்களுடன் முதலமைச்சர் கலைஞர் சந்தித்து உரையாடினார். 1972ஆம் ஆண்டு சிறிய அளவில் ஓர் அரசுத்துறையாக தொடங்கப்பட்ட சிங்கப்பூர் துறைமுகம் மிகவேகமாக வளர்ந்து இன்று உலகிலேயே அதிக அளவு சரக்கு ஏற்றுமதி–இறக்குமதி செய்து வருவதை விளக்கிய துணைத்தலைவர், இன்னும் ஓரிரு ஆண்டுகளில் இதைத் தனியார் மயமாக்க சிங்கப்பூர் அரசு எண்ணி இருப்பதையும் கூறினார்.

கழகத் துணைத் தலைவர், இத்திட்டத்திற்குச் செயல்வடிவம் கொடுப்பதில் சிங்கப்பூர் துறைமுகக் கழகம் பெரிதும் ஆர்வம் காட்டும் என்றும் உறுதியளித்தார்.

அதன்பின், முதலமைச்சர் கலைஞர் துறைமுகத்தின் பல்வேறு பகுதிகளையும், அங்கு நடைபெற்றுவரும் சரக்கு ஏற்றுமதி–இறக்குமதி நடவடிக்கைகளையும் விரிவாகப் பார்வையிட்டார்.

### *தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சிங்கப்பூர் வானொலிக்கு அளித்த பேட்டி*

*கேள்வி* : மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களே, எங்கள் ஊருக்கு முதன்முதலாக வந்திருக்கிறீர்கள். உங்களை அன்போடு வரவேற்கிறோம்.



சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களின் விரிவாக்கப் பணிகளில் சிங்கப்பூர் துறைமுகக் கழகம் தற்பொழுது பங்குபெற்றுப் பணியாற்றி வருகிறது. மேலும் சென்னைக்கு அருகே புதிதாக அமைக்கப்படும் எண்ணூர் துறைமுகம் இந்திய அரசால் நிறுவன அமைப்பாக அறிவிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் இது சிங்கப்பூர் துறைமுகக் கழகத்திற்கு மேலும் வாய்ப்பு அளிப்பதாக அமையக்கூடும் என்றும் முதலமைச்சர் எடுத்துச் சொன்னார். மேலும் தமிழகத்தின் தென்கோடியில் உள்ள குளச்சலில் ஒரு புதிய துறைமுகம் அமைக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதைச் சுட்டிக்காட்டிய முதலமைச்சர், தமிழக அரசினால் மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள சேதுசமுத்திரம் கால்வாய்த் திட்டம் இதனுடன் இணைந்து, ஒருங்கிணைந்த திட்டமாகச் செயலாக்கப்பட சாத்தியக் கூறுகள் உள்ளன என்றும், இதில் பங்கு பெற சிங்கப்பூர் துறைமுகக் கழகத்திற்கு வாய்ப்புகள் உள்ளன என்றும் கூறினார். முதலமைச்சருக்கு நன்றி கூறிய துறைமுகக்

சிங்கப்பூரும், தமிழகமும் சேர்ந்து தொழிலில் ஈடுபடத் தொடங்கியிருக்கின்றன. இந்த நிலையில் சிங்கப்பூர் வந்திருக்கும் நீங்கள் இங்குள்ள தமிழ் மக்களுக்குக் கூறும் செய்தி என்ன?

*கலைஞர்* : உங்களுடைய அன்பான வரவேற்பிற்கு மீண்டும் மீண்டும் நன்றி கூறிக்கொள்கிறேன். ஆனால் வந்தவுடன் சிங்கப்பூர் நாட்டிலே உள்ள எல்லா தமிழர்களையும் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்கு ஏற்படவில்லை. வேறு பல அலுவல்கள் இருந்த காரணத்தினால் அந்தச் சந்திப்பை உடனடியாக ஏற்படுத்திக் கொள்ள இயலவில்லை. எனினும் அவர்களை எல்லாம் சந்திக்க வேண்டும் என்கிற பேராவலோடு இருக்கும் எனக்காக சிங்கப்பூரில் உள்ள தமிழ் அமைப்புகள் அனைத்தும் சேர்ந்து 6–1–99 புதன் மாலை 5 மணியளவில் சிங்கப்பூர், ‘சிங்கப்பூர் இண்டோர் ஸ்டேடியத்தில்’ இலக்கிய உரை ஒன்றை நான் ஆற்றுவதற்காக ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு

செய்திருக்கிறார்கள். அப்போது சிங்கப்பூரில் வாழ்கிற தமிழ் உடன்பிறப்புகள் அனைவரையும் சந்திக்கின்ற அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டுமென்று நம்புகிறேன்.

*கேள்வி* : தமிழர்கள் இன்று தமிழகத்தில் மட்டுமல்லாமல் உலகத்தில் பல்வேறு நாடுகளில் வாழ்கிறார்கள். தொழில் வளர்ச்சி கணினி யுகத்தில் புதிய புதிய யுக்தியை நோக்கிச் செல்கிறது. கணினியை தமிழகத்தில் இப்போது எந்த அளவிற்கு அறிமுகம் செய்யத் திட்டமிட்டிருக்கிறீர்கள்?

*கலைஞர்* : இது கணினி யுகம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டுதான் தீரவேண்டும். ஏன் என்றால் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு தொலைக்காட்சி, வானொலி என்ற நிலைமை இருப்பது மட்டுமல்லாமல் கணினி இல்லாத வீடு இல்லை என்கிற சூழ்நிலை விரைவில் ஏற்படும் என்றே நான் நம்புகிறேன். அதிலும் குறிப்பாக சிங்கப்பூரில் கணினியின் பயன் எந்த அளவிற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை என்னால் உணர முடிகிறது. அது மாத்திரமல்ல, இந்தப் பயனை நாங்களும் பெற வேண்டுமென்று விரும்புகின்ற காரணத்தால் கணினியை எப்படியெல்லாம் இங்கே பயன்படுத்துகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளும் வகையில் இன்று இங்கே நான் சந்தித்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள், முக்கிய பிரமுகர்களிடம் பேசியிருக்கிறேன். தமிழகத்தில் வரும் பிப்ரவரி திங்கள் முதல் வார இறுதியில் இந்தக் கணினி பற்றி மேலும் விரிவாகப் பேசிட, முயற்சிகளை மேற்கொள்ள ஓர் இணைய மாநாடு நடைபெறவிருக்கிறது. அனைத்துலக நாடுகளில் இருக்கிற தமிழ் அறிஞர்களும், வல்லுநர்களும் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். முதல் கட்டமாகப் பள்ளிக்கூடங்களில் கணினி மூலம் பாடம் போதிக்க வேண்டும் என்பதற்காக – தமிழ்நாடு அரசு சாா்பில் முதல் கட்டமாக விதை ஊன்றுவது போல – இந்தத் திங்களில் – நூறு பள்ளிகளில் கணினியைப் பயன்படுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறோம்.

மேலும் வோா்ல்ட் டெல் – நிறுவனத்தின் சாா்பில் ஆயிரம் இடங்களில் சமுதாய அளவில் இந்தக் கணினியைப் பயன்படுத்துகின்ற ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

*கேள்வி* : இன்று பல அதிகாரிகளையும் அமைச்சர்களையும் நீங்கள் சந்தித்திருக்கிறீர்கள். உங்கள் நோக்கம் எந்த அளவிற்கு நிறைவேற இருக்கிறது என்று கூறுங்கள்?

*கலைஞர்* : என்னுடைய நோக்கத்திற்கு – என்னுடைய கருத்துக்களுக்கு இன்றைக்கே ஒரு முடிவு ஏற்பட்டு ஒப்பந்தங்களாகிவிட்டன என்று நான் சொல்ல இயலாது. சில கருத்துக்கள் என்னால் இங்கே கூறப்பட்டிருக்கிறது. அதைப்போல, சில கருத்துகள் அவர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது. இதைப் பற்றியெல்லாம் எதிர்காலத்தில் மேலும் விரிவாக ஆராய்ந்து ஏற்ற முடிவுகளை எடுப்போம்.

*கேள்வி* : இலக்கியத்துறை என்று சொன்னவுடன் உங்கள் நினைவுதான் எங்கள் நெஞ்சில் என்றும் இருக்கும். குறளோவியம், சங்கத்தமிழ், பொன்னா்–சங்கா் ஆகியவைகளைத் தொடா்ந்து தமிழுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

*கலைஞர்* : நான் தொடர்ந்து தமிழுக்காகத் தொண்டாற்ற வேண்டும் என்கிற கருத்துடையவன் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். நான் முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலக்கட்டத்திலும், இப்போதிருக்கிற இந்தக் காலக்கட்டத்திலும் தமிழுக்காகத் தொண்டாற்றிக் கொண்டுதானிருக்கிறேன். தமிழ் இலக்கியங்கள் பலவற்றை படைத்திருக்கிறேன். என்னுடைய தொண்டு தொடரும்.

*கேள்வி* : எங்களுடைய பல வினாக்களுக்கு விடை தந்து – சிங்கப்பூர் வானொலி நேயர்களுக்கு உங்கள் பதில்களைத் தெரிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

*கலைஞர்* : என்னுடைய அன்பிற்குரிய தமிழ் நேயர்களே, இப்போது உங்களை வானொலி மூலமாகத்தான் சந்தித்திருக்கிறேன். நேரில் சந்திக்கும் அரிய வாய்ப்பு 6ஆம் தேதி 5 மணிக்குக் கிடைக்கும் என்ற பேராவலோடு காத்துக் கொண்டிருக்கிறேன்.

### *தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் விருந்தில்*

சிங்கப்பூரில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் **5–1–99** அன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். சிங்கப்பூர் மூத்த தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. ஜார்ஜ் இயோ அளித்த பகல் விருந்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டபோது தமிழகத்தின் தொழில் வளர்ச்சி குறித்தும், அதற்கு சிங்கப்பூர் அரசு எந்த வகையில் உதவிடலாம் என்பது பற்றியும் உதவிட வேண்டுமென்பது பற்றியும் உரையாடினார்.

விருந்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை, தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. ஜார்ஜ் இயோ அவர்களும், அவரது துணைவியாரும் வாயிலில் நின்று வரவேற்றனர். தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அமைச்சர் இயோ அவர்களுக்கு பொன்னாடை அணிவித்தார்.

விருந்தின்போது அமைச்சர் இயோ அவர்கள் சென்னை மாநகரத்தின் மேயரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பதாகக் கூறி அவரை ஒருமுறை சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டு கொண்டார். முதலமைச்சருடன் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமியும், தொழிற்துறைச் செயலாளர் சீனிவாசனும் கலந்து கொண்டனர்.

### *பிரதமருடன் சந்திப்பு*

**5–1–1999** அன்று பிற்பகல் **4** மணி அளவில்



முதலமைச்சர் கலைஞர் சிங்கப்பூர் நாட்டின் பிரதமர் திரு. கோ சோக் டோங் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து 45 நிமிட நேரத்திற்கு மேல் உரையாடினார். பிரதமர் கோ சோக் டோங் அவர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் பொன்னாடை அணிவித்து சந்தன மாலை அணிவித்ததோடு சந்தனத்தால் செய்யப்பட்ட வள்ளுவர் கோட்டத்தின் உருவ அமைப்பினைப் பரிசாக வழங்கினார். தமிழகத்தின் மரபுப்படி அவற்றை செய்கிறீர்களே என்று கூறி முதலமைச்சரை மிகுந்த அன்போடு பிரதமர் வரவேற்றார். 45 நிமிட சந்திப்பிற்குப் பின் வெளியே வந்த முதலமைச்சர் கலைஞரிடம் செய்தியாளர்கள் அதுபற்றிக் கேட்டபோது பிரதமருடான பேச்சு மிகவும் இனிமையாக இருந்ததாகத் தெரிவித்தார். முதலமைச்சரோடு இந்தப் பேச்சுவார்த்தையில் தொழிற்துறைச் செயலாளர் எம்.எஸ். சீனிவாசனும் கலந்து கொண்டார்.

***பத்திரிகையாளர்கள் சந்திப்பு***

சிங்கப்பூரில் உள்ள இந்திய வெளிநாட்டு தூதுவரகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள் சந்திப்பு 5–1–1999 அன்று மாலை 5–30 மணிக்கு நடைபெற்றது. அப்போது தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் பத்திரிகையாளர்கள் மத்தியில் முதலிலே கூறியதும், அதன்பிறகு அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அளித்த பதில்களும் வருமாறு:

"நேற்று (4–1–1999) காலை நான் இங்கு வந்தவுடன் இந்திய வர்த்தகக் குழுவின் தலைவர் திரு.தேவேந்திர சிங் அவர்கள் என்னைச் சந்தித்தார். எனது வருகை இங்குள்ள தொழில் முனைவோருக்கு தமிழ்நாட்டின் தொழில் முன்னேற்றம் குறித்து சரியான முறையில் அறிந்து கொள்ளப் பேருதவியாக இருக்கும் என்றும் தமிழகத்தில் முதலீடு செய்ய அவர்களை ஊக்குவிக்கும் வகையில் என்னுடைய வருகை வரவேற்கத் தக்க வகையில் இருக்குமென்றும் திரு.தேவேந்திர சிங் என்னிடம் கூறினார்.

நேற்று மாலை 3 மணி அளவில் தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு. மா போ டான் அவர்களைச் சந்தித்து உரையாடினேன். தமிழ்நாட்டினுடைய தொழில் துறை முன்னேற்றம் குறித்தும், கணிசமான அளவில் தகவல் தொழில் நுட்பத் துறையில் தமிழகம் முதலீடு செய்து வருவதைப் பற்றியும் இத்துறையில் மாபெரும் முன்னேற்றம் கண்டுள்ள சிங்கப்பூர் நாட்டின் அனுபவங்கள் தமிழ்நாட்டிற்கு உதவியாக இருக்குமென்றும் அவரிடம் எடுத்துரைத்தேன்.

இத்துறையின் தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தின் வலுவான நிலையைக் கருதி இருசாராருக்கும் நன்மை ஏற்படும் விதத்தில் ஒருங்கிணைந்து செயலாற்ற சாத்தியக் கூறுகள் வலிவாக உள்ளன என்று திரு.மா போ டான் கூறினார்.

பிறகு மாலை 4 மணிக்கு சிங்கப்பூர் துறைமுகக் கழகத்தின் துணைத் தலைவர் திரு. கூன் கோக் லூன் அவர்களைச் சந்தித்து அவருடனும் துறைமுகக் கழகத்தினருடனும் உரையாடினேன். கடந்த 25 ஆண்டுகளில் கணிசமான அளவில் முன்னேறி இன்று உலகிலேயே மிகப் பெரிய சரக்கு ஏற்றுமதி இறக்குமதித் துறைமுகமாக முன்னேறியுள்ளதைப் பற்றிக் கேட்டறிந்தேன்.

சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களின் விரிவாக்கப் பணிகளில் பங்கு பெற்று தற்போது பணியாற்றி வரும் சிங்கப்பூர் துறைமுகக் கழகத்திற்கு

குளச்சல் போன்ற துறைமுகப் பணிகளிலும் பங்கு பெற வாய்ப்புகள் உள்ளதையும் விளக்கிச் சொல்லியிருக்கிறேன். மேலும் சேது சமுத்திரம் கால்வாய்த் திட்டத்தைச் செயலாக்க மத்திய அரசு அளவில் மாநில அரசு முயற்சிகள் மேற்கொண்டிருப்பதையும்; திட்டம் செயலாக்கப்படும் பொழுது, தூத்துக்குடி துறைமுகத்தின் திறன் இன்னும் பெரிய அளவில் அதிகரிக்கும் என்பதையும் சுட்டிக் காட்டினேன்.

அதன்பிறகு துறைமுக வளாகம் முழுவதையும் சுற்றிப்பார்த்து நடைபெறும் பணிகளை விரிவாக அறிந்து கொண்டேன்.

இன்று 5–1–99 பகல் 1 மணிக்கு சிங்கப்பூர் நாட்டின் கலை, தகவல் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. ஜார்ஜ் அவர்கள் அளித்த விருந்தில் கலந்து கொண்டேன். அப்போது தமிழகத்தின் தொழில் துறையில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அமைச்சர் ஆர்வம் காட்டினார்.

நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில், இதன் அடிப்படையில் சுற்றுலா மேம்பாட்டிற்கு வாய்ப்புகள் சிறப்பாக உள்ளன என்றும், இத்துறையில் பெருமளவிலே முன்னேறியுள்ள சிங்கப்பூர் இதிலே பங்கு கொள்ள விரும்பினால் தமிழக அரசு அதை வரவேற்று ஆவனச் செய்யும் என்றும் சொல்லியிருக்கிறேன்.

மாலை 4 மணிக்கு சிங்கப்பூர் பிரதமர் திரு. கோ சோக் டோங் அவர்களைச் சந்தித்து 45 நிமிடங்கள் உரையாடினேன். இந்திய நாட்டின் பொருளாதாரக் கொள்கை குறித்துப் பேசினோம். அரசியல் நிலவரங்களைப் பற்றியும் பொதுவாகப் பேசினோம். 1991இல் ஏற்பட்டதைப் போல பொருளாதார நெருக்கடி (Crisis) எதுவும் தற்போது இல்லையென்றும், இந்தியாவின் பொருளாதார சீர்திருத்தங்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டு தொடருமென்றும் வரும் ஆண்டுகளில் இது மேலும் அதிகரிக்கும் என்றும் எனது நம்பிக்கையை விளக்கிச் சொன்னேன்.

ஆசிய அரங்கில் இந்தியா ஒரு முக்கியமான நாடு என்றும் இந்திய நாட்டின் கொள்கைகள் இந்தியாவினுடைய பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

போலி நபர்களையும் இடைத்தரகர்களையும் நம்பி தங்களது சொத்துக்களை விற்று இங்கு வந்து ஏமாந்து துயருக்குள்ளாகும் தமிழர்களின் அவல நிலை குறித்து எடுத்துச் சொன்னேன். தமிழ்நாடு அரசு இதனை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி இதைத் தடுக்க முயற்சி செய்யுமென்றும், இதற்கு சிங்கப்பூர் அரசு ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன். தமிழ்நாடு அரசு இதைத் தடுப்பதற்கு சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று கூறியதோடு இதைப் பொறுத்தவரை பிரதமரும் சிங்கப்பூர் அரசும் தக்க அறிவுரைகளும் எச்சரிக்கைகளும் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவரும் அப்படியே செய்வதாக உறுதியளித்தார். தமிழ்நாட்டிலிருந்து வரும் தமிழர்கள் இப்படி ஏமாற்றப்படுவது பற்றி பிரதமரும் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொண்டார்.

பிப்ரவரி 7,8 தேதிகளில் தமிழக அரசு நடத்தவுள்ள உலகத் தமிழ் இணையம் கருத்தரங்க மாநாட்டில் கலந்துகொள்ளும்படி சிங்கப்பூர் பிரதமரை அழைத்து ஏற்கெனவே மத்திய அரசு மூலம் கடிதம் எழுதியிருப்பதைச் சொன்னேன். மாநாட்டிற்கு முடிந்தால் தானே வருவதாகவும் இல்லாவிட்டால் ஒரு அமைச்சர் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றை அனுப்புவதாகவும் உறுதியளித்த பிரதமர் இது ஒரு சிறந்த முயற்சியென்று பாராட்டினார்.

இவ்வளவிற்கும் பிறகு இப்போது உங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

*கேள்வி* : சிங்கப்பூர் பிரதமருடன் குறிப்பிட்ட தொழில் திட்டம் பற்றி பேசினீர்களா?

*கலைஞர்* : குறிப்பிட்ட தொழிற்திட்டம் என்று எதுவும் பேசவில்லை. நான் அவரைச் சந்தித்தது மரியாதை நிமித்தம் தான். நான் ஏற்கெனவே வந்தவுடன் சொல்லியிருக்கிறேன், நான் இங்கு வந்திருப்பது தொழிற் திட்டங்களை இறுதிப்படுத்தி ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்காக அல்ல; இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள கலாச்சார தொடர்புகளையும், உறவுகளையும் உறுதிப்படுத்திக் கொள்ளத் தான் வந்திருக்கிறேன் என்றும் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் பிரதமருடன் பேசிய பேச்சு வார்த்தையில் குறிப்பிட்ட தொழில் என்று நீங்கள் கேட்பது போலச் சொல்ல வேண்டுமேயானால் பெட்ரோலிய கெமிகல் பார்க் ஒன்று தமிழ்நாட்டில் உருவாவதற்கு மாஸ்டர் பிளான் எல்லாம் தயாராகிவிட்டது என்றும், அது ஒரு கூட்டு முயற்சி என்றும், ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்தில் அதை நிறைவேற்றுவதாக இருக்கிறோம் என்றும் அந்தக் கூட்டு முயற்சியில் சிங்கப்பூர் அரசும் பங்கு கொள்ளலாம் என்றும் சிங்கப்பூர் பிரதமரிடம் கூறியிருக்கிறேன்.

சாப்ட்வேர் தொழிலைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் இப்போதே ஏராளமாக வளர்ந்து வருகின்ற காரணத்தினால் ஹார்டுவேர் தொழிலை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதை எடுத்துக் காட்டி எஸ்பிட் ஹேபிடாட் அதாவது ஹார்டுவேர் பார்க் மாதிரி ஒன்றை இரண்டு அரசுகளும் சேர்ந்து ஒப்பந்தம் செய்து கொண்டு சிங்கப்பூர் அரசு நிறைவேற்றலாம் என்றும் குறிப்பிட்டேன். இவைகளைப் பற்றியெல்லாம் தொடர்ந்து பேசலாம் என்று என்னிடம் கூறியிருக்கிறார்.

தமிழகம் தொழில் துறையில் 96 வரையில் ஐந்தாவது இடத்தில் இருந்தது. கடந்த இரண்டாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் காரணமாக மராட்டிய மாநிலத்திற்கு அடுத்து இரண்டாவது இடத்திற்கு வந்திருக்கிறது என்றும், எகானமிக் டைம்ஸ் பத்திரிகையில் டிசம்பர் மாதத்தில் முதலீடு செய்வதற்கு சென்னை இந்தியாவிலேயே மிகச் சிறந்த இடம் என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டிருப்பது

பற்றியும் பிரதமரிடம் எடுத்துக் காட்டினேன்.

*கேள்வி* : இந்தியாவில் அரசியல் ஸ்திரமின்மையைப் பற்றி பேசினீர்களா?

*கலைஞர்* : நான் என்னுடைய நாட்டைப் பற்றி இன்னொரு நாட்டில் பேசுவதும் விமர்சிப்பதும் முறையல்ல என்று கருதுகிறவன்.

*கேள்வி* : சிங்கப்பூர் தாழ்வாரம் பற்றி தங்கள் பேச்சிலே இடம் பெற்றதா?

*கலைஞர்* : சிங்கப்பூர் தாழ்வாரம் ஐந்தாண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. நாங்கள் ஆளுங்கட்சியாக அப்போது இல்லாவிட்டாலும் எதிர்க்கட்சி என்ற நிலையில் தமிழ்நாட்டின் நிலை குறித்து அக்கறையோடு அது வரும் வரும் என்று காத்துக் கொண்டிருந்தோம். என்ன காரணத்தாலோ அது தமிழ்நாட்டிற்கு வர முடியாமல் போய்விட்டது.

அந்தத் தாழ்வாரம் வர முடியாமல் போய்விட்டாலும் கூட – அதன் தொடர்புடைய ஒரு தொழில் வளாகமாவது அமைக்க சிங்கப்பூரில் உள்ள தொழில் முனைபவர்களும் அரசும் இணைந்து முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் தேவையான அளவிற்கு கடற்கரைப் பகுதி இருக்கிறது. சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரை அகன்ற அழகான கடற்கரை இருக்கிறது. அதில் ஏதாவது ஒரு பகுதியில் கடற்கரையை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளைப் பற்றி சிங்கப்பூர் சுற்றுலாத் துறை அமைச்சரிடம் பேசியிருக்கிறேன்.

*கேள்வி* : குட்டி சிங்கப்பூரை உருவாக்கப் போவதாகச் சொன்னீர்களே?


*கலைஞர்* : குட்டி சிங்கப்பூர் அல்ல, சின்ன சிங்கப்பூர் என்று கூறுங்கள். முதலில் நான் கூறியவாறு இப்போதே முடிவெடுத்து விட்டுப் போவதற்காக வரவில்லை. இப்போது விதை தான் தூவப்பட்டுள்ளது. நாற்றாகி, பயிராகி, விளைச்சல் தர வேண்டும். இப்போதே ஒப்பந்தம் போட்டு விட்டுப் போவதற்காக வரவில்லை.

*கேள்வி* : தமிழகத்திலே வீடு கட்டிக் கொடுப்பதாகக் கூறி சிங்கப்பூரிலே உள்ள தமிழர்களை அங்கேயுள்ள சிலர் ஏமாற்றுகிறார்கள். சிங்கப்பூர் தமிழர்களை இதிலிருந்து பாதுகாக்கத் தக்க நடவடிக்கை எடுப்பீர்களா?

*கலைஞர்* : பிரதமரிடம் பேசிய பிரச்சினை தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் சிங்கப்பூருக்கு வந்து ஏமாற்றப்படுவதைப் பற்றியது. இப்போது நீங்கள் சொல்கின்ற பிரச்சினை சிங்கப்பூரிலுள்ள தமிழர்கள் தமிழ்நாட்டிலே உள்ள சிலரால் ஏமாற்றப்படுவது பற்றியது. இந்த இரண்டு பிரச்சினைகளுமே கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தான்.

### *இந்திய தொழில் – வர்த்தக சங்க வரவேற்பில்*

**5–1–1999** அன்று சிங்கப்பூர் இந்திய வர்த்தக மற்றும் தொழில் சங்கம் சார்பில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. சிங்கப்பூர் இந்திய வர்த்தகக் கழகத்தின் சார்பில் இதுவரை எத்துணையோ வரவேற்புகள் பல தலைவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவும், ஆனால் எந்தத் தலைவருக்கும் இதுபோன்ற கூட்டம் கூடியதில்லை என்றும், இந்த நிகழ்ச்சியிலே கலந்து



கொள்ள வேண்டுமென்று தொழில் அதிபர்களும், வணிகர்களும் பெரிதும் முனைப்பு காட்டினர் என்றும், அதிலே ஒரு பகுதியினரை மட்டும் தான் அரங்கத்திற்குள் இடம் இருக்கும்வரை அனுமதிக்க முடிந்தது என்றும் மற்றவர்கள் எல்லாம் விருந்து அருந்தும் இடத்திலே இருப்பதாகவும் வர்த்தகச் சங்கத்தின் செயலாளர் மிகுந்த கையொலிக்கு இடையே அறிவித்தார்.

முதலமைச்சர் கலைஞர் வரவேற்புக்கு நன்றி தெரிவித்தும் தொழில் முனைவோரை தமிழகத்திலே தொழில் தொடங்கவேண்டுமென்று உருக்கமாக வேண்டுகோள் விடுத்தும் அருமையானதோர் ஆங்கில உரையை வழங்கினார். அதன் பின்னர் பல தொழில் அதிபர்கள் தங்களுக்கு தமிழகத்திலே தொழில் தொடங்குவதில் உள்ள சங்கடங்களையும் சந்தேகங்களையும் எழுப்பிய போது அவை அனைத்திற்கும் முதலமைச்சர் கலைஞர் விரிவான விளக்கத்தை அளித்தார்.

## *வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சாதகமான இடம் தமிழ்நாடு – கலைஞர்*

"சிங்கப்பூருக்கும் இந்தியாவுக்கும் குறிப்பாக தமிழ்நாட்டுக்கும் இடையிலான கலாச்சாரத் தொடர்புகள் மிக நீண்ட காலமாக இருந்து வருகின்றன. பெருமளவிலான என்னுடைய தமிழ்ச் சகோதரர்கள் நீண்ட காலத்திற்கு முன்பே சிங்கப்பூர்வாசிகளாக மாறி இங்கேயே நிரந்தரமாக தங்கி விட்டனர். 60 ஆண்டுகளுக்கு மேலாக நான் பொதுவாழ்வில் இருந்தபோதிலும் இதுவரை நான் சிங்கப்பூருக்கு வருகை தந்ததில்லை. சிங்கப்பூருக்கு வருகை என்பது என்னுடைய நீண்ட காலக் கனவாக இருந்து வந்தது. இப்போதுதான் அந்தக் கனவு நிறைவேறியுள்ளது. என்னுடைய முதல் சிங்கப்பூர் வருகையின் ஒரு பகுதியாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று சிங்கப்பூர் இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. முதற்கண் உங்கள் அனைவருக்கும் என்னுடைய இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியப் பொருளாதாரத்தின் மாற்றங்களை நெருக்கமாகக் கவனித்துக் கொண்டிருக்கும் செயல்திறன் மிக்க அமைப்பாக நீங்கள் திகழ்கிறீர்கள். பொதுவாக இந்தியாவிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலும் ஏற்பட்டு வரும் பொருளாதார முன்னேற்றத்தை நீங்கள் நன்கு அறிவீர்கள். 1991ஆம் ஆண்டு இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதிலிருந்து, நாட்டின் வளர்ச்சிக்கான பங்கும் பொறுப்பும் மத்திய அரசிடம் இருந்து மாநிலங்களுக்கு மாற்றப்பட்டது.

தங்கள் விதியை நிர்ணயிப்பதில் முக்கியமானவைகளாக மாநிலங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. உண்மையில் நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய முன்னோடிகள் கூட நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் மாநிலங்கள் முக்கிய பங்கு வகிக்கும் என்று தீர்க்க தரிசனமாகக் கணித்தனர்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக நிலவி வந்த நிலைமை வேறு வகையானது. ஆனால் புதிய ஆயிரமாவது ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வளர்ச்சியில் மாநிலங்கள் முன்னோடிகளாக விளங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

பாரம்பரியமாக தொழில் வளர்ச்சியில் முற்போக்கான கொள்கையை தமிழ்நாடு பின்பற்றி வருகிறது. இது மாநிலத்தில் நிலவிவரும் முதிர்ச்சியடைந்த, தரம் வாய்ந்த தொழில் அடிப்படையில் பிரதிபலிக்கிறது. ஒட்டுமொத்த வளர்ச்சி, வேலை வாய்ப்பு, வறுமை ஒழிப்பு மற்றும் சமூக நீதி ஆகியவற்றில் தொழில் மயமாக்கலின் நன்மைகளை முதன்முதலாகப் புரிந்து கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

தமிழ்நாடு பெருமளவிலான இயற்கை மற்றும் மனித வளங்களைப் பெற்றுள்ளது. பல தொழிற்துறைகளுக்கு அது சந்தைத் தலைவராகத் திகழ்கிறது. கார் உற்பத்தி, கார் உதிரிபாகங்கள், ஜவுளித் தொழில், தோல் தொழில் ஆகியவற்றை அதற்கு உதாரணங்களாகக் கூறலாம். தேசிய உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் இத்துறைகள் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன எனினும் தொடக்க காலத்தில் அளிக்கப்பட்ட முக்கியத்துவம் பல்வேறு காரணங்களால் பிற்காலங்களில் அளிக்கப்படவில்லை. 80ஆம் ஆண்டுகளிலும், 90ஆம் ஆண்டுகளிலும் தமிழகம் பின் தங்கியிருந்தது. இப்போது அந்தப் பிரச்சினை மிகத் திறமையுடன் தீர்க்கப்பட்டு வருகிறது. தொழிற்துறையில் தமிழகம் மீண்டும் வெற்றி நடை போடுகிறது.

1996ஆம் ஆண்டு நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தபிறகு தமிழ்நாட்டை அதன் முந்தைய புகழ்மிக்க நிலைக்கு கொண்டு வருவதற்கான பல்வேறு ஆக்கபூர்வ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எங்கள் முயற்சிகளின் பயன்கள் ஏற்கெனவே வெளிப்படையாகத் தெரியத் தொடங்கி விட்டன.

மும்பையில் உள்ள சுயேச்சை அமைப்பான இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் பல்வேறு மாநிலங்களுக்கும் வரும் முதலீட்டை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கண்காணித்து வருகிறது. அவர்களுடைய புள்ளி விவரங்களின்படி 1996 மே மாதத்தில் தொழில் முதலீட்டுத் திட்டங்களில் தமிழ்நாடு 5வது இடத்தில் இருந்தது. ஆனால் 1998 நவம்பர் மாதத்தில் அது மராட்டியத்திற்கு அடுத்தபடியாக 2வது இடத்திற்கு உயர்ந்துள்ளது. இத்துடன் நாங்கள் திருப்தியடைந்து விடவில்லை. நாங்கள் ஏராளமான முயற்சிகளை எடுத்து வருகிறோம். முதல் இடத்தை எட்டுவதற்காக நாங்கள் மிகவும் கடுமையாக உழைத்து வருகிறோம்.

முதலீட்டாளர்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய நிலத்தை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சுய தேவைப் பூர்த்தியடைந்த தொழிற் பூங்காக்கள் பலவற்றை நாங்கள் உருவாக்கி வருகிறோம். இந்த தொழிற் பூங்காக்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. இது தொழில் முனைவோர் தாமதமின்றி நிலத்தைப் பெறுவதற்கு வகை செய்கிறது.

நாங்கள் கவனம் செலுத்தி வரும் மற்றொரு பகுதி சிவப்பு நாடா முறையை அகற்றுவதாகும். கடந்த ஆண்டு தொழில் நகரிய மேம்பாட்டு ஆணைய சட்டத்தை நாங்கள் நிறைவேற்றினோம். அந்த நகரியங்களில் உருவாகும் தொழில்களுக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் ஆணையமே அளிப்பதற்கு அது வகை செய்கிறது. என்னுடைய தலைமையில் ஒற்றைச் சாளர முறை ஒன்றையும் நாங்கள் உருவாக்கியிருக்கிறோம்.

வகுத்த இந்த கொள்கைகளில் சில தகவல் தொழில்நுட்ப (ஐடி.) கொள்கை, மலர் வளர்ப்புக் கொள்கை, ஒரே தலைமுறைக் கொள்கை போன்றவையாகும். இது ஒரு தொடரும் நடைமுறையாகும்.

இவை எல்லாம் முக்கியமானவைதான் என்றாலும் முதலீட்டாளர்களுக்கு மிகவும் ஆக்கபூர்வமான ஒற்றை ஊக்குவிப்பு நல்ல தரமான உள்கட்டமைப்புதான். அந்த வகையில் உள்கட்டமைப்பின் போதுமான நிலை மற்றும் தரத்தைப் பொறுத்த வகையில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய கவுன்சில் சமீபத்தில் நடத்திய ஆய்வில் இது தெளிவாகியுள்ளது. எனினும் நாங்கள் பெருமைகளால் ஓய்ந்து விடவில்லை. உள்கட்டமைப்பின் பல்வேறு பிரிவுகளில் நாங்கள் கடுமையாக முதலீடு செய்து வருகிறோம். அவை மின்சாரம், சாலைகள், துறைமுக வசதிகள் ஆகியவை ஆகும்.



மேற்கொள்ளப்பட்ட நடைமுறை மாற்றங்களுடன், தொழில் வளர்ச்சி அமைப்புகளான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ), மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்), தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் ((சிட்கோ) ஆகியவற்றை நாங்கள் பெற்றிருக்கிறோம். இவை பாதுகாப்புச் சேவைகளை அளிப்பதோடு, முதலீட்டாளர்களுக்கு நிதியுதவியும் வழங்குகிறது. மேலும் சில பகுதிகளை உந்துதல் அளிக்க வேண்டியவை என்று கண்டறிந்துள்ளோம். அப்பகுதிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து முதலீட்டாளர்களுக்கு உதவிசெய்யும் வகையில் பகுதி முக்கியத்துவம் வாய்ந்த கொள்கைகளை நாங்கள் வகுத்துள்ளோம். கடந்த 2 ஆண்டுகளில் நாங்கள்

உண்மையில் எங்கள் மாநிலத்தில் செய்யப்பட்டு வரும் முதலீடுகளில் 50 சதவிகிதம் உள் கட்டமைப்பு பணிகளிலே செய்யப்பட்டு வருகிறது. அவற்றில் 50 சதவிகிதத்திற்கு மேல் மின்சாரத் துறையில் முதலீடு செய்யப்படுகிறது குறுகியகால அடிப்படையிலும், நீண்டகால அடிப்படையிலும், மின்உற்பத்தித் திறனை அதிகரிக்கத் திறமையான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள 7000 மெகாவாட் மின்சார உற்பத்தித் திறனுக்குமேல் கூடுதலாக அடுத்த 7 ஆண்டுகளில் 12,000 மெகாவாட் மின் உற்பத்தித்திறனை

உருவாக்க நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். இதற்கு சுமார் 400 மில்லியன் (40 ஆயிரம் கோடி) ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பெருகி வரும் தேவையை ஈடுசெய்வதற்கான இத்தொகை மாநிலத்தின் நிதிநிலையைப் பொறுத்த வரையில் எங்களுடைய திறனுக்கு அப்பாற்பட்டது என்பதை நாங்கள் உணர்கிறோம். எனவே இதில் தனியார் துறை பங்கு பெறுவதை நாங்கள் தீவிரமாக ஊக்குவித்து வருகிறோம்.

### *மின் உற்பத்தியைப் பெருக்கப் பெருமுயற்சி*

நாங்கள் 20 குறுகிய கால மின்திட்டங்களை வகுத்துள்ளோம். இந்திய அரசு அளித்த எரிபொருள் இணைப்பின் அடிப்படையில் அவற்றுள் 6 திட்டங்கள் நன்கு உருவாகி வருகின்றன. மற்ற தனியார் துறை திட்டங்களில் பல வேகமாக உருவாகி வருகின்றன. எங்கள் மாநிலத்தில் நாங்கள் பழுப்பு நிலக்கரி இருப்பை பெருமளவில் பெற்றுள்ளோம். எனவே அடுத்த 5 ஆண்டுகளுக்குள் பழுப்பு நிலக்கரி அடிப்படையிலான 1500 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டத்தை அமைக்க உத்தேசித்துள்ளோம். இத்திட்டம் ஒரு தனியார் துறை நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான தேர்வு சர்வதேசப் போட்டிக் கோரிக்கை அடிப்படையில் செய்யப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான பணி ஏற்கெனவே தொடங்கிவிட்டது. சமீபத்தில் சென்னைக்கு அருகே 2000 மெகாவாட் மின்சார உற்பத்திக்கான நிறுவனத்தை நாங்கள் தேர்வு செய்தோம். இத்திட்டம் இறக்குமதி செய்யப்பட்ட திரவ இயற்கை வாயுவை அடிப்படையாகக் கொண்டது. இங்கு மீண்டும் வெளிப்படையான சர்வதேசப் போட்டிக் கோரிக்கை முறையிலேயே நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது. புதிய திட்டங்களிலிருந்து மின்சக்தி கொண்டு செல்லும் லயன்கள் அமைத்தல், பழைய அனல்மின் நிலையங்களை நவீனமயமாக்குதல் ஆகியவையும் தனியார் துறைக்கு அளிக்கப்படவுள்ளன. மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நடவடிக்கைகள் மூலம் எதிர்காலத்தில் முதலீட்டாளர்களுக்கு மின்சாரப் பற்றாக்குறை பற்றி எந்தக் கவலையும் ஏற்படாது என்று என்னால் உறுதியளிக்க முடியும்.

உள்கட்டமைப்பின் இரண்டாவது முக்கியப் பகுதியான சாலைகள் மேம்பாட்டுக்கும், உயர்நிலைப்படுத்துவதற்கும் பெருமளவிலான முதலீடு தேவைப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளில் இத்துறையில் நாங்கள் செய்திருக்கும் முதலீடு முந்தைய 4 ஆண்டுகளில் செய்யப்பட்ட முதலீடுகளை விட மூன்று மடங்கைவிட அதிகமாகும்.

எங்கள் மாநிலத்தில் மீட்டர் கேஜ் ரயில்பாதைகளை அகலரயில் பாதைகளாக மாற்றும் திட்டங்களில் 50:50 என்ற அடிப்படையில் செலவைப் பகிர்ந்துகொள்ளும் முயற்சியையும் நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இந்த ரயில்பாதை மாற்றம் பொருட்களையும், சரக்குகளையும் விரைவாகக்கொண்டுசெல்ல உதவும்சென்னை–பறக்கும் ரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டம் ரூ.750 கோடி செலவில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவும் விரைவாகச் செயல்பட்டு வருகிறது. இதற்கான செலவில் மூன்றில் இரண்டு பங்கை மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. இத்திட்டம் 2002 மார்ச் மாதத்தில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதே அடிப்படையில் இத்திட்டத்தின் மூன்றாவது கட்ட வடிவமைப்பு பற்றி ஏற்கெனவே நாங்கள் ஆலோசனைகளைத் தொடங்கிவிட்டோம்.

### *துறைமுகங்களை மேம்படுத்தும் முயற்சிகள்*

இந்த உலக மயமாக்கல் காலத்தில் துறைமுகங்கள் ஒரு முக்கிய உள் கட்டமைப்பாகும். அவற்றின் பங்கு முக்கியமானதாகும். தமிழ்நாடு சென்னையிலும் தூத்துக்குடியிலும் இரு பெரிய துறைமுகங்களைப் பெற்றுள்ளது. உலகின் சிறந்த துறைமுக நிறுவனமாகக் கருதப்படும் சிங்கப்பூர் துறைமுகக் கழகம் பற்றி நான் அறிவேன். அக்கழகம் சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய இரு துறைமுகங்களின் நடவடிக்கைகளிலும் விரிவாக்கத்திலும் இணைந்து செயல்பட்டு வருகிறது. கடலூரிலும், குளச்சலிலும் உள்ள சிறிய துறைமுகங்களை மேம்படுத்தும் முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

கடலூர் துறைமுகத்திற்கான கோரிக்கைகள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளன. குளச்சல் துறைமுகத்திற்கான சாத்யபூர்வ அறிக்கை தயாராகி வருகிறது.

எண்ணூரில் ஒரு புதிய பெரிய துறைமுகம் உருவாகி வருகிறது. நாங்கள் ஒரு திரவ இயற்கை வாயு டெர்மினலையும் பெரிய பெட்ரோ கெமிக்கல் பூங்காவையும் எண்ணூரில் அமைத்து வருகிறோம்.

சென்னையில் ஒரு புதிய சர்வதேச விமான நிலையத்தை அமைக்கவும் நாங்கள் தீவிரமாக செயல்பட்டு வருகிறோம். இது ஏற்கெனவே உள்ள ஒரு விமான நிலையத்தைவிடக் கூடுதலான ஒன்றாகும்.

தகவல் தொழில்நுட்பத்தின் சூரியோதையப் பிரிவில் தமிழ்நாடு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதில் சென்னையில் கிடைக்கும் முக்கிய நிலை திறனே நாட்டிலேயே மிகப் பெரியதாகும். நாங்கள் ஆண்டுக்கு 23 ஆயிரம் பொறியாளர்களை உருவாக்குகிறோம். அவர்களில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொறியாளர்கள் தகவல் தொழில்நுட்பத்திலும் அது தொடர்பான பிரிவுகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள். உண்மையில் பொறியாளர் பிரிவுக்கு எங்கள் பங்களிப்பு தேசிய அளவில் 14 சதவிகிதமாகும். மக்கள் தொகையில் 6.4 சதவிகிதமே இருந்தபோதிலும் பொறியியல் துறையில் கூடுதலாக பங்களிப்பைச் செய்துள்ளோம்.

### *மிகப்பெரிய தொழில்நுட்பப் பூங்கா*

தேசிய மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனங்களின் சங்கம் சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வில், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைப்பதற்கான இந்தியாவில் உள்ள மென்பொருள் நிலைய இடங்களில் சென்னை முதலிடம் வகிப்பதாகத்

## 5 JANUARY 1999, 7.30 PM
## MANDARIN HOTEL



தெரிவித்துள்ளது. நாங்கள் முன்னேற்றமான ஆக்கபூர்வ தகவல் தொழில்நுட்பக் கொள்கையைப் பெற்றுள்ளோம். இது தகவல் தொழில்நுட்பத் தொழிற்துறையால் வரவேற்கப்படுகிறது. நாட்டிலேயே மிகப்பெரிய தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அனைத்து வசதிகளுடன் சென்னைக்கு அருகே அமைத்து வருகிறோம். தகவல் தொழில்நுட்பத் தொழிலில் வளர்ந்து வரும் தேவையைக் கருத்தில் கொண்டு, தொழில் துறையின் கூட்டுறவுடன், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தை நாங்கள் சமீபத்தில் அமைத்துள்ளோம்.

டாக்டர் சாம் பிட்ரோடா தலைமையிலான வேர்ல்ட் டெல் நிறுவனத்தின் கூட்டுறவுடன் மாநிலம் முழுவதும் 1000க்கு மேற்பட்ட இணைய (இன்டர் நெட்) மையங்களை அமைக்க நாங்கள் செயல்பட்டு வருகிறோம். இது மக்கள் தொகை முழுவதும் மிக அருகாமையில் இணையத்தை எட்ட வகை செய்யும். மேலும் அடுத்த கல்வி ஆண்டிலிருந்து பள்ளி நிலையில் கல்வித் திட்டத்திலேயே தகவல் தொழில்நுட்பத்தைச் சேர்க்கவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். அடுத்த 10 ஆண்டுகளில் மாநிலத்தில் உள்ள 100 சதவிகிதம் மக்களையும் கணினி அறிவு பெற்றவர்களாக ஆக்கும் இலக்கை நோக்கிச் செயல்பட்டு வருகிறோம்.

தமிழ்நாட்டுக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான தொழில் மற்றும் வர்த்தக உறவு வேகமாக முன்னேறி வருவதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். எல்லா இந்திய மாநிலங்களிலும் அதிக அளவில் சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் கூட்டுத் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது தமிழ்நாட்டில்தான் என்று கூறப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நாங்கள் மேற்கொள்ளும் தொழில்மய முயற்சிகளில் பங்கு பெற இங்குள்ள மேலும் பல வர்த்தகர்களுக்கும், தொழில் முனைவோருக்கும் அறிவுரை கூறும்படி சிங்கப்பூர் இந்திய வர்த்தக மற்றும் தொழிற் சங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

வெளிநாடுகளிலிருந்தும், நாட்டின் பிற மாநிலங்களிலிருந்தும் வரும் முதலீட்டாளர்களுக்கு மிகவும் சாதகமான இடமாக தமிழ்நாடு மிக வேகமாக உருவாகி வருகிறது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எங்கள் மாநிலத்தை, முதலீட்டாளர்களை மேலும் மேலும் கவரும் வகையில் உருவாக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும். முதலீட்டாளர்களுக்கு நட்புறவான, வெளிப்படையான முடிவுகள் எடுக்கும்முறை மற்றும் ஆட்சியின் மூலம் அதை உருவாக்கி வருகிறோம்.

தேசிய அளவில் உயர் கல்வியில் பெருமிதம் கொள்ளும் இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாட்டில் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இந்தியாவிலேயே மிகவும் கணினிக் கல்வி பெற்ற மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க நாங்கள் தீர்மானித்துள்ளோம். உங்கள் முதலீட்டைக் கொண்டு வருவதற்கு நாங்கள் முழு அளவில் உதவி செய்வோம் என்று உறுதியளிக்க நான் விரும்புகிறேன். நீங்கள் வெற்றிபெற நாங்கள் எப்போதும் உங்களோடு இருப்போம். உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் வாழ்த்துக்கள்.

***வரவேற்பு விருந்தில்***

அதன் பின்னர் முதலமைச்சர் கலைஞர் விருந்து அருந்தும் இடத்திற்கு வந்தபோது, அரங்கத்திலே இருந்ததைப் போல மூன்று மடங்கு தொழிலதிபர்களும், வர்த்தகர்களும் திரண்டிருந்த காட்சியினைக் காண முடிந்தது. அதில் பெரும்பாலானவர்கள் முதலமைச்சரின் தமிழ் உரையைக் கேட்க வேண்டுமென்று பெரிதும் வலியுறுத்தியதால் முதலமைச்சர் கலைஞர் அங்கேயும் ஒரு சில நிமிடங்கள் தமிழிலே உரையாற்றினார். முதல்வரின் உரைக்கு முன்பு சிங்கப்பூர் வர்த்தகச் சங்கத் தலைவர் குப்தா அவர்கள் முதலமைச்சரை வரவேற்ற தோடு, முதல்வருக்கு சால்வை அணிவித்து ஆள் உயர மாலை ஒன்றையும் அணிவித்தார். முதல்வர் தனது சுருக்கமான உரையிலே கூறியதாவது:

"தமிழகத்திற்கு வருகின்ற பல தலைவர்கள், வெளி மாநிலத் தலைவர்கள் தமிழில் பேச முடியாமைக்காக மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வார்கள். ஆனால் இங்கே நான் தமிழில் பேசுவதற்காக தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் உரையாற்றுவதற்கான ஏற்பாடு இன்னொரு அரங்கில் செய்யப்பட்டிருந்தது. அங்கே நான் நீண்ட நேரம் ஆங்கிலத்தில் உரையாற்றி – அதன் அடிப்படையில் பல கேள்விகள் கேட்கப்பட்டு அவைகளுக்குப் பதிலும் சொல்லியிருக்கிறேன். இங்கே நடந்திருக்க வேண்டிய உரை அங்கே நடந்து விட்டது. எப்படி தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய சிங்கப்பூர் தாழ்வாரம் கர்நாடகத்திற்குப் போய்விட்டதோ, அதைப்போல.

திரு. குப்தா அவர்கள் அவருடைய உரையிலே குறிப்பிட்டதைப் போல சிங்கப்பூரில் உள்ள பல தொழில் முனைவோர்கள் இந்தியாவில் பல மாநிலங்களில் தொழில் நடத்தினாலுங்கூட, தமிழகத்தில் தான் அதிக முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. நேற்றும் இன்றும் நான் மிகுந்த நேரத்தைச் செலவழித்து தொழில் அதிபர்கள் சிலரையும், அரசாங்க பிரமுகர்கள் பலரையும் மாலையில் பிரதமரையும், வேறு சில அமைச்சர்களையும் சந்திக்கும் அரிய வாய்ப்பைப் பெற்றேன். என்னுடைய வருகை சிங்கப்பூருக்கும் தமிழகத்திற்கும் நெடுங் காலமாக உள்ள கலாச்சார உறவை உறுதிப்படுத்துவதாக இருந்த போதிலுங்கூட, அதே நேரத்தில் தமிழகத்தின் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டுமென்ற ஆசையும் அதோடு இணைந்திருக்கிறது. பல தொழில்களைப் பற்றி விவாதித்திருக்கிறோம். குப்தா அவர்களும் அவருடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் மீண்டும் விளக்க விரும்பவில்லை. நாங்கள் உங்களையெல்லாம் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்வது, கலாச்சாரத் தொடர்போடு தொழில் தொடர்பையும் பெருக்கிக் கொள்கிற வகையில், நீங்கள் தமிழகத்திற்கு உதவிட வேண்டுமென்பது தான்.

முதன் முதலாக, நான் என்னுடைய அறுபதாண்டு காலப் பொதுவாழ்க்கையில் வரவேண்டும், வரவேண்டும் என்று விரும்பி – ஆனால் வரமுடியாமல் பல தடங்கல் ஏற்பட்டு இப்பொழுது தான் சிங்கப்பூருக்கு வந்திருக்கிறேன். நான் கேள்விப்பட்டேன் – நண்பர் ராஜாராம் போன்றவர்கள் சொன்னார்கள் – இதுவரையில் நடைபெற்ற இதுபோன்ற விருந்துகளில் இந்த அளவிற்கு முந்திக் கொண்டு மக்கள் வந்ததில்லை; வர்த்தகர்கள் வந்ததில்லை; சிங்கப்பூர் பிரமுகர்கள் வந்ததில்லை, இந்த நிகழ்ச்சிக்குத் தான் இந்த அளவிற்கு வந்திருக்கிறீர்கள் என்று இங்கே சொன்னார். இங்கே வந்ததைப் போலவே நீங்கள் முந்திக் கொண்டு உங்கள் தொழிலை தமிழகத்தில் தொடங்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீண்ட நேரம் உணவிற்கு முன்னால் உங்களைக் காக்க வைக்காமல் இந்த அளவோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்".

### ஒரு சில தொழிலதிபர்கள் எழுப்பிய ஐயங்களும், முதலமைச்சர் கலைஞர் அளித்த விளக்கங்களும்

*கேள்வி* : சிங்கப்பூர் நாட்டில் தமிழ்க் கல்வி பயில விரும்புவோர் தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு தேவையான எண்ணிக்கையில் தமிழ்ப் பட்டதாரி ஆசிரியர்கள் இல்லை. இக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, சென்னைப் பல்கலைக் கழகம் தொலைக் கல்வி முறை மூலம் இங்கு தமிழ் பட்டதாரி ஆசிரியர்களை உருவாக்க உதவி செய்வீர்களா?

*கலைஞர்* : தமிழக அரசு இதைப் பற்றி பரிசீலித்துத்தான் எந்த முறையில் அதைச் செய்ய முடியும் என்பது குறித்து முடிவெடுத்து அறிவிக்க இயலும். உடனடியாக நான் இத்தருணத்தில் உறுதியளிக்க முடியாது. இருந்தாலும் நான் உங்களுடைய உணர்வைப் புறக்கணிக்கவில்லை.

*கேள்வி* : பல்வேறு கட்டமைப்புத் திட்டங்களில் தமிழ்நாடு பெருமளவு முதலீடு செய்து வருவது குறித்து தனது உரையில் குறிப்பிட்ட முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட கட்டமைப்புத் திட்டங்களில் சிங்கப்பூர் நாட்டு அரசும், நிறுவனங்களும் பங்குபெறுவது குறித்து இங்கே அமைச்சர்களுடன் நடந்த கலந்துரையாடலில் பேசினாரா?

*கலைஞர்* : இதுகுறித்து கடந்த இரண்டு நாட்களாக சிங்கப்பூர் நாட்டு அமைச்சர்களோடு பேசும்போது இந்நாடு தமிழகக் கட்டமைப்புத் திட்டங்களில் பங்கு பெறும் சாத்தியக் கூறுகள் குறித்து நான் எடுத்துரைத்தி ருக்கிறேன்.

*கேள்வி* : தமிழகத்தில் சிறிய அளவில் முதலீடு செய்து தொழில் தொடங்க வருபவர்களுக்கு தமிழக அரசு பெரிய முதலீட்டாளர்களுக்கு அளிக்கும் அனைத்துச் சலுகைகளையும் வழங்குமா?

*கலைஞர்* : சிறிய அளவில் தொழில் தொடங்க வருபவர்களையும் வரவேற்க தமிழகம் தயாராக இருக்கிறது. பெரிய அளவில் தொழில் தொடங்க வருபவர்களைத் தான் வரவேற்போம், சிறிய அளவில் தொழில் தொடங்க வருபவர்களை வரவேற்க இயலாது என்று நாங்கள் எந்த வரையறையும் செய்யவில்லை.

*கேள்வி* : தமிழகத்தில் சிறிய அளவில் முதலீடு செய்ய, ஒரு வழியாக தமிழக அரசு கட்டமைப்பு வசதிகளை செயலாக்கும் பொருட்டு பங்குகள் மூலம் நிதி திரட்டுமா?

*கலைஞர்* : இதைப்பற்றிய பரிசீலனை தமிழக அரசில் இருந்து வருகிறது. தொழில்களைத் தொடங்குவதற்காக இந்த முயற்சி தேவைப்படுமேயானால் அதைப் பயன்படுத்த நாங்கள் தயங்க மாட்டோம்.

*கேள்வி* : தென்னாப்பிரிக்க நாட்டில் நல்ல முறையில் வசதிகளைக் கொண்ட ஆலைகளில் பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக நலிவு நிலை ஏற்படும்போது அந்நாட்டு அரசு மானியம் அளித்து உதவுகிறது. அது போல் அந்த நலிந்த ஆலைகளை தமிழகத்திற்குக் கொண்டு வந்து இயக்க ஏற்பாடு செய்வீர்களா?

*கலைஞர்* : ஏற்கெனவே தமிழகத்திலும் அகில இந்திய அளவிலும் பல நலிவுற்ற தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றைச் சீர்செய்யும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டுள்ள போது புதிதாக மேலும் நலிவுற்ற ஆலைகளை இறக்குமதி செய்வது எப்படிப் பொருத்தமாக இருக்கும்? குறிப்பிட்டு நல்ல தொழிற்சாலைகளாக இருந்தால் உங்கள் யோசனையைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

*கேள்வி* : முதலீடு செய்ய வருபவர்கள் மத்திய அரசு அளவிலும், மாநில அரசின் பல்வேறு துறைகளிலும் தேவையான அனுமதிகள் தனித்தனியாக பெறவேண்டியி ருப்பதால் கால தாமதம் ஏற்படுகிறது. இதனை எளிதாக்க தமிழக அரசு முன் வருமா?

*கலைஞர்* : நான் என்னுடைய உரையில் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போலத் தொழில் முனைவோருக்குத் தேவையான அனுமதிகளைப் பெற்றுத் தர ஒற்றைச் சாளர




முறையை தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கிறோம். இது தொழில் செய்ய முனைவோருக்கு ஏற்படும் அலைச்சல் மற்றும் கால தாமதத்தைத் தவிர்க்க உதவிடும். எனவே இதுகுறித்து சங்கடம் வருமோ என்று யாரும் அஞ்சத் தேவையில்லை.

*கேள்வி* : முதலீடு செய்ய வருபவர்களை ஊக்குவிக்க ஒரு தொடர்ச்சியான அணுகுமுறை தேவை. ஐந்தாண்டுகளாக அப்படிப்பட்ட செயல்பாடு இல்லை. அதற்காக சிங்கப்பூரில் முதலீட்டை ஊக்குவிக்கும் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்த தமிழக அரசு முன்வருமா?

*கலைஞர்* : தொடர்ச்சியான அணுகுமுறை ஐந்தாண்டுகளாக இல்லை என்று வருத்தப்படுகிறீர்கள். அதற்காக ஒரு அலுவலகம் இங்கே திறக்கப்பட வேண்டுமென்றும் கூறுகிறீர்கள். நீங்கள் குறிப்பிடும் ஐந்தாண்டுக்காலம் என்பது எந்த ஐந்தாண்டுகள் என்று தெரியவில்லை. இருந்தாலும் உங்களுடைய கருத்து நிச்சயமாக கருதப்படவேண்டிய ஒன்று.

*கேள்வி* : சிங்கப்பூருக்கு முதன்முறையாக பயணம் மேற்கொண்டிருக்கிறீர்கள். இந்தப் பயணத்தின் முடிவு வெற்றியா? தோல்வியா?

*கலைஞர்* : நான் படை எடுத்து வரவில்லை – வெற்றி தோல்வி குறித்து பதில் சொல்வதற்கு. பாசத்தைக் காட்டத் தான் வந்திருக்கிறேன். எனவே பாசத்தை இருசாராரும் பரிமாறிக் கொள்கிறோம்.

*கேள்வி* : உங்களின் பயணம் எதிர்பார்த்த விளைவுகளைக் கொடுத்திருக்கிறது என்று உங்களால் சொல்ல முடியுமா?

*கலைஞர்* : நிச்சயமாகச் சொல்ல முடியும். நீண்ட நெடுங்காலமாக சிங்கப்பூருக்கும் தமிழகத்திற்கும் உள்ள கலாச்சாரத் தொடர்பை உறுதி செய்து கொள்ள இந்தப் பயணம் பயன்படும் என்ற நம்பிக்கையோடு வந்தேன். அது பயன்பட்டிருக்கிறது. அதைப் போலவே தொழில் துறை தமிழகத்திலே வளர இங்கேயுள்ள தொழில் முனைவோரும் சிங்கப்பூர் அரசும் உதவி செய்ய வேண்டுமென்ற நம்பிக்கையோடும் வந்தேன். அதிலும் எனக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

**6–1–99** அன்று காலை **11** மணியளவில், சிங்கப்பூரில் உள்ள இந்திய வர்த்தக வழிகாட்டுக் குழுவின் உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் முதலமைச்சர் கலைஞர் கலந்து கொண்டார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களை வரவேற்றுப் பேசிய இந்திய வர்த்தகக் குழுத்தலைவர் திரு. தேவேந்திர சிங், "முதலமைச்சரின் வருகை சிங்கப்பூரில் உள்ள தொழில் முதலீட்டாளர்களுக்கு, இந்திய நாட்டின் பொருளாதார நிலை பற்றியும், தமிழகத்தில் முதலீடு செய்வதற்குள்ள வாய்ப்புகள் பற்றியும் சரியான தகவல்கள் அறிந்து கொள்ளப் பெரிதும் உதவியாக இருக்கும்" என்று கூறினார். இதற்குப் பதிலளித்த முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டில் தற்போதுள்ள தொழில் நிலை குறித்தும், தமிழக அரசின் தொழிற் கொள்கை குறித்தும் விளக்கிக் கூறினார்.

"தமிழ்நாட்டில் தொழில் துறையில் முதலீடு செய்ய வருவோருக்கு அரசு அனைத்து உதவிகளையும் விரைவாக வழங்கும்" என்று முதல்வர் உறுதியளித்தார்.

தமிழ்நாட்டில் கணிசமான அளவு முதலீட்டில் வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத் துறை, வீட்டு வசதியைப் பெருக்குதல், மின்சார உற்பத்திக்கான வாய்ப்புகள் ஆகியவை குறித்து கலந்துரையாடலின்போது விவாதிக்கப்பட்டது.

பல்வேறு சர்வதேச நிறுவனங்களின் சமீபத்திய மதிப்பீட்டின்படி, இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலீடு செய்வதற்கு மிகச் சிறந்த இடமாகத் திகழ்வது பற்றி அண்மையில் வெளியான அறிக்கைகளின் நகல்கள் குழுவினருக்கு வழங்கப்பட்டது.

இறுதியில் முதல்வருக்கு நன்றி கூறிய திரு.தேவேந்திர சிங், முதலமைச்சரின் இன்றைய பங்கேற்பும், உரையும் இக்குழுவின் உறுப்பினர்களுக்கு மிகவும் நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்டினார். ●

# சிங்கப்பூரில் தமிழ் அமைப்புகள் அளித்த வரவேற்பில் முதலமைச்சர் கலைஞர் 6—1—1999 அன்று ஆற்றிய உணர்ச்சிமிகு உரை

“சிங்கப்பூரில் 4ஆம் தேதி காலையில் வந்து இறங்கிய நான், வணிகத்துறை நண்பர்கள், தொழில் முனைவோர், அவர்கள் சார்ந்துள்ள குழுக்கள் சந்திப்புடன் சிங்கப்பூர் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு. யா போ டான் அவர்களையும் தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. ஜார்ஜ் இயோ அவர்களையும், சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் துணைத் தலைவர் திரு. கூன் கோக் லூன் அவர்களையும், நேற்று மாலையில் சிங்கப்பூர் நாட்டின் பிரதமர் மாண்புமிகு கோ சோக் டோங் அவர்களையும் சந்தித்துப் பேசியிருக்கிறேன்.

இப்போது உங்கள் முன்னால் நின்று கொண்டிருக் கிறேன். அவர்களிடமெல்லாம் நான் பேசினேன். இப்போது பேசாமல் உங்களையெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது. அந்த நிலையில் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

கெழுதகை நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல், என்னுடைய அறுபதாண்டு காலப் பொதுவாழ்க்கையில் இந்தச் சிங்கப்பூருக்கு வரவேண்டும், வரவேண்டும் என்று பலமுறை முயற்சியெடுத்தும் கூட வர இயலாத சூழல் ஏற்பட்டு – கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் மாத்திரம் கலந்துகொள்ள ஒரு நாள் வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றுத் திரும்பினேன்.

இப்போது சிங்கப்பூரில் மூன்று நாட்களும் மலேசியாவில் மூன்று நாட்களும் என்று தமிழகத்திற்குத் தேவையான சில பிரச்சினைகளைப் பேசுவது மாத்திர மல்லாமல், எனக்கு மிகமிகத் தேவையாக இருக்கின்ற உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

நான் உங்களையெல்லாம் “என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே” என்று அழைக்கும்போது நீங்கள் மாத்திரம் உணர்ச்சி வயப்படவில்லை; மகிழ்ச்சி அடையவில்லை; நான் எந்த அளவிற்கு உணர்ச்சி வயப்படுகிறேன் என்பதை நீங்கள் அனைவரும் நன்கறிவீர்கள்.

இன்று சிங்கப்பூரில் நடைபெறுகின்ற இந்த விழா மேடையில் எனக்கொரு புது அனுபவம். எப்போதும் நான் பேசுகின்ற விழா மேடையானாலும், மாநாடு ஆனாலும் மேடையிலே பல தலைவர்கள் இருப்பார்கள், அமைச்சர்கள் வீற்றிருப்பார்கள், எங்கள் கட்சியின் முன்னணித் தளபதிகள் வீற்றிருப்பார்கள். இன்று என்னைத் தன்னந்தனியனாக மேடையிலே நிறுத்தி நீங்கள் வேடிக்கை பார்க்கிறீர்கள். என்னை நீங்கள் தன்னந்தனியாக நிறுத்தினாலும் உங்களை நான் தன்னந்தனியனாக ஆக்கமாட்டேன் என்ற உறுதியை இந்த நல்ல நிகழ்ச்சியில் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அன்பு மழையில் நனைய வாய்ப்பளித்தமைக்கு நன்றி

*“மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்”* என்று சிலப்பதிகார வரிகள் செப்புவதைப் போல இன்றைக்குச் சிங்கப்பூர் தமிழர்கள் பலர் அந்த வரிகளை மாற்றி *“மாமழை தூற்றுதும், மாமழை தூற்றுதும்”* என்று கூறுகின்ற அளவிற்கு வரவேண்டுமென்று நினைத்த இன்னும் பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்கள் வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். ஆனால், இந்த மழையிலும் நான் உங்கள் அன்பு மழையில் நனைவதற்கு ஒரு வாய்ப்பை அளித்தமைக்காக என்னுடைய நன்றியை உங்கள் காலடிகளில் காணிக்கையாக்குகிறேன்.

நான் உங்களில் ஒருவன். தமிழகத்தில் தஞ்சைத் தரணியில் திருக்குவளை என்கிற ஒரு கிராமத்தில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்த நான் இங்கே வந்தமர்ந்ததும் மேடையை உற்றுப் பார்த்தேன். அதிலே வைக்கப்பட்டுள்ள பதாகையைக் கவனித்தேன். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்று எழுதியிருக்கும் இந்தச் சொற்றொடர்கள் எல்லாம் உங்களுடைய அன்பு எனக்கு வழங்கியது. அந்தச் சொற்றொடரின் தொடர்ச்சியாக இருக்கின்ற **‘கருணாநிதி’** என்பதுதான் எனக்குச் சொந்தமானது. மற்ற சொற்கள் எல்லாம் உங்களுக்குச் சொந்தமானவை – நீங்கள் வழங்கியவை. அந்தப் பாச உணர்வோடு சில கருத்துக்களை இந்த மேடையில் நின்று உங்களோடு பரிமாறிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

### உலகம் ஒன்றே ஆனாலும் தனித்தனி நாடுகள் உள்ளன

இன்று உலகம் விஞ்ஞான யுகத்தில் மிக மிகச் சுருங்கிக்கொண்டே வருகிறது. ஒரு காலத்தில் லிங்கன் கொல்லப்பட்ட செய்தி ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் இலண்டன் மாநகருக்கே கிட்டியது என்று

சொல்கிறார்கள். அந்த அளவிற்குத் தகவல் தொடர்பு பஞ்சமாக இருந்த கால கட்டம் அது. ஆனால், இன்றைக்கு உலகத்தையே சுருங்க வைக்கக்கூடிய வசதி வாய்ப்புகள், தகவல் தொடர்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. குளோபலிசேஷன் (Globalisation) என்று சொல்கிற இந்த ஆங்கில வார்த்தைக்கு உலக மயமாக்குதல் என்று பொருள். எனினும் Think Globally Act Locally என்றும் சொல்கிறார்கள்.

உலக மயமாகிக் கொண்டிருப்பதால் நாட்டின் எல்லைக் கோட்டை யாரும் அழித்துவிட விரும்புவதில்லை. ஒரே உலகம் என்று சொல்லப்பட்டாலும் தனித்தனி நாடுகள் இருக்கின்றன. அந்தத் தனித்தனி நாடுகளில் தனித்தனித் தேசிய இனங்கள் இருக்கின்றன. அந்தத் தேசிய இனங்கள் வாழ்கின்ற தனித்தனி மாநிலங்கள் இருக்கின்றன.




### இந்திரா காந்தியின் வார்த்தையால் நான் அடைந்த மகிழ்ச்சி

ஆனால், நம்முடைய சங்க காலத்துப் புலவர் கணியன் பூங்குன்றன் ***"யாதும் ஊரே யாவரும் கேளிர்"*** என்று ஒரே உலகத்திற்கு அழைப்பு விடுத்தார். பிரகடனம் செய்தார். அதை இந்தியாவின் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ருஷ்ய நாட்டிற்குச் சென்றிருந்தபோது ***"யாதும் ஊரே யாவரும் கேளிர்"*** என்ற இந்தத் தமிழ்ச் செய்யுளின் முதல் வரியை எடுத்துச் சொல்லி, இந்தப் பாடலைப் பாடியவர் தமிழ்நாட்டுப்புலவர் என்று சொன்னபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆனால் மன்னித்துக் கொள்ளவேண்டும் – தமிழர்களில் சிலர் கேளிர் என்பதை கொஞ்சம் நீட்டி யாதும் ஊரே யாவரும் கேளீர் – எல்லா ஊரும் நம்முடையதே, அதை எல்லோரும் கேளுங்கள் என்று அந்தப் பொருளினைக் கருதுகின்ற நிலை இருப்பதையும் நான் எண்ணி நாணாமல் இருக்க முடியவில்லை. யாதும் ஊரே யாரும் கேளிர் என்று ஒரே உலகச் சிந்தனையோடு அன்றைக்குப் பாடல் எழுதிய கணியன் பூங்குன்றன் கூட, தன்னுடைய ஊரை மறக்கவில்லை. அந்தப் புலவனுடைய பெயர் கணியன். அவன் பிறந்த ஊர் பூங்குன்றம். அந்தப் பூங்குன்றத்தின் பெயரை மறக்காமல் தன் பெயரான கணியன் என்பதுடன் இணைத்து கணியன் பூங்குன்றன் என்று தன்னை அழைக்குமாறு செய்தார்.

அதைப் போல உலகத்தில் வாழ்கிற நாம் நம்மைத் தமிழர்கள் என்று அடையாளம் காட்டிக் கொள்வது கணியன் பூங்குன்றன் தான் பூங்குன்றத்திற்குச் சொந்தக்காரன் என்பதை அடையாளம் காட்டிக் கொண்டதைப் போன்றதாகும். அந்த உணர்வின் காரணமாகத்தான் சிங்கப்பூரில் கூட Speak Mandarin என்ற பிரச்சாரம் நடைபெற்று வருகிறது. மொழி என்பது உள்ளங்களோடு உறவாட, தொடர்பு கொள்ள ஒரு கருவியாகப் பயன்படுகிறது என்பது மொழி ஆய்வாளர்களும், ஆராய்ச்சியாளர்களும் உணர்ந்த ஒரு உண்மை. மொழி ஒன்று தான் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் பொதுவானது.

நிகழ்காலம், கடந்த காலம், எதிர்காலம் என்ற இந்த மூன்று காலங்களுக்கும் தொடர்புடையது மொழிதான். நமது தமிழ்மொழியைப் பொறுத்தவரை மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியம் தோன்றியது என்ற வரலாற்றுப் பெருமை கொண்டது.

### தொல்காப்பியத்திற்கும் முற்பட்டது தமிழ்மொழி

தொல்காப்பியத்தின் கால கட்டம் 3,000 ஆண்டுகள் என்றாலுங்கூட அதற்கு முன்பே தமிழ் இலக்கியங்கள் தோன்றிவிட்டன என்றே சொல்லவேண்டும். எப்போதும் ஒரு மொழி உருவான பிறகுதான் அந்த மொழி சார்ந்த இலக்கியங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோன்றிய பிறகுதான் இலக்கணம் அதற்காக வகுக்கப்படும். அப்படித்தான் 3000 ஆண்டு காலத்தைக் கொண்ட தொல்காப்பிய இலக்கணம் வரையப் பட்டிருந்தால் அதற்கு முன்பே மூத்த மொழியாக நம்முடைய தமிழ் மொழி இந்த உலகத்தில் விளங்கி இருக்கின்றது. தொல்காப்பியத்திலே கூடப் பல இடங்களில் இலக்கணத்தை வகுத்துச் சொல்கின்ற நேரத்தில் – முன்னோர் சொல்லியிருப்பது போல – என்ற எடுத்துக்காட்டுகள் வரும்.

உதாரணமாக

***"நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென***
***வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே"***

– என்று தொல்காப்பியம் கூறுகிறது.

அதாவது கடந்த காலத்தில் உரைத்திருக்கிறார்கள் என்று தொல்காப்பியத்திலே இலக்கணம் குறிப்பிடுகிற தென்றால் தொல்காப்பியத்திற்கும் முற்பட்டது நம்முடைய தமிழ் மொழி.

**தொல்காப்பியமும் திருக்குறளும்**

அத்தகைய தமிழ்மொழிக்கு சொந்தக்காரர்களாகிய நமக்குக் கிடைத்த மற்றொரு கருவூலம் உலகம் போற்றும் கருவூலம் – உலகப் பொதுமறையாகப் பாராட்டப்படுகின்ற கருவூலம் திருக்குறள். அது ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. மதச்சார்பற்ற பொதுவான இலக்கியம், மறை, கீர்த்தி வாய்ந்த இலக்கண இலக்கியங்களுக்கு நாம் சொந்தக்காரர்கள் என்பதை நிலை நாட்டுகின்ற அடையாளங்களாகத்தான் தொல்காப்பியமும் திருக்குறளும் நிலவுகின்றன.

உங்களுக்குத் தெரியும். உலகப் புகழ் எய்திய கிரேக்கப் பாரம்பரியம் இப்போது இல்லை. எகிப்திய மொழிக் கலாச்சாரமும் இப்போதில்லை. ஆனால், இன்னமும் இலங்கையில் தொல்காப்பியத் தமிழைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ர–என்ற எழுத்து சொல்லின் முதலில் வரக்கூடாது என்பது இலக்கணவியல். ஆனால் நாம் "ரத்தம்" என்றுதான் ர–என்ற எழுத்தைச் சொல்லின் முதலில் வைத்து எழுதிக் கொண்டிருக்கிறோம். இலங்கையில் இ–என்ற எழுத்தைச் சேர்த்து "இரத்தம்" என்றுதான் எழுதுவார்கள். எனவே இலங்கைவாழ் தமிழர்கள் இன்னமும் தொல்காப்பிய காலத்தை மறக்கவில்லை. இது ஒரு எடுத்துக்காட்டு.

**புரட்சிக்கவிஞன் பாரதிதாசனின் அழகிய சித்தரிப்பு**

நம்முடைய தமிழுக்கு எத்தனையோ பொருள் உண்டு. இனிமை என்றும் புதுமை என்றும் பழமை என்றும் எத்தனையோ பொருள் உண்டு. எத்தனையோ சிறப்பு உண்டு. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அழகான வரி ஒன்றினால் சித்தரித்தார். "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று பாரதிதாசன் எழுதினார். அது என்ன தமிழுக்கும் என்கிற அந்த உம் தேவைதானா என்றால் தேவைதான். ஏனென்றால் அமுது என்று ஏற்கெனவே ஒன்று இருக்கின்றது. அமுதுக்கு அமுது என்று பெயர் இருக்கின்ற காரணத்தால் தமிழுக்கும் அதுதான் பெயர் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னார்.

**அமிர்தம் குறித்து திருக்குறளில் விளக்கம்**


நான் அமிழ்து என்று சொல்கிற நேரத்தில் பலருக்கு – பகுத்தறிவு எண்ணம் படைத்தவர்களுக்கு – அப்படியானால் அந்த எண்ணம் எனக்கில்லை என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது – பகுத்தறிவு எண்ணம் உள்ள எல்லோருக்குமே இதென்ன கருணாநிதி திடீரென்று அமிர்தம் என்பதை நம்புகிறானே – அமிர்தம் என்றால் தேவாமிர்தம் என்று சொல்வார்களே அதுவல்லவா என்று எண்ணக்கூடும். ஆனால் வள்ளுவர் அமிர்தம் என்றால் என்ன என்பதை விளக்குகிறார். அவரே அமிர்தத்தை ஒரு அதிகாரத்திலே குறிப்பிடுகிறார்.

மக்கட்பேறு என்ற 7வது அதிகாரத்தில் திருவள்ளுவர்

***"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்***
***சிறுகை அளாவிய கூழ்"***

– என்று குறிப்பிடுகிறார்.

உழவுத் தொழில் செய்துவிட்டு வீட்டிற்குக் கணவன் வருகிறான். அருந்துவதற்கு என்னவிருக்கிறது என்று



கேட்கிறான். ஆருயிர் மனையாள் கூழ்க் கலயத்தைக் கொண்டுவந்து எதிரே வைக்கிறாள். இன்றைக்கும் இதுதானா என்று அலுத்துக்கொண்டே கேட்டு, அதைக் குனிந்து பார்க்கிறான். அப்பொழுது தாழ்வாரத்தில் தவழ்ந்து கொண்டிருந்த மழலைக் குழந்தை தவழ்ந்து, தவழ்ந்து, தவழ்ந்து வந்து அந்தக் கலயத்திற்குள்ளே தன் பிஞ்சுக் கையை விடுகிறது. இன்றைக்கும் இதுதானா என்று கேட்டவன் "ஆகா, கூழ் அமிழ்தமாகி விட்டது" என்கிறான். ஏன்? குழந்தையினுடைய சிறுகை அந்தக் கூழை அளாவிவிட்டக் காரணத்தால் அது

*"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"*

– என்று குறிப்பிடுகிறார். குழந்தையினுடைய கை கூழிலே பட்டால்கூட அதை அருந்த முதலிலே அலுத்துக் கொண்டவன், ஆதங்கப்பட்டவன் அது அமிழ்தமாகி விட்டதென்று அகமகிழ்கிறான்.

## திருவள்ளுவர் குறிப்பிடும் அமிழ்தம்

இந்த அமிழ்தம் எந்த அமிழ்தம் – எதைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர்? மேருமலையை மத்தாகக் கொண்டு வாசுகி என்கிற நீண்ட பாம்பைக் கயிறாகக் கொண்டு அந்தப் பாம்பின் தலைப்பக்கத்தைக் கோழையான(?) அசுரர்களும் வால் பக்கத்தை வீரர்களான(?) தேவர்களும் பிடித்துக் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்து அப்பொழுது தோன்றியதுதான் அமிழ்தம்.

அமிழ்தமும் தோன்றியது, அதே நேரத்தில் இன்னொரு பக்கத்தில் விஷமும் தோன்றியது. பாடுபட்ட(?) தேவர்கள் அமிர்தத்தை எடுத்துக் கொண்டார்கள். அசுரர்களுக்கு விஷம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அதை விரும்பாத காரணத்தால் அந்த விஷத்தின் வேகம் உலகத்தையே அழித்துவிடுமென்று பயந்து எல்லோரும் சிவனிடம் சென்று முறையிட்டார்கள்.

நான் எழுதிய கதையல்ல இது; ஏற்கெனவே இருக்கின்ற புராணக்கதை இது!

முறையிட்டவுடனே விஷத்தினால் உலகம் அழிந்து விடக் கூடாதென்று கருதிய ஆண்டவன் சிவன், அந்த விஷத்தையெடுத்துப் பருகினான். பருகும்போது பக்கத்திலே இருந்த பார்வதி தேவியார் முழுமையாக விழுங்கிவிட்டால் சிவனுக்கு ஆபத்து வருமேயென்று பயந்து, அது தொண்டைக்குள் போகும்போதே கழுத்துக் கண்டத்தைப் பிடித்துவிட்டாள். விஷம் அங்கேயே நின்றுவிட்டது.

விஷம் நின்ற இடம் சிவனுடைய கழுத்திலே ஒரு கண்டமாக மாறிவிட்டது. அது முதல் உலகத்திலே இருக்கின்ற எல்லா ஆண்களுக்கும் கழுத்திலே ஒரு கண்டம் முடிச்சு போன்ற பகுதி ஏற்பட்டது. இப்படி உருவானதுதான் அமிர்தம் என்ற சொல். அப்படி உருவான அந்த அமிர்தத்தை நானும் குறிப்பிடவில்லை. வள்ளுவரும் குறிப்பிடவில்லை.

எதை அமிழ்தம் என்கிறார்? நான் 7ஆவது அதிகாரத்திலே மக்கட்பேறில் அமிழ்தம் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறாரே அந்த அமிழ்தத்தை 2ஆவது அதிகாரத்தில் எப்படி குறிப்பிடுகிறார் தெரியுமா?

வான் சிறப்பு என்ற அந்த அதிகாரத்தில் அமிழ்தம் பற்றிக் குறிப்பிடும்போது;

***"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று"***

– வானத்திலிருந்து உலகம் உய்ய வழங்கப்படுகின்ற காரணத்தினால் மழையை அமிழ்தம் என்று அழைக்கிறோமென்று குறிப்பிடுகிறார்.



உலகத்தை, மனிதர்களை வாழவைக்க, வானத்திலிருந்து உலகத்திற்கு வழங்கப்படுவதால் அதை அமிழ்தம் என்று அழைக்கிறோமென்று குறிப்பிடுகிறார்.

ஆக வள்ளுவர் குறிப்பிட்ட அமிழ்தம் தேவாசுரர்கள் திருப்பாற்கடலிலே எடுத்த அமிழ்தம் அல்ல, அவர் மழையின் வாயிலாக எடுத்த அமிழ்தம் – மழைதான் மக்களுக்கு அமிழ்தம் – மழை இல்லாவிட்டால் மக்களுக்கு வாழ்வில்லை. மக்கள் இயங்க முடியாது. எனவே, அதுவே அமிழ்தம், அந்த அமிழ்தம்போலக் குழந்தையின் பிஞ்சு விரல் பட்ட கூழ் மாறிவிட்டது என்று வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார் என்றுதான் நாம் கொள்ளவேண்டும்.

நம்முடைய மொழியின் சிறப்பை நாம் படித்தறிந்திருக்கிறோம். கேட்டறிந்திருக்கிறோம். நம்முடைய மொழிக்குள்ள தனிச்சிறப்பு – மொழி – அது பெயர்ச்சொல்லாகவும் பயன்படும்; வினைச் சொல்லாகவும் பயன்படும். ஒருவரைப் பார்த்து – மொழி – என்று சொன்னால் அங்கே அது வினைச் சொல். என்னுடைய மொழி என்று சொன்னால் அங்கே அது பெயர்ச்சொல். ஆனால் ஆங்கிலத்திலே இந்த நிலை இல்லை. அது உலகத் தொடர்புடைய மொழியானாலுங்கூட, அதிலே இல்லாத அந்த ஆற்றலைத் தமிழ் பெற்றிருக்கிறது.

ஆங்கிலத்திலே Language என்கிறோம். அதற்கு வினைச் சொல்லாக வேறு சொற்கள்தான் இருக்கின்றன. say என்றோ, tell என்றோ speak என்றோ தான் சொற்கள் இருக்கின்றன. நம்முடைய தமிழ் மொழிக்குத்தான் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் மொழி என்ற சொல் அமைந்திருக்கின்றது.

**வாடிக்கொண்டும் வாழ்ந்துகொண்டும் இருக்கும் தமிழர்கள்**

இத்தகைய சிறப்புக்குரிய மொழிக்குச் சொந்தக்காரர்களான தமிழர்கள் உலகில் பல பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வாழ்ந்துகொண்டும் இருக்கிறோம். வாடிக்கொண்டும் இருக்கிறோம்.

நான் இங்கே வந்து அமர்ந்ததும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஆரூர் தோழர் ஒருவர் ஆர்க்காடு வீராசாமி மூலமாக ஒரு மடலை என்னிடம் தந்தார். அதைப் படித்துப் பார்த்தேன். என்ன எழுதியிருக்கிறாரென்றால் முன்பெல்லாம் இங்கே சாதாரண சாமான்ய தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தமிழர்கள் தாயகத்திற்குத் திரும்ப வேண்டுமென்றால்,கப்பலிலேசென்றுவந்தோம்.இப்போது விமானத்திலேதான் செல்ல வேண்டியிருக்கிறது. காரணம், சிதம்பரம் கப்பல் எரிந்த பிறகு எங்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. எனவே, முதலமைச்சர் அவர்களே உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இல்லாவிட்டால் நீங்களே மற்றொரு சிதம்பரனாராக மாறி அந்தக் கப்பல் பயணத்தை எங்களுக்கு ஏற்பாடு செய்துகொடுங்கள் என்று எழுதியிருக்கிறார். கடிதம்தான் அது. வந்து அமர்ந்ததும் என் உள்ளத்தைக் கவலை கொள்ளச் செய்த கடிதம். கவனிக்கப்பட வேண்டிய கடிதம் அது என்பதை நான் உணருகிறேன்.

என்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். மத்திய அரசிலே எனக்கு எந்த அளவிற்குச் செல்வாக்கு இருக்கிறது என்பதை இதைப் பயன்படுத்துவதிலே நான் காணுகின்ற வெற்றியைப் பொறுத்துத்தான் நீங்கள் கணிக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்று – நேற்றைய தினம் பிரதமரைச் சந்தித்தபோது கூட – இங்கு சில எத்தர்களால் ஏமாற்றப்பட்டுச் சிங்கைக்கு அழைத்து வரப்பட்டு "பெரிய வேலை வாய்ப்பில் ஈடுபடுத்துகிறேன் கவலைப்படாதே" என்று கூறப்பட்டு, அதை நம்பி, தன்னுடைய நிலபுலன்களையெல்லாம் விற்று விட்டு, நகை நட்டுகளையெல்லாம் அடமானம் வைத்துவிட்டு சிங்கைக்கு வந்து, அழைத்தவர்கள் எங்கே போனார்கள் என்று தெரியாமல், சில தனியார் கம்பெனிகளிலே வேலைக்கு அமர்ந்து, அவர்களால் கைவிடப்பட்டு சிங்கை வீதிகளிலே அலைந்து கொண்டிருக்கின்ற தமிழர்களையும் எண்ணிப் பார்க்கிறேன். எனவே, தமிழன் உலகத்தின் பல பகுதிகளில் வாழ்ந்து கொண்டும் இருக்கிறான். வாடிக்கொண்டும் இருக்கிறான்.

வாடிக் கொண்டிருக்கின்ற தமிழனுக்கு ஒரு வழி காண வேண்டுமென்று நேற்று உங்களுடைய பிரதமரிடத்திலே கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவரும் இதை மிகுந்த அக்கறையோடு கேட்டு நிச்சயமாகத் தகுந்த தீவிரமான நடவடிக்கை எடுக்க நான் உதவுகிறேன் என்றார். இதை – ஏமாந்த தமிழர்களுக்கு ஒரு நல்ல செய்தியாக நான் அறிவிப்பதோடு இனியும் ஏமாறாமல் இருக்க உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**அண்ணாவின் வார்த்தைகளை வேதமாகக் கொண்டுள்ளோம்**

தமிழ்ச் சமுதாயம் பல இடங்களில் பல இனங்களோடு சேர்ந்து வாழ வேண்டியிருக்கின்றது. இனம் கண்டு வாழ வேண்டியிருக்கின்றது. சிங்கப்பூரானாலும், மலேசியாவானாலும், எங்களுடைய தலைவர், எங்கள் **அண்ணன், பெரியார் வழி வந்த பேரறிஞர் அண்ணா** அவர்கள் – "ஆங்காங்கு வாழும் தமிழர்கள் அந்த மண்ணுக் குரியவர்களாக – அந்த மண்ணின் நலன்களில் நாட்டம் உடையவர்களாக – அதே நேரத்தில் மொழியை, இனத்தை, மொழி உணர்வை, இன உணர்வை மறக்காதவர்களாக வாழவேண்டும்" என்று சொன்ன அந்த வார்த்தைகளை நான் வேதமாக என்னுடைய நெஞ்சிலே செதுக்கி வைத்திருக்கிறேன். அதை இங்கே வெளியிடுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

அண்ணா அவர்கள் எத்தனைப் புலவர்கள் சங்க காலக் கட்டத்திலே வாழ்ந்தார்கள் என்று கணக்கெடுத்துப் புறநானூற்றுப் புலவர்களுடைய பட்டியலை மாத்திரம் வெளியிட்டு, தம்பிக்கு எழுதிய கடிதத்திலே சுட்டிக் காட்டியிருந்தார். நான் அதைப் படித்துப் பார்த்தவுடனேயே அண்ணா புறநானூற்றுப் புலவர்களை மாத்திரம் குறிப்பிட்டிருக்கிறார். அகநானூற்றுப் புலவர்களையும் சேர்க்க வேண்டுமேயென்று அந்தக் கணக்கையும் எடுத்து நான் சேர்த்துப் பார்த்தேன். ஏறத்தாழ அந்தப் புலவர்களின் எண்ணிக்கை 210ஐ எட்டுகிறது; 210பேர் அகநானூறு, புறநானூறு பாடல்களை எழுதியிருக்கிறார்கள்.

அவர்களுடைய பெயர்களைச் சொன்னால் அந்தக் காலத்தில் எப்படிப்பட்ட பெயர்களை அவர்கள் கொண்டிருந்தார்கள் என்ற அந்த உண்மை நமக்குத் தெரியும்.

**அகநானூறு – புறநானூறு பாடிய புலவர்கள்**

1. அடை நெடுங்கல்வியார்
2. அண்டர்மகன் குறுவழுதி
3. அரிசில்கிழார்
4. அள்ளூர் நன்முல்லையார்
5. அந்தி இளங்கீரனார்
6. அம்மூவனார்
7. ஆடுதுறை மாசாத்தனார்
8. ஆலங்குடி வங்கனார்
9. ஆலத்தூர் கிழார்
10. ஆலியார்
11. ஆவூர் கிழார்
12. ஆவூர் மூலங்கிழார்
13. ஆர்க்காடுகிழார் மகனார் வெள்ளைக்கண்ணத்தனார்
14. ஆலம்பேரிச் சாத்தர்
15. நக்கண்ணையார்
16. இடைக்காடனார்
17. இடைக்குன்றூர்க் கிழார்
18. இரும்பிடர்த்தலையார்
19. ஈழத்துப் பூதன் தேவனார்
20. உலேச்சனார்
21. உறையூர் இளம்பொன் வாணிகனார்
22. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
23. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
24. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
25. உறையூர் முதுகூத்தனார்
26. உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார்
27. உரோடகத்துக் கந்தரத்தனார்
28. உலோச்சனார்
29. ஊட்டியார்
30. ஊன்பொதி பசுங்குடையார்
31. எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்
32. எயினந்தை மகனார் இளங்கீரனார்
33. எருவை வெளியனார்
34. எருவை வெளியனார் மகனார் கடலனார்
35. ஐயாதிச் சிறுவெண்டரையர்
36. ஐயூர் முடவனார்
37. ஐயூர் மூலங்கிழார்
38. ஒக்கூர் மாசாத்தனார்
39. ஒக்கூர் மாசாத்தியார்
40. ஒருசிறைப் பெரியனார்
41. ஒரு உத்தனார்
42. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
43. ஓரம்போகியார்
44. ஓரேருழவர்
45. ஔவையார்
46. கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி
47. கண்ணகனார்
48. கணியன் பூங்குன்றன்
49. கபிலர்
50. கயமனார்
51. கருங்குழலாதனார்
52. கருவூர்க் கதப்பிள்ளை
53. கருவூர்க் கண்ணம் புல்லனார்
54. கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார்
55. கருவூர்ப் பூதஞ்சாத்தனார்
56. கல்லாடனார்
57. கழாத் தலையார்
58. கழைதின் யானையார்
59. கள்ளில் ஆத்திரையனார்
60. கடுந்தொடைக் காவினார்
61. கணக்காயனார் மகனார் நக்கீரனார்
62. காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்
63. காரிகிழார்
64. காவட்டனார்
65. காவற்பெண்டு
66. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
67. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்
68. காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்
69. காவன் முல்லைப்பூதனார்
70. குட்டுவன்கீரனார்
71. குடபுலவியனார்
72. குடவாயிற் கீரத்தனார்
73. குண்டுகட் பாலியாதன்
74. குறமகள் இளவெயினி
75. குறுங்கோழியூர்க்கிழார்
76. குன்றூர்க்கிழார் மகனார்
77. குறுங்குடி மருதனார்
78. குன்றியனார்
79. கூகைக் கோழியார்
80. கூடலூர்க்கிழார்
81. கோடைபாடிய பெரும்பூதனார்
82. கோதமனார்
83. கோப்பெருஞ்சோழன்
84. கோவூர்க்கிழார்
85. கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார்
86. சங்கவருணரென்னும் நாகரியர்
87. சாகலாசனார்
88. சாத்தந்தையார்
89. சிறுவெண்டரையார்
90. சீத்தலைச் சாத்தனார்
91. செல்லூர்க் கோசிகன் கண்ணனார்
92. சேரமான் கணைக்காலிரும்பொறை
93. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை
94. சேந்தம் பூதனார்
95. சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்
96. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
97. சோழன் நல்லுருத்திரன்
98. சோழன் நலங்கிள்ளி
99. தன்காற்பூட் கொல்லனார்
100. தங்கால் முடக்கொற்றனார்
101. தாமப்பல கண்ணனார்
102. தாயங்கண்ணனார்
103. தாயங்கண்ணியார்
104. திருத்தாமனார்
105. தும்பி சோகினனார்
106. துறையூர் ஓடைக்கிழார்
107. தொடித்தலை விழுத்தண்டினார்
108. தொண்டைமான் இளந்திரையன்
109. நரிவெரூஉத் தலையார்
110. நல்லிறையனார்
111. நன்னாகனார்
112. நக்கீரனார்
113. நல்லாவூர் கிழார்
114. நல் வெள்ளியார்
115. நன்பலூர் சிறுமேதாவியார்
116. நெட்டியமையார்
117. நெடுங்கழுத்துப்பாணர்
118. நெடும்பல்லியத்தனார்
119. நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழார்
120. நொச்சி நியமங்கிழார்
121. நோய்ப் பாடியார்
122. பக்குடுக்கை நன்கணியார்
123. பரணர்
124. பாண்டரங்கண்ணனார்
125. பாண்டியன் அறிவுடைநம்பி
126. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

127. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.
128. பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி
129. பாலை பாடிய பெருங்கடுங்கோ
130. பெருந்தேவனார்
131. பாரி மகளிர்
132. பிசிராந்தையார்
133. பிரமனார்
134. புல்லாற்றூர் எயிற்றியனார்
135. புறத்திணை நன்னாகனார்
136. பூங்கணுத்திரையார்
137. பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு
138. பெருங்குன்றூர்க் கிழார்
139. பெருங்கோழிநாய்க்கன் மகள் நக்கண்ணையார்
140. பெருஞ்சித்திரனார்
141. பெருந்தலைச்சாத்தனார்
142. பெரும்பதுமனார்
143. பெருந்தேவனார்
144. பேய்மகள் இளவெயினி
145. பேரெயின் முறுவலார்
146. பேரி சாத்தனார்
147. பொத்தியார்
148. பொய்கையார்
149. பொருந்திலிளங்கீரனார்
150. பொன்முடியார்
151. போந்தைப் பசலையார்
152. மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்
153. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
154. மதுரை இளங்கண்ணி கௌசிகனார்
155. மதுரை இளம்பாலாசிரியர் சேந்தன் கூத்தனார்
156. மதுரை எழுத்தாளனார்
157. மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார்
158. மதுரைக் கணக்காயனார்
159. மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரனார்
160. மதுரைக் கள்ளின் கடையத்தன் வெண்ணாகனார்
161. மதுரை கவுணியன் பூதத்தனார்
162. மதுரை காஞ்சிப் புலவர்
163. மதுரை செங்கண்ணனார்
164. மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார்
165. மதுரைத் தமிழ்க் கூத்தனார்
166. மதுரை நக்கீரர்
167. மதுரைப் படைமங்க மன்னியார்
168. மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார்
169. மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்
170. மதுரைப் பூதனிள நாகனார்
171. மதுரைப் பேராலவாயார்
172. மதுரைப் போத்தனார்
173. மதுரை மருதனிள நாகனார்
174. மதுரை வேளாசான்
175. மருதனிள நாகனார்
176. மருதம் பாடிய இளங்கடுங்கோ
177. மாங்குடிக் கிழார்
178. மாதி மாதிரத்தனார்
179. மார்க்கண்டேயனார்
180. மாமூலனார்
181. மாற்பித்தியார்
182. மாறோக்கத்து நப்பசலையார்
183. மாற்றூர்கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்
184. முடங்கிக் கிடந்த சேரலாதன்
185. முரஞ்சியூர் முடிநாகராயர்
186. மோசிகீரனார்
187. மோசி சாத்தனார்
188. வடம நெடுந்தத்தனார்
189. வடம வண்ணக்கண் தாமோதரனார்
190. வடம வண்ணக்கண் பெருஞ்சாத்தனார்
191. வடம வண்ணக்கண் பேரிசாத்தனார்
192. வடமோதங்கிழார்
193. வன்பரணர்
194. வண்ணப்புறக் கந்தரத்தனார்
195. வான்மீகியார்
196. விரிச்சியூர் நன்னாகனார்
197. விரியூர் நக்கனார்
198. வீரை வெளியனார்
199. விற்றூற்று மூதெயினனார்
200. வெள்ளாடியனார்
201. வெள்ளி வீதியார்
202. வெண்ணிக் குயத்தியார்
203. வெள்ளெருக்கிலையார்
204. வெள்ளைக்குடி நாகனார்
205. வெள்ளை மாளர்
206. வெறிபாடிய காமக்கண்ணியார்
207. வேம்பற்றூர்க் குமரனார்

– இதுவே, அகநானூறு – புறநானூறு பாடிய புலவர்கள் பட்டியலாகும்.

### வள்ளுவர் குறளுக்கு நான் எழுதிய உரை

பெரியார் வந்த பூமி இது. அறிஞர் அண்ணா அவர்கள் வந்து உரையாற்றிய பூமி இது, ஆன்மீகக் கருத்துக்களை இங்கே வந்து வழங்கிய குன்றக்குடி அடிகளார் வந்த பூமி இது. இங்கே அடியேனும் வந்து உங்களைக் காணுகின்ற வாய்ப்புக் கிடைத்துள்ளது.

நம்முடைய இலக்கியங்களிலே இன்றைக்கு நான் முதலிலே குறிப்பிட்டதைப் போலப் பொதுமறையாக இன்றைக்கும் போற்றப்படுவது குறள். இந்தத் திருக்குறளுக்கு நான் உரை எழுதியிருக்கிறேன். குறளோவியம் மாத்திரமல்ல; உரையும் எழுதியிருக்கிறேன். அந்த உரை எழுதும்போது கற்பனையாக அல்ல, வேண்டுமென்றே வலிந்து அல்ல, இப்படித்தான் வள்ளுவர் எழுதியிருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு நானே மாத்திரமல்ல; பல புலவர்களோடு கலந்து பேசி நான் இந்த உரையை எழுதியிருக்கிறேன். நான் எழுதியதைக்கூடத் திருத்த வேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஏற்கெனவே,

***"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை"***

– என்ற குறளுக்குப் பரிமேலழகர் போன்றவர்களும், அதைப் பின்பற்றி டாக்டர் மு.வ. போன்றவர்களும் எழுதியுள்ள உரை என்னவென்றால், தெய்வத்தைக்கூட தொழாமல் கணவனையே தெய்வமாகக் கொண்டு வணங்குகின்ற பெண் "மழையே வா – மழையே பெய்" என்று சொன்னால் மழை பெய்யுமென்று எழுதியிருக்கிறார்கள். இது ரொம்ப ஆபத்தானது. ஏனென்றால் மழை பொழியாத காலத்திலே வீட்டுக்காரியைக் கூப்பிட்டு மழை வரச்சொல் என்று சொல்லி அது வரவில்லை என்றால் என்ன ஆகும்? எனவே அந்த உரை பொருந்தாது என்று

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அப்போதே கூறியிருக்கிறார்.

**புரட்சிக் கவிஞரின் குறள் விளக்கம்**

அவர் என்ன கூறினாரென்றால் தெய்வத்தைக்கூடத் தொழாமல் கணவனைத் தொழுகின்ற பெண் எப்படிப்பட்டவள் என்றால் நாம் மழை பெய் என்றவுடன் மழை பெய்தால் அந்த மழை எந்த அளவிற்குச் சிறந்ததோ அந்த அளவிற்குச் சிறப்பானவள் என்று எழுதினார். இந்தக் குறளுக்கு நான் உரை எழுதும்போது எனக்கு இந்தக் கருத்தை மேலும் மெருகேற்ற வேண்டுமென்று தோன்றியது. அந்தப் பெண்ணுக்கு மேலும் உரிமை அளிக்கவேண்டுமென்று தோன்றியது. அந்த உரிமையை வள்ளுவர் அளித்திருக்கிறார் என்று எனக்குப் புரிந்தது.

தெய்வத்தைக்கூட தொழாமல் கணவனைத் தொழுகின்ற பெண் – பெய் என்று சொன்னவுடன் பெய்கின்ற மழையைப் போன்ற அடிமை ஆவாள். மழை பெய் என்று சொன்னால் – பெய்துவிடுமா? பெய்துவிடாது. இயற்கை நிலை அது. ஆணையிட்டுப் பெய்யக் கூடியதல்ல மழை. ஆணையிட்டுப் பெய்கின்ற மழையைப் போன்றவள் பெண் என்று சொன்னால் அவள் ஒரு அடிமையாகத்தான் இருப்பாள். ஆகவே, பெய்யெனப் பெய்யும் மழையாக அவள் ஆகிறாள். தெய்வத்தைக்கூடத் தொழாமல் கணவனையே தெய்வமாகக் கருதிக் கொண்டிருக்கின்ற பெண் இருக்கிறாளே, அவள் பெய் என்று சொன்னவுடன் பெய்கின்ற மழையைப் போன்ற அடிமையாவாள் என்ற அந்தக் கருத்தைத்தான் 'கலைஞர் உரை' என்ற புதிய நூலிலே நான் எழுதியிருக்கிறேன்.



**என் மூலம் வாழ்த்தும் தமிழக மக்கள்**

நீண்டநேரம் இலக்கிய உரை இங்கே உங்கள் முன்னிலையில் உங்களுக்காகச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றது. இறுதியாக நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் தமிழக மக்கள் உங்களை என் வாயிலாக வாழ்த்திக்கொண்டிருக்கின்றார்கள். உங்களுடைய வாழ்த்துக்களையெல்லாம் என் நெஞ்சிலே ஏந்தி அவர்களுக்குக் காணிக்கையாக்க நான் இருக்கிறேன்.

நாளைய தினம் மலேசியப் பயணத்தை மேற்கொள்கிறேன். மலேசியப் பயணத்தில் சில தொழில் துறைப் பிரச்சினைகளைப் பற்றியும் நீண்ட காலமாகத் தமிழ் நாட்டிற்கும் அந்த நாட்டிற்கும் உள்ள கலாச்சாரத் தொடர்பு பற்றியும் அங்கேயும் பேசவிருக்கிறேன். நம்முடைய தொடர்பு என்றென்றும் அறுந்து போகாமல் தொடர்ந்து கொண்டே இருக்கக்கூடிய ஒரு உறவாகும். உங்களையெல்லாம் பார்க்கிறேன். மகிழ்கிறேன். என்னுடைய பேச்சு நிறைவுபெறப் போகிறதே, உங்களைப் பிரிய நேரிடுகிறதே என்கின்ற அந்தக் கலக்கத்தோடு, நான் உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன். என்றென்றும் நாம் உடன்பிறப்புகளாக –ஓரின உணர்வுமிக்கவர்களாக வாழ்வோம் என்று கூறி விடைபெறுகிறேன்".






சிங்கப்பூரில் இந்திய வர்த்தகக் குழுவினர் ஏற்பாடு செய்த கலந்துரையாடல் கூட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் கலைஞர் அவர்களை சிங்கப்பூர் இந்திய வர்த்தக சங்கத்தலைவர் தேவேந்திரசிங் அழைத்துச் சென்ற போது எடுத்த படம்.



சிங்கப்பூரிலுள்ள இந்திய வர்த்தகக் குழுவினர் ஏற்பாடு செய்த, நெறிகாட்டும் குழுவினருடன் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாடும் காட்சி.



மாண்டரின் ஓட்டலில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர் உரையாற்றுகிறார்.




மாண்டரின் ஓட்டலில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு சிங்கப்பூர் 'தமிழ்முரசு' இதழின் ஆசிரியர் திருநாவுக்கரசு அவர்கள் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி கவுரவித்த காட்சி.




சிங்கப்பூர் வர்த்தக அமைச்சர் ஜார்ஜ் இயோ அளித்த விருந்தின்போது சிங்கப்பூர் – தமிழகம் இடையேயான வர்த்தகம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியபோது எடுத்த படம்.



சிங்கப்பூர் வர்த்தக அமைச்சர் ஜார்ஜ் இயோ அளித்த விருந்தில் முதலமைச்சர் கலைஞர்.



சிங்கப்பூர் 'மாண்டரின்' ஓட்டலில் நடைபெற்ற வரவேற்பு விருந்தில், முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் இந்திய வர்த்தக மற்றும் தொழில் கழகத்தின் தலைவர் குப்தா அவர்கள் உரையாடிய காட்சி.



சிங்கப்பூர்–இந்திய வர்த்தகக் கழகம் சார்பில் நடைபெற்ற வரவேற்பு விருந்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன், இராஜாராம் அவர்கள் கலந்துரையாடிய போது எடுத்த படம்.




சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள் சார்பில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இலக்கியச் சொற்பொழிவு ஆற்றிய காட்சி.





முதலமைச்சர் கலைஞரின் இலக்கிய உரை கேட்க, அரங்கம் நிரம்பி வழியும் வண்ணம் திரண்டிருந்த சிங்கப்பூர் தமிழர்கள்.



சிங்கப்பூரில் 'தி ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்' என்ற ஆங்கில நாளேட்டை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் படித்துக் கொண்டிருந்தபோது எடுத்த படம்.



சிங்கப்பூர் இந்திய வர்த்தகக் குழுத்தலைவர் தேவேந்தர் சிங்கை முதலமைச்சர் கலைஞர் சந்தித்த காட்சி.



சிங்கப்பூர் அரசின் சார்பில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் மா போ டான் மாண்புமிகு கலைஞரை வரவேற்றல்.



மாண்புமிகு சிங்கப்பூர் பிரதமர் திரு. கோ சோக் டோங் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அளித்திடும் நினைவுப்பரிசு.




கோலாலம்பூர் விமான நிலையத்தில் சுழலும் படிக்கட்டில் நின்றவாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளிவரும் காட்சி.



முதலமைச்சர் கலைஞரை மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சாமிவேலு வரவேற்றபோது எடுத்த படம்.



கோலாலம்பூரில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை, இந்திய ஹைகமிஷனர் சகாய் அவர்கள் மாலையணிவித்து வரவேற்கிறார்.



கோலாலம்பூரில் செய்தியாளர்களைச் சந்திக்கும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்




மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை கோலாலம்பூரில் மலேசிய நாட்டின் பன்னாட்டு வாணிபம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் ரபீதா அஜீஸ் வரவேற்ற காட்சி.



முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் மலேசிய நாட்டின் பன்னாட்டு வாணிபம் மற்றும் தொழில் துறை அமைச்சர் ரபீதா அஜீஸ் ஆலோசனை நடத்திய காட்சி.



மலேசிய நாட்டின் பன்னாட்டு வாணிபம் மற்றும் தொழில் துறை அமைச்சர் ரபீதா அஜீஸ் மற்றும் அந்நாட்டின் தொழிற்துறை உயர் அதிகாரிகளுடன் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆலோசனை நடத்திய காட்சி.





கோலாலம்பூரில் உள்ள ஒரு கோபுரத்தினுள் இருந்தவாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாநகரின் எழில்மிகு தோற்றத்தை கண்டு களிக்கும் காட்சி.




மாண்புமிகு முதலமைச்சர்
கலைஞர் அவரது துணைவியார்
ஆகியோருடன் மலேசிய
அமைச்சர் டத்தோ சாமிவேலு
அவரது துணைவியார்.






மலேசிய பொதுப்பணித்துறை
அமைச்சர் டத்தோஸ்ரீ சாமிவேலு
அவர்கள் அளித்த விருந்தில்
முதலமைச்சர் கலைஞர்
அவர்கள் கலந்து கொள்ள
வருகை தந்த காட்சி.



மலேசியப் பொதுப்பணித்துறை
அமைச்சர் டத்தோ சாமிவேலு
அலுவலகத்தில்
உயர் அலுவலர்களுடன்
பேச்சு வார்த்தை.



மலேசிய நாட்டுப் பிரதமர்
டாக்டர் மகாத்தீர் முகமது
அவர்களுக்கு முதலமைச்சர்
கலைஞர் அவர்கள்
பொன்னாடை
அணிவிக்கும் காட்சி.



மலேசியப் பிரதமருக்கு,
முதலமைச்சர் கலைஞர்
நினைவுப் பரிசு வழங்குகிறார்.



மலேசிய நாட்டுப் பிரதமருடன்
கலந்துரையாடும் முதலமைச்சர்
கலைஞர்

*வண்ணப்படங்கள் : யோகா*

# மலேசியாவில் கலைஞர்

சிங்கப்பூரில் மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்டு முதலமைச்சர் குழு, 7.1.1999 அன்று காலை சிங்கப்பூரிலிருந்து விமானத்தில் புறப்பட்டு மலேசியத் தலைநகர் கோலாலம்பூரை வந்தடைந்தது. மலேசியா விமான நிலையத்தில் அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.


கோலாலம்பூர் நகருக்கும் விமான நிலையத்திற்கும் சுமார் 70 கிலோ மீட்டர் தூரம் இருந்தபோதிலும் விமான நிலையத்தில் எராளமான தமிழர்கள் திரண்டு வந்து முதலமைச்சரை வரவேற்றார்கள்.

மலேசிய அமைச்சர் டத்தோ திரு. சாமிவேல், தனது துணைவியாருடன் விமான நிலையம் வந்து முதலமைச்சரை வரவேற்றார்.

விமானத்தில் இருந்து இறங்கியதும், பிரத்தியே கமாகச் செய்யப்பட்ட ஒரு சிறு கார் போன்ற வண்டியில் முதலமைச்சரை அமர வைத்து ஊர்வலம் போல விமான நிலையத்திற்குள்ளே அழைத்து வந்தார்கள். பின்னர் அங்கிருந்து ஒரு சிறு புகைவண்டியில் முதலமைச்சர் அவர்களும், அவரது குழுவினரும் ஏறிக்கொண்டார்கள். அந்தப் புகைவண்டியில் ஒரு கிலோமீட்டருக்கு மேல் பயணம் செய்து, பின்னர் அதிலிருந்து இறங்கி மீண்டும் அந்தப் பிரத்தியேகக் காரில் ஏறி விமான நிலையத்திற்கு வெளியே வருகை தந்தார். அங்கிருந்து கோலாலம்பூர் நகருக்கு கார் மூலம் பயணப்பட்டார் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்.

**விமான நிலையத்தில்**

வரவேற்புக்குப் பின் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடையே உரையாற்றிய முதல்வர் **கலைஞர்** அவர்கள் கூறியதாவது :-



*"சிங்கப்பூர் நாட்டில் கடந்த மூன்று நாட்களாக என்னுடைய பயண நிகழ்ச்சிகளையெல்லாம் முடித்துக் கொண்டு இன்று காலையிலே மலேசியா நாட்டின் தலைநகரான கோலாலம்பூர் வந்து சேர்ந்துள்ளேன். விமான நிலையத்திலே மாண்புமிகு அமைச்சர் டத்தோ திரு.சாமிவேல் அவர்கள் தலைமையில் இந்திய ஹை கமிஷனர் திரு. சகாய் மற்றும் அதிகாரிகள் உட்படப் பலரும் வரவேற்றார்கள். இரண்டாவது முறையாக மலேசியா நாட்டிற்கு நான் இப்போது வந்துள்ளேன். சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் நான் மேற்கொண்டுள்ள பயணம் முக்கியமாக தமிழகத்திற்கும் இந்த இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக இருந்து வருகிற கலாச்சாரத் தொடர்பை உறுப்படுத்திக் கொள்வதற்காகத்தான். எனவே இந்தப் பயணம் அதற்கு மெத்தவும் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.*

*அடுத்து தொழில்துறை வளர்ச்சியில் தமிழகத்திற்கு எந்த அளவிற்கு பயன் கிடைக்கும் என்பதை நினைவுபடுத்துவதற்கும் நான் இந்தப் பயணத்தை பயன்படுத்திக் கொள்வதாக இருக்கிறேன். அந்த வகையில் சிங்கப்பூரில் அங்குள்ள வர்த்தகப் பிரமுகர்கள், அமைச்சர்கள் மற்றும் தொழிலதிபர்கள் ஆகியோருடன் உரையாடியிருக்கிறேன். எனவே இந்தப் பயணத்தில் நல்ல பயன் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதே நம்பிக்கையுடன்தான் நான் கோலாலம்பூருக்கும் வந்திருக்கிறேன். இன்றும் நாளையும், நாளை மறுநாளும் மலேசியப் பிரதமரையும், அமைச்சர்களையும், தொழில் முனைவோர்களையும் சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்படும்போது அவர்களிடத்தில் தமிழகத்தில் தொழில் தொடங்க அவர்கள் உதவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகள், சலுகைகள் ஆகியவற்றைத் தருவதற்கு தமிழகம் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவிப்பேன்.*

*இதற்கிடையே இங்கு வாழ்கின்ற தமிழ் பெருமக்களைச் சந்திப்பதற்காக ஒரு பொது நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பொது நிகழ்ச்சியில் நான் கலந்துகொள்வதன் மூலம் மலேசியாவில் உள்ள தமிழ் பெருமக்களைச் சந்திக்கும் மகிழ்ச்சிகரமான வாய்ப்பு எனக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன். ஏனென்றால் மலேசியாவிற்கு உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற போதுதான் நான் வந்திருக்கிறேன். அப்போது நீண்ட நேரம் தமிழ் மக்களிடத்தில் உரையாற்றுவதற்கான உரிய நேரம் கிடைக்கவில்லை. இப்போது அந்த நேரம் கிடைக்கும் என்ற நிலை இருப்பதால் அந்த நிகழ்ச்சியில் மலேசியாவில் வாழ்கின்ற தமிழ் பெருமக்களைச் சந்திப்பேன் என்று கூறி என்னுடைய வருகை பயன்பெற மலேசியாவில் உள்ள தமிழ் மக்கள் எனக்குத் துணை புரியவேண்டுமென்று அவர்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன்".*

### தொழில்துறை அமைச்சருடன் சந்திப்பு

முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 7.1.1999 அன்று மாலை மலேசிய நாட்டின் பன்னாட்டு வாணிபம் மற்றும் தொழில்துறை அமைச்சர் **டத்தோ ரபீதா அஜிஸ்** அவர்களை, அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடினார்.

முதலில் முதலமைச்சர் கலைஞரை வரவேற்ற அமைச்சர் டத்தோ ரபீதா அஜிஸ் தனது செயலாளருடனும் தமிழக தொழில் துறைச் செயலாளருடனும் தனியே உரையாடினார். பின்னர் அங்கே நடைபெற்ற கலந்துரையாடலில் அதிகாரிகள் உள்பட அனைவரும் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் ஒரு மணி நேரத்திற்கு மேல் முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் வருகை குறித்தும், தொழில் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கலைஞரும், மலேசிய தொழில் அமைச்சரும் பேச்சுவார்த்தை குறித்து விளக்கினார்கள்.

### அமைச்சர் டத்தோ சாமிவேல் விருந்து

மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ சாமி வேல் அவர்கள் முதலமைச்சர் **கலைஞர்** அவர்களுக்கும், அவரது குழுவினருக்கும் தனது இல்லத்தில் 7.1.1999 விருந்து அளித்தார். அப்போது அண்மையில் திருமணம் நடைபெற்ற மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ சாமிவேல் அவர்களின் மகனுக்கும், மணமகளுக்கும் முதலமைச்சர் கலைஞரும், அவரது துணைவியாரும் வாழ்த்துக் கூறிப் பரிசலித்தனர்.

அந்த விருந்தில் மலேசிய அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், வர்த்தகப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

விருந்துக்கு வந்த முதலமைச்சரைப் பொதுப்பணித் துறை அமைச்சர் **டத்தோ சாமிவேலு** அவர்கள் வரவேற்று உரையாற்றும்போது கூறியதாவது :

*"மாண்புக்கும் மரியாதைக்கும் உரிய தமிழர்களின் தனிப்பெருந்தலைவர் பெருமதிப்பிற்குரிய **கலைஞர்** அவர்கள் குழுவிற்குத் தலைமையேற்று மலேசியாவிற்கு இரண்டாவது முறையாக வருகை தந்திருக்கிறார். அவரை மலேசிய அரசின் சார்பிலும், மலேசிய மக்களின் சார்பிலும் வரவேற்கின்றேன். தலைவர் அவர்களே! உங்களுடைய வருகை நூற்று முப்பது ஆண்டுகளாக நமது இரு நாடுகளுக்குமிடையே குறிப்பாக மலேசியாவிற்கும், தமிழகத்திற்குமிடையே நட்புறவு,*

**"எறும்புபோல் சுறுசுறுப்போடு உழையுங்கள்; கரும்பு போல் செய்தி கிடைக்கும்!"**

**– கலைஞர்**

கலச்சார உறவு, கலை உறவு என்று இருந்த எல்லா உறவுகளையும் புதுப்பிக்கக் கூடிய உறவாக இருக்குமென்று நான் நினைக்கின்றேன். இந்த வருகை மலேசியாவில் இருக்கிற தமிழர்களுக்கெல்லாம் பெருமை தரக்கூடியதாகும். உங்களுடைய வருகையின் மூலம் மலேசியாவில் தமிழர்கள் மேலும் பெருமை கொள்வார்கள்.

– இவ்வாறு டத்தோ சாமிவேல் கூறினார்.

இந்த விருந்தில் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் நன்றியுரையில் கூறியதாவது :

"அருமை நண்பர் டத்தோ சாமிவேல் அவர்கள் பேசும்போது நூறு ஆண்டுகளுக்கு மேலாக மலாய் நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே இருந்து வருகிற உறவை, கலச்சார தொடர்பை புதுப்பித்துக் கொள்வதற்காக நான் இங்கே வந்திருப்பதாக குறிப்பிட்டார். மன்னிக்க வேண்டும். திருத்திக் கொள்ள வேண்டும். அந்த உறவு பழுதடைந்தால்தான் புதுப்பிக்க வேண்டும். அந்த உறவை உறுதிப்படுத்திக் கொள்ளத்தான் வந்திருக்கிறேனே யல்லாமல் அது பழுதடைந்துவிட்டதானதைப் புதுப்பிக்க வந்திருக்கிறேன் என்று நான் கூற விரும்பவில்லை.

இந்த இரு நாடுகளுக்குமிடையே, இந்த நாட்டு மக்களுக்கிடையே, இருநாட்டுக் கலாச்சாரத்திற்கு மிடையே இருக்கிற நல்ல உறவைப் போல எனக்கும் அன்பிற்குரிய நண்பர் டத்தோ சாமிவேலு அவர்களுக்கும் நீண்ட காலமாக நட்பு உண்டு. அந்த அன்பை எடுத்துக் காட்டுகின்ற வகையிலே அவர் குறிப்பிட்ட கலாச்சார உறவை உறுதிப்படுத்துகின்ற வகையிலும் இன்றைக்கு இந்த இனிய விழா நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து விருந்தளிக்கிறார்கள்.

இந்த விருந்தை அளித்தால் மாத்திரம் போதாது. தமிழகத்திலே தொழில் வளம் பெருக நான் எடுத்துள்ள முயற்சிக்கு அமைச்சர் டத்தோ சாமிவேலு அவர்களும் மற்றவர்களும் உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று சில முக்கியமான பிரமுகர்களை, குறிப்பாக தொழில்துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு ரபீதா அஜிஸ் அவர்களைச் சந்தித்து மாலையில் எங்கள் குழுவின் சார்பில் ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்கு மேலாக தமிழகத்திலே தொழில் வளர்ச்சியைப் பெருக்க வேண்டுமென்ற பிரச்சினைகளையெல்லாம் பேசியிருக் கிறோம்.

நாளைய தினம் டத்தோ திரு.சாமிவேல் அவர்களோடும் அதன்பிறகு மலேசிய நாட்டு மாண்புமிகு பிரதமர் அவர்களோடும் பேசவிருக்கின்றேன்.



நாளை மாலையில் நடைபெறவிருக்கின்ற மலேசிய தமிழ் மக்கள் நிகழ்ச்சியில் கலந்துரையாட இருக்கிறேன். தொழில் முனைவர்கள் மத்தியிலும் உரை நிகழ்த்த இருக்கிறேன் என்று கூறி நீங்கள் இங்கே அளித்துள்ள இனிய வரவேற்பிற்கு மீண்டும் மீண்டும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"கலை கலைக்காகவே என்று சொல்ல இயலாது; விளக்கு எப்படி விளக்குக்காக இல்லையோ, அதைப் போலக் கலை என்பது மக்களுக்காகத்தான்!"

– கலைஞர்

## சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் மலேசியாவில் 8.1.99 அன்று காலையில் மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம் சென்று பொதுப்பணித்துறை அமைச்சருடனும் மற்றும் பொதுப்பணித் துறையின் துணை அமைச்சர், செயலாளர், அதிகாரிகள் ஆகியோருடனும் கலந்துரையாடினார். ஒரு மணி நேரத்திற்கு மேல் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தொழில் முனைவோர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பல திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. முதலமைச்சர் **கலைஞர்** இந்தக் கூட்டத்தில் பேசும்போது, தமிழகத்தின் தலைநகரமான சென்னையைப் பொறுத்தவரை இரண்டு பிரச்சினைகள் உண்டு; ஒன்று குடிநீர் பிரச்சினை. இரண்டாவது போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டும் என்ற பிரச்சினை. குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரை நாங்கள் தற்போது மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு ஆந்திர முதல்வர் திரு.சந்திரபாபு நாயுடு அவர்களின் உதவியோடு கிருஷ்ணா தண்ணீரை சென்னை பெற்று வருகிறது. போக்குவரத்து நெரிசல் தொடர்பாக பலமுறை டத்தோ சாமிவேலு அவர்கள் சென்னை வரும் போதெல்லாம் தொடர்ந்து விவாதித்து இரண்டொரு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை ஏறத்தாழ முழுமை அடைந்த நிலையில் உள்ளன என்று குறிப்பிட்டார்.

கூட்டத்தின் முடிவில் முதலமைச்சர் **கலைஞர்** அவர்களும் டத்தோ சாமிவேலு அவர்களும் செய்தியாளர்களைச் சந்தித்தனர். எடுக்கப்பட்ட முடிவினை பத்திரிகையாளர்களிடம் இருவரும் விளக்கினர்.

## மலேசிய நாட்டு பிரதமருடன்

9.1.1999 அன்று காலை 10.00 மணிக்கு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் மலேசிய நாட்டின் பிரதமர் டாக்டர் மகாத்திர் முகமது அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து 35 நிமிடங்களுக்கு மேலாக உரையாடினார். சந்திப்பு தொடங்கியதும் முதலமைச்சர் **கலைஞர்** மலேசிய நாட்டின் பிரதமருக்கு பொன்னாடையையும் சந்தன மாலையையும் அணிவித்து சந்தனத்தால் ஆன வள்ளுவர் கோட்ட மாதிரி ஒன்றையும் சங்கத் தமிழ், குறளோவியம் ஆகியவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களையும் அளித்தார்.

கடந்த இரண்டு தினங்களாக தொழில்துறை அமைச்சர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆகியோருடனும் தாம் நடத்திய பேச்சுவார்த்தை பற்றி முதலமைச்சர் பிரதமரிடம் விளக்கினார். தமிழ்நாட்டின் தென்கோடியில் உள்ள குளச்சல், துறைமுகத் திட்டத்தை அமைக்கச் சிறந்த இயற்கை வசதிகளைப் பெற்றிருப்பதற்காகவும், இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை ஏற்கெனவே தமிழ்நாடு அரசால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதமரிடம் விளக்கி, அவ்வறிக்கையை அவரிடம் **கலைஞர்** அளித்தார்; மலேசிய நாடு இந்த முயற்சியில் ஆர்வம் காட்டினால், இரண்டு அரசுகளும் குளச்சல் துறைமுகத் திட்டத்தை அரசு மட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிறைவேற்ற தமிழ்நாடு அரசு முன்வரும் என்று பிரதமரிடம் **கலைஞர்** சொன்னார்.

தமிழ்நாட்டில் உள்ள பாலாற்றில் மழைக் காலத்தில் மட்டும் வெள்ளம் பெருகி தண்ணீர் வீணாவதைத் தடுக்க, நிலத்தடி நீரை தக்க முறையில் பயன்படுத்த மலேசிய தொழில்நுட்பம் பற்றி முதலமைச்சர் **கலைஞர்** கேட்டார். அதற்கு பிரதமர் தொழில்நுட்ப வல்லுநர் குழு ஒன்றை தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைப்பது பற்றி பரிசீலனை செய்வதாக பதில் அளித்தார்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னேறி வரும் தமிழ்நாட்டில் பிப்ரவரி 7,8 தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ள "உலகத் தமிழ் இணையம்–கருத்தரங்கு மாநாடு" நிகழ்ச்சிகளில் நேரில் கலந்துகொள்ள வருமாறு பிரதமரை **கலைஞர்** அழைத்தார். பிரதமர் இதுவரை தான் தமிழகம் வந்ததில்லை என்றும் முடிந்தால் இந்த மாநாட்டில் பங்குபெறுவதாகவும், அடுத்த முறை இந்தியாவிற்கு வரும்போது நிச்சயமாக தமிழ்நாடு வருவதாகவும் முதலமைச்சரிடம் கூறினார்.

தமிழ்நாட்டிற்கும் மலேசியாவிற்கும் வெகு காலமாக நிலவி வரும் வலுவான சமூக மற்றும் கலாச்சார தொடர்புகளை, வரலாற்றுச் சான்றுகளோடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் விளக்கிச் சொன்னதை மலேசிய பிரதமர் ஆர்வத்துடன் கேட்டார். பிரதமருடன் முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் இன்றைய சந்திப்பு நேச உணர்வுடனும், மகிழ்ச்சி தருவதாகவும் அமைந்திருந்தது.

★ ★ ★

# கோலாலம்பூரில், தமிழ் அமைப்புகள் அளித்த வரவேற்பில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.

"பெருமதிப்புக்கும் மரியாதைக்கும், பாசத்திற்கும் உரிய டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் தமிழ்க்கடல் வரப்போகிறது, தமிழ்க் கடல் வரப்போகிறது என்று கூறினார்கள். ஆமாம், என் எதிரே கடலே வந்து நிற்கிறது. இந்தக் கடலில் நான் இருக்கின்ற இந்த மேடை ஒரு தெப்பமாக மிதந்து கொண்டிருக்கின்றது.

மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்குக் கலாச்சார உறவை உறுதிப்படுத்துகின்ற வகையிலும் அத்துடன் தொழில் துறை, வணிகத் துறை, கல்வித் துறை ஆகியவற்றின் தொடர்புகளை வலுப்படுத்துகின்ற வகையிலும் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தில் ஐந்தாவது நாளாக இன்று உங்களையெல்லாம் சந்திக்கும் நல்ல வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

தமிழகத்தில், இந்தியத் திருநாட்டில் நான் மேற்கொண்டிருக்கின்ற அரசியல் இயக்கத்திற்கு எத்தனையோ சோதனைகள், வேதனைகள் வந்தன என்றும், அவற்றை அங்குள்ள மக்கள் மாத்திரமல்லாமல் கடல் கடந்து வாழ்கிற நீங்களும் உங்களுடைய அன்பால் ஆதரவால் தாங்கிக் கொண்டு அந்த இயக்கத்தைத் தூக்கி நிறுத்தியிருக்கிறீர்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்.

தொலைவில் இருந்தாலும் உங்களுடைய கருணைப் பார்வை என் மீதும் நான் தலைமையேற்றி ருக்கின்ற அரசியல் இயக்கத்தின் மீதும் என்றைக்கும் மாறாமல் இருந்துகொண்டு வருகின்றது. இதில் எந்தவிதமான ஐயப் பாடும் கிடையாது. இருப்பினும் அரசியல் வெப்பத்தைத் தணித்துக் கொள்ள நான் அடிக்கடி இலக்கிய அரங்கிற்குச் செல்வதை என்னுடைய வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். கோடையில் இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் தருவாக – தரு நிழலாக இருப்பது எனக்கு இலக்கியம்தான் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.

அந்த இலக்கியத்தை இந்த மாமன்றத்திலே இன்றைக்கு உங்களோடு பரிமாறிக் கொள்வதற்காக உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

## எனது எழுதுகோல்

என்னுடைய ஆருயிர் நண்பர் மறைந்த கண்ணதாசன் ஒருமுறை என்னைப் பற்றிக் கூறும்போது – "கருணாநிதி, உன்னுடைய செங்கோலை ஒருவேளை யாராவது பறித்தாலும் பறிக்கலாம், ஆனால் உன் கையில் இருக்கின்ற எழுதுகோலை எவராலும் பறிக்கமுடியாது" என்றார். அந்த நம்பிக்கை எனக்கு என்றைக்கும் உண்டு. அந்த நம்பிக்கையை எனக்குத் தருவதற்காக உங்களைப் போன்ற உடன்பிறப்புக்கள் இலட்சோப இலட்சம் பேர் இந்த உலகத்தின் பல பகுதிகளிலே உண்டு. அந்தத் துணிவோடு தான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

தமிழகத்திற்கும், மலேசிய நாட்டிற்கும் சிங்கப்பூர் நாட்டிற்கும் இன்று நேற்றல்ல – நீண்ட நெடுங்காலமாக நம்முடைய சாதனைச் செம்மல் சாமிவேலு அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போலத் தொடர்பும் உறவும் சொந்த பந்தமும் உண்டு. அந்த அடிப்படையில்தான் உங்களை யெல்லாம் சந்திக்க இரண்டாவது முறையாக நான் வந்திருக்கிறேன். இங்கே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின்போது நான் வந்தேன். அப்போது விமான நிலையம் கோலாலம்பூர் நகருக்கு அருகே இருந்தது. அதனால் பல்லாயிரக்கணக்கில் நீங்கள் விமான நிலையத்திற்குத் திரண்டு வந்து என்னைக் கசக்கிப் பிழிந்து அந்த மண்டபத்திற்குள் சாறாகக் கொண்டு வந்து சேர்த்தீர்கள். அதே சிரமம் அருமை நண்பர் சாமிவேலு அவர்களுக்கும் வேறு சில அமைச்சர்களுக்கும் அன்றைக்கு ஏற்பட்டதை நான் நன்றாக அறிவேன். இன்றைக்கு அந்த இன்பத் தொல்லையிலிருந்து என்னைக் காப்பாற்றுவ தற்காக நம்முடைய சாமிவேலு அவர்கள் உபாயம் செய்து கொல்லைப்புற வழியாக என்னை அழைத்து வந்துவிட்டார்.

பொதுவாகக் கொல்லைப்புற வழியாக வருவது எனக்குப் பிடிப்பதில்லை. அது அரசியலில் ஆகட்டும், இலக்கியமாகட்டும், அதிலே கொல்லைப்புற வழியை நான் என்றைக்கும் தேர்ந்தெடுப்பதில்லை. ஆனால் உங்க ளுடைய அன்பு, பாசம் நீங்கள் என் மீது கொண்டிருக்கின்ற உணர்வு மிக்க உறவு, அதன் காரணமாக நான் இங்கே முழுமையாக வந்தால்தான் ஏதாவது பேசமுடியும் என்பதற்காக – ஒருவர் கையை, ஒருவர் காலை என்று ஆளுக்கொரு உறுப்பை எடுத்துக்கொண்டால் கருணாநிதி இங்கே வந்ததாகத் தகவல் என்பதைத்தான் சாமிவேலு அவர்களால் இங்கே கூற முடியும்! எனவேதான் இந்த வழியைத் தேர்ந்தெடுத்து உங்களைச் சந்திக்கின்ற அரிய வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

நான் சிங்கப்பூரில் தமிழ் மக்களிடையே உரையாற்றும் போது ஒன்றைச் சொன்னேன் – சிங்கப்பூரில் பிரதமரைச் சந்தித்தேன், அமைச்சர் பெருமக்களைச் சந்தித்தேன், வணிகப் பெருமக்களைச் சந்தித்தேன், அவர்களுடைய குழுக்களை, நிறுவனத்தினரை எல்லாம் சந்தித்து அவர்களோடு பேசினேன். ஆனால் இப்போது உங்களைச் சந்திக்கின்றேன், பேச முடியாமல் நிற்கிறேன். உங்களைப் பார்த்துக் கொண்டே இருந்தால் போதும்போல் இருக்கிறது – என்று சொன்னேன்.

அங்கே சொல்லிவிட்டு இங்கே சொல்லாவிட்டால் நீங்கள் என்னைப் பற்றி என்ன கருதுவீர்கள் என்பதற்காக அல்ல; உண்மையிலேயே ஒரு நாள், இரண்டு நாள் அல்ல – இங்கேயே நின்றுகொண்டு உங்களுடைய திருமுகங்களை எல்லாம், என்மீது நீங்கள் வீசும் அன்புப் பெருக்கையெல்லாம், உங்களுடைய கனிவான பார்வையை யெல்லாம் அனுபவித்தவாறு விழி மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தால் என்ன என்ற நிலையில்தான் உங்கள் முன்னால் உங்களுடைய அன்பன், உங்களுடைய சகோதரன் – உங்கள் அடிமை, நான் நின்று கொண்டிருக்கின்றேன்.

இலக்கிய உரை இங்கே நான் ஆற்றுவேன் என்று கடந்த நான்கைந்து நாட்களாக நடத்தப்படுகின்ற விளம்பரங்களில் நம்முடைய டத்தோ அவர்களால் குறிப்புக் காட்டப்பட்டிருக்கின்றது. தமிழர்களுக்கு இலக்கியம் என்பதைத் தவிர வேறு வரலாறு கிடையாது. வரலாறு இருக்கிறது, ஆனால் எழுதப்படவில்லை. எழுதப்படாத காரணத்தால் தான், இந்தியாவின் வரலாறே தமிழகத்திலிருந்து எழுதப்பட வேண்டுமென்று மனோன்மணீயம் சுந்தரனார் சுட்டிக்காட்டியதையும், அது குறித்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசியதையும் நான் பலமுறை நினைவுப்படுத்தியிருக்கிறேன். இந்தியநாட்டு வரலாறு கங்கைக் கரையிலிருந்து எழுதப்பட்டதற்குப் பதிலாகக் காவிரிக்கரையிலிருந்து எழுதப்பட வேண்டுமென்பது தான் வரலாற்றுப் பேராசிரியர்களுடைய துணிவான – திட்டவட்டமான – தெளிவான முடிவாகும்.

> அறிவு, பிறந்த ஒவ்வொரு
> மனிதனுக்கும் இருக்கிறது
> இயற்கையிலேயே! இருக்கும்
> அறிவு தெளிவு பெற,
> பகுத்தறிவு பெருக கல்வி
> கேள்வி மிக முக்கியம்.
> – கலைஞர்

அப்படி எழுதப்படாத காரணத்தால் நமக்கென்று வரலாறு கிடையாது; எழுதப்படாத காரணத்தால் வரலாறே இல்லை என்று ஆகிவிடுமா என்றால் கிடையாது. வரலாறு உண்டு. ஆனால் எழுதப்படவில்லை. நமக்குக் கிடைத்த இலக்கியங்கள்தான் வரலாற்றுச் சான்றுகளாக இருக்கின்றன. நான் நம்முடைய பழைய வரலாறுகள், சேர, சோழ, பாண்டியர்களுடைய வரலாறுகளைப் பற்றி நினைப்பதற்கு முன்பு அண்மையில் 200 ஆண்டுக் காலத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சி ஒன்றை – தமிழகத்திற்கும் மலேசியாவிற்கும் ஏற்பட்ட தொடர்பு எத்தகையது என்பதை விளக்குவதற்காகக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில், வெள்ளையரை எதிர்த்து முதலிலே களம் சென்று கட்கம் ஏந்தி இறுதியாக சுதந்திரத்திற்காகத் தன்னையே பலி கொடுத்துக் கொண்ட பூலித்தேவன், தொடர்ந்து வீரபாண்டிய கட்டபொம்மன், தொடர்ந்து மருது பாண்டியர்கள் ஆகியோரைத் தொடர்ந்து 1802ஆம் ஆண்டு மருதுபாண்டியர்களின் வழித்தோன்றல்கள், அவர்களுடைய உறவினர்களை – அந்தப் புரட்சிக் காரர்களை – போராளிகளை எஞ்சிய விடுதலைப்போர்த் தளபதிகளைத் தூத்துக்குடியிலிருந்து கப்பலில் ஏற்றி ஜேம்ஸ் வால்ஷ் என்பவர் லெப்டினென்ட் ராக் ஹெட் என்பவரின் தலைமையில் மொத்தம் 73 பேரை 76 நாட்கள் பயணம் செய்ய வைத்து, கடைசியாகக் கொண்டுவந்து விட்ட இடம் பினாங்கு. மலேசியப் பகுதியிலே உள்ள பினாங்கில்தான் அவர்கள் கொண்டுவந்து விடப்பட்டார்கள். இது 'சவுத் இண்டியன் ரிபல்லியன்' என்ற தலைப்புள்ள புத்தகத்தில் காணப்படுகின்ற உண்மை.

## நாடு கடத்தப்பட்டோர்

தூத்துக்குடியிலிருந்து 73 பேர் 76 நாட்கள் கப்பலில் பயணம் செய்தார்கள். அவர்களுடைய கைகளிலே கால்களிலே விலங்கு மாட்டப்பட்டிருந்தது. நான்கைந்து பேர்களின் கைகள்தான் கட்டப்படவில்லை. காரணம் – அவர்கள் கப்பலில் சமையல் வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தார்கள். அவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் விலங்கிடப்பட்டு பினாங்கில் 76 நாள் பயணத்திற்குப் பிறகு சேர்க்கப்பட்டார்கள். நான் அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட அந்த நூலிலே உள்ள 73 பேரின் பெயர்களையும் உங்கள் முன்னால் படிக்க விரும்புகிறேன். அதுதான் நாம் அவர்களுக்கு ஆற்றுகின்ற கைமாறு. அவர்களுக்காக நாம் செய்கின்ற வீர வணக்கம். 73 பெயர்களைப் படிக்கும் போது கொஞ்சம் உங்களுக்கு அயர்வு ஏற்படலாம். ஆனால் அயர்வு ஏற்படக் கூடாது. அயர்வில்லாமல் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்ட மான மறவர்களின் பெயர்களைப் படிக்கின்ற நேரத்தில் அயர்வுக்குப் பதிலாக உணர்வு ஏற்பட வேண்டும். எனவே படிக்கின்றேன்:

1. வேங்கம் பெரிய உடையத்தேவர், சிவகங்கை
2. துரைசாமி (தந்தை பெயர் மருதுபாண்டியன்)
3. வேரப்பூர் பொம்ம நாயக்
4. ஜெகநாத அய்யர், ராமனாதபுரம்
5. ஆண்டியப்பத் தேவன்
6. சடமாயன்
7. கோனியாமி தேவன்
8. தளவாய் குமராசாமி நாயக், பாஞ்சாலங்குறிச்சி
9. மேலூர் குமாரத் தேவர்
10. பாண்டியன்புத்தூர் பாண்டியன்
11. முத்துவீரா, அரங்குளம்
12. சாமி, மணக்காடு
13. ராமசுவாமி
14. இருளப்பதேவர், நாங்குனேரி
15. பாண்டியன் நாயக், கம்பாடி
16. மாடத்தேவன்
17. மாலயில்மாடன்
18. சின்ன பிச்சத் தேவன்
19. வீரபாண்டியத் தேவன்
20. வீரப்பெருமாள் தேவன்
21. கருப்பத் தேவன்
22. சுலோமோனியா

23. நந்தசாமி
24. பெருமாள்
25. சின்ன பிச்சத்தேவன் உடையத்தேவன்
26. சின்ன பிச்சத்தேவன் மகன் தேவிநாயக்
27. முத்துராமத் தேவன்
28. மண்டத் தேவன்
29. பேயன்
30. அழகநம்பி
31. வைகுண்டத் தேவன்
32. சிரியண்ணத் தேவன்
33. கோனியாலும்
34. முல்லைவடிவு
35. சந்தானம்
36. வீரபத்திரன்
37. சிலம்பன்
38. பேயன்
39. ராமசாமி
40. இருளப்பன்
41. குமாரசாமி
42. வீரபாண்டியன்
43. வெங்கட்டராயன்
44. உடையார்
45. முத்துராக்கு
46. முத்துராக்கு, அணக்குளம்
47. சொக்குத்தலவான்
48. இருளப்பத் தேவன்
49. மல்லைபநாயக்கன்
50. சுலோமணி நாயக்கன்
51. தொமச்சிநாயக்
52. சுலோமணிநாயக்
53. ராமசாமி
54. பிச்சாண்டி நாயக்
55. கல்லுமாடம் தளவாய்
56. சின்னமாடன்
57. வைத்திமூர்த்தி
58. தளவாய்பிள்ளை
59. சுப்ரமணியம்
60. பெத்தண்ணநாயக்
61. கிருஷ்ணமநாயக்
62. மயிலேனன்
63. வயலமுத்து
64. ராமன்
65. பாளையநாயக்
66. குமரன்
67. வெள்ளைய கொண்டன்
68. ராமன்
69. அழகுசொக்கு
70. சேக் உசேன்
71. அப்பாநாயக்
72. ராமன், சூளை
73. குப்பண்ண பிள்ளை

இப்படி 73பேர் 1802ஆம் ஆண்டு பினாங்கில் இறக்கிவிடப்பட்ட பிறகு, இதில் மூன்றில் ஒரு பங்குப் பேர் பல்வேறு காரணங்களால் இறந்துவிடுகின்றனர்.

இவர்களைக் கப்பலேற்றி அனுப்பிய ஜேம்ஸ் வால்ஷ் 1818ஆம் ஆண்டு பினாங்குக்கு வருகிறான். அங்கே அவன் கண்ணில் பரட்டைத் தலையோடு, பராரி கோலத்தோடு, ஒடிந்து விழும் உடல் அமைப்போடு, எலும்பும் தோலுமாக, வாலிப வயதினன் – ஆனாலும் வயதானவனைப் போன்ற தோற்றமுடைய ஒருவனை அங்கே பார்க்கிறான். பார்த்தவுடன் அவன் யார் என்று தெரிகிறது; சந்தேகத்தோடு அவனைப் பார்த்து – "உன்பெயர் துரைசாமி தானே?" என்று கேட்க, அவன் ''ஆமாம்'' என்கிறான். அந்தத் துரைசாமி யார் தெரியுமா? நான் படித்தேனே பட்டியல் – அதில் இரண்டாவதாகப் படித்த மருதுபாண்டியனின் இளையமகன் – வீரப்போரிட்டு மடிந்தானே வெள்ளையரை எதிர்த்து, அந்த மருது பாண்டியனின் மகன் துரைசாமி தான் அவன். அவன் தான் ஈளை கட்டி இருமலோடு – பரட்டைத் தலையோடு –பராரிக் கோலத்தோடு பரங்கியருக்கு முன்னால் நின்றான்.

இதைப்பற்றி அந்தப் பரங்கியன், ஜேம்ஸ் வால்ஷ் என்ன எழுதியிருக்கிறான் என்பதையும் நான் உங்களிடம் படித்துக்காட்ட விரும்புகிறேன் – 'துரைசாமி என்ற பெயரைக் கேட்டதும் என் நெஞ்சில் யாரோ கட்டாரியால் குத்தியது போன்ற உணர்வைப் பெற்றேன். நான் சிறைபிடித்துக் கப்பலிலே 15 வயது பையனாக ஒப்படைத்த கைதிதான் இன்று பினாங்கில் என்முன் நின்றான். வெளித் தோற்றத்திலே மாற்றங்கள், ஆனால் உள்ளம் அதே உள்ளம். கடந்த கால நினைவுகளை என் முன்னால் எதிரொலித்தது. என்பெயரை அவன் சாதாரணமாகத் தெரிந்து கொண்டதும் என்னுடைய பழைய



கால நட்பை நினைவு கூர்ந்து தன்னுடைய குடும்பத்தாரிடம் ஒப்படைக்கும்படி ஒரு கடிதத்தைக் கொடுக்கக் கூடிய அளவிற்கு நம்பிக்கை வயப்பட்டான். ஆனால் அப்போதிருந்த ஆங்கிலேய அரசின் ஆணையின்படி அது விதிக்கு மாறானது என்பதால், நான் அந்த உதவியைச் செய்ய முடியவில்லை' என்று எழுதியிருக்கிறான்.

**மருதுபாண்டியன் மகன் துரைசாமியின் வாரிசுகள்**

இவ்வாறு மருதுபாண்டியனின் மகன் துரைசாமி பிச்சைக்காரக் கோலத்தில் இருந்து தன்னைச் சிறைப்பிடித்துத் தூத்துக்குடியிலிருந்து அனுப்பிய ஜேம்ஸ் வால்ஷ் இடமே ஒரு கடிதத்தை உறவினர்களிடம் தரமுடியுமா என்று கொடுத்தபோது "அதை வாங்க மறுத்துவிட்டேன்" என்று வருத்தத்தோடு குறிப்பு எழுதியிருக்கிறான். அந்தத் துரைசாமி என்ன ஆனாரோ, எப்படியானாரோ; இன்று துரைசாமியின் வாரிசுகளாக வந்தவர்கள் எத்தனைப்பேர் இந்த மண்டபத்தில் அமர்ந்திருக்கிறார்களோ எனக்குத் தெரியாது.

வீரப்பரம்பரையின் வழித்தோன்றல் துரைசாமி விடப்பட்ட நாடு மட்டுமல்ல இது. தமிழகத்தின் சோழ மன்னன் இந்தக் கடல் பரப்பில், கடாரம் வரையில் வந்து சென்றான் என்ற வரலாறு நமக்கு உண்டு. இன்றைக்கும் மலேசிய நாட்டின் மாநிலங்களில் ஒன்றாக இருக்கிற – கடா தான் அந்தக் காலத்து கடாரம். அதை நினைவுப்படுத்தும் வகையில் இன்றைக்கும் திருவாரூருக்கு அருகே கடாரங்கொண்டான் என்ற ஊர் தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறது. அந்த ஊர் வழியாகச் செல்லும்போதும் கடாரங்கொண்டான் என்ற பெயரைக் கேட்கும் போதெல்லாம் சோழமன்னனுடைய நினைவு மாத்திரமா வருகிறது? அந்தக் கடாரம் இருக்கின்ற பகுதியிலே என்னுடைய தமிழ் மக்களாகிய நீங்கள் எல்லாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றீர்களே என்கின்ற அந்த நினைவும் அல்லவா எனக்கு வருகின்றது!

சோழ மன்னர்கள் மாத்திரமல்ல; பாண்டிய மன்னனுடைய தூதுவர்கள் ஒரு காலத்தில் ரோமாபுரியிலே அகஸ்டஸ் மன்னனுடைய மாளிகையிலே அத்தாணி மண்டபத்திலே பாண்டிய நாட்டுத் தூதுவர்களாக வீற்றிருந்தார்கள் என்ற வரலாறும் நமக்கு உண்டு.

தமிழ்நாட்டு முத்துக்களை கிளியோபாட்ரா, தான் குடிக்கின்ற மதுவிலே போட்டு குலுக்கிக் குடித்தாள் என்கின்ற அந்த வரலாறும் நமக்கு உண்டு. இதெல்லாம் நம்முடைய வாழ்வின் சிறப்பை, வீரத்தை விளக்கக்கூடிய வரலாறுகள். இப்படி இந்து மகாக் கடலையும் சுற்றியுள்ள கடல்களையும் தாங்கள் நீச்சல் அடிக்கின்ற ஏரிகளாக மாற்றிக்கொண்டு வாழ்ந்தவர்கள்தான் தமிழர்கள். இன்று பல கல் தொலைவு பயணம் என்பதும் – பல கல் தொலைவில் கலாச்சாரத் தொடர்புகள் ஏற்படுவது என்பதும் எளிதாகிவிட்டது. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய தகவல் தொடர்புகள், கலாச்சாரத் தொடர்புகள் உறுதிப்படுத்துவதும், ஒன்றோடொன்று சந்திப்பதும் இயலாத காரியங்களாக இருந்தன. நான் சிங்கப்பூரில் கூடக் குறிப்பிட்டேன். ஆப்ரகாம் லிங்கன் கொலை செய்யப்பட்ட செய்தி இலண்டன் நகரிலே ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் கிடைத்ததாம். தந்திக் கம்பி வசதிகள் இருந்த அந்தக் காலத்திலும் கூட ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் அந்தச் செய்தி கிடைத்திருக்கின்றது. அந்த அளவிற்குத் தகவல் தொடர்பு தொலை தூரத்தில் இருந்த காலம் மாறி, இன்றைக்கு நான் இங்கே பேசிக் கொண்டிருக்கும்போதே அதை இங்கிலாந்தில் கேட்கலாம். ஒலிபரப்புவார்களோ என்னவோ எனக்குத் தெரியாது; ஆனால் கேட்கலாம்!

உலகம் இன்றைக்குச் சுருங்கிவிட்டது. விஞ்ஞானம் இன்றைக்கு உலகத்தைச் சுருங்க வைத்துவிட்டது. ஒரே உலகம் என்றாலுங்கூட – உலகம் சுருங்கிவிட்டது என்றாலுங்கூட ஒரே உலகம் என்று சொல்வோம். ஆனால் அதே நேரத்தில் நாம் நம்முடைய நாட்டின் எல்லைகளைக் காப்பாற்றுவோம், அழிக்காமல் இருப்போம் என்கின்ற அந்த உணர்வு ஒவ்வொரு நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் இருக்கின்றது.

உலகத்தில் உள்ள மொழிகளையெல்லாம் விட நம்முடைய மொழி மூத்தமொழி. இதை நான் தற்பெருமைக்காகச் சொல்லவில்லை; உண்மையைத்தான் சொல்கிறேன். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்ற பழமொழியின் நிலையிலே இதை நான் சொல்லவில்லை; உள்ளபடியே இது பொன்குஞ்சுதான். மூத்த மொழிதான் நம்முடைய தமிழ்மொழி.

ஒருமுறை தந்தை பெரியார் அவர்கள், தமிழ் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னபோது சிலர் கோபித்துக் கொண்டு ஒரு மேடையிலே ஒரு முறை நான் பேசும்போது எனக்கொரு சீட்டு அனுப்பினார்கள். பெரியார் இப்படிச் சொல்கிறாரே என்று கேட்டிருந்தார்கள். அதற்கு நான் தந்தை பெரியார் காட்டுமிராண்டி என்று சொன்னது உண்மைதானே என்றேன்; திடுக்கிட்டார்கள். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி இது. அதாவது கல்லும் மண்ணும் தோன்றுவதற்கு முன்பு காட்டுமிராண்டிகளாகத் தான் மக்கள் இருந்தார்கள். அந்தக் காலத்திலேயே இந்த மொழி பிறந்தது என்று நான் கூறினேன். அதைப் போலவே திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கணிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வளவு கீர்த்தி வாய்ந்த இலக்கியங்கள் நமக்குச் சொந்தமானவை. உலகப் புகழ் பெற்ற கிரேக்கப் பாரம்பரியம் இப்போதில்லை. எகிப்திய மொழிக் கலாச்சாரம் இப்போதில்லை. ஆனால் புயலுக்கும், சூறாவளிக்கும், பெரு வெள்ளத்திற்கும், ஊழிக்கும், பூகம்பத்திற்கும், நில நடுக்கத்திற்கும் ஆடாமல் அசையாமல் இருக்கின்ற ஒரு

மொழியாக நம்முடைய தமிழ்மொழி இருக்கிறது. அதனால்தான் இன்னமும் இலங்கையில் தொல்காப்பிய காலத்துத் தமிழைத்தான் பேசுகிறார்கள். நம்மால் இலங்கையை நினைக்கமுடியாமல் இருக்குமா, தமிழில் சொல்லின் முதலில் 'ர' என்ற எழுத்து வரக்கூடாது என்பது இலக்கணம். நானே கூட 'ர' என்றுதான் எழுதுகிறேன். ஆனால் இலங்கையிலே 'ர'விற்கு முன் 'இ' என்ற எழுத்தைச் சேர்த்து இரத்தம் என்று எழுதுகிறார்கள் எனும்போது, அவர்கள் என்னை விட மேலானவர்கள்தான்.

### இரண்டு அம்புகள்!

இந்தத் தமிழில் பல இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அந்த இலக்கியங்களை வெறும் வர்ணனை இலக்கியம், கற்பனை இலக்கியம் என்றில்லாமல், அறிவுரைகளைத் தருகின்ற பல இலக்கியங்களைப் புலவர்கள் மாத்திரமல்ல, அரசர்களே எழுதியிருக்கிறார்கள். அரசர்கள் மாத்திரமல்ல, வணிகப் பெருமக்களும் புலவர்களாக மாறி எழுதியிருக்கிறார்கள். பெண்களே கூடப் பெரும் புலவர்களாக இருந்து எழுதியிருக்கிறார்கள். அகநானூறு, புறநானூறு பாடல்களை எழுதிய புலவர்கள் ஏறத்தாழ 210 பேர்கள் என்ற கணக்கை நான் சிங்கப்பூரில் பேசும்போது குறிப்பிட்டேன். அந்த அளவிற்கு அரசர்களும், வணிகர்களும், மகளிரும் புலவர் பெருமக்களாக இருந்து தமிழை வளர்த்து – தமிழ்ப் பண்பாட்டை வளர்த்திருக்கிறார்கள்.

ஒன்றைச் சொல்கிறேன், நீங்கள் ஒப்பிட்டுப் பாருங்கள். இரண்டு ஒப்பீடுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு அம்புகளைப் பற்றிச் சொல்லப்போகிறேன். ஒரு அம்பு இராம பிரானுடைய அம்பு. இன்னொரு அம்பு ஓரியின் அம்பு. ஓரி என்றால் உங்களுக்குத் தெரியும். கடையெழு வள்ளல்களில் ஒருவன். பாரி, ஓரி, காரி என்பவர்கள் வரிசையிலே ஒருவன். நம்முடைய சாமிவேலு அவர்களுடைய மகன் பெயர் கூட வேள்பாரி தானே! அந்த வரிசையிலே கொல்லி மலை மன்னனாக வாழ்ந்தவன் ஓரி மன்னன். அவனுடைய ஆற்றலை, திறமையைப் பாடுகின்ற புலவன் அவன் ஒரு அம்பை எய்தால் அது என்ன செய்யுமாம்? புறநானூற்றில் கபிலர் பாடுகிறார் :

***'வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி***
***பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்***
***புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்***
***கேழற் பன்றி வீழ வயல***
***தாழற் பற்றத் துடும்பிற் செற்றும்***
***வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்***
***புகழ்சால் சிறப்பி னம்புமிகத் திளைக்கும்***
***கொலைவன் யார்கொலோ கொலைவன்***
***மற்றிவன்***
***விலைவன் போலான் வெறுக்கைநன் குடையன்***
***ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்***
***சார லருவிப் பயமலைக் கிழவன்***
***ஓரி கொல்லோ வல்லன் கொல்லோ'***

இதில் ஓரி என்பதுதான் உங்களுக்குப் புரியும். இது புறநானூற்றுத் தமிழ். இதற்கு என்ன பொருள் தெரியுமா? ஓரி மன்னன் வில் வளைத்து நாண் ஏற்றி அம்பெய்தால் அந்த அம்பு முதலில் ஒரு யானையைத் துளைத்து, அதைத் தாண்டிச் சென்று ஒரு புலியை வீழ்த்தி, அந்தப் புலியை ஊடுருவிச் சென்று ஒரு கலைமானின் தலையை உருட்டி, அதையும் தாண்டிச் சென்று உரல் போன்ற பன்றியை வீழ்த்தி, அதையும் தாண்டிச் சென்று தரையில் இருக்கின்ற உடும்பின்மீது சென்று தைக்கும். இதுதான் அதற்குப் பொருள். ஓரி விழா கொல்லிமலையில் நடைபெற்றது. நானும், மறைந்த குன்றக்குடி அடிகளாரும் கலந்துகொண்டோம். இந்தப் பாடலை ஒருவர் பாடிவிட்டுப் பேசும்போது சொன்னார். யானையைத் தாக்கிய பிறகு எப்படி உடும்பின் மீது அந்த அம்பு பாய முடியும்? யானையின் உயரமென்ன, உடும்பின் உயரமென்ன? யானையின் மீது பாய்ந்தால் அம்பு அதற்கு நேராகத்தானே செல்லும்? எப்படி உடும்பின் மீது பாய்ந்தது என்று ஒரு கேள்வியை எழுப்பினார்.

நான் உரையாற்றும்போது அதைப்பற்றிச் சொன்னேன். ஓரி வாழ்ந்த இடம் கொல்லிமலை. கொல்லிமலையின் உச்சியிலிருந்து அம்பெய்தால் – முதலில் யானை நின்றால் அந்த மலைச்சரிவில் யானை, புலி, மான், பன்றி கடைசியாக உடும்பு என்று மேலிருந்து கீழ்நோக்கி அம்பு செல்லும்போது எல்லாவற்றையும் வீழ்த்தக்கூடிய ஆற்றல் அந்த அம்புக்கு உண்டு என்று குறிப்பிட்டுவிட்டுச் சொன்னேன்.

இன்னொரு அம்பைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா – இராமபிரான் எய்த அம்பு. அது ராவணனைக் குறி பார்த்து எய்யப்பட்ட ராம பாணம் – ராவணனுடைய பத்துத் தலையையும் அறுத்துவிட்டு, அவனைக் கொன்று விட்டு, அவன் உடலைத் துளைத்து, பிறகு அங்கிருந்து புறப்பட்டு தன்னுடைய உடலிலே (அம்பின் மீது) இருக்கின்ற இரத்தத்தைக் கழுவிக் கொள்வதற்காகக் கடலுக்குச் சென்று இரத்தத்தையெல்லாம் கழுவிக்கொண்டு பிறகு அங்கிருந்து புறப்பட்டுத் திரும்பி வந்து ராமனுடைய அம்புறாத்தூளியிலே உட்கார்ந்துகொண்டது என்று கூறப்படுவதை – அந்த அம்பை நம்புகிறீர்களே, இந்த அம்பை நம்பக் கூடாதா என்று கேட்டேன்.

இப்படி இயற்கையோடு எய்த அம்பு ஓரியின் அம்பு. இயற்கைக்கு முரண்பட்ட அம்பாக இராமனின் அம்பு சித்தரிக்கப்படுகிறது. இதை நான் அன்றைக்கு எடுத்துக்காட்டினேன்.

அரசர்கள் புலவர்களாக இருந்துவிட்டு நாட்டு மக்களுக்குத் தேவையானதைச் சொன்னார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

*'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே*
*....... ....... ....... .......*
*....... ....... ....... .......*
*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்*
*மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே!'*

எப்படியாவது படிக்கவேண்டும், 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' என்று கூறிய பாண்டிய மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழிய மன்னன், கீழானவன் என்று கூறப்படுகிறவன் படித்துவிடுவானேயானால், அவன் மேலே இருப்பவனை வெல்வான் என்று எழுதியிருக்கிறான். புலவர்களுக்கும் அரசனாக அவன் வீற்றிருந்தான்.

அரசன் கோப்பெருஞ்சோழன் பாடிய பாடலில் குறிப்பிடுகிறான்.

*'அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து*
*பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்*
*உரவோர் உரவோர்ஆக மடலம்ஆக நாமே...'*

பொருளுக்காக, பணத்துக்காக, செல்வத்துக்காக, ஏதோவொரு இலாபத்திற்காக அன்பையும், அருளையும் பாசத்தையும் விடுத்துவிட்டுப் பிரிந்து செல்பவர்கள் – இவனைப் பிரிந்த காரணத்தினால் நமக்குப் பொருள் கிடைத்தது, ஆகவே நாம் அறிவுடையவர் என்று சொல்லிக் கொள்வார்களேயானால் அப்படி தம்மை அறிவுடையவர் என்று கூறிக் கொள்பவர்கள் அறிவுடையவராகவே இருக்கட்டும், நாம் மூடர்களாகவே இருப்போம். எவ்வளவு பொருள் பொதிந்த பாடல். பொருளுக்காக அன்பையும் அருளையும் விட்டுப் பிரிகிறவன் தாங்கள் பெரிய கெட்டிக்காரன் புத்திசாலி என்று கருதிக்கொண்டால் அப்படிப்பட்டவன் புத்திசாலியாகவே இருக்கட்டும் – நாம் பொருளுக்காக எந்தக் காரியத்தையும் செய்யாமல் மூடர்களாகவே இருப்போம் என்று கோப்பெருஞ் சோழன் அன்றைக்குப் பாடியிருக்கிறான். இது பொருளுக்காக மனைவியைப் பிரிந்து செல்கிற ஒரு ஆணுக்கும் – அவனால் படுகின்ற கவலையின் காரணமான பெண்ணுக்கும் பொருந்தும். இந்த மண்ணுக்கும் பொருந்தும் என்ற காரணத்தினாலேதான் இதை நான் குறிப்பிட்டேன்.

## புதுமையான கருத்துக்கள்

புதுமையான கருத்துக்களை – பொதுவுடமைக் கருத்துக்களை எடுத்துச் சொன்ன புலவர்களும் இருந்திருக்கிறார்கள். பக்குடுக்கை நன்கணியார் என்பவர் அப்படிப்பட்டவர்களில் ஒருவர். உடுத்தியிருக்கின்ற உடையைக் கூட நன்றாக அணியமாட்டார். அவ்வளவு எளிமையான கோலத்திலே உள்ளவர். அவர் கூறுகிறார்.

*'ஓரில் நெய்தல் கறங்க ஓர் இல்*
*ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்*
*புணர்ந்தோர் பூவணி அணியப் – பிரிந்தோர்*
*பைதல் உண்கண் பனிவார்ப்பு உறைப்ப*
*படைத்தோன் மன்ற, அப்பண் பிலாளன்*
*இன்னாது அம்ம, இவ்வுலகம்*
*இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே'*

– என்று புறநானூற்றில் நன்கணியார் பாடியிருக்கிறார். இதற்கு என்ன பொருள்?

ஒரு வீட்டிலே மகிழ்ச்சியும் இன்னொரு வீட்டிலே துயரமும் – ஒரு வீட்டிலே நல்ல முரசின் ஒலியும் இன்னொரு வீட்டிலே இழவு முரசின் ஒலியும் கேட்கின்ற இந்த வேறுபாடு நாட்டிலே இருக்கலாமா? இருக்கக்கூடாது. இப்படிப்பட்ட வேறுபாட்டை உண்டாக்கியவன் நிலைப் படுத்தியவன் பண்பாளனாக இருக்க முடியுமா என்று கேட்டு இல்லாமை ஒழிய வேண்டும் என்ற அந்தப் பொதுவுடைமைக் கருத்தை இந்தப் புலவர் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

## ஔவையார் காட்டிய தாய்!

பெண்பாற் புலவர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். சங்கக் காலத்தில் அவ்வையார் மிகச் சிறந்த புலவர். அவருடைய பாடல் ஒன்று. பாடலைச் சொன்னால் அது உங்களுக்குப் புரியாது இருந்தாலும் கூறுகிறேன்.

*'வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்*
*தன்னோர் அன்ன இளையர் இருப்பப்*
*பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்*
*கால்கழி கட்டிலிற் கிடப்பித்*
*தூவெள் அறுவை போர்ப்பித் திலதே'*

*(புறநானூறு – ஔவையார்)*

இந்தப் பாட்டிற்கு என்ன பொருள் என்றால், வெள்ளாட்டு மந்தை போலப் பல இளைஞர்கள் மன்னன் பின்னால் போனாலுங்கூட, மன்னன் எல்லோரையும் விட அதிகமாகத் தேறலை (தேறல் என்றால் ஒருவகையான உணர்வை ஊட்டக்கூடிய பானம்) என்னுடைய மகனுக்குத்தான் கொடுத்தான். அப்படிக் கொடுத்து, அதைக் குடித்த என்னுடைய மகன் இதுவரையில் இன்னும் பாடையில் படுக்கவில்லையே – போர்க்களத்திலே உயிர் துறக்கவில்லையே என்று வீரத்தாய் ஒருத்தி கவலைப்படுகிறாளாம். இதை அவ்வையார் பாடிக் காட்டியிருக்கிறார். அந்தத் தாயின் மன நிலையைப்பற்றி, இதைப் புரியும்படியாக நான் சங்கத் தமிழிலே எழுதியிருக்கிறேன். அதை உங்கள் முன்னால் வைக்கிறேன் :

*'பனிமுட்டை அடை காக்கும்*
*பசும்புல்லின் தரை மீது*
*மணித் தேர் அசைவது போல்*
*மாதொருத்தி நடந்துவந்தாள்*
*கனித் தமிழ்ச் சொல் உதிர்க்கும் புலமை மிக்காள்*
*காக்கைப் பாடினி பொன்முடியார்க்குத் தமிழில்*
*அவள் அக்காள்!*
*அதியமான் நெடுமானஞ்சி – வேள்பாரி வள்ளல்*
*நாடன்*

சேரமான் மாவெண் கோவன்,
கானப்பேர் தந்த வழுதி – மற்றும்
சோழனாம் பெருநற்கிள்ளி
ஆகியோர் புகழைப் பாடித் தமிழுக்கு
அணி பல பூட்டி நின்ற
அறிவொளி ஔவை நல்லாள்.

காலைக் கதிரவன்போல் கை சிவக்கக் கொடை
வழங்கும்
காவலர்கள் வாழ்ந்திருந்த தமிழ்நாடு!
ஓலை கொண்டொருவன் போர் வந்துவிட்டால்
மாலை சூடுகின்ற வேளையென்றும் பாராமல்
தோளைத் தொத்துகின்ற பெண்கிளியைப் புறம்
விடுத்து,
வாளைக் கூரேற்றி வான் நோக்கி நிமிர்கின்ற
வீரமறவர்களின் தாய்வீடு

பாலை, குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதமென்று
நிலம் வகுத்து வாழ்கின்ற தமிழரிடை
சோலைப் பூவினம் போல் தமிழ்க் கவிதை
மலரவைத்தாள்.
தாயகத்துக் கற்புநிறை பிறழாத
காதல் சொன்னாள் – களம் சென்றார் வீரம்
சொன்னாள்.

களத்தில்,
சாதல் இன்னே வரட்டுமென்று சென்றுவிட்ட
தலைமகனும்
சந்தனத்துக் கட்டை போல மணக்கட்டும்
இலக்கியத்தில் எனக்கூறிப்
பாதம்முதல் உச்சிவரை குளிர்கின்ற தாய்க்குலத்தை
எண்ணியெண்ணிப் பெருமை கொண்டாள், தன்
பூவடிகள் புல்மீது அழுந்தியதால் பனித்துளிகள்
அழிந்துவிடும்.
போரடியில் நெல்மணி போல் பகைவர்களின் சிரம்
வீழும்
அமர்க்களத்தில்!
இதை நினைத்து, நடக்கின்றாள் ஔவையம்மை!
நாமணக்கும் தமிழம்மை! அறிவம்மை! அழகம்மை!

காலூன்றிப் பணியொற்றி வருகின்ற தாயின் முன்
கோலூன்றிப் பிறிதொரு தாய் வந்து நின்றாள்;
அடி தும்பை மலர் முடிதாங்கி
துவண்டுவிட்ட காலிரண்டும் வாழைத் தண்டாய்க்
குளிர்ந்துவரும் நேரத்தில் நீரன் வந்தாய்
விற்புருவம் என்றுன் ஆளன்
அழைத்திட்ட காலம் போய்
வில்லுருவம் முதுகில் பெற்ற இள நங்காய்!
விழியிரண்டும் வேலென்றார் அன்று;
வழி இருண்டு போனதென்று
கோல்கொண்டாய் இன்று!

தமிழ்நாட்டு முத்தெல்லாம் தீர்ந்ததென்று பல்
சுழற்றிப்
பிறநாட்டு வாணிபத்தைச் செய்தவளே!
எங்கெழுந்தாய் ஏன் பதைப்பு
என்ன வாட்டம் எனக் கேட்டுக்
குறும்பு செய்தாள் ஔவையம்மை!
வேலி போட முடியாது இளமைக்கென்று தெரிந்த
பின்னும்
கேலி பேசும் உன் போக்குப் புரியவில்லை
என மறித்து அந்தத்தாய் பேசலானாள் –
புண்பட்ட என்னகத்தில் புலமைத் தாயே! உந்தன்
கேலி
பண்பட்ட தமிழ் மருந்தாய் பாய்வதை நான்
உணருகின்றேன்.

கண்கெட்ட கிழவி எந்தன் கரம்தொட்டு வணங்கிச்
சென்ற
காளையை நான் மறக்கவில்லை.

மண் மூட்டி எழுந்து நிற்கும் மாங்கன்றின் தளிர்தான்
மேனி.
பொன்கொட்டிக் கொடுத்தாலும் வளையாத
மனவலிமை
புலிக்குட்டி விளையாடும் அவன் மடியில்
அந்த மகன் ஆசை மகன் அணிவகுத்தான்
சொந்த மண்ணின் நலங்காக்கப் பணி வகுத்தான்
முடிக்கவில்லை முதியவளும்
பொறுக்கவில்லை ஔவைக்கு –
குறுக்கிட்டாள்.

களம் சென்ற மகன் வீரம் புகழ்ந்து கூறி,
கண்கலங்காத் தாய் வீரம் காட்டுதலே தமிழர் மரபு
முதியவளே மறவர் குல வழக்கிற்குப்
புதியவளாய் இருக்கின்றாய் – வியக்கின்றேன்
என்றாள்.

முழுதும் கேள் பெருமாட்டி
பழுதொன்றும் காணமாட்டாய் என் நிலையில்
அழுதழுது என் விழிகள் வீங்கியதை
மறுக்கவில்லை.
பொழுதெல்லாம் கவலையினால் புலம்புவது
பொய்யல்ல
ஏனென்று தெரிந்துகொள்வாய்
நானொன்றும் மறைக்கவில்லை
சொல் என்றாள் ஔவை;
சொன்னாள் அவள்!

கொற்றக் குடை சாயாத கொடித்தேர் மன்னர்
கற்றறிந்த பாவாணர் கடமைமிகு மாவீரர்
மற்றவர்க்கும் பெருந்தலைவர் அறிவாய் நன்று
அவர் படையில் இருக்கின்றோர் பல்லோர் வீரர்!

ஆட்டுக்கடா அணிவகுத்துச் செல்வது போல்
அரசன் பின் நடப்பதற்குத் தயங்கமாட்டார்
ஆயிரம்பேர் மன்னர்க்குப் பின்னால் இருந்தும்
அவர் மட்டும்என் மகன்பால் அளவற்ற
அன்புகொண்டார்
போர்முனையில் ஓய்வெடுத்துக் கிடக்கும்போது
தேறல் என்னும் உற்சாகச் சாறுதனைத் திறல்மறவர்
அருந்துதற்குத் திரண்டு நிற்பார்.

அப்போது மன்னரவர் என் மகனை அருகழைத்து
அனைவரினும் அதிகபானம் அளித்து மகிழ்வார்.

*என்வாட்டம் இப்போது கேட்பாயம்மா!*
*என்புகளைத் தெப்பமாக்கி நரி மிதக்கும்*
*போர்க்களத்தில்*
*தலையுருட்டிப் பந்தாடும் பறவையினம்!*

*அத்தலையில் ஒரு தலையாய் என்மகன் தலையும்*
*இருந்தாலன்றோ இறைவனளித்த தேறலுக்கும்*
*பெருமையுண்டு!*
*மன்னன் அன்பை மிகையாய்ப் பெற்றான்*
*மண்டையில் தேறலும்அதிகம் பெற்றான்*
*மாண்டனன் போரில்; புகழ்*
*பூண்டனன் எனும் காட்சி*
*காண்டிடல் அரிதோ எனக் கலங்கினேன் அம்மா*
*தவறா என்றாள்!*
*அந்தத் தாயாக நான் இல்லையே என்று*
*அகமிக நொந்தாள் ஔவைப் பிராட்டி!'*

இது ஔவையின் அந்தக் கடினமான பாட்டுக்கு எளிய முறையிலே நான் எழுதிய சங்கத் தமிழ் ஆகும்.

**தாயும் மகளும்!**

இன்னொரு பெண்பாற் புலவர் நக்கண்ணை என்பவர், சோழ இளவலைக் காதலிக்கிறாள். அந்தக் காதல் நிறைவேறவில்லை. அதைத் தாய் தடுக்கிறாள். அவசரப்படாதே என்று தாய் சொல்லுகிறாள். அதற்கொரு எளிய நடைக் கவிதை. நக்கண்ணையிடம் தோழி வந்து ஆறுதல் சொல்லித் தேற்றுகிறாள்.

*'ஆய்ந்து பார் ஆரணங்கே*
*காய்ந்து சினந்து கடிந்துகொண்டாலும் அன்னை,*
*தேய்ந்திடு நிலவாய் நின்காதல் ஆகாதிருக்கவே*
*எச்சரிக்கின்றாள் உன்னை!*
*வளர்பிறையாய் உம் காதல் வளர்ந்து*
*குளிர் நிலவாய் அமுதமழை பொழிந்தால்*
*குலமகளே உமைவாழ்த்தாமல்*
*உன்தாயின் மனமென்ன;*
*நிலமகழ்ந்து எடுத்திட்ட*
*இரும்பாகப் போமோ*
*கருவுற்ற காலத்தில் அவள் நாவினைக்*
*கசப்பாக்கித் தொல்லை தந்த போது*
*திருவுற்ற அந்தத் தாய்*
*புளிப்பாலே கசப்பு போக்கி – உன்*
*புன்னகை காணத் தவமிருந்தாள்!*

*ஆலின் இலைபோன்ற அவள் அழகு வயிற்றை*
*– ஒரு*
*சாலின் வடிவாக்கி நீ அலங்கோலம் தந்தபோதும்,*
*உன்கோலம் காண்பதற்கே – அவள்*
*உயிர்வாழ்ந்து கொண்டிருந்தாள்*
*மணி வயிற்றுக்குள்ளிருந்து நீ*
*மாறிமாறி உதைத்த போதும்,*
*வலி பொறுத்துக் கொண்டபடி*
*அணியென்ன பூட்டலாம் அந்தக் காலுக்கென்று*
*ஆயிரம் சிந்தனை செய்திருந்தாள்!*

*ஊதையில் துரும்பெனத் தாயுடல்அலைக்கழித்து*
*உலகில் நீ பிறந்துருண்டு அழுதபோது – இன்ப*
*போதையில் துன்பமெலாம் மறந்திருந்தாள்!*

*இன்றவள், உன்*
*பாதையில் பாடம் சொல்லல் ஒரு பாபமா*
*பூவைத்துப் பொட்டிட்டு முத்தமாரி பெய்தபோது*
*– நீ*

*ஆண்டெண்ணிக் கிடந்த*
*பூவையாய் ஆவது எப்போதென்று அன்னை,*
*கோவையாய்ச் சிவந்த உன் இதழைக்*
*கிளியொன்று*
*கொத்துமென்று தெரியாத பேதையா என்ன?*
*ஆற்றில் இறங்கிக் குளிக்கத் தடை*
*கூறவில்லை அன்னை*
*ஆழம்தெரிந்து இறங்கென்று கூறுகின்றாள்;*
*அவ்வளவே!*

*அதற்குள் நீ அவன் வருமட்டும்*
*வழிபார்த்துக் காத்திருந்து*
*அல்லும் பகலும் உறக்கமின்றி வாடி வதங்கி,*
*உடலைக் கெடுத்துக் கொள்கின்றேன் என்றால்*
*உனை உயிராக நினைக்கின்ற பெற்றோர்*
*ஒப்புவரோ?*
*உன்தோழி கெஞ்சுகின்றேன்; உடனே கேள்!*
*உறங்கிஎழு, உற்சாகமாக இரு!*
*உறையூர் எங்கும் ஓடிவிடாது – உன்*
*அறையூரில் அடங்கத்தான் போகிறது!'*

– என்று இந்தப் பாடலை எளிமையாக்கியதுதான் சங்கத்தமிழ்.

என்னுடைய சுற்றுப்பயணம் குறித்து கவிஞர் வைரமுத்து காலையில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு – சிங்கப்பூர் பேச்சைப் பத்திரிகையிலே படித்துப் பார்த்தேன், நீங்கள் அந்தப் புறநானூற்றுத் தாய் பற்றிய பாடலை அங்கே சொல்லவில்லையே என்றார். அதற்கு நான், ஆமாம் சொல்லவில்லை வேறு பிரச்சினைகள் பற்றிப் பேசினேன் என்று கூறினேன்.

மலேசியாவில் அவசியம் அதைச் சொல்லவேண்டுமென்றார். ஏற்கெனவே ஒரு முறை சொல்லிவிட்டேனே என்றேன். எத்தனை முறை சொன்னாலும் கேட்பார்கள், சொல்லிவிட்டு வாருங்கள் என்றார். சொன்னால் கேட்பீர்களா?

**புறநானூற்றுப் பாடல்**

காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்ற புறநானூற்றுப் புலவர் பாடிய பாடல் –

*'நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்தோள்*
*முளரி மருங்கின் முதியோள் சிறுவன்*
*படையழிந்து மாறினன் என்றுபலர் கூற*
*மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்*
*முலையறுத் திடுவென், யானெனச் சினைஇக்*

*கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்*
*செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய*
*படுமகன் கிடக்கை காணூஉ*
*ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே!'*

இதில் ஏதாவது உங்களுக்குப் புரிகிறதா? மகன் போர்க்களம் போகிறான். அங்கே முதுகிலே காயம் பட்டு இறந்துவிட்டான் என்று கேள்விப்பட்டதால் வருத்தப்பட்டு அங்கே போய்ப் பார்க்கிறாள். முதுகில் காயம் இல்லை. மார்பில் காயம்பட்டுக் கிடக்கிறான். பார்த்து மகிழ்ச்சி அடைகிறாள். இதுதான் பாடல்! இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், அது நம்முடைய குற்றமே தவிர, எழுதியவர்களின் குற்றமல்ல. அந்தக் காலத்தில் தமிழ் அப்படி இருந்திருக்கின்றது. இன்றைக்கு அதைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் அற்றவர்களாக நாம் இருக்கிறோம். அந்த ஆற்றல் இல்லாத காரணத்தால் அதை எளிய முறையில் மாற்றித் தரவேண்டுமென்பதற்காக நான் எழுதிய பாடல் என்ன தெரியுமா?

இன்றைக்கும் அதைப் பார்க்காமல் என்னால் சொல்ல முடியும். இங்கே வீடியோ படக்காட்சியில் பார்த்தீர்களே – நான் எழுதி, நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் 'மனோகரா' படத்தில் பேசும் வசனம் –

*"பொன்னும், மணியும், மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து, கண்ணே முத்தே, தமிழ்ப் பெண்ணே, என்றெல்லாம் குலவிக் கொஞ்சி, தந்தத்தால் ஆன கட்டிலிலே, சந்தனத் தொட்டிலிலே, வீரனே! என் விழி நிறைந்தவனே! தீரர் வழி வந்தவனே! என்று யாரைச் சீராட்டிப் பாராட்டினீர்களோ, அவனை! அந்த மனோகரனை சங்கிலியால் பிணைத்து சபை நடுவே நிறுத்தி, சந்தோஷம் கொண்டாட வேண்டுமென்ற உங்கள் தணியாத ஆசைக்குப் பெயர் கட்டளையா தந்தையே?"*

– எனக்கு எப்படி இது மனப்பாடம் – அப்போது எழுதியது என்று கருதலாம். எப்படி மனப்பாடம் என்றால் சங்கிலி போல் ஒன்றோடொன்று சொற்கள் கோர்த்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் ஒரு சொல்லுக்குப் பிறகு இன்னொரு சொல் தானாக வந்து சிக்கிக்கொள்ளும்.

அப்படித்தான் 45ஆம் ஆண்டு ஈரோட்டில் பெரியாருடைய அலுவலகத்திலே தொண்டனாக இருந்தபோது குடியரசு பத்திரிகையில் துணையாசிரியராக இருந்தபோது எழுதப்பட்டது தான் இங்கே படித்துக் காட்டினேனே கடினமான அந்தப் புறநானூற்றுப் பாடல். தாய் தன்னுடைய மகன் போர்க்களத்தில் முதுகிலே காயம்பட்டான் என்று வருந்தி, களத்திலே சென்று அவனைத் தேடி மகிழ்ச்சி அடைந்தாள் என்று – இதனை எளிய நடையில் அன்றைக்கு நான் எழுதியது தான் "குடிசைதான் ஒரு புறத்தில்" என்ற கவிதை –

இதோ அந்தக் கவிதை –

*'குடிசை தான்! ஒரு புறத்தில் கூரிய வேல்வாள்*
*வரிசையாய் அமைந்திருக்கும் – வையத்தைப்*
*பிடிப்பதற்கும் வெம்பகை முடிப்பதற்கும்*
*வடித்துவைத்த படைக்கலம்போல் மின்னும்*
*புலியின் குகையினிலே அழகில்லை –*
*புதுமையல்ல!*
*கிலியும் மெய்சிலிர்ப்பும் கீழிறங்கும் தன்மையும்*
*தலைகாட்டா*
*மானத்தின் உறைவிடம் – மறவன் மாளிகை*

*இல்லத்தின் வாயிலிலே கிண்ணத்துச் சோறோடு*
*வெல்லத்தைச் சிறிது கலந்து வயிற்றுக்குள்*
*வழியனுப்ப*
*பொக்கை வாய்தனைத் திறந்து*

*பிடியன்னம் எடுத்துப்போட்டாள் பெருநரைக்*
*கிழவியொருத்தி!*
*ஓடிவந்தான் ஒருவீரன் "ஒருசேதி பாட்டி!"*
*என்றான்.*
*"ஆடிவந்த சிறுபிபோல் பெருமூச்சு*
*வாங்குகின்றாய்*
*ஆண்மகனா நீதம்பி! அவசரம் வேண்டாம்!*
*மூச்சுக்குமூச்சு இடைவேளை ஏற்படட்டும்; பின்,*
*பேச்சுக்குத் துவக்கம் செய்" என்றாள் – அந்தக்*
*கிண்டலுக்குப் பேர்போன கிழட்டுத் தமிழச்சி!*

*"வேடிக்கை நேரமல்ல பாட்டி – உன்*
*வாடிக்கைக் கேலியை விட்டுவிடு!*
*மடிந்தான் உன்மகன் களத்தில்" என்றான் –*
*மனம்*
*ஒடிவந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி ஒருமுறை!*
*"தாயம் ஆடுகையில் காய்களை வெட்டுவதுண்டு*
*– களமும் அதுதான்*
*காயம் மார்பிலா முதுகிலா கழறுவாய்" என்றாள்*
*'முதுகிலென்றான்',*
*கிழவி துடித்தனள்*
*இதயம் வெடித்தனள்*
*வாளை எடுத்தனள்*
*முழவு ஒலித்த திக்கை நோக்கி முடுக்கினாள்*
*வேகம்.*

*"கோழைக்குப் பால் கொடுத்தேன்; குப்புற வீழ்ந்து*
*கிடக்கும்*
*மோழைக்குப் பெயர் போர்வீரனாம்; முன்பொருநாள்*
*பாய்ந்துவந்த ஈட்டிக்குப் பதில்சொல்ல மார்பைக்*
*காட்டி*
*சாய்ந்து கிடந்தார் என் சாகாத கண்ணாளன்;*
*அவருக்குப் பிறந்தானா? அடடா மானமெங்கே –*
*குட்டிச்*
*சுவருக்கும் கீழாக வீழ்ந்துபட்டான் வெட்கம்!*
*வெட்கம்!*
*இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் – இங்கு*
*வீணை நரம்பினிலே இசை துடிக்கும்!*
*அதுவும் மானம் மானமென்றே முழக்கும்!*
*மதுவும் சுராவும் உண்டு சாவும்*

*மானமற்ற ஆரியத்தின் வம்சமா நீ – ஏடா*
*மறத்தமிழ்க் குடியிலே மாசு தூவி விட்டாய்*
*மார்பு கொடுத்தேன் – மகனாய் வளர்த்தேன் –*
*தின்று கொழுத்து*
*திமிர்பாய்ந்த தோள்களெங்கே?*
*தினவெடுக்கவில்லையா? அந்தோ!*
*வேலுக்கு வழிசொல்ல வகையற்ற கோழையே!*
*என் வீரப்*
*பாலுக்கு வழி சொல்வாய்!”*
*என்று கதறினாள், எண்பதை நெருங்கிய ஏழைக்*
*கிழவி!*
*சென்றடைந்து செருமுனையில் சிதறிக் கிடக்கும்*
*செந்தமிழ்க் காளைகளைப் புரட்டிப் பார்த்தாள்;*
*அங்கு*
*நந்தமிழ் நாட்டைக் காக்க ஓடிற்று ரத்த வெள்ளம்!*
*பிணக்குவியலிலே பெரு மூச்சுவாங்க நடந்தாள்.*
*மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சி அடையவில்லை*
*– மகன்*
*பிறந்த போதும் மகிழ்ச்சிக்கு எல்லையுண்டு –*
*அவன்*
*இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்பு காட்டி!*
*இதைக் கண்டாள்; இதயங்குளிர்ந்தாள்.*
*“எதைக் கண்டாலும் இனிக்கவலை இல்லை*
*என்மகன் வீரனாய் இறந்தான்” என்றாள்.*
*“அறுத்தெறிய இருந்தேன் அவன் குடித்த மார்பை,*
*அடடா!*
*கருத்தெரியப் பொய் சொன்ன கயவனெங்கே?*
*வாளிங்கே! அவன் நாக்கெங்கே?...’*

– இதுவே அந்தக் கவிதை.

*(முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தக் கவிதையை உணர்ச்சிப் பெருக்கோடு மனப்பாடமாகக் கூறியதைக் கூட்டத்தினர் பலத்த கையொலிக்கிடையே வரவேற்று மகிழ்ந்தனர்.)*

ஒன்றை மாத்திரம் நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். வீரத்தமிழ், அழகுத் தமிழ், நளினத் தமிழ், இன்பத் தமிழ் மாத்திரம் இருந்தால் போதாது. அறிவியல் தமிழும் வேண்டும். அதை வளர்க்கின்ற முயற்சியிலே நாம் மென்மேலும் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். அதைத்தான் சாதனைச் செம்மல் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் இங்கே ஒரு கணினிப்பெட்டியை வழங்கும்போது அறிவியல் துறையிலே தமிழை வளர்க்க இந்த முயற்சி என்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதற்காகத்தான் தமிழகத்திலே வருகின்ற பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தமிழ் இணையத்தை விரிவாகப் பெருக்கிட ஒரு பெரு முயற்சி செய்யப்படுகிறது. ஏற்கெனவே இந்த வட்டாரத்திற்கு வந்த தமிழகத்தின் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் இதுபற்றிக் கலந்து ஆலோசித்திருக்கிறார். இது குறித்து நானும் தம்பி ‘முரசொலி’ மாறனும் கலந்துபேசி ஒரு குழுவை அதற்காக அமைத்து, உலகத்தில் இருக்கின்ற பல்வேறு தமிழ் அறிஞர்களையும் அழைப்பதென்றும், ஒவ்வொரு நாட்டிலும் இருக்கின்ற முக்கியப் பிரமுகர்களை டத்தோ போன்றவர்களையெல்லாம் அழைத்து தமிழ் இணையம், அறிவியல் தமிழ், தகவல் தொடர்புத் தமிழ், இண்டர்னெட்டில் இன்றைக்கு ‘வோர்ல்டு டெல்’ மூலமாகத் தமிழகத்தில் ஆயிரம் இடங்களில் கணினியைப் பொறுத்துவதன் மூலமாகத் தமிழைப் பரப்புகின்ற முயற்சியில் இன்னும் நான்கைந்து மாதங்களில் ஈடுபடவிருக்கிறோம். மேலும் இந்த ஆண்டு 100 பள்ளிகளில் மாணவர்களுக்குக் கணிணி மூலமாகப் பாடம் சொல்லித் தரவிருக்கிறோம். இந்த அதிவேக முற்போக்கான தகவல் தொடர்பு மற்றும் தமிழ் இணையத்தின் முன்னேற்றத்திற்காகத்தான் பிப்ரவரியில் தமிழகத்திலே மாநாடு நடத்தவிருக்கிறோம்.

## யோசனைகளைச் சொல்லுங்கள்

இங்கே என்னை வரவேற்றுக் கவிதை படித்த கவிஞர் பூபாலன் ஒரு வேண்டுகோள் விடுத்தார். உலகத் தமிழ் மாநாட்டை நடத்துங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

மாநாடு நடத்தினால் மாத்திரம் போதாது, தமிழை நம் மனம் நாட வேண்டும், அதுதான் மாநாடாக இருக்கும். அறிவியல் தமிழை நாம் நாடவேண்டும். அதைச் சொல்லும்போது டத்தோ என்னைப் பார்த்துச் சொன்னார். உலகத் தமிழ் மாநாட்டைத் தமிழகத்திலே நடத்துங்கள் – நாங்களும் நிதி திரட்டித் தருகிறோமென்றார். நான் நிதிக்காக மாத்திரமல்ல; அந்த மாநாடு இதுவரை நடைபெற்ற மாநாடுகளைப் போல இல்லாமல் அறிவியல் தமிழை வளர்க்கின்ற மாநாடாக அது சிறந்து விளங்கிட, டத்தோ போன்றவர்கள் தங்களுடைய அரிய யோசனைகளைச் சொல்லவேண்டும்.





மலேசியா, சிங்கப்பூர் நாடுகளிலே வாழ்கின்ற பெருமக்கள், அறிவார்ந்த தமிழகப் பெருமக்கள், புலவர் பெருமக்கள், ஆராய்ச்சியாளர்கள், உலகம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற தமிழ்ச் சமுதாயத்திற்கிடையே இன்றைக்கு மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருக்கின்ற பெருமக்கள் அனைவரும் தங்களுடைய அரிய யோசனைகளைச் சொல்லவேண்டும். அப்போதுதான் தமிழகம் சிறக்கும். தமிழகம் சிறந்தால் உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் எல்லாம் சிறப்பார்கள். என்றென்றும் உங்களுடைய அன்புக்கும் பாசத்திற்கும் கட்டுப்பட்ட கருணாநிதி – உங்கள் முன்னால் அந்தச் சூளுரையை மேற்கொண்டு ஒன்றுபடுவோம், நாம்.

நம்மிடத்திலே இல்லாதது ஒரே **ஒரு மை தான்.** நம்மிடத்திலே **உண்மை** இருக்கிறது. **வாய்மை** இருக்கிறது. **இனிமை** இருக்கிறது. **தூய்மை** இருக்கின்றது. எல்லாம் இருக்கிறது தமிழர்களே! ஆனால் நம்மிடையே **ஒற்றுமை என்கிற மை தான் இல்லை** என்று கூறி, உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்".

## கோலாலம்பூர் செய்தியாளர்கள் சந்திப்பு

**7.1.1999** அன்று காலை மலேசிய நாட்டின் தலைநகராம் கோலாலம்பூருக்கு வந்து சேர்ந்தேன். அன்று மாலை மலேசிய நாட்டின் தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் திருமதி. ரபீதா அஜிஸ் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடினேன். தமிழ்நாடு தற்பொழுது கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் பெருமளவில் முயற்சிகள் மற்றும் முதலீடுகள் செய்து வருவதாகவும் இவற்றில் மலேசிய நாட்டு நிறுவனங்கள் கணிசமான அளவுக்குப் பங்கு பெற்றுள்ளதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு சுட்டிக் காட்டினேன். மலேசிய நாட்டில் போதிய அளவில் திறமை வாய்ந்த பணியாளர்களும், தொழிலாளர்களும் இல்லாத காரணத்தால் வெளிநாடுகளுக்குச் செல்லும் மலேசிய நிறுவனங்களை இந்தியாவிற்கும் குறிப்பாக தமிழ்நாட்டிற்கும் அனுப்புவதில் ஆர்வம் காட்டுவோம் என்று அமைச்சர் உறுதியளித்தார். அதிக அளவில் தொழிலாளர்களைப் பயன்படுத்தும் ஆடை தயாரித்தல் போன்ற தொழில்களுக்குத் தமிழ்நாடு ஊக்கம் அளிக்குமா என்று என்னிடம் கேட்டார். வேலை வாய்ப்புகளை அதிக அளவில் வழங்கும் எந்தத் தொழிலையும் தமிழ்நாடு அரசு ஊக்குவித்து அவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்கும் என்றும் நான் அவரிடம் விளக்கினேன்.

**8.1.1999** அன்று காலை **10** மணிக்கு பொதுப் பணித்துறை அமைச்சர் டத்தோ திரு சாமி வேலு அவரது அலுவலகத்தில் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலில் பங்கு கொண்டேன். இதில் மலேசிய நாட்டின் தனியார் துறை நிறுவனங்களும் பங்கு பெற்றன. மலேசிய நாட்டின் பொதுப்பணி மற்றும் குடிநீர் வழங்கும் துறைகளின் பணிகள் குறித்து வீடியோ காட்சிகள் மூலம் விளக்கிக் காட்டப்பட்டன.

சென்னை மாநகரில் உள்ள போக்குவரத்து நெரிசலைத் தீர்க்கும் விதத்தில் சென்னை துறைமுகத்தையும், விமான நிலையத்தையும் இணைக்கும் வகையில் சுமார் **25** கி.மீ. நீளத்தில் ஒரு உயர்மட்ட விரைவுச் சாலை அமைப்பது குறித்து விரிவாக விவாதித்தோம். இன்னும் நான்கு மாதங்களில் கட்டுமானத் தொழில் வளர்ச்சி வாரியத்தின் மூலம் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்து தமிழ்நாடு அரசுக்கு அனுப்புவதாகவும், அதனைப் பரிசீலனை செய்த பின் இத்திட்டத்தை செயலாக்கும் முறை குறித்து தமிழ்நாடு அரசு முடிவெடுக்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மழைக் காலங்களில் மட்டும் பெருக்கெடுக்கும் பாலாற்றின் தண்ணீர் வீணாவதைத் தடுக்க நிலத்தடி நீரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள, இத்துறையில் அனுபவம் பெற்றுள்ள மலேசிய நாட்டின் தொழில் நுட்ப உதவியைக் கோரினேன்.

**8.1.1999** அன்று மாலை **5** மணிக்கு புத்ரா உலக வணிக மையத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினேன். இந்த நிகழ்ச்சி உணர்ச்சி பூர்வமானதாக அமைந்திருந்தது.

**8.1.1999** இரவு **8.30** மணிக்கு மலேசிய இந்திய வர்த்தகத் தொழில் கூட்டுறவுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த தொழில் முனைவோர் கூட்டத்தில் உரையாற்றினேன். தமிழ்நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் தொழில்துறையில் இங்குள்ள தொழில் முனைவோருக்குள்ள சிறந்த வாய்ப்புகள் குறித்து அவர்களிடம் விளக்கிப் பேசினேன்.

இன்று **(9.1.1999)** காலை **10** மணிக்கு மலேசிய நாட்டின் பிரதமர் டாக்டர் மகாத்திர் முகமத் அவர்களை

அவரது அலுவலகத்தில் சந்தித்து 35 நிமிடங்களுக்கும் மேலாகக் கலந்துரையாடினேன். கடந்த இரண்டு தினங்களாக தொழில்துறை அமைச்சர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆகியோருடன் நடைபெற்ற உரையாடல்கள் பற்றி விளக்கிச் சொன்னேன். தமிழ்நாட்டின் தென் கோடியில் உள்ள குளச்சல், துறைமுகம் ஒன்றை அமைக்க சிறந்த இயற்கை வசதிகளைப் பெற்றிருப்பதாகவும் இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை ஏற்கெனவே தமிழ்நாடு அரசால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதமரிடம் விளக்கி அவ்வறிக்கையை அவரிடம் அளித்து, மலேசிய நாடு இந்த முயற்சியில் ஆர்வம் காட்டினால் இரு அரசுகளும் இத்திட்டத்தை அரசு மட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிறைவேற்ற தமிழ்நாடு அரசு முன்வரும் என்றும் சொன்னேன். தமிழ்நாட்டில் பாலாற்றில் மழைக்காலத்தில் வெள்ளம் பெருகி தண்ணீர் வீணாவதைத் தடுக்க, நிலத்தடி நீரைத் தக்க முறையில் பயன்படுத்த, மலேசியத் தொழில்நுட்பம் பற்றிக் கேட்டேன். அதற்குப் பிரதமர், தொழில்நுட்ப வல்லுநர் குழு ஒன்றைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைப்பது பற்றி பரிசீலனை செய்வதாக பதிலளித்தார். தகவல் தொழில் நுட்பத் துறையில் முன்னேறி வரும் தமிழ்நாட்டில் பிப்ரவரி 7–8 தேதிகளில் சென்னையில்



நடைபெறவுள்ள உலகத் தமிழிணையம் – கருத்தரங்க மாநாடு நிகழ்ச்சிகளில் நேரில் கலந்து கொள்ள வருமாறு பிரதமருக்கு அழைப்பு விடுத்தேன். பிரதமர் இதுவரை, தான் தமிழகம் வந்ததில்லை என்றும், முடிந்தால் இம்மாநாட்டில் பங்கு பெறுவதாகவும் அடுத்த முறை இந்தியாவுக்கு வரும்பொழுது நிச்சயமாகத் தமிழ்நாடு வருவதாகவும் என்னிடம் கூறினார். தமிழ்நாட்டிற்கும் – மலேசியாவிற்கும் வெகு காலமாக நிலவி வரும் வலுவான சமூக மற்றும் கலாச்சார தொடர்புகளை வரலாற்றுச் சான்றுகளோடு நான் விளக்கிச் சொன்னதைப் பிரதமர் ஆர்வத்துடன் கேட்டார். பிரதமருடனான இன்றைய சந்திப்பு நேச உணர்வுடனும், மகிழ்ச்சி தருவதாகவும் அமைந்திருந்தது.

இந்த இருநாடுகளில் நான் மேற்கொண்ட சுற்றுப் பயணத்திற்கு பெரிதும் உதவியாக இருந்த இந்திய நாட்டின் தூதுவர்கள் இருவரும் முறையே மலேசிய நாட்டில் மாண்புமிகு சகாய் அவர்களும், சிங்கப்பூர் நாட்டில் மாண்புமிகு பிரேம்சிங் அவர்களும் எனக்குப் பெரும் துணையாக இருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிங்கப்பூரில் எனக்கு பொதுமக்களுடைய தொடர்புகளை ஏற்படுத்தி வரவேற்பிற்கு ஏற்பாடு செய்த தமிழ் அமைப்புகள் அனைத்திற்கும் குறிப்பாக திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் அமைந்த குழுவிற்கும், இங்கே நம்முடைய டத்தோ திரு. சாமிவேலு தலைமையிலே அமைந்த தமிழ் அமைப்புகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருநாடுகளிலும் நடைபெறுகின்ற தமிழ் நாளேடுகளில் என் வருகைப் பற்றியும், தமிழ் மக்கள் காட்டுகின்ற ஆர்வம் பற்றியும் வெளியிட்டதோடு, தமிழ்நாட்டின் எதிர்கால நலனுக்கும் வளத்திற்கும் உதவிடக் கூடிய வகையில் எழுதிய கட்டுரைகளுக் காகவும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய வருகை பற்றிய செய்திகளை வெளியிட்ட, மலாய் மொழி, தமிழ்மொழி, ஆங்கில மொழி ஏடுகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : *அறிவியல் தமிழில் வளர்ச்சிபெற வேண்டுமென்று கூறியிருக்கிறீர்கள். எந்தெந்தத் துறையில் அறிவியல் தமிழ் மேலும் சிறப்பாக வளர வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?*

**கலைஞர்** : எல்லாத் துறைகளிலும் அறிவியல் தமிழ் வளர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. ஆனால் படிப்படியாக ஒவ்வொரு கட்டமாக அதை வளர்க்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இப்போது ஏற்பட்டுள்ள விஞ்ஞான ரீதியான வாய்ப்புகளுக்கு அறிவியல் தமிழைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் பிப்ரவரி மாதத்தில் கருத்தரங்க மாநாடு நடைபெறவிருக்கிறது.

கேள்வி : *தமிழ் கலைக் களஞ்சியம் முதல் பதிப்பிற்குப் பிறகு அச்சடிக்கப்படவில்லை. மீண்டும் அதில் முனைப்பு காட்டப்படுமா?*

**கலைஞர்** : இதிலே சில தொய்வுகள் இருப்பது உண்மைதான். விரிவாகச் சொல்ல வேண்டுமேயானால் 1974இல் தமிழ் அகர முதலி தயாரிப்பதற்காக தேவநேயப் பாவணர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அது தன்னுடைய பணியைத் தொடங்கி நடத்திக் கொண்டிருந்தது. பிறகு ஆட்சி கலைக்கப்பட்டது. அந்த இடைக்காலத்தில் பணி தொடங்கப்படவில்லை. 3ஆவது முறையாக 89இல் முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு பாவாணர் மறைந்து விட்டாலும் மீண்டும் அந்தப் பணியைத் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப்போது தமிழ் வளர்ச்சித் துறை மூலமாக தமிழை வளர்க்க தன்னால் இயன்ற முயற்சிகளை எல்லாம் எடுத்துக் கொண்டுள்ளோம்.

கேள்வி : *ஆங்கிலத்திற்கு தமிழுக்கு சொற்களை மாற்றம் செய்யும்போது வெவ்வேறாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால் சிக்கல் ஏற்படுகிறது. ஒரே மாதிரியான சொல்லை ஏற்படுத்த முயற்சிக்கப்படுமா?*

**கலைஞர்** : சிக்கல் இருப்பதை நான் உணராமல் இல்லை. இதைப்போக்க விரைவில் யோசித்து நல்ல முடிவெடுக்கப்படும்.

கேள்வி : *மலேசியாவை சுற்றிப் பார்த்திருப்பீர்கள். இங்கேயுள்ள சாலைகளைப் பார்த்தீர்களா?*

**கலைஞர்** : சாலைகளையும் பார்த்தேன். சோலைகளையும் பார்த்தேன். தமிழகத்திலே பல இடங்கள் பாலைகளாக இருப்பதையும் எண்ணி வருந்தினேன். சிங்கப்பூர், மலேசியா போல் தமிழகத்தையும் ஆக்கவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் சிங்கப்பூர் சிறியநாடு, மலேசியா சிங்கப்பூரை விடப் பெரிய நாடு எனினும் இந்தியாவைப் போல் அவ்வளவு பெரிய நாடு அல்ல. சின்னக் குழந்தைகளுக்கு குறைந்த செலவிலே நல்ல ஆடைகளை வாங்கி விடலாம். ஆனால் பெரிய அளவில் வளர்ந்து விட்ட மனிதனுக்குச் சட்டை தைப்பதென்றால் அதிக செலவாகும். அந்த நிலையில்தான் இந்தியாவும், தமிழ்நாடும் இருக்கின்றது.

கேள்வி : *மலேசியத் தமிழர்களுக்கு என்ன கூறுகிறீர்கள்?*

**கலைஞர்** : என்னுடைய இதயத்தை அவர்களுக்குத் தந்திருக்கிறேன். அதை அவர்கள் தெரிந்து கொண்டிருக்கின்றார்கள்.

கேள்வி : *இந்திய நாடாளுமன்றத்திற்கு விரைவில் தேர்தல் வர வாய்ப்பு இருக்கிறதா? அரசியல் திருப்பங்கள் ஏற்படுமா? அடிக்கடி உங்கள் ஆட்சியைக் கலைப்பதைப் போல மிரட்டி கொண்டேயிருக்கிறார்களே, அதைப்பற்றி உங்கள் கருத்து?*

**கலைஞர்** : மிரட்டுவதற்காக நான் என்றைக்குமே கவலைப்படுவதில்லை. என்னுடைய ஆட்சி இரண்டு முறை ஏற்கெனவே கலைக்கப்பட்டிருக்கின்றது. அதனால் என்னுடைய தலைமையிலே உள்ள கழகம் வீழ்ந்து விடவில்லை. நாடாளுமன்றத் தேர்தல் குறித்து கேட்டீர்கள். இன்னொரு நாட்டிலே வந்து இந்திய நாட்டு அரசியலைப் பேசுவது முறையல்ல.

***கேள்வி : உங்களுடைய வருகையைத் தனிப்பட்ட*** *வருகை என்று ஜெயலலிதா விமர்சனம் செய்திருப்பது பற்றி உங்கள் கருத்து?*

**கலைஞர்** : நான் கருத்துக் கூற விரும்பவில்லை.

கேள்வி : *மலேசியாவிற்கு வருகை மேற்கொண்ட* ***அண்ணா*** *அவர்கள் இங்கேயுள்ள மூன்று இனத்தவர்களையும் வெற்றிலை பாக்கு சுண்ணாம்புடன் ஒப்பிட்டுப் பேசினார். சுண்ணாம்பு கூடுதால் தான் வாய் சிவக்கும் என்றார். உங்கள் நோக்கில் அது பற்றி?*

**கலைஞர்** : நானும் அதைத்தான் கூறுகிறேன். மூன்றும் சேர்ந்தால்தான் வாய் சிவக்கும். அத்துடன் புகையிலையைப் போட்டு விடக்கூடாது. அது உடம்பிற்கு நல்லதல்ல, புகையிலை பகையிலையாக மாறிவிடும்.

கேள்வி : *தமிழ்நாட்டில் நீங்கள் எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறீர்கள். சமத்துவபுரம் போன்ற திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுகிறீர்கள். ஆனாலும் தமிழ்நாட்டில் சாதிக்கலவரம், மதக் கலவரம், வன்முறை போன்றவை தொடருகிறதே, இவைகளைத் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**கலைஞர்** : இன்று நேற்றல்ல, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே வந்த தொற்றுநோய் அது. அதன் காரணமாக ஏற்படுகிற சண்டை சச்சரவுகள், கலவரங்கள், மோதல்கள் எல்லாம் நீங்கள் அறிந்ததுதான். அதிலிருந்து மக்களை விடுவிக்க சாதிக் கொடுமையிலிருந்து அவர்களைக் காப்பாற்ற அரசின் சார்பில் எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. சொல் அளவில் அது இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் செயல் அளவில் பிராமணர், செட்டியார், ஆதிதிராவிடர், முதலியார், வன்னியர், முக்குலத்தோர் என்று பல பிரிவுகளாக இருக்கின்ற எல்லா சமுதாயத்தினரையும் ஒரே இடத்தில் குடி அமர்த்த வேண்டும் என்பதற்காக **சமத்துவபுரம் திட்டம்** தொடங்கப்பட்டிருக்கின்றது. இத்திட்டம் மேலும் மேலும் வளர்ந்திட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

கேள்வி : *மலேசியாவில் தமிழ் இலக்கியம் அதிக அளவில் வளர்ந்து வருவதைப் பற்றி?*

**கலைஞர்** : மலேசியாவின் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி அதிகமாக வளர்ந்த



காரணத்தால் தான் அண்மையில் மலேசிய கவிஞர் ஒருவர் தமிழகத்திலே தமிழக அரசால் சிறப்பிக்கப்பட்டார் என்பதை நீங்களே அறிவீர்கள்.

கேள்வி : *இன்னும் அதிகமான எழுத்தாளர்கள் சிறப்பிக்கப்படுவார்களா....?*

**கலைஞர்** : மேலும் மேலும் நீங்கள் அந்த முயற்சியைத் தொடர்ந்தால் மேலும் மேலும் நாங்கள் ஆதரவு தருவோம்.

கேள்வி : *இந்தியாவில் மருத்துவப் படிப்பை படிக்க விரும்பும் மலேசிய மாணவர்கள் அங்கே வெளியிடப்படும் போலி விளம்பரத்தால் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். அவர்களை ஏமாற்றத்திலிருந்து காப்பாற்ற தமிழக அரசின் உத்தரவாதம் என்ன?*

**கலைஞர்** : போலிகளைக் கண்டு ஏமாறுவது தமிழனுக்கு வழக்கம். அதை நீக்குவதற்குச் சட்டப்படி என்ன செய்ய முடியும் என்பதை நிச்சயமாக யோசிப்போம். நீங்கள் கூறியதைப்போல மருத்துவக் கல்லூரி விஷயமாக இந்தியத் தூதுவர் எனக்களித்த விருந்தின்போது ஒரு நண்பர் அந்தக் கோரிக்கையை என்னிடம் கொடுத்துள்ளார். ஏற்கெனவே மலேசிய மாணவர்கள் போன்ற வெளிநாட்டு மாணவர்களுக்கு இடம் அளிக்கின்ற ஒரு நிலை தமிழ்நாட்டில் இருந்தது. பின்னர் அந்த நிலை மாற்றப்பட்டு விட்டது. இப்போது ஈழத்திலிருந்து இலங்கையிலிருந்து வருகின்ற மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம்தர அவர்களுக்கென குறிப்பிட்ட சில இடங்கள் கொடுத்து வருகிறோம். தாங்கள் சொல்கின்ற குறையைப் பற்றி நீங்கள் குறிப்பு அனுப்பினால் யோசித்து முடிவெடுக்க முடியும்.

கேள்வி : *மலேசியாவில் உள்ள இந்தியர்களில் 90 சதவிகிதம் பேர் தமிழர்கள், எனவே தமிழ் தெரிந்த இந்தியத் தூதுவர் நியமிக்கப்படுவாரா?*

**கலைஞர்** : தூதுவராக வருபவர்கள் தமிழைத் தெரிந்து கொண்டால் நல்லது.

கேள்வி : *த.மா.க. உடன் உங்கள் கூட்டணி எப்படி இருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு மூப்பனார் அவர்கள் கண்மூடித்தனமாக தி.மு.கவை ஆதரிக்கப் போவதில்லை என்று சொல்லியிருக்கிறார். எனவே உங்கள் கூட்டணியின் எதிர்காலம் பற்றி.*

**கலைஞர்** : யாரும் யாரையும் கண்மூடித்தனமாக ஆதரிக்கக் கூடாது என்று மூப்பனார் அல்ல, நானல்ல, தந்தை பெரியாரே கூறியிருக்கிறார்.

கேள்வி : *கவியரசு கண்ணதாசன் உங்களுடைய இனிய நண்பர். கவிஞர் வைரமுத்து உங்கள் மாணவர். இவர்கள் இரண்டு பேரைப் பற்றி தாங்கள் ஒப்பீடு செய்தால் எங்கள் இலக்கிய உலகிற்கு இன்பமாக இருக்குமே!*

**கலைஞர்** : நீங்கள் உங்கள் கேள்வியில் ஒப்பீடு செய்து விட்டீர்களே. கண்ணதாசன் என்னுடைய நண்பர், வைரமுத்து எனக்கு மாணவர் என்று!

கேள்வி : *தமிழ் அறிஞர்களாக விளங்கும் தாங்கள் இன்று முதல் அமைச்சராக இருப்பது தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெருமை. இந்த அளவிற்கு சாதனை செய்து வரும் தங்கள் அரசு ஆஸ்தான கவிஞர் நியமனத்தில் தயக்கம் காட்டுவது ஏன். சுரதா போன்ற சிறந்த கவிஞர்களெல்லாம் இருக்கிறார்களே?*

**கலைஞர்** : அரசனே கவிஞராக இருக்கும்போது அரசவைக்கவிஞர் ஒருவர் தேவையில்லை என்று கருதுகிறேன். நீங்கள் குறிப்பிடும் சுரதா அவர்களுக்கு வருகிற பிப்ரவரி 13ஆம் தேதி பொற்கிழியும் **கலைஞர்** விருதும் முரசொலி அறக்கட்டளை வழங்குகின்றது என்ற செய்தியை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : *இப்போது முதலமைச்சர் என்ற முறையில் அதிகப் பொறுப்புகள் இருக்கும் இந்த நேரத்திலும் தமிழ் எழுத்துப்பணியை எப்படித் தொடர நேரம் கிடைக்கிறது?*

**கலைஞர்** : அது ஒன்றுதான் என் களைப்புக்கு மருந்தாக இருக்கிறது.

கேள்வி : *தொழில் துறையில் சலுகைகளை எந்தெந்த துறைகளுக்கு அளித்து முதலீட்டாளர்களைக் கவர நினைக்கிறீர்கள்?*

**கலைஞர்** : மின்சாரத்துறை, சுற்றுலாத்துறை மற்றும் குடிநீர் போன்ற வசதிகளைப் பெருக்குவதற்கான திட்டங்களை எல்லாம் வரவேற்கிறோம். பெரிய தொழில்கள் என்று மட்டுமல்லாமல், சிறிய நடுத்தர தொழில்களைத் தொடங்க வருபவர்களுக்கும் சலுகைகள் அளிக்கப்படும். முக்கியமாக குளச்சல் துறைமுகத்தை உருவாக்க – ஏற்கெனவே பெரிய துறைமுகமாக இருந்தது – இது மாநில அரசின் பொறுப்பில் உள்ளது. அதை விரிவாக்கினால் பல இடையூறுகள் நீங்கும். வசதி, வாய்ப்புகள் வளங்கள் பெருகும்.

கேள்வி : *மின்திட்டங்கள் பற்றி குறிப்பாக மலேசியா நாட்டைச் சேர்ந்த பெட்ரோமாஸ் நிறுவனம் விளக்குவீர்களா?*

**கலைஞர்** : எங்களுடைய ஒப்பந்தங்கள் எல்லாமே ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகும். நீங்கள் கேட்கும் எல் அண்டு ஜி ஒப்பந்தம் குறித்து ஏற்கெனவே தேவையான விளக்கங்களையெல்லாம் பெட்ரோமாஸ் நிறுவனத்திற்கே தமிழக அரசால் வழங்கப்பட்டு விட்டன. இதைப் பற்றி மலேசிய பிரதமர் அவர்களோ அமைச்சர்களோ நான் சந்தித்தபோது எதுவும் கூறவில்லை. பத்திரிகை யாளர்களாகிய நீங்கள் தான் கேட்கிறீர்கள்.

கேள்வி : *தி.மு.கவின் பெரும் தலைவர்களில் நீங்கள் ஒருவர். பெரிய கொள்கை முழக்கத்தோடு ஆட்சியை அமைத்தவர்கள் நீங்கள். வாழ்க்கை முழுவதையும் பொது வாழ்க்கைக்காக அர்ப்பணித்துக் கொண்ட தலைவர் நீங்கள். உங்கள் பேச்சிலே தி.மு.க. ஆதின மடமல்ல, வாரிசு அரசியல் அல்ல என்றெல்லாம் கூறியிருக்கிறீர்கள். அப்படியென்றால் தி.மு.க.வை வழி நடத்தப் போகின்ற அடுத்த இளம் தலைவராக யாரை அடையாளம் கண்டு வைத்திருக்கிறீர்கள்?*

**கலைஞர்** : நான் என்னுடைய ஆயுள் எவ்வளவு நாட்கள் என்று கணக்கிட்டு ஆரூடம் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. பலபேர் ஆரூடம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. எனக்குப்பிறகு யார் என்று நான் இப்போதே நிர்ணயிக்க வேண்டிய அவசியம் கிடையாது. எனக்குப் பிறகு கழகம் இருக்கும். கழகத்திலே ஜனநாயகம் இருக்கும் அந்த ஜனநாயகம் எனக்குப் பிறகு யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பது என்பதை நிர்ணயிக்கும்.

கேள்வி : *இங்கே மரபுக் கவிதை புதுக்கவிதை இரண்டிற்குமிடையே சர்ச்சை நடந்து கொண்டே யிருக்கிறது. தாங்களாவது தீர்வு கூறுவீர்களா?*

**கலைஞர்** : நான் தீர்ப்பு சொல்லி அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதற்கு எந்தக் கவிஞர்களும் இப்போது தயாராக இல்லை. மரபுக் கவிதையிலும் ரசிக்கத் தக்க கவிதைகள் ஏராளமாக இருக்கின்றன. புதுக் கவிதையிலும் ரசிக்கத் தக்க கவிதைகள் ஏராளமாக இருக்கின்றன. எந்த கவிதையை எழுதினாலும் அது உள்ளத்தைத் தொடக்கூடிய அளவிற்கு இருந்தால் அது வரவேற்கத் தகுந்தது.

கேள்வி : *தமிழ் நூல்கள் விலை அதிகமாக உள்ளது. அதன் தயாரிப்பாளர்களுக்கு மானியம் தரப்படுமா?*

**கலைஞர்** : நாள்தோறும் தாள் விலை ஏறிக்கொண்டேயிருக்கின்றது. உங்கள் பத்திரிகையின் விலை கூட சென்ற ஆண்டு இருந்த விலை இந்த ஆண்டு உயர்ந்து விடுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமேயானால் ஒரு காலத்தில் ஓரணா, இரண்டனா என்று விற்கப்பட்ட பத்திரிகைகள் எல்லாம் நாளேடுகள் எல்லாம் இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் என்று விற்கப்படுகிறது. தாள் விலை ஏறுகின்ற காரணத்தால் நூல்களின் விலையும் ஏறத்தான் செய்யும். அதற்கான மானியம் வழங்குவது என்பது இயலாது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க ஆயிரம் கோடி ரூபாய் மானியம் தரவேண்டி உள்ளது. உணவு தானியத்திற்கு நியாய விலைக் கடைகளைத் திறந்து அதற்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மானியம் ஆகிறது. ஏழையெளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலைகளை வழங்க நூறு கோடி ரூபாய் ஆகிறது. மானியம் ஒவ்வொன்றுக்கும் அளித்தே மக்களைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் நாட்டில் நூல்களுக்கு மானியம் வழங்குவது என்பது இயலாத காரியம்.

கேள்வி : *பொங்கல் திருநாள் எதற்காகக் கொண்டாடப்படுகிறது?*

**கலைஞர்** : பொங்கல் திருநாள் தமிழர் திருநாளா என்பது நீண்ட நாள் விவாதம். அண்ணா அவர்கள் வந்தபோதே, அதைப்பற்றி கோடிட்டுக் காட்டியிருக்கிறார். என்னைப் பொறுத்தவரையில் இரண்டையும் கொண்டாடலாம். தெலுங்கர்களுக்கு ஆண்டுப் பிறப்பு உகாதி நாளாகக் கொண்டாடப்படுகிறது. மலையாளிகள் ஓணம் கொண்டாடுகிறார்கள். எனவே தமிழர்களுக்கு பொங்கல் என்று ஒரு நாள் இருப்பதில் தவறு இல்லை. பொங்கலையும் கொண்டாடலாம். தமிழர் திருநாளையும் கொண்டாடலாம். சித்திரை தான் தமிழ் ஆண்டுப் பிறப்பு என்று கூறுவதால் நீண்ட நாட்களாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் அதையும் ஏற்றுக் கொள்ளலாம். தை முதல் நாள் புத்தாண்டு நாள் என்ற கருத்தும் வலுவானதுதான்.

கேள்வி : *மதச்சார்பற்ற நிலை என்று சொன்னால் இந்தியாவின் எதிர் காலம் எப்படி இருக்கும்?*

**கலைஞர்** : இந்தியாவின் எதிர் காலம் மதச் சார்பின்மையில்தான் நிலை பெறும், மதச் சார்பின்மைக்கு தீங்கு வந்தால் ஏற்படும் மோதல் காரணமாக இந்தியாவின் ஒற்றுமை சிதறுண்டு போகும். இந்தியாவின் இறையாண்மைக்கே குந்தகம் உண்டாகும்.

### சென்னையில் முதலமைச்சர்

சிங்கப்பூர் – மலேசிய நாடுகளில் தனது சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 9.1.1999 இரவு 11.30 மணியளவில் சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கினார். விமான நிலையத்தில் முதலமைச்சரை அமைச்சர் பெருமக்களும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், கடலென திரண்டிருந்த மக்களும் வரவேற்றார்கள்.

●

# சிங்கப்பூர் மலேசியாவில்

# சங்கத்தமிழ்

*— கவிஞர் வைரமுத்து*

மூன்றுபக்கம் தண்ணீரால் சூழப்பட்டிருந்தால் அது தீபகற்பம்.

நான்குபக்கம் தண்ணீரால் சூழப்பட்டிருந்தால் அது தீவு.

முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களின் வருகைக்குப்பிறகு, அவரது தமிழ்மழையில் வழிய வழிய நனைந்தபிறகு, சிங்கப்பூரும் – மலேசியாவும் திகைத்துப் போய்க் கேட்கிற கேள்வி இதுதான்:

"நான்குபக்கமும் தமிழால் சூழப்பட்டால் அதற்கு என்ன பெயர்?"

**முத்தமிழறிஞர் கலைஞரின்** வருகையால் சிங்கப்பூர், மலேசியத் தமிழர்கள் ஆனந்த வெள்ளத்தில் மிதந்து, மிதந்து, மகிழ்ந்த செய்திகளை அறிந்து, அறிந்து மகிழ்கிறேன்.

முதல்வர் கலைஞர் அவர்களின் வெளிநாட்டுப் பயணம் இருபெரும் நோக்கங்கள் கொண்டது.

ஒன்று : பண்பாட்டு உறவுகளை உறுதிப்படுத்தல்.

இரண்டு : தொழில் உறவுகளை உயர்த்திப் பிடித்தல்.

தன் இதயத்தால், இலக்கியத்தால் தமிழ்ப் பண்பாட்டு உறவுகளை உறுதிப்படுத்தி வந்திருக்கிறார்.

அவர் தன் பதவியால் – பட்டறிவால் தொழில் உறவுகளை உயர்த்திப் பிடித்து திரும்பியிருக்கிறார்.

சின்னத் தீவுதான் சிங்கப்பூர்.

கடலின் தேகத்தில் ஒரு மச்சம்.

ஆனாலும் ஆசியப் பொருளாதாரத்தில் தனிநபர் வருமானத்தில் அதுதான் உச்சம்.


கிழக்கு மேற்காக 42 கிலோ மீட்டரும், தெற்கு வடக்காக 23 கிலோ மீட்டரும் கொண்ட சின்னஞ்சிறிய தீவுதான் சிங்கப்பூர்.

ஆனால் தமிழையும் தன் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக்கித் தமிழுக்குத் தன் அரியாசனத்தில் சரியாசனம் தந்திருக்கும் தித்திப்புத் தீவு சிங்கப்பூர்.

அங்கு வாழும் தமிழர்கள் பெரும்பாலும் இனப்பற்று, மொழிப்பற்று இரண்டையும் உயிரோடு கலந்தவர்கள்.

கலைஞரையும் அவர் தமிழையும் இதயத்தோடு கலந்திருப்பவர்கள்.

வடதுருவத்து எஸ்கிமோ, வெயிலைப் பார்க்க



ஆசைப்படுவதைப் போல அவரைப் பார்க்க ஆசைப்படுகிறவர்கள்.

"சிங்கப்பூருக்கு வருவது என் நீண்ட காலக் கனவு" என்று சிங்கப்பூர்த் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கலைஞர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால், அது ஒருவர் கண்ட கனவு.

சிங்கப்பூருக்குக் கலைஞர் வரவேண்டுமென்பது பல்லாயிரம் தமிழர்கள் கண்ட கனவு.

இருதரப்புக் கனவுகளும் ஒருபொழுதில் பலித்தன.

ஆகாயமங்கை அவிழ்ந்த இருட்கூந்தலை அள்ளிமுடிக்கும் ஓர் அதிகாலையில் **(4.1.99)** 'சங்கி' விமான நிலையத்தில் தரையிறங்குகிறது தமிழ்.

சிங்கப்பூர் முழுக்க ஓர் ஆனந்த மின்சாரம் அலையலையாய்ப் பரவுகிறது.

அரசாங்கச் சந்திப்புகளில் அவர் அன்பைப் பரிமாறுகிறார்; தொழில் முனைவோர் சந்திப்பில் அவர்தம் அச்சம் களைந்து நடைமுறைத் தடைகள் உடைபடும் என்கிறார்.

"நல்ல நிலம் தமிழ் நிலம்; நம்பிக்கையோடு விதை தூவுங்கள்" என்கிறார்.

"சுரண்டலுக்கு இடம்தர மாட்டோம்; நியாயமான லாபத்திற்குக் குறுக்கே நிற்கமாட்டோம்" என்று கடிதோச்சி மெல்ல எறிகிறார்.

அவர் முகம் பார்க்கவும், குரல் கேட்கவும், வெள்ளி நாணயம் போல் துள்ளி வரும் அவரது தெள்ளுதமிழ் கேட்டுத் திளைக்கவும், அவரது அசைவுகளில் ஆனந்தம் காணவும், அவரில் தங்களை அடையாளம் காணவும் தவிக்கிறார்கள் தாய்த் தமிழர்கள்.

அந்த நாள் வந்தது.

நிமிடங்கள் பொன்னாகும் சிங்கப்பூரில் ஒரு வேலை நாளில் **(6.1.99)** பிற்பகல் **4.30** மணிக்கு அத்தனை பெரிய திருக்கூட்டம் கலைஞருக்கன்றி வேறு யாருக்குக் கூடக்கூடும்?

அரங்கில் ஒலிமுழங்க — அத்தனை கண்களிலும் மின்னல் துலங்க — அத்தனை கரங்களும் அனிச்சைச் செயலாய்க் கரவொலி வழங்க — ஆனந்தத்துக்கும் அழுகைக்கும் மத்தியில் இதயம் குழைய — சிங்கப்பூர்த் தமிழர்களின் கனவு மெல்ல மெல்ல நடந்து மேடையேறுகிறது.

அளவாகத் தமிழ்பேசி அளவற்ற பணிபுரியும் சிங்கப்பூர் "தமிழ்முரசு" ஆசிரியர் திருநாவுக்கரசு முன்மொழிகிறார். நாற்காலியற்ற — ஒலிபெருக்கி மட்டுமே கொண்ட தனிப்பெரும் மேடையில் தமிழ் பேசத் தொடங்குகிறது தமிழ்.

சிங்கைத் தமிழர்களுக்குக் கலைஞரைப் பார்த்த பரவசம்.

கலைஞருக்கோ சிங்கைத் தமிழர்களின் பாசப் பரவசம்.

கண்ணீரில் நீந்திக் கரையேற முடியாமல் வார்த்தைகள் மூழ்கி மூழ்கித் தலைகாட்டுகின்றன.

இப்போது உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். பேசாமல் உங்களையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் போலிருக்கிறது" என்று தொடங்குகிறார்.

நிறைந்து போயிருந்த சபை நெகிழ்ந்துபோய் நிற்கிறது.

"என்னை நீங்கள் தன்னந்தனியனாக நிறுத்தினாலும் உங்களை நான் தன்னந்தனியனாக ஆக்கமாட்டேன் என்ற உறுதியை இந்த நல்ல நிகழ்ச்சியில் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் அன்று உறவுமொழியால் கொடுத்த உறுதிமொழியை என் சிங்கப்பூர் நண்பர்கள் தொலைபேசியில் சொல்லிச் சொல்லித் திளைக்கிறார்கள்.

மழையாய் இருந்தும் மலைபோல் வந்து குவிந்த கூட்டத்திற்கு நன்றி தெரிவித்துத் தன் பேச்சின் மையம் நோக்கி நகர்கிறார்.

தொல்காப்பியரைத் தொட்டுக்கொள்கிறார்; பழந்தமிழ் இலக்கியத்தில் பயணப்படுகிறார்.

இந்திராகாந்தி அவர்களால் ரஷ்யாவில் மேற்கொள்ளப்பட்ட கணியன் பூங்குன்றன் வரியில் கரைந்து போகிறார். புரட்சிக்கவிஞருக்கு பூபாளம் இசைக்கிறார்.

"உங்களுக்குத் தெரியும். உலகப் புகழ் எய்திய கிரேக்கப் பாரம்பரியம் இப்போது இல்லை. எகிப்திய மொழிக் கலாச்சாரமும் இப்போதில்லை. ஆனால் இன்னமும் இலங்கையில் தொல்காப்பியத் தமிழைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். 'ர' என்ற எழுத்து சொல்லின் முதலில் வரக்கூடாது என்பது இலக்கணவியல். ஆனால் நாம் 'ரத்தம்' என்று 'ர' என்ற எழுத்து சொல்லின் முதலில் வைத்து எழுதிக்கொண்டிருக்கிறோம். இலங்கையில் 'இ' என்ற எழுத்தைச் சேர்த்து "இரத்தம்" என்றுதான் எழுதுவார்கள். எனவே இலங்கைத் தமிழர்கள் இன்னமும் தொல்காப்பியக் காலத்தை மறக்கவில்லை; இது ஒரு எடுத்துக்காட்டு" என்று இலக்கியத் தேனில் இலக்கண மருந்து குழைக்கிறார். பெயர்ச்சொல்லே வினைச்சொல்லாக்வும், வினைச்சொல்லே பெயர்ச்சொல்லாகவும் வழங்கும் விந்தை தமிழுக்குரிய தனிச்சிறப்பு என்று பெருமிதம் பேசுகிறார்.

எந்த மண்ணில் இருந்தாலும் மண்ணுக்குரிய மக்களாக இருங்கள்; ஆனால் இனமொழி அடையாளங்களை இழந்து விடாதீர்கள் என்று செல்லமாய்க் கன்னங்கிள்ளி ஈரவார்த்தைகளால் எச்சரிக்கிறார்.

அறிஞர் அண்ணா பட்டியலிட்டுக் காட்டிய புறநானூற்றுப் புலவர்களோடு அகநானூற்றுப் புலவர்களையும் அணிவகுத்து நிறுத்துகிறார்.

கடல்பாடிய — ஆனால் கடல்தாண்டிப் போகும் வாய்ப்புப் பெற்றிருக்க முடியாத புலவர்களைக் கடல்கடந்து சுமந்து சென்று பாசத்தோடு பதிவு செய்கிறார்.

அடை நெடுங்கல்வியார் முதலாக ஒக்கூர் மாசாத்தனார் ஈறாக — பாட்டுப் புலவர்களின் பெயர்களை உச்சரித்து உச்சரித்து உயிர் ஊறுகிறார்.

எத்தர்களால் ஏமாற்றப்பட்டு சிங்கப்பூர் சிராங்கூன் சாலையிலே அனாதையாக அழுதுகொண்டிருக்கிற உழைக்கும் தமிழர்களுக்காக சிங்கப்பூர் பிரதமரோடு பேசியிருக்கிறேன் என்று இலக்கியத்தை உயர்த்திய இடத்தில் இனத்தையும் உயர்த்திப் பிடித்திருக்கிறார்.

75 வயது கொண்ட கலைஞர் 65 நிமிடங்களில் இருபது நூற்றாண்டுத் தமிழை அளந்து தந்திருக்கிறார்.

பிரசவத்திற்குப் பிறகு மீண்டும் வேலைக்கு போகிற தாய் தன் மார்பில் ஒட்டிய குழந்தையைப் பிரியாமல் எப்படிப் பிரிவாளோ அப்படிப் பிரிகிறார்.

சிங்கப்பூர்த் தீவு ஒரு புள்ளியாய்த் தேய்ந்துவிட மலேசிய வானத்தில் மறைகிறது விமானம்.

**மலேசியா!**

பூமியில் தெறித்து விழுந்த சொர்க்கத் துண்டு.

மண்ணில் விரிக்கப்பட்ட பச்சைப்பட்டு.

உலக மலைகளுக்கு அழகுப்போட்டி வைத்தால் எப்போதும் முதலிடம் மலேசியாவுக்குத்தான்.

செம்பனை மரங்கள் மீதும், ரப்பர் மரங்கள் மீதும் ஒரு நாளில் சில முறைகள் கருமேகம் மழை பொழியும்; வெண்மேகம் துவட்டி விடும். சற்றொப்ப 3 இலட்சத்து 30 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் கொண்ட அந்த மண்ணில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 54 பேர் மட்டுமே வசிக்கிறார்கள்.

மலேசியாவின் பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சாமிவேலுவும் அவரது துணைவியார் டத்தின்ஸ்ரீ இந்திராணி சாமிவேலுவும் விமான நிலையம் வந்து வரவேற்க – கோலாலம்பூரிலிருந்து புது விமான நிலையம் 70 கிலோமீட்டர் என்றபோதிலும் அலையலையாய்த் தமிழர்கள் அங்கும் கூடி ஆரவாரிக்க – கலைஞர் எழுச்சியோடு வரவேற்கப்படுகிறார்.

விமான நிலையத்திற்குள்ளேயே ஒரு சிற்றூர்தியில் சிறுஊர்வலம். தாய்த் தமிழகத்தில் கலைஞருக்குத் தரப்படுவது போன்ற அதே உற்சாகம்; அதே மகிழ்ச்சி; ஆனால் அதை விடப்பரவசம்.

மலேசியத் திருநாட்டின் பன்னாட்டு வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ ரபிதா அஜீஸ் அவர்களோடு உரையாடிவிட்டு அதன்பிறகு தொழில் திட்டங்கள் குறித்து விவாதித்துவிட்டுச் செய்தியாளர் சந்திப்பு.

பெரும் பொறுப்புகளிலிருக்கும் தலைவர்கள் உள்நாட்டில் வார்த்தைகளைக் கையாள்வதை விடவும் வெளிநாட்டில் சொற்களை அளந்து கையாளவேண்டும் என்பார்கள். தன் ஒவ்வோர் அசைவிலும் கலைஞர் எவ்வளவு கவனமாய் இருக்கிறார் என்பதற்கு அவர் பேட்டிகளில் அங்கங்கே சாட்சிகள் பார்த்தேன்.


டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள் கலைஞர் தமிழ் மீது காதல் உள்ளவர். அற்புதமான ரசிகர். குழந்தைபோல் மனம்விட்டுப் பேசிக் குதூகலிப்பவர். எனக்கு விருந்து தந்த வேளைகளிலெல்லாம் கலைஞர் தமிழை ஓசையோடு அவர் ஒப்பித்திருக்கிறார்.

அவர் முகமன் பொழிகிறபோது மலாய் நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் உள்ள உறவைப் புதுப்பித்துக் கொள்ளவே கலைஞர் வந்திருக்கிறார் என்று குறிப்பிட்டிருந்திருக்கிறார்.

அவரை வலிக்காமல் மறுத்திருக்கிறார் கலைஞர்.

"மன்னிக்க வேண்டும். உறவு பழுதடைந்தால்தான் புதுப்பிக்க வேண்டும். உறவை உறுதிப்படுத்திக் கொள்ளத் தான் வந்திருக்கிறேனே அல்லாமல் அது பழுதடைந்து விட்டது – அதனால் புதுப்பிக்க வந்திருக்கிறேன் என்று நான் கூற விரும்பவில்லை".

அவர்தம் கூர்த்த மதி, நேர்த்தியான வார்த்தைகளில் ஆர்த்திருக்கிறது. வல்லபாய்படேல் வெளிநாடு போனபோது



வினவினார்களாம்:

"What is your Culture?" என்று

"Our Culture is Agriculture" வல்லபாய்படேல் விடையிறுத்தாராம்.

இந்திய அரசியல் குறித்துக் கூரிய கேள்வி கேட்கப்பட்டபோது இன்னொரு நாட்டிலே வந்து இந்திய அரசியல் பேசுவது முறையல்ல என்று விடையிறுத்து தாய்நாட்டின் பெருமையை விட்டுக் கொடுக்காத தேசியவாதியாகத் திகழ்ந்திருக்கிறார் கலைஞர்.

மூன்றாம் உலகநாடுகள் முதலில் தன்னிறைவு பெறவேண்டியது மின்சாரத்திலும், தண்ணீரிலும் தான் என்பதை உள்ளத்தின் ஆழத்தில் எழுதிவைத்திருக்கிற முதல்வர் பல திட்டங்களை முன்வைத்திருக்கிறார்.

தொழில் முதலீட்டுத் திட்டங்களில் ஐந்தாம் இடத்திலிருந்த தமிழ்நாட்டை இரண்டே ஆண்டுகளில் இரண்டாம் இடத்துக்கு உயர்த்தியப் பெருமையை அடக்கத்தோடு அறிவிக்கிறார்.

**கோலாலம்பூர் உள்ளரங்கம்**

அவர் தங்க முகம் காணத் தமிழர்கள் காத்திருக்கிறார்கள்.

மலேசிய மண்ணின் தமிழ் வரலாற்றில் இப்படி ஓர் இலக்கியத் திருக்கூட்டம் அதற்கு முன்பு நிகழ்ந்ததில்லையாம்.

இன்னொருமுறை கலைஞரே சென்றாலொழிய அந்தத் திருக்கூட்டத்தை வெல்ல முடியுமென்பதற்கு உத்தரவாதமும் இல்லையாம்.

அரங்கம் பிதுங்கப் பிதுங்க – உள்ளே இடமில்லாமல் கூட்டம் வெளியே வழிய வழிய – சாலைப் போக்குவரத்து ஆங்காங்கே நகராமல் நின்றுபோக – அரங்கத்தின் ஜன்னல் கண்ணாடி உடைந்து சிதற – கூட்டம் – கூட்டம் – பெருங்கூட்டம் – வெள்ளம் போல் தமிழர் கூட்டம்!

அரங்கத்தின் நெடுவழியில் அழைத்துச் சென்றால் கலைஞரை மேடை கொண்டு சேர்க்க முடியாது என்று கலைஞரை மாற்றுவழியில் அழைத்து வந்தாராம் டத்தோஸ்ரீ சாமிவேல்.

"இப்போது தமிழ்க்கடல் வரப்போகிறது" என்று அறிவித்தாராம்.

உணர்ச்சி பொங்கப் பொங்க உரையாற்றத் தொடங்கிய கலைஞர் "தமிழ்க்கடல் வரப்போகிறது என்று டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள் கூறினார்கள். ஆனால் என் எதிரே கடலே நிற்கிறது" என்று அரங்கின் பெருங்கூட்டத்தைச் சுட்டிக்காட்டி "இந்தக் கடலில் நான் இருக்கின்ற இந்த மேடை ஒரு தெப்பமாக மிதந்து கொண்டிருக்கிறது" என்று சொன்னதும் கடல் கை தட்டியதாம். அந்த அலையோசை அடங்க அதிக நேரம் ஆனதாம்.

"இந்திய நாட்டு வரலாறு கங்கைக் கரையிலிருந்து எழுதப்பட்டதற்குப் பதிலாகக் காவிரிக் கரையிலிருந்து எழுதப்பட வேண்டும் என்பதுதான் வரலாற்றுப் பேராசிரியர்களுடைய துணிவான திட்டவட்டமான தெளிவான முடிவாகும்" என்று தொடங்குகிறது அவரது சங்கநாதம்.

தமிழ்நாட்டுத் தமிழர்கள் பலரும், மலேசியத் தமிழர்களும் அதுவரை அறிந்திராத ஒரு வரலாற்றுச் செய்தியை கோலாலம்பூரில் குறிப்பிடுகிறார்.

வெள்ளையரை எதிர்த்துப் போராடிய வீரத் தலைவர்களாம் பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது பாண்டியர்கள் ஆகியோரின் வழித்தோன்றல்கள் விடுதலைப் போரைத் தொடர்ந்து விடக்கூடாது என்பதற்காக வெள்ளை ஏகாதிபத்தியம் அந்த விடுதலை வீரர்களின் வழித்தோன்றல்கள் – தளபதிகள் 73 பேரை – ஒரு கப்பலில் ஏற்றி 76 நாட்கள் பயணிக்க வைத்து 1802இல் கடைசியாய்க் கொண்டு வந்து விட்ட இடம்தான் பினாங்கு என்று வரலாற்றின் இரத்தம் வடியும் ஒரு செய்தியை அங்கே அவர் சுட்டிக் காட்டியபோது அந்த அவையே இமைக்க மறந்த கண்களோடு நிலை குத்தி நின்றதாம்.

அப்படித் தாய் மண் என்ற தொப்புள் கொடியை விட்டுத் துண்டிக்கப்பட்ட அந்த எழுபத்து மூன்று பேரின் பெயர்ப்பட்டியலை உணர்ச்சி பொங்கும் குரலில் அவர் வாசித்துக் காட்டுகிறார்.

அவையில் ஆங்காங்கே கண்கள் சுமந்தனவாம் கண்ணீர்க் குடங்கள்.

விழா முடிந்து வெளியேறியதும் கலைஞருக்குப் பாதுகாப்பாய் இருந்த மலேசியக் காவலர் பால்ராஜ் என்பவர் "நானும் முக்குலத்தைச் சேர்ந்தவன்தான். நான்கூட மருதுபாண்டியரின் வாரிசாக இருக்கலாம்" – என்று கலைஞரைத் தொழுது அழுதாராம்.

தொடர்ந்து அந்தப் பேரவையில் கலைஞரின் சங்க இலக்கியம் சதுராடியது; குறளோவியம் கும்மி கொட்டியது.

தமிழர்களின் வரலாற்றுப் பெருமைகளும் பண்பாட்டுத் தடயங்களும் அவர் பேச்சில் ஆரவாரத்தோடு வந்து அணி வகுத்து நின்றன. வரிவடிவம் மாறினாலும் ஒலி வடிவம் மாறாத தமிழை – திருவள்ளுவன் நாவிலிருந்து வெளி வந்த அதே தமிழை – காக்கைபாடினியார், நச்செள்ளை, உச்சரித்த அதே தமிழை – கபிலரும், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் அவ்வையாரும் நக்கண்ணையும் உச்சரித்த அதே ஒலிவடிவத் தமிழை – வாழும் தமிழ்ச் சங்கமாக வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர் உச்சரிக்க உச்சரிக்க – கற்கண்டுக்குள் கால்புதைந்த எறும்புகளாய்த் திளைத்துச் சுவைத்தாம் திருக்கூட்டம்.

வீரத் தமிழ், அழகு தமிழ், நளினத் தமிழ் மட்டும் போதாது. அறிவியல் தமிழும் வேண்டுமென்று தமிழை 21ஆம் நூற்றாண்டுக்கு ஆற்றுப்படுத்துகிற அறிவு முழக்கத்தோடு அவர் உரை நிறைகிறது.

அதன்பிறகு தான் அவையோருக்கு அது இரவா பகலா என்று தெரிகிறது.

கலைஞரின் இந்த வெளிநாட்டுப் பயணம் குறைந்த காலத்தில் நிறைந்த பயன் நிகழ்த்தியிருக்கிறது.

சிங்கப்பூர் பிரதமரையும், மலேசியப் பிரதமரையும் சந்தித்துத் தமிழ்நாட்டுக்குத் தொழிலூக்கம் பெற்றது ஒரு பயன்.

சென்னை விமான நிலையத்துக்கும் துறைமுகத்துக்கும் உயரச்சாலை அமைக்கும் சிந்தனை இரண்டாம் பயன்.

தமிழ்நாட்டுக்குள் தொழில் முனைவோரின் அச்சம் களைந்தது மூன்றாம் பயன்.


சிங்கப்பூர் மலேசியத் தமிழர்களுக்கு இன்னும் 10 ஆண்டுகளுக்குத் தேவையான உற்சாக ஊட்டம் தந்தது நான்காம் பயன்.

நம் பண்பாட்டு உறவுப் பாலங்களை உறுதி செய்து கொண்டது ஐந்தாம் பயன்.

அன்று கடாரம் கொண்டவன் கூட அந்த மண்ணை மட்டுமே வென்றான். கலைஞரோ மனங்களை வென்றிருக்கிறார். மண்ணை வென்றவன் தற்காலிக வெற்றி பெறுகிறான்.

மனங்களை வெல்லுகிறவனே நிரந்தர வெற்றி பெறுகிறான்.

***கலைஞர் வெற்றி –***
***நிரந்தர வெற்றி.***



நன்றி : 'முரசொலி'

# பாவேந்தரின் தமிழ் மொழியுணர்வு

**முனைவர் சாளா இராசகோபாலன்**

ரஷ்ய நாட்டுக் கவிஞராகிய ரசூல் கம்சதோவ் தாய்மொழிப் பற்றாளர். அவர் தன் பாடலில், எனது

*"அவார்மொழி நாளை அழியுமெனில்*
*நான் இன்றே இறப்பேன்"* – என்று பாடினார்.

இன்று உலகெங்கும் பரவிய மொழியாகக் கருதப்படும் ஆங்கிலம் ஒரு காலத்தில் அந்நாட்டிலேயே இகழப்பட்டது. இலத்தீன் மொழியும் பிரெஞ்சு மொழியும் அந்நாட்டில் கொடிகட்டி ஆண்டன. அதன்பின்னர் ஆங்கிலேயரிடம் தோன்றிய தாய்மொழிப்பற்றே அந்நிய மொழிகளை அகற்றிவிட்டு, தாய்மொழியை அரியணையில் அமர்த்தியது. இலத்தீன் மொழி இங்கிலாந்தில் ஆதிக்கம் செலுத்தியபோது? இதனை வெறுத்த கல்விக்கூடத்தின் தலைமை ஆசிரியர் ஒருவர், "நம்முடைய மொழி நம் உரிமையையும், விடுதலையையும் வெளிப்படுத்துகின்றது. இலத்தீன் மொழி நம்முடைய அடிமைத் தன்மையையும், இழிவையும் நினைவூட்டுகின்றது" என்று கூறிவிட்டு, "இலத்தீனை நான் மதிக்கின்றேன். ஆனால் ஆங்கிலத்தை நான் தொழுகிறேன்" என்று கூறினார். (மேற்கோள் சி. இலக்குவனார் பழந்தமிழ்)

"அயர்லாந்து வேண்டுமா? அல்லது காலிக் மொழி வேண்டுமா என்று என்னிடம் கேட்டால் நான் அயர்லாந்தை விட்டு விடுவேன். காலிக் மொழி வேண்டும் என்பேன்" என்றார் வேலரா என்ற மொழிப்பற்றாளர்.

இந்தத் தாய்மொழிப்பற்று, 'தமிழ்விடுதூது என்னும் நூலின் ஆசிரியருக்கு இருந்தது. தமிழின் சிறப்பிற்காகவே எழுதப்பட்ட முதல் நூலாகக் கிடைப்பது தமிழ்விடு தூதுதான்.

***"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்***
***விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" (151)***

– என்று பெயர் தெரியா அந்தத் தமிழ்ப் பற்றாளர் அன்றே பாடினார்.

இந்த தாய்மொழிப் பற்றாளர்களின் வரிசையில் குறிப்பிடத்தக்கவராகப் பாவேந்தர் விளங்கினார். தமிழ் மாநிலத்தில் வாழ்வோர் பலர் பெறாத மொழியுணர்வு பிரெஞ்சு மாநிலத்தில் பிறந்து, வளர்ந்து, கல்விகற்று, வேலை பார்த்த பாவேந்தர்க்கு உண்டானது வியப்பே. தமிழ்நாட்டிலிருந்த தமிழ்த்தேனின் சுவை, புதுவையிலிருந்த வண்டிற்குத்தான் தெரிந்தது. இதற்குச் சில காரணங்களைக் குறிக்கலாம்.

1950–இல் வேலூரில் பொங்கல் விழா நடைபெற்றது. விழா நிகழ்ச்சிக்கு முன் நடந்த உரையாடலில் மயிலை சிவமுத்து, சென்னைக்காரரான தனக்கு நெய்தல் நிலம்தான் பிடிக்கும் என்றார். கந்தசாமிப் பிள்ளை, தஞ்சைக்காரரான தனக்கு மருதநிலம்தான் பிடிக்கும் என்றார். சேலத்துக்காரரான ஒருவர் தனக்குக் குறிஞ்சி நிலம்தான் பிடிக்கும் என்றார். பாவேந்தரோ தனக்குத் தமிழ்நிலம்தான் பிடிக்கும் என்றார். இந்நிகழ்ச்சி பாவேந்தரின் குருதியில் தமிழுணர்வு தோய்ந்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது.

பாவேந்தரின் பேச்சும் தமிழ்; மூச்சும் தமிழ்; உடலும் தமிழ்; உயிரும் தமிழ்; எழுத்தும் தமிழ்; இசையும் தமிழ்; இயக்கம் அனைத்துமே தமிழ்; அதனால்தான் அறிஞர் அண்ணா அவர்கள் ஓரிரவை ஒரே இரவில் இயற்றியதைப்போல் தமிழியக்கதைப் பாவேந்தரும் ஒரே இரவில் படைத்தார். பிறர் தமிழைப் பயன்கொண்டு பாடினர். இவர் தமிழையே பாடினார்.

வானத்திற்கும் ஒளிக் கதிரவனுக்கும் உள்ள தொடர்புபோல், கூர்வாளுக்கும் படை வீரனுக்கும் உள்ள உறவு போல், நறுமணத்திற்கும் வண்ணப் பூவிற்கும் உள்ள நெருக்கம்போல், இன்னிசைக்கும் மகரயாழுக்கும் இருந்த இசைவுபோல், நல் ஒளிக்கும் கண்ணுக்கும் இருந்த தொடர்புபோல், கன்னல் தமிழுக்கும் பாவேந்தருக்கும் தொடர்பு இருந்தது.

பாவேந்தரே தமிழாக இருப்பதால்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்,

*அடலேறு மொழித் தமிழே ! இன்பக்*
*கடலேறு மலைத் தமிழே ! சோலை*
*மடலேறு சுவைத் தமிழே ! நீ என்*
*உடலேறி உயிரேறி வாழ்விக் கின்றாய்*
*– வணங்குகின்றேன்"*

என்று கவியரங்கில் பாடினார்.

***தமிழியக்கக் காதலாலே முட்டைக்குள் புலிக்குஞ்சைப் பொரித்தான்*** என்று கவிஞர் குடியரசு இவரைப் பற்றிப் பாடினார். (தமிழரசு 1–5–90).

"புலவர் தமிழைப் பொதுமக்களின் தமிழாகப் பாடினார். பக்தி இயக்கம் போல் தமிழ் இயக்கம் கண்டார். இவரது புரட்சி மனம் தமிழில் முளைத்துச் சமூகத்தின் பிற துறைகளுக்கும் கிளைத்தது. தமிழுக்கு ஊறு என்றால் உயிர் கொடுத்தேனும் காக்க வேண்டும் என்று முழங்கினார்" என்று சாலை இளந்திரையனார் பாவேந்தரின் தமிழ் உணர்வைச் சிறப்பித்துள்ளார்.

தமிழை முதன்மையாக நினைத்த பாவேந்தர், இயற்கை தோன்றியபோது தமிழ்மொழியும் தோன்றியது. எல்லா மொழிகளுக்கும் முதன்மையாகத் தமிழ் தோன்றியது. மூவேந்தரால் வளர்க்கப் பெற்ற தொன்மையது என்று அதன் தொன்மையை விரித்துக் கூறினார்.



இயற்கை தோன்றிய அன்று, தமிழன் தோன்றினான். தமிழும் தோன்றியது என்பது பாவேந்தரின் சிந்தனை விளக்கம்.

"புனல் சூழ்ந்து வடிந்துப் போன
நிலத்திலே புதிய நாளை
மனிதப் பைங் கூழ்மு ளைத்தே
வகுத்தது; மனித வாழ்வை
இனியாற் றமிழே நீதான்"

– என்று தமிழின் தொன்மையை எடுத்துரைத்தார்.

இயற்கைப் பொருட்களுடன் தோன்றிய தமிழை,

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்க ளோடும்
மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழ்"

என்று பெருமிதத்துடன் பாடினார்.

தமிழின் இனிமையைக் கவிஞர்கள் சொல்லிச் சொல்லி இன்புற்றனர். தமிழ் விடு தூதின் ஆசிரியர்

"தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியே யென் முத்தமிழே புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே"

– என்று தமிழின் சுவையை எடுத்துரைத்துள்ளார்.

அவருக்குப் பின்னர் தோன்றிய பாரதியார்,

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டான்
இங்கமரர் சிறப்புக் கண்டார்" – என்றும்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்"

என்றும் பெருமிதத்துடன் கூறினார்.

அவருடைய தாசராகிய பாவேந்தர், தமிழ் என்ற சொல்லை நினைக்குந்தோறும் உச்சரிக்குந்தோறும் மகிழ்ந்தார். தமிழைத் தேனாக உருவகிக்கும் கவிஞர், நயம்பட,

"தமிழ் 'படித் தேன்' அதை உண்ணத்தான்
தமிழ் படித்தேன் நான்" (இளைஞர் இலக்கியம் ப.11)

– என்று இளைஞர்கள் தமிழின் சுவையை உணரும் வண்ணம் சுவையாக எடுத்தியம்பிப் படிக்கத் தூண்டினார்.

தமிழ்மொழியைப் போல் இனிமையுடைய மொழி வேறு எங்கும் கிடையாது என்று பெருமிதம் உற்றார் பாவேந்தர்.

"தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை"

– என்று பெருமிதத்துடன் மொழிந்தார்.

தமிழின் இனிமையை–சுவையைக் கழைக்கூத்தாடியின் மூலம் பாவேந்தர் நயம்படத் தெளிவாக்கியுள்ளார். கழைக்கூத்தாடி ஒருவன் எலும்புக் கூட்டின் மேல் மருந்து தடவி உயிர்ப்பிக்க விரும்புகிறான். அந்த எலும்புக்கூடு வேறெதுவுமில்லை. தமிழ்நாடு தான். அது உயிர்ப்புறவும், விழிப்புறவும் எழுந்து நடமாடவும் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் செய்வதற்கு எத்தகைய மருந்து, எவ்வாறு செய்யப்படுகிறது? என்று விளக்க வரும் கவிஞர், தான் விரும்பிய இனிமையான பொருட்களெல்லாம் சேர்த்து செய்யப்பட்டது என்றார். "மாம்பழம், ரஸ்தாளி, பலாச்சுளை, பிழிந்த சாறும், தேன்பால், இளநீர், வழுக்கை, இடித்த தினை மா, பொடித்த பருப்பு ஆகியவற்றைக் கலந்து இளஞ் சூடாக்கிப் பக்குவப்படுத்தினால் கிடைக்கும் மருந்தாம் அது. அந்த மருந்து எத்தகையதாம்? கழைக்கூத்தாடியின் பேச்சால் குறிக்கிறார் கவிஞர்.

"உள்ளே தொட்டால் உசிரில் இனிக்கும்
தெள்ளு தமிழ் தெள்ளுதமிழ் இதுதான்"

– என்றார். இந்த மருந்தை நினைக்கும்போது நம் உயிரும் இனிக்கத்தான் செய்கிறது.

இயற்கையிலிருந்து கிடைக்கும் இனிமை எல்லாவற்றையும் விட, தமிழ் இனிமையுடையது என்பது கவிஞரின் கருத்து.

"கனியிடை ஏறிய சுளையும் முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்"

– என்று பாவேந்தர் இனிமையுடைய பொருள்கள் அனைத்தினும் தமிழ் இனிமையுடையது என்றார்.


பாவேந்தரின் தமிழுணர்வு வியத்தற்குரியது. தமிழ் இன்பத்தில் தோய்ந்த அவர், தமிழின் இனிமையை அனைவரும் நுகர விரும்பினார். தமிழின் தொன்மையை அறிவுறுத்தி, தமிழர்கள் தங்கள் மொழியை அறிய – விரும்ப, வழிவகுத்தார். தமிழியக்கம் தோற்றுவித்து தமிழ் உயர வேண்டும் என விரும்பினார்.

★ ★ ★

# பொங்கல் போற்றுவோம்!

- இளைய அகிலா

ஆனைகட்டிப் போரடிச்சது மறந்து போச்சுதே
அம்பாரமா வைக்கப்போரு குறைஞ்சு போச்சுதே
காவாயிலே எந்தநாளும் துள்ளும் மீன்களைக்
கையினாலே அள்ளிக்கொண்ட காலம் போச்சுதே
துள்ளும்காளை அடக்கிநாளை வெற்றி கண்டுமே
தோளுயர்த்தும் ஆம்பளைக சுருங்கிப் போச்சுதே
பொம்பளைங்க கண்டாங்கியை மறந்து விட்டாங்க
பாம்படங்க காதில்மின்னும் நெலை மறந்தாங்க
அம்பாரியா நெல்குவிச்சு உரலில் குத்திடும்
உடல்உழைப்பு மறந்துபோச்சு ஓடி ஓடியே
வியர்வைசிந்திக் களையெடுக்கும் காலம் போச்சுதே
தலையைப்பின்னித் தாழம்பூவைத் தளுக்காய்ச் சூடிய
தன்மையெல்லாம் எங்கே போச்சு? இங்கே காணமே?
பிணையடிச்சு சூட்டுநெல்லு வீடு சேர்த்திடும்
பொழப்புஎல்லாம் பறந்தேபோச்சு தலை தெறிக்கவே
ஓடும்காலம் மாறுமுண்ணு நியதி யாச்சுதே
ஓய்வுஇன்றி சிறகடிக்கும் காலம் ஆச்சுதே
ஆடும்மாடும் விடைபெறுகிற காலம் வந்ததே
அனைத்துக்குமே மிஷினுஎன்ற கோல மாச்சுதே
காரியங்கள் யாவினுக்கும் கை கொடுத்திடும்
கவலைநீக்கக் கரம் உயர்த்தி வியர்வை சிந்தியே
சூரியனைக் கும்பிடுவோம் சுபிட்சப் பொங்கலாய்
சோம்பலின்றி வாழ்ந்துநாளைப் பொங்கல் போற்றுவோம்!



# இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு தரும் இனிய நினைவுகள்


இரா. கோதண்டராமன்

இன்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கும் முன்னதாகவே, அதாவது 1967—இல் தமிழகத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தித் தத்தளிக்கச் செய்த சம்பவங்கள் இரண்டே இரண்டுதான்!

ஒன்று தமிழகத்தின் பொற்காலம் உதயம் ஆனதன் அறிகுறியாக அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இது ஜனநாயகத்திற்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்று நாடே உற்சாக வெள்ளத்தில் மிதந்தது.

அதுபோலவே நமது உள்ளங்களில் ஆயிரம் ஆயிரம் மகிழ்ச்சி நீருற்றுக்களைப் பீறிட்டெழச் செய்து நம்மைப் பெருமிதம் கொள்ளவைத்த இன்னொரு நிகழ்ச்சித்தான், இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு.

இது முதல் முதலாகத் தமிழகத்தில் உலகளாவிய தமிழ் மாநாடு என்பதும் தலைநகராகிய சென்னையிலேயே இது கொண்டாடப் பெற்றது என்பதும் இதற்குரிய தனிச்சிறப்புகளாகும்.



பிற்காலத்தில் இரண்டு முறை இதுபோன்ற மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. எனவே, அவற்றிற்கு இந்த மாநாடு வெறும் முன்னோடி என்று கொள்வதற்கில்லை. இது மகத்துவம் வாய்ந்தது. இத்தனை ஆரவாரமாய் நடைபெறும் என்று அதன் நிதர்சனம் விசுவரூபம் எடுத்தபோது நம் நெஞ்சில் எட்ட முடியாத உயரத்துக்கே போய்விட்டது. இன்பத் தேன் ஓடும் தமிழ் மாநாடு என்று இசைபாட வைத்தது. தமிழ் உணர்வைத் தூண்டா விளக்காய் ஏற்றி வைத்த அதன் கோலம் தெரிந்தது. மிகத் துல்லியமாகத் தெரிந்தது. எல்லோரது இதயங்களிலும் பதிந்துபோகும் அளவிற்கு!

பார்த்தவரை ஈர்த்துப் பரவசப்படுத்தும் நிகழ்ச்சிகள். எண்ணத்தைக் கொள்ளை கொள்ளும் காட்சிகள்! ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு முத்துச்சுடராய் ஒளிர்ந்தபோது இந்த சமுதாயம் தமிழோடு நெருங்கி வந்தது. இன்னும் சொல்லப் போனால் விழியுயர்த்தி அதன் வெளிச்சத்தைப் பார்த்ததும் மலைத்துப் போய் வசம் இழந்து நின்றது!

பொதுவாக மூன்று முறை இம்மாநாடு நடத்தப்பட்டதென்றால், முதலில் நடந்த மாநாட்டை விஞ்சும் வகையில் அடுத்த மாநாடு அமையும் சாத்தியக்கூறு உண்டு. அதற்கும் அடுத்த மாநாடு முந்தைய இரண்டு மாநாடுகளையும் விட சிறப்பும் செம்மையும் பெற்று விளங்கிடக் கூடும். இது பரிணாம வளர்ச்சிப் போல! ஆனால் என்ன காரணத்தினாலோ அப்படி அமையாமல் போனது. இதில் நிச்சயம் ஊமைக் காரணங்கள் ஒளிந்திருக்கின்றன. அதைவிட ஒரு தத்துவமும் இழையோடி நிற்கிறது. உலகின் புவியீர்ப்பு சக்தியின் இயக்கம் வேறு வேறு மையங்களுக்கு ஏற்ப வேறு வேறாய் மாறுபட்டு விடுகிறது! அதுபோலவே உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பும் மாட்சியும் அது நடந்தேறிய இடங்களுக்கும் காலங்களுக்கும் ஏற்ப மாறுபட்டு இருக்கிறது.

அதனால்தான் சென்னையில் இதன் போக்கில் இருந்த அதே பொலிவு அடுத்த இடத்தில் குன்றியிருக்கக் கூடும். மதுரையில் தெரிந்த அதன் பாங்கு தஞ்சையில், சரிந்திருக்கக் கூடும். எதனால் இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு மிகப்பெரிய வெற்றி கண்டது என்பதற்கான காரணம் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். இரும்பை உருக்கி வார்ப்பதற்கு உலைக்களம் மட்டும் போதாது. அதற்குமேல் அதைத் திருத்தி வடிவமைக்க திறம் வாய்ந்த கொல்லர்கள் தேவையல்லவா? அவர்கள்தான் அண்ணாவும், கலைஞரும்.

அவர்களைப் பற்றி சொல்ல நினைப்பது பச்சைக் கிளிக்கு வர்ணம் பூச முயல்வது போல என்றாலும் கலைஞர் பற்றிச் சிலவற்றை நினைவுகூர்வதில் தவறில்லை.

**கலைஞர்** என்றால் —

எத்தனையோ சாதனைகளைத் தமக்குள் குவித்து வைத்திருக்கும் பொன்னேடு! இளமையின் கனவுகளையும், துடிப்புகளையும் விரைந்து செயல்படுத்தித் தன்னை வைகறையிலேயே அடையாளம் காட்டிக் கொண்டவர். ஏதோ, கவிதைப் படைப்பிலும் புத்தக வெளியீட்டிலும் கிட்டும் ஊசிமுனை அறிமுகம் அல்ல — சற்று பிரமிப்பூட்டும் வல்லமை.

உந்துதல் வந்தால் என்றில்லை. உணர்வு பூர்வமாய் வார்த்தைகள் தெறித்து விழுவதில் விளைந்த முன்னேற்றம் அவர் 'கவிதையல்ல' என்றாலும் அது கவிதையாகிவிடும். அவர் நிகழ்வுகளைத் தொடுத்துத் தந்தால் — அது சிலிர்க்க வைக்கும் சிறுகதை ஆகிவிடும். வெள்ளித் திரையின் வீர வசனங்கள் பலரைத் துள்ளி நிமிர வைத்து விடும். இந்த எண்ணங்களின் பின்னணியும் காரணங்களும் தான் மாநாட்டு முழுப் பொறுப்பையும் அண்ணாவால் கலைஞரிடம் ஒப்படைக்க வைத்தன.

முதலில் கவிதைப்போட்டி அறிவிக்கப் பெற்றது. வந்து சேரும் கவிதைகளை ஆராய ஒரு கவிதைக் குழு ஏற்படுத்தப்பட்டது.

கருத்தரங்கில் சமர்பிக்க ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்பட்டன. அதற்கென்று புலவர் குழு கூடிற்று. இவை தொடர்பான வேலைகளை அகவேலைக் குழு கவனித்துக் கொண்டது.

அகவேலைக் குழுவுக்குரிய பணிகள் எவை எவை என்றும் புறவேலைக் குழுவுக்குரிய வேலைகள் என்ன என்ன என்றும் சிலம்பொலி செல்லப்பனார் பங்கிட்டுத் தந்தார்.

ஏனைய வேலைகளில் உருவச் சிலை அமைத்தல், ஊர்வலம் ஏற்பாடு செய்தல், மலர் வெளியிடுதல்

ஆகியவற்றைத் தலைமையகம் ஏற்றுக் கொண்டது.


எங்கும் ஒளிமயம், எதிலும் கைவண்ணம் என்று தீவுத் திடலைக் கோலாகலமாக்கிட நீல நாராயணன், சூளைபாலன் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சி தொடங்குவதற்குமுன் தமிழ்ச்சுடர் ஏந்தி திருச்சியில் இருந்து ஓடி வந்தே கொடுப்பதற்கு மாணவர்கள் ஒப்புதல் தந்தனர்.

தமிழ்ப்பணியில் ஊக்கம் காட்டியவர்கள், இந்த வாய்ப்பு தமிழுக்குச் சேவை செய்வதற்கென்றே தரப்பட்ட அங்கீகாரம் என்ற உணர்வோடு தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்கள் அலுவலக வேலையில் பம்பரமாய்ப் பணியாற்றினர்.

சென்னை நகரே விழாக்கோலம் பூணும் அளவுக்கு எல்லா வகையிலும் அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. நமது கற்பனைகள் அனைத்தையும் ஒன்று திரட்டி குறிப்பிட்ட ஒரே இடத்தில் மட்டும் என்றில்லாது சென்னை மாநகரெங்கும் சித்திரங்களாகி உருவெடுத்து மிளிறி வைத்தோம்.

ஆரவாரமும் குதூகலமும் நிறைந்த சாலைகளும், ஆங்கு விதம் விதமான



விளக்கொளிகளும், அவற்றின் விநோதமான நிழல்களும், காற்றில் மிதந்து வரும் மெல்லிசை ஒலியும், தோமறு கோட்டியும், தோரண வாயில்களும், அலங்கார வளைவுகளும், தீவுத்திடலின் கோலாகலங்களும்....

எல்லாம் ஒரே குரலில் "மாநாடு என்றால் இதுதான் மாநாடு" என்று நம்மை உரத்து சொல்ல வைத்தன.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல முதல்நாள் ஊர்வலம் அனைவரையும் ஒரு கணம் கண்களை நிறுத்திக் கட்டிப்போட்டது.

மௌண்ட்ரோடை அடைத்தது போல பத்தடி இடைவெளி விட்டு ஒரு படை வீதம் ஏராளமான படை அணிவகுத்து அசைந்து வந்த காட்சி இதுவரை இந்த தலைநகரம் கண்டிராத ஊர்வலம். தட்டிவிட்ட குதிரை தடங்கல் இன்றி தலைநிமிர்ந்து செல்லும் தோரணை, வெண்ணெய் நிறத்தில், கடல் நீலத்தில் என்று வண்ண வண்ணச் சீருடைகள்!

அலை அலையாய் கரங்களை நளினமாய் அசைப்பதில் கையாண்ட புதியபாணி, சங்கீத லயத்தின் பிரக்ஞையோடு பழகிய

பாதங்கள். ஒளிவெள்ளத்தில் ஊர்ந்து வந்த ஜாலம், இவை காண்போரைப் புல்லரிக்கச் செய்தன. அவர்கள் இப்படி நிர்ணயம் தவறாமல் நடைபயிலவும் அடிபெயர்க்கவும் அதை மேடை மீது அமர்ந்து பார்த்திருந்த குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேனும் நம் தமிழரசுத் தலைவர் அண்ணாவும் பிரமிப்புடன் பார்த்தார்கள்.

நடைபெறுகிற ஒவ்வொரு ஊர்வலமும் இப்படி நிரந்தரமாய் நெஞ்சில் பதிந்துவிடுமா, என்ன? அல்லது உலகமே வியந்து மெச்சவும் அந்த வியப்புகாலம் முழுவதும் நிலைத்து நிலவவும் அமைந்திடுமா?

இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் முத்திரை பெற்ற நிகழ்ச்சியே இந்த மெய்சிலிர்க்கும் ஊர்வலமும் **கலைஞரின்** வர்ணனையும்தான். தரத்திலாகாட்டும் — பரிமாணத்திலாகாட்டும், ஏன், மேற்கத்திய நடனம் போல பிரத்யோகத் துடிப்பு குலையாமல் அவர்கள் நடந்து வந்த புதிய நிலை கூட அதுதான் ஒயில் கூட்டிற்று என்பதைப் புலப்படுத்தும்.

இதற்கப்புறம்தான் மற்றைய நினைவுகள். மாலை நேரங்களில் வந்து குவிந்து கிடக்கும் கவிதைகளை இருபது முப்பது பேராசிரியர்களுடன் ஆய்வு நடத்தும் மாபெரும் தமிழ் அறிஞர் ம.கி. தசரதனார், மாநாட்டு மலருக்கான கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்கும் சிலம்பொலி செல்லப்பனார் அன்றாட நிகழ்ச்சிகளை விவாதித்துக் கொண்டிருக்கும் திரு. கி. வெங்கடசுப்ர மணியனார், முரா. பெருமாள் முதலியார், கோ. முத்துப் பிள்ளை முதலானோர். தீவுத்திடலில் பணிகளுக்கான கடிதங்களைத் தீட்டும் புறவேலைக்குழு இவர்களின் உழைப்பில் மாநாடு மனம் பரப்பிற்று. அழைப்பிதழ்களானாலும் அவசரக் கடிதங்களானாலும் அலுவலக ஊழியர்கள் நள்ளிரவில் கூட அதைக் கொண்டு சேர்ப்பித்தனர்.

ஊர்வலம் முடிவுற்றபோது, அதுவரை மூச்சுத் திணற நின்றிருந்த நிலைமாறி ஆறுதலாய் கைகளை வீசிப்பார்த்துக் கொண்டிருந்தபோது, "பிரமாதம்... ஆனால் ஆச்சரியம் பாருங்கள், இந்த நெரிசலில் ஆயிரம்விளக்கு பகுதி வரை அலைபாய்ந்த கூட்டத்தில் நல்லவேளை ஒருவர் கூட மிதிபடவில்லை" என்றார் ஒரு பத்திரிகை நிருபர்.

அன்று மட்டும் தொலைக்காட்சி இருந்திருந்தால் அந்த ஊர்வலத்தையும், கருத்தரங்கையும் ஊரே பார்த்து ரசித்திருக்கும். அன்றாடம், தீவுத்திடலில் நடைபெற்ற நாடகம், நடனம், நையாண்டி மேளம், ஒயிலாட்டம், கரகாட்டம்

> **ஒவ்வொரு தேசமும் சுய இலாபத்தைக் கருதித் தனியாக வாழ விரும்புவதைப் போன்று, ஒவ்வொரு சாதியும் சுய இலாபம் கருதித் தனியாக வாழவே விரும்புகின்றது.**
>
> **— அம்பேத்கர்**

என்று பல நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்திருக்க முடியும். நாட்டியப் பேரொளி பத்மினியின் நடனத்தையும் பார்த்திருக்கலாமே!

கடைசியாக ஒன்று! வெளிநாட்டில் இருந்து வந்த தமிழர்கள் மெத்தவும் நெகிழ்ந்தே போனார்கள். நம்மிடம் நேசத்தோடு அளவளாவி அன்பைப் பொழிந்தார்கள். தாங்கள் கற்பனை செய்திருந்த கோலத்துக்கும் மேலாக அவர்களுக்குத் தரப்பட்ட உபசாரம் அவர்களை மோவாயில் விரல் வைத்து ஆச்சரியம் காட்ட வைத்தது.

மொத்தத்தில் இந்த மாநாட்டுக்கு நிகரான ஒன்று எதுவும் இல்லை! இது முந்தை நறுந்தமிழைத் தமிழன் மூச்சென்று கொள்ளானோ என்னும் அளவுக்கு அனைவரையும் தமிழ்ப் பற்றுக் கொள்ளச் செய்யும் மாநாடு எவர் மீதும் எதன் மேலும் பிடிப்பு இல்லாமல் வாழ்ந்தவர்களுக்கும் தமிழ் மீது தனிமோகம் கொள்ளச் செய்ததே இதன் வெற்றிக்குச் சான்றாகும். ★

# இந்த மாதத்தில்...

**ஜனவரி 1**

**கி.மு. 45** ஜூலியஸ் சீஸர் செய்த காலண்டர் சீர்திருத்தத்தின் படி 365 நாட்கள் கொண்டது ஒரு ஆண்டு என்று நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்படி ஜூலியஸ் காலண்டரின் முதல் பிறந்தநாள். நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஆனால் அவரது மறைவிற்குப்பின் இம்முறையை கடைப் பிடிப்பதில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக ஒவ்வொரு பிப்ரவரிக்கும் 30 தேதிகள் இருந்தன.

**கி.பி. 1842** சென்னையில் புதிய கலங்கரைவிளக்கம் அமைக்கப்பட்டது.

**1942** வாஷிங்டனில் 26 நாடுகள் கூடி "ஐக்கிய நாடுகள்" என்ற அமைப்பை அறிவித்த நாள்.

**1948** ஜெனீவாவில் 1947ஆம் ஆண்டு 23 நாடுகள் கூடிப் பேசிக் கையெழுத்திட்ட உடன்படிக்கையின்படி அமைக்கப்பட்ட "பொது வாணிபக் காப்பு வரி ஒப்பந்தம்" (General Agreement on Trade and Tariff) இன்று முதல் நடைமுறைக்கு வந்தது. நாடுகளிடையே வர்த்தகம் செய்வதிலுள்ள இடர்ப்பாடுகளைக் குறைப்பது, குறிப்பிட்ட காப்புவரிச் சலுகைகள், இறக்குமதி, ஏற்றுமதியில் ஒதுக்கீடுகள், முறையற்ற வாணிபப் போட்டிகளைத் தவிர்ப்பது முதலானவை இதன் நோக்கமாகும்.

**ஜனவரி 2**

**1930** லாகூரில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டில் ஜனவரி 26ஆம் தேதியைக் குடியரசு தினமாகக் கொண்டாட வேண்டுமென்ற தீர்மானம் இன்று நிறைவேற்றப்பட்டது.

**ஜனவரி 3**

**1588** பஞ்சாபில் அமிர்தரசிலுள்ள பொற்கோயிலைப் பற்றி எல்லோரும் கேள்விப்பட்டிருக்கலாம். இதற்கு அடிக்கல் போடப்பட்டது இன்று தான். இக்கோயிலைக் கட்ட அடிக்கல் நாட்டியவர் மியான்மிர் எனும் முஸ்லீம் துறவி.

**1968** இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு சென்னையில் மிகக் கோலாகலமாக இன்று துவங்கியது. மாலையில் நடந்த அலங்கார ஊர்திகள் ஊர்வலத்தைக் குடியரசுத் தலைவர் ஜாகிர் ஹூசேன் துவக்கி வைத்தார்.

**ஜனவரி 4**

**1948** பர்மா குடியரசு மலர்ந்தது. பிரிட்டிஷ் காமன்வெல்த்துடன் எவ்விதத் தொடர்புமில்லாத தனிக் குடியரசாக அறிவிக்கப்பட்டது. ஸாவோ ஷியூ தாயிக் என்பவர் ஜனாதிபதியாகத் தொடர்ந்து பதவியிலிருந்தார். தாகின் நூ பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றார். தொழில்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

**ஜனவரி 5**

**1925** அமெரிக்காவில் வையாமிங்கைச் சேர்ந்த திருமதி. நெல்லி டெய்லோ ராஸ் முதல் பெண் கவர்னராகப் பதவி ஏற்றார்.

**ஜனவரி 6**

**1939** பெர்லின் கெமிக்கல் இன்ஸ்ட்டிடியூட்டைச் சேர்ந்த பேராசிரியர் நட்டோஹான் என்பவர் அணுவைப் பிளக்க முடியுமென்று அறிவித்தார்.

**ஜனவரி 7**

**1927** கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் விமானப் போக்குவரத்து இம்பீரியல் ஏர்வேஸ் கம்பெனியால் லண்டனிலிருந்து கெய்ரோவிற்குத் துவங்கப்பட்டது.

**ஜனவரி 8**

**1889** **தகவல் தொகுப்பு நிகழ்ச்சி நிரலுக்காக வடிவமைக்கப்பட்ட முதல் கம்ப்யூட்டர் காப்புரிமம் செய்யப்பட்டது. நியூயார்க்கைச் சேர்ந்த டாக்டர் ஹெர்மன் ஹொல்லரிக் என்பவர் இதை வடிவமைத்தார். மக்கள் தொகைக் கணக்கீட்டின் முடிவுகளை அறிவிக்க மின் சக்தியினால் இயக்கப்படும் "மாதிரி கம்ப்யூட்டரை" அவர் தயாரித்தார். இந்தக் கம்ப்யூட்டர், அமெரிக்க மக்கள் தொகைக் கணக்கீட்டுக் குழுவிற்காகத் தயாரிக்கப்பட்டது.**

**ஜனவரி 9**

**1811** ஸ்காட்லாந்தில் பெண்கள் கோல்ஃப் விளையாட்டு முதன்முதல் ஆரம்பிக்கப்பட்டது.

**1929** டாக்டர் அலெக்ஸாண்டர் ஃபிளெமிங் முதன்முதல் தனது உதவியாளரான ஸ்டூவர்ட் கிராட்டாக் என்பவருக்கு பென்சிலின் மூலம் சிகிச்சை அளித்தார்.

**ஜனவரி 10**

**1863** இலண்டனில் பாதாள ரயில் பாதை ஃபாரிஸ்டன் தெருவிற்கும் பாட்டிங்டனுக்குமிடையே திறந்து வைக்கப்பட்டது.

**ஜனவரி 11**

**1955** நமது நாட்டின் முதல் நியூஸ் பிரிண்ட் ஆலையான "நேபா" உற்பத்தியைத் துவக்கியது.

**ஜனவரி 12**

**1979** கான்பூரில் தொலைக்காட்சி நிலையம் துவங்கப்பட்டது.

**ஜனவரி 13**

**1921** மழை பெய்யும் போது காரின் முகப்புக் கண்ணாடியில் வழியும் மழை நீரைத் துடைத்துவிடும் விண்ட்ஸ்கிரீன் வைப்பர் முதன் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

**ஜனவரி 14**

**1953** யூகோஸ்லேவியாவின் முதல் ஜனாதிபதியாக மார்ஷல் டிட்டோ தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1986** முதல் இந்திய தலைமைத் தளபதியான கே.எம். கரியப்பாவிற்கு பீல்ட் மார்ஷல் பதவி அளிக்கப்பட்டது.

**ஜனவரி 15**

**1949** ஜெனரல் கே.எம். கரியப்பா இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதியாகப் பதவி ஏற்றார். இப்பதவிக்கு வந்த முதல் இந்தியர் இவரே. எனவே இந்த நாள் படையினர் தினமாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

**ஜனவரி 16**

**1909** தென் துருவமான அண்டார்ட்டிகாவின் காந்தப் பகுதிக்கு 88°23' அருகில் வரை சர். எர்னஸ்ட் ஹென்றி ஷாக்கிள்ட்டன் சென்றடைந்தது இந்த நாளில் தான்.

**ஜனவரி 17**

**1981** மிஸோராம் தனி மாநிலம் உதயமானது.

**ஜனவரி 18**

**1949** கம்யூனிஸ்ட் நாடுகளிடையே பொருளாதார வாணிப வளர்ச்சிக்காக மாஸ்கோவில் 'காம்கான்' (Comcon) எனும் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

**ஜனவரி 19**

**1956** நமது நாட்டிலுள்ள இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் தேசிய உடைமையாக்கப்பட்டது.

**ஜனவரி 20**

**1972** அருணாசல பிரதேசம் தனி மாநிலமாக உருவானது.

**ஜனவரி 21**

**1954** அணுசக்தியினால் இயங்கும் 'நாட்டிலஸ்' எனும் அணு நீர் மூழ்கிக் கப்பலை அமெரிக்கா வெள்ளோட்டம் விட்டது.

**ஜனவரி 22**

**1960** பஸிபிக் மாகடலில் மிக ஆழமான பகுதியான 'மாரியானா அகழி'யின் தரைப் பகுதியை 'டிரைஸ்ட்டி' எனும் முக்குளிப்புக் கோளத்தில் ஜாக்யூஸ் பிக்கார்டும் டோனால்ட் வால்ஷூம் சென்றடைந்தனர். இப்பகுதி 35,800 அடி ஆழமுடையது. அதாவது 10.7 கி.மீ. ஆழம். அங்கு இவர்கள் 20 நிமிடங்கள் இருந்தனர்.

**ஜனவரி 23**

**1965** துர்க்காபூர் இரும்பு எஃகு தொழிற்சாலை துவங்கப்பட்டது.

**ஜனவரி 24**

**1950** சுதந்திர இந்தியாவின் முதல் ஜனாதிபதியாக பாபு ராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவின் தேசியகீதமாக 'ஜனகணமன' அறிவிக்கப்பட்டது.

**ஜனவரி 25**

**1983** கலிபோர்னியாவில் வாண்டன்பர்க்கிலிருந்து "இராஸ்"(IRAS) எனும் அகச்சிவப்பு வானியல் செயற்கைக் கோள் ஏவப்பட்டது. புவியை 300 நாள்களாகச் சுற்றி வந்த இது ஏராளமான புதிய தகவல்களைத் திரட்டிக் கொடுத்துள்ளது.

பூமிதான இயக்கத்தலைவர் வினோபாவிற்கு "பாரத் ரத்னா" விருது வழங்கப்பட்டது.

**ஜனவரி 26**

**1862** இந்தியாவில் தபால் தந்தி முறை அறிமுகம் செய்யப்பட்டது.

**1950** இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

இந்திய ஜனநாயகக் குடியரசு உதயமானது.

பாபு ராஜேந்திர பிரசாத் இந்தியக் குடியரசின் தலைவராகப் பதவி ஏற்றார்.

இந்திய அரசின் சின்னமாக சிங்கங்கள் கொண்ட அசோகச் சின்னம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**ஜனவரி 27**

**1921** கல்கத்தா பாங்க், பம்பாய் பாங்க் முதலான பாங்குகள் ஒன்றிணைக்கப்பட்டு 'இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா' உருவானது.

**ஜனவரி 28**

**1988** நம்நாட்டில் தொலைபேசி வசதி ஏற்பட்டு 100 ஆண்டுகள் நிறைவுற்றதை நினைவூட்டும் வகையில் 2 ரூபாய் மதிப்புடைய தபால் தலை வெளியிடப்பட்டது.

**ஜனவரி 29**

**1780** ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கே என்பவரால் 'தி பெங்கால் கெஸட்' எனும் வார இதழ் கல்கத்தாவில் துவங்கப்பட்டது. ஆங்கிலத்தில் வெளிவந்த இது இந்தியாவின் முதல் வார இதழாகும்.

**ஜனவரி 30**

**1948** தேசப்பிதா காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட நாள். இந்த நாள் தியாகிகள் தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது. சர்வோதய தினமாகவும் கடைபிடிக்கப்படுகிறது.

**ஜனவரி 31**

**1958** அமெரிக்காவின் முதல் செயற்கைக்கோள் வெற்றிகரமாக ஏவப்பட்டது. புவியைச் சுற்றி 'வான் ஆலன் பெல்ட்' கதிர்வீசல் இருப்பதை இந்தக் கோள் கண்டுபிடித்தது.

ஆதாரம் : ***"இந்த நாளில் அன்று" நூலிலிருந்து...***

# மனிதம் பேணுக

கவிஞர் தா. பகவதி

உலகம் வியத்தகு நாடக மேடை
உலவும் மாந்தரே உருவக பாத்திரம்

நல்லார் சிலபேர் அல்லர் சிலபேர்
நல்லவை அல்லவை அறியாச் சிலபேர்

நாளும் எங்கும் எழும் போராட்டம்
நாடும் வீடும் நடுங்குவ தறிக

நான் எனும் எண்ணமே காரணம் என்க
நாம் எனக் கொள்க நலமது விழைக

நல்ல மனத்துள் விளைவது மனிதம்
நயத்தகு வாழ்க்கை நம்பும் தத்துவம்

பிறர்மனம் நோகாப் பெற்றினைப் பெறுவது
பேதம் அற்றது பேராற்றல் மிக்கது

நல்லவை செய்ய இயலா ததும்
அல்லவை செய்யா அறவழி காண்பது

நம்மிடை உள்ள நுண்பொருள் அறிக
நோக்கம் நலமெனில் அனைத்தும் நலமே

அன்பும் அறிவும் ஆள்வினை ஊக்கமும்
அருளும் அடக்கமும் அரிய ஒழுக்கமும்

பொறுமையும் பண்பும் போதிய நாணமும்
பொலிவுடன் வாழப் போதுமென் றுணர்க

இதுவே மனிதம் இதுவே புனிதம்
இதுவே உலகின் இன்றைய தேவை

எனவே நீவிர் மனிதம் பேணுக
இனிய வாழ்க்கையின் எல்லைகள் தொடுக



# வள்ளுவரின் அறிவியல்



— ஆரூர்தாஸ் —

“பூமி தட்டை வடிவமானது! ஒரு முனையிலிருந்து மறுமுனை தட்டையான (Flatness) தோற்றங்கொண்டது!”

பதினைந்தாவது நூற்றாண்டுவரையில், உலகில் நிலவியிருந்த இந்தக் கருத்தைப் பொய்யாக்கி, “பூமி உருண்டை வடிவமானது! அது தனக்குத்தானே சுழன்றவண்ணம் சூரியனையும் சுற்றி வருகிறது. ஆகவே உலகில் ஒருவன் புறப்பட்டுச் சென்ற இடத்திற்கே மீண்டும் வந்து சேர்வான்!” என்ற உண்மையை முதன்முதலில் சொன்னவர், கி.பி. 1473இல் போலந்து நாட்டில் பிறந்த காப்பர் நிக்கஸ் (Coper Nicus) என்பவர்!

இந்தப் புதிய கண்டுபிடிப்பை அன்றைக்கு எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

காப்பர் நிக்கஸின் இந்தக் கருத்து உண்மைதானா? – சரிதானா? என்று உலகைச் சுற்றிவந்து கண்டறிய மெகல்லன் (Magellan) விரும்பி, அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

இவர் போர்ச்சுகல் நாட்டில் பிறந்து, ஸ்பெயினில் குடியேறியவர்!

இவரது முயற்சிக்கு உதவிபுரிய யாருமே முன் வராத நிலையில், ஸ்பானிஷ் மன்னரான ஐந்தாம் சார்லஸ் மெகல்லனை அழைத்து, உலகம் சுற்றி வந்து, பூமி உருண்டை வடிவங்கொண்டது என்ற காப்பர் நிக்கஸின் கூற்றை மெய்ப்பித்துக் காட்டும்படி கூறி, அதற்கு வசதியாக, உலகப் பெரும் பயணத்திற்குத் தேவையான சாதனங்கள் அமைந்த ஐந்து கப்பல்களை அளித்து அவரை ஆயத்தப்படுத்தினார்!

அவற்றில் ஒரு கப்பலின் பெயர் விக்டோரியா!

கி.பி. 1519ஆம் ஆண்டில் ஒரு நாள்! அது போர்ச்சுகல் துறைமுகத்தின் திருநாள்!

புதிய நிலப்பரப்புக்களையும், பூமி உருண்டை வடிவமானது என்பதையும் கண்டறியும் பொருட்டு, மெகல்லன் ஸ்பெயினின் மேற்குத் திசையிலிருந்து கீழ்த்திசை நோக்கிக் கலங்களைச் செலுத்தித் தனது பெரும் பயணத்தைத் தொடங்கினார்!

பயணத்தின் பாதி வழியில் இருக்கும்பொழுது, தன் இதயத்தில் எரிந்து கொண்டிருந்த சுடர் விளக்கிற்குத் தூண்டுகோலாயிருந்து துணை புரிந்த ஐந்தாம் சார்லஸ் மன்னர் இறந்து, அவரது புதல்வர் ‘இரண்டாம் பிலிப்’ பட்டம் சூட்டப் பெற்றதன் நினைவாக, தான் புதிதாகக் கண்டுபிடித்த ஒரு தீவிற்கு ‘பிலிப்பைன்ஸ்’ என்றும், அப்பெருங்கடல் பகுதிக்கு ‘பஸிபிக்’ என்றும் பெயர்ச் சூட்டினார்.

‘பஸிபிக்’ என்ற இலத்தின் மொழிச் சொல்லுக்கு சமாதானம் (Peace) என்று பொருள்!

அதுவே பிற்காலத்தில் ‘பஸிபிக் பெருங்கடல்’ என்று பெயர் பெற்று வழங்கலாயிற்று!

உலகின் முக்கால் பங்குப் பகுதியைக் கடல் வழியாகச் சுற்றி, ‘பூமி உருண்டை வடிவமானது தான்’ என்ற காப்பர் நிக்கஸின் கூற்று (Copa Theory) உண்மைதான் என்று கண்டறிந்த நிலையில், கடைசியாக, ஜாவா, சுமித்ரா, ஜாகர்தா, போர்னியோ ஆகியவற்றை உள்ளடக்கிய ‘இந்தோனேஷியா’ பக்கம் ஒரு புதிய தீவை வந்தடைந்தபொழுது, அங்கிருந்த ஆதிவாசிகள், தங்களுக்கு ஆபத்து விளைவிக்க வந்த யாரோ ஒரு அந்நியர் என்று கருதி, கடல் வீரரும், மேதினி உருண்டைதான் என்ற உண்மையை நிரூபித்த மேதையுமான மெகல்லனைக் கொன்றுவிட்டனர்! சமுத்திரங்களை ஆண்ட சக்ரவர்த்தி சாய்ந்துச் சவமானார்!

மூன்று ஆண்டுகட்குப் பின்னர், 1519இல் புறப்பட்டுச் சென்ற ஐந்து கப்பல்களில் நான்கு புயலுக்கும் இயற்கைச் சீற்றத்திற்கும் பலியாகி ஆழியில் அமிழ்ந்ததுபோக, விக்டோரியா என்ற ஒரே ஒரு கப்பல் மட்டுமே கி.பி. 1522இல் கீழ்த்திசை முகத்திலிருந்து ஸ்பெயினை வந்தடைந்து, ‘பூமி உருண்டை வடிவம் கொண்டு சுழல்கிறது’ என்ற உண்மையை நாட்டோர்க்கு நிரூபித்துவிட்டு நங்கூரம் பாய்ச்சியது! விரிந்து பரந்த உலகமே வியந்து பாராட்டியது!

இந்த வரலாற்று நிகழ்விற்கு ஏறத்தாழ ஐநூறு ஆண்டுகட்கு முன்னரே, தமிழகத்தில் வாழ்ந்த திருவள்ளுவர், நெய்தல் வேலை செய்த நேரம் போக மீதி வேளைகளில் ஓலையில் உலகப் பொதுமறையை வரைந்து, 'உலகம் உருண்டை வடிவில் சுழல்கிறது' என்று சொல்லி விட்டார்!

இவ்வரிய அறிவியல் கருத்து 1330 குறட்பாக்களில் ஒன்றாக இடம் பெற்றிருக்கின்றது! அதுவும் உழவுத் தொழிலோடு தொடர்புகொண்டு!

104வது அதிகாரத்தில், 'உழவு' தலைப்பில் 1031வது குறள்:

***"சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்***
***உழந்தும் உழவே தலை".***

இதில் 'சுழன்றும்' என்ற சொல்லுக்கு சுற்றி அலைந்தாலும் எனப்பொருள் கொண்டு, "உலகத்தினர் வேறு பல் தொழில்களைச் செய்து அலைந்து திரிந்தாலும், உழவுத் தொழிலின் பின்னால்தான் நிற்கின்றனர். அதனால், என்ன துன்பமுற்றாலும் உழவுத் தொழிலே தலையானது – தலை சிறந்தது" என்றுதான் பலரும் தெளிவுரை வழங்கியிருக்கின்றனர்.

பொருளுக்கேற்ப, கருத்திற்கேற்ப, இடத்திற்கேற்ப குறள் வெண்பாவின் ஏழு சீர்களும் தனியே பிரிக்கப்பட்டு, உரை செய்யக் கூடியது என்பதை வைத்து எண்ணிப்பார்க்குமிடத்து, இவ்வாறும் சீர் பிரிக்கப்படலாம்:–

1. சுழன்றும் உலகம் ஏர்ப் பின்னது

2. உலகம் சுழன்றும் ஏர்ப் பின்னது



சுழலும் உலகம் (பூமி) உழவுத் தொழிலின் பின்னே உள்ளது. (அல்லது) என்னதான் உலகம் சுழன்று கொண்டிருந்தாலும், இறுதியில் ஏர்த்தொழிலான உழவின் பின்னால்தான் நிலைபெற்றிருக்கின்றது! இவ்வாறும் பொருள் கொள்ளலாம் அல்லவா! 'ஏனைய தமிழ் நூல்களைப் போன்று, திருக்குறள் வெண்பாவிற்கு இது ஒன்றுதான் தெளிவுரை, விளக்கவுரை; இதனைத் தவிர்த்துப் பிறிதொன்றும் இல்லை' என எவரும் உறுதிபடக் கூற இயலாவண்ணம் அமையப் பெற்றிருக்கும் பெருமை திருக்குறள் ஒன்றினையேச் சாரும்!

அவரவர் கொண்டுள்ள கொள்கைக்கேற்ப, கருத்திற்கேற்ப, தமிழறிவிற்கேற்ப பொருள் வழங்கவல்லது குறள் ஒன்றே! ✪

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906



தூய
பட்டு

தூய
சரிகை





ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ—ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண் : M. 8676
Licence No. TN/MS(C)/PP-23





# கலைஞர் கண்ட
# காவிரி உடன்பாடு

# கலைஞர் கண்ட
# காவிரி உடன்பாடு!

வெளியீடு :
இயக்குநர், செய்தி—மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

சிறப்பு வெளியீடு எண் : 15

'தமிழரசு' இலவச வெளியீடு

ஜனவரி 1999

*வெளியிடுபவர் :*

இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்
சென்னை – 600 002,

வரலாற்றுச் சிறப்புமிக்க

காவிரி உடன்பாடு குறித்து

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்

ஆற்றிய விளக்க உரைகள் மற்றும்

செய்தியாளர்களின் வினாக்களுக்கு

அளித்த விளக்கங்களையும்,

காவிரி உடன்பாடு குறித்து

தலைவர்கள் மற்றும் பத்திரிகைகள்

தெரிவித்த கருத்துக்களையும் தொகுத்து

**"கலைஞர் கண்ட காவிரி உடன்பாடு"**

என்ற தலைப்பில் இச்சிறப்பு வெளியீடு

வெளியிடப்படுகிறது.

இயக்குநர்,
செய்தி—மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.



**கா**விரிப்பிரச்சினை தொடர்பாக இன்று நடைபெற்று இருப்பது என்ன என்பதை இங்கே கூடி இருக்கின்ற பொதுமக்கள் மாத்திரம் அல்ல; சட்டம் பயின்றவர்கள் காவிரிப் பிரச்சினையை ஏறத்தாழ முப்பது ஆண்டுக் காலமாக கவனித்து வருகின்ற மூத்தவர்கள் எல்லாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தப் பிரச்சினை எத்தனை ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகிறதென்றால், 1968ஆம் ஆண்டு இந்தப் பிரச்சினை ஆரம்பமானது. ஏறத்தாழ முப்பது ஆண்டுகள். அண்ணா 1967ல் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் நமக்குச் செய்திகள் வந்தன. கர்நாடகத்திலே ஹேமாவதி அணை கட்டப்படுகிறது, ஹேரங்கி அணை கட்டப்பட்டிருக்கிறது, கபினி அணை கட்டப்பட்டிருக்கிறது என்று செய்திகள் வந்தபொழுது, 1924ஆம் ஆண்டு காவிரி நீர் பங்கீட்டிற்காக அன்றைய மைசூர் அரசுக்கும் சென்னை ராஜ்யத்திற்கும் வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்பட்ட ஒப்பந்தம் இருக்கிறதே, அதை எடுத்து படித்துப் பார்த்த போது - தமிழகத்தின் ஒப்புதல் பெறாமல் எந்தவொரு அணையையும் கர்நாடகம் கட்டக்கூடாது என்றிருக்கின்றது. ஆனால் அதை மீறி இருபது ஆண்டுக் காலம் மத்தியிலும் மாநிலத்திலும் இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஹேமாவதி, கபினி, ஹேரங்கி போன்ற அணைகள் எல்லாம் அங்கே கட்டப்பட்டன.

அண்ணா அவர்கள் இதைப்பற்றி சிந்தித்து அமைச்சரவைக் கூட்டத்திலே இதைப்பற்றிப் பேசி - பொறியாளர்களை எல்லாம் அழைத்து உரையாடி - அன்றைக்கு நான் பொதுப்பணித்துறை அமைச்சர் - இன்று தம்பி துரைமுருகன் இருப்பதைப் போல! அப்போது என்னை அழைத்து, மைசூர் அரசோடு பேசுமாறு அண்ணா பணித்தார். அந்தப் பேச்சு வார்த்தை டெல்லியில் நடைபெற்றது. அப்பொழுது கர்நாடக முதலமைச்சர் வீரேந்திர பட்டீல். பொதுப்பணித்துறையும் அவரிடம் இருந்தது. எனவே அதுபற்றிப் பேச முதல்வரே வந்தார். அப்போது கே.எல்.ராவ் மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர். அவர் முன்னிலையில் நானும், கர்நாடகத்தின் முதல்வர் வீரேந்திர பட்டீலும் பேசத் தொடங்கினோம். ஒரு முறை அல்ல, இருமுறை அல்ல; அதற்குப் பிறகு பல பிரதமர்கள் மாறினார்கள். கர்நாடகத்திலும் பல முதல்வர்கள் மாறினார்கள். 26 முறை பேச்சு வார்த்தை நடைபெற்றது. இடையிலே சில பேச்சு வார்த்தைகள் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோதும் நடைபெற்று இருக்கின்றன. அதற்குப் பிறகு நாம் ஐந்து முறை உச்ச நீதிமன்றத்தினுடைய கருத்துக்கு ஏற்ப இன்றைய கர்நாடக முதல்வர் படேல் அவர்களோடு டெல்லியிலும், சென்னையிலும், கர்நாடகத்திலும் பேச்சுவார்த்தை நடத்தினோம். ஏறத்தாழ இந்த 30 ஆண்டுக்காலத்தில் 31 முறை பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றோம். எந்த முடிவும் வரவில்லை.

17.2.1970 அன்று நடுவர் மன்றம் அமைத்திட வேண்டுமென தமிழ்நாடு அரசு சார்பில் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. 1971 ஆம் ஆண்டு நான் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது, பேச்சுவார்த்தை களால் பயன் ஏற்படாது என்று கருதி, நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை அரசாங்கத்தின் சார்பில் எடுத்துச் சொன்னேன். 8.7.1971 அன்று நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதுமாத்திரம் அல்ல; 1971-ல் ஒரு வழக்கும் ஹேமாவதி அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டது. அந்த வழக்கு தொடரப்பட்டபோது அதை முரசொலிமாறன், தம்பி. கோ.சி.மணி, அன்பிற்குரிய நண்பர் மூப்பனார் மற்றும் தஞ்சை மாவட்டத்திலுள்ள பல்வேறு விவசாய சங்கங்கள் இவர்கள் எல்லாம், அன்றைக்கு அந்த வழக்கை முன்னின்று நடத்தினார்கள். பேச்சுவார்த்தை மூலம் பலன் காணலாம் என்று அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் என்னை அழைத்துச் சொன்னார்கள். சரி என்று நான் ஒப்புக் கொண்டேன். அப்போது அம்மையார் சொன்னார்கள், "நான் பேசுவதென்றால் இடையில் நீங்கள் ஒரு வழக்குப் போட்டிருக்கிறீர்களே! இந்த வழக்கு இருக்கும்போது பேச முன்வருவார்களா? எனவே என்னை நம்பி இந்த வழக்கைத் திரும்பப் பெறுங்கள்" என்று இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் கேட்டார்கள். அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து தலைமைச் செயலகத்தில் சென்னை கோட்டையிலே பேசி அந்த வழக்கைத் தமிழக அரசு திரும்பப் பெறுவது என்று தீர்மானித்து - திரும்பப்

பெறுகின்ற நேரத்திலே கூட மீண்டும் வழக்குப்போட வழி வைத்துக்கொண்டு அந்த வழக்கை தமிழக அரசு திரும்பப் பெற்றது.

தஞ்சை விவசாயிகள் சார்பாக போடப்பட்ட, முரசொலி மாறன் முன்னின்று போட்ட, அந்த வழக்கும் இந்திராகாந்தி அவர்களுடைய வார்த்தையை நம்பி திரும்பப் பெறப்பட்டது. நாங்கள் இந்திரா காந்தியின் வார்த்தையை நம்பினோம். இந்திராகாந்தி, கர்நாடக அரசு இணங்கி வரும் என்று அவர்களுடைய வார்த்தையை நம்பினார்கள். இரண்டு பேருக்கும் ஏமாற்றம் ஏற்பட்டது.

வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது தி.மு.கழக ஆட்சியிலே சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். இனி எங்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. எனவே ஒரு நடுவர்மன்றத்தை நியமித்து அதன் தீர்ப்பை வழங்கச் செய்யுங்கள் என்று பிரதமர் வி.பி.சிங்கைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானம் செயல்படுவதற்கு முன்பு தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய சங்கத்தின் சார்பில் ரெங்கநாதன் அவர்கள் ஒரு வழக்கைப் பதிவு செய்தார் – உச்சநீதிமன்றத்தில் அந்த வழக்கில் தமிழக

அரசும் தன்னை இணைத்துக் கொண்டிருந்தது. அந்த வழக்கு நடைபெற்ற நேரத்தில் தி.மு.க. ஆட்சி தமிழகத்தில் நடைபெற்ற காரணத்தால் வி.பி.சிங் அவர்களோடு தொடர்பு கொண்டு நடுவர் மன்றம் அமைக்க நீங்கள் ஒத்துழைப்பு தாருங்கள் என்று கேட்டோம். அவர் அதுபற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் போது உச்சநீதிமன்றத்திலே அந்த வழக்கு விரைவாக, விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. மத்திய அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் அவர்களுடைய கருத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். அதுபற்றி வி.பி.சிங் அவர்கள், தொலைபேசி மூலமாக தமிழக முதல்வராக இருந்த என்னை, 1990ஆம் ஆண்டில் தொடர்பு கொண்டு மத்திய அரசு உச்ச நீதிமன்றத்திலே என்ன சொல்லலாம் என்று கேட்டார். நான் சொன்னேன் - இனிமேல் பேச்சுவார்த்தைக்கு தமிழ்நாடு தயாராக இல்லை. இதைத் தெளிவாக்கி விடுங்கள். அப்போதுதான் எங்களுக்கு நடுவர்மன்றம் கிடைக்கும் என்று சொன்னேன்.

நல்லவேளையாக அப்போது சட்டப்பேரவை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இனி பேச்சுவார்த்தை பயன்படாது, நடுவர் மன்றம் தேவை, மத்திய அரசை வலியுறுத்துகிறோம் என்று தீர்மானத்தைப் பேரவையில் 24.4.1990 அன்று நிறைவேற்றி உடனடியாகப் பிரதமருக்கு அனுப்பி வைத்தோம். அவர் மத்திய அரசின் வழக்கறிஞர் மூலமாக, உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார். தெரிவித்தவுடன் உச்சநீதிமன்றம், இனி பேச்சுவார்த்தை இல்லையென்றால், நடுவர் மன்றம் அமைக்க உத்தரவிடுகிறோம் என்று தெரிவித்தது.

கிராமப்புறத்திலே உள்ள உங்களில் சிலருக்கு நடுவர் மன்றம் என்றால் என்ன என்று தெரியாமல் இருக்கலாம்.

அது சட்டரீதியான பஞ்சாயத்து. அப்படிப்பட்ட பஞ்சாயத்து மன்றம், நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று கேட்டு, வி.பி.சிங் அமைத்துக் கொடுத்தார். நடுவர் மன்றமே வராது, தர முடியாது, தர விடமாட்டோம், தடுப்போம் என்று சொன்ன நிலையை மாற்றி வி.பி.சிங் அவர்களோடு வாதாடி, நடுவர் மன்றத்தைக் கொண்டு வந்த கருணாநிதி தமிழர்களைக் காட்டிக் கொடுப்பவனா? என்பதற்கு நீங்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

நடுவர் மன்றத்திடம் நாங்கள் **28.7.1990** அன்று ஒரு விண்ணப்பம் செய்தோம். ஒரு இடைக்காலத் தீர்ப்பு அளியுங்கள். முழுமையாக விசாரித்து முடிவு தெரிவிக்க ஏழெட்டு ஆண்டுகளாகும். இடைக்காலமாக காவிரியில் தமிழகத்திற்கு எவ்வளவு தண்ணீர் விடலாம் என்று ஒரு தீர்ப்பு அளியுங்கள் என்று கேட்டோம். நடுவர் மன்றம் **5.1.1991** அன்று சொன்னது; "இடைக்காலத் தீர்ப்புத் தர எங்களுக்கு அதிகாரம் இல்லை" என்று சொன்னது. அதிகாரம் உண்டா? இல்லையா? என்று **10.1.1991** அன்று உச்சநீதிமன்றத்திலே ஒரு வழக்குப் போட்டோம் தி.மு.க. ஆட்சியில். "அதிகாரம் உண்டு" என்று **26.4.1991** அன்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

நடுவர் மன்றம் விசாரணையை நடத்தி ஒரு இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணைதான் **25.6.1991**-ல் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால ஆணை. அந்த நடுவர்மன்ற இடைக்கால ஆணை என்னவென்றால் - **"ஆண்டு ஒன்றுக்கு 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் தன்னுடைய நீர்த் தேக்கத்திலிருந்து விட்டு பின்கண்ட விவரப்படி ஜூன் மாதம் முதல் மே மாதம் வரையிலான 12 மாதங்களில் மேட்டூர் நீர்த்தேக்கத்தை அடைய வேண்டும்."**

மாதவாரியாக எவ்வளவு நீர் தர வேண்டும் தெரியுமா?

ஜூன் மாதத்தில் 10.16 டி.எம்.சியும்

ஜூலையில் 42.76 டி.எம்.சி.யும்

ஆகஸ்டில் 54.72 டி.எம்.சி.யும்

செப்டம்பரில் 29.36 டி.எம்.சி.யும்

அக்டோபரில் 30.17 டி.எம்.சி.யும்

நவம்பரில் 16.05 டி.எம்.சி.யும்

டிசம்பரில் 10.37 டி.எம்.சி.யும்

ஜனவரியில் 2.51 டி.எம்.சி.யும்

பிப்ரவரியில் 2.17 டி.எம்.சி.யும்

மார்ச்சில் 2.40 டி.எம்.சி.யும்

ஏப்ரலில் 2.32 டி.எம்.சி.யும்

மே மாதத்தில் 2.01 டி.எம்.சி. தண்ணீருமாக மொத்தம் 205 டி.எம்.சி. தண்ணீரை மாதா மாதம் பிரித்து கர்நாடகம் தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்பதுதான் நடுவர்மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு.

மாதாந்திர அளவான நீர், வாராந்திர அடிப்படையில் சமமாகப் பிரித்து வழங்கப்பட வேண்டும். ஏதாவது ஒரு வாரத்தில் தண்ணீரின் அளவு குறையுமானால் அதை அடுத்த வாரத்தில் ஈடுகட்ட வேண்டும்.

மேலே கூறிய நீரின் அளவில், பாண்டிச்சேரிக்கு ஆறு டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாடு வழங்க வேண்டும்.

கர்நாடகா அதனுடைய கூற்றின்படியே, மே மாதம் 1991-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பாசனப் பரப்பான 11 இலட்சத்து 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் அதனை விரிவாக்கம் செய்யக்கூடாது. அதை விரிவாக்கி விட்டால், தண்ணீர் அங்கே அதிகமாகப் பயன்பட்டு விடும்; தமிழகத்திற்குக் கிடைக்காது என்கிற அந்த எச்சரிக்கை உணர்வோடு நடுவர் மன்ற இடைக்கால ஆணையில் இந்தப் பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது.

நான் துரோகம் செய்துவிட்டதாகச் சொல்கின்ற வர்களின் வரலாற்றைக் கொஞ்சம் பின்னோக்கிப் பார்ப்போம். சினிமாப் படங்களில் 'ஃப்ளாஷ் பேக்' (Flash Back) என்பார்களே, அதுபோல கொஞ்சம் பின்னோக்கிப் பார்ப்போம்.

1991-ல் இந்த இடைக்காலத் தீர்ப்பு வந்த பிறகு, "இதை நிறைவேற்ற முடியாது - நடைமுறைப்படுத்த முடியாது - இதற்கு இணங்க இயலாது" என்று கர்நாடக மாநிலம் கண்டிப்பாகச் சொன்ன பிறகு, 1991 ஜூன் மாதம் 8-ஆம் தேதி தமிழக சட்டமன்றத்தில் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் பின்வரும் தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றினார். அந்தத் தீர்மானத்தைப் படிக்கிறேன்.

"ஆண்டு ஒன்றுக்கு மேட்டூர் அணையில் 205 டி.எம்.சி. நீர் கிடைக்கும் வகையில், கர்நாடக நீர்த்தேக்கங்களிலிருந்து வாராந்திர அடிப்படையில் நீர் விடப்பட வேண்டும் என்பதோடு, மேலும் சில உத்தரவுகளையும் பிறப்பித்துள்ள காவிரி நதி நீர்த் தாவா நடுவர் மன்றத்தின் 25-6-91 ஆம் நாளிட்ட இடைக்கால ஆணையை நிராகரிக்கும்படி கர்நாடக அரசை

வற்புறுத்தி, கர்நாடக மாநிலத்தின் இரு சட்டமன்றங்களும் தீர்மானம் நிறைவேற்றியதாக பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள் இந்தப் பேரவைக்கு ஆழ்ந்த கவலை தருவதாக உள்ளது.

வழக்கமாக ஜூன் 12-ஆம் தேதி பாசனத்திற்குத் திறக்கப்பட வேண்டிய மேட்டூர் நீர்த்தேக்கம் நீர் இருப்புக் குறைவாக இருப்பதாலும், நடுவர்மன்றத்தின் ஆணைக் கிணங்க நீர் திறந்துவிடுவது பற்றி கர்நாடக அரசிடமிருந்து உறுதியான அறிகுறிகள் இல்லாத நிலையிலும் இன்னும் திறக்கப்படாமல் இருப்பது கவலை அளிப்பதாக உள்ளது.

நடுவர்மன்றம் அளித்துள்ள இடைக்கால நிவாரண ஆணை இம்மாநிலத்தின் தேவையையும் மற்றும் மாநில அரசினால் கோரப்பட்ட நீர் அளவையும் விடக் குறைவாக இருந்தாலும், ஒவ்வொரு மாநிலமும் இவ்வாணையின் மீது மாறுபட்ட கருத்துக்கள் கொண்டிருப்பினும் 56ஆம் ஆண்டைய நதி நீர்த் தகராறு சட்டத்தின்படி சட்டரீதியாக அமைக்கப்பட்ட உயர் அதிகாரம் வாய்ந்த நடுவர் மன்றத்தின் ஆணை முற்றிலும் மதிக்கப்படவேண்டும் என்பது இந்தப் பேரவையின் உறுதியான கருத்தாகும்."

இதுதான் 8-7-91 அன்று சட்டப் பேரவையிலே அன்றைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை கர்நாடக அரசு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்ட பிறகு, ஏழாண்டுக் காலம் அந்தக் கோரிக்கையை கர்நாடக அரசு ஏற்கவில்லை. இன்றைக்கு, பிரதமர் முன்னிலையிலே

நடைபெற்ற பேச்சு வார்த்தையின்படி, கர்நாடகம் இதை ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

இது நமக்கு கிடைத்த நல்ல தீர்வா? அல்லவா? என்பதை நடுநிலையோடு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 92ஆம் ஆண்டு, ஜெயலலிதா அவர்களுக்கு மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சராக இருந்த சுக்லா அவர்கள் ஒரு கடிதம் எழுதுகிறார். நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்புக்குப் பிறகு காவிரிப் பிரச்சினை குறித்து ஒரு கடிதம் எழுதுகிறார்.

"Dear Jayalalithaji,

Keeping in view the Interim order of the Cauvery water Dispute's Tribunal, it is proposed to assign the responsibility of monitoring its implementation to Central Water Commission in co-operation with the Basin states. Shri Vaithialingam, Chief Minister of Pondicherry has generally agreed with this proposal. The joint regulation committees to be headed by the Chief Engineer, CWC would include representatives of the respective State Governments also. I will be obliged if you could please communicate your concurrence with such an arrangement. Formal orders notifying the constitution of the Regulation Committees will be issued thereafter".

முன்னாள் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவிற்கு 92ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 9ஆம் நாள் தேதியிட்டு

மத்திய அமைச்சர் சுக்லா அவர்கள் எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் -

"ஜெயலலிதா அவர்களே,

காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை மனதிலே கொண்டு, அதனை நடைமுறைப்படுத்துவற்கான பொறுப்பினை மத்திய நீர்க் குழுமத்திடம் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஒத்துழைப்போடு விடலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. புதுவை மாநில முதல்வர் திரு.வைத்தியலிங்கம் அவர்கள் இந்தத் திட்டத்தினை பொதுவாக ஒப்புக் கொண்டுள்ளார். மத்திய நீர்க்குழுமத்தின் தலைமைப் பொறியாளர் தலைமையிலே அமையும் இணை ரெகுலேஷன் குழுக்களில், சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் பிரதிநிதிகளும் இருப்பார்கள். இந்த ஏற்பாட்டிற்கு உங்களின் ஒப்புதலை உடனடியாகத் தெரிவித்தால் மிகவும் உதவியாக இருக்கும். அதற்குப் பிறகுதான் இந்த ரெகுலேஷன் குழுக்களை அறிவித்து ஆணைகளைப் பிறப்பிக்க இயலும்".

இதற்குப் பதில் அம்மையாரிடமிருந்து எப்போது செல்கிறது தெரியுமா? **92**ஆம் ஆண்டு வந்த கடிதத்திற்குப் பதில் **93**ஆம் ஆண்டு - அதாவது ஒன்பது மாதங்கள் கழித்து **30-3-1993** அன்று எழுதப்படுகின்றது. அந்தக் கடிதம் **14-4-1993** அன்றுதான் அனுப்பப்பட்டுள்ளது. காவிரிப் பிரச்சினையிலே மிகுந்த அக்கறையுள்ள இந்த காவிரி தந்த கலைச்செல்வி ஜெயலலிதா அம்மையார் இத்தனை நாட்களுக்குப் பிறகு பதில் எழுதுகிறார். எழுதப்பட்ட கருத்து மாறுபாடான கருத்தா? அல்ல; எதிர்க் கருத்தா? அல்ல;

அமைக்கப்படுகின்ற குழுவை ஆதரிக்கின்ற பதில். அதையும் படிக்கிறேன்.

Dear Shri Shuklaji,

I invite kind attention to your D.O.Letter dated 9th June 1992. I would like to convey the concurrence of the Government of Tamil Nadu to your proposal....

அதாவது **30-3-93**ல் எழுதுகிறார் பதில். சுக்லாவின் **9-6-92** தேதியிட்ட கடிதம் கிடைத்ததைக் குறிப்பிட்டு பதில் எழுதுகிறார்.

"உங்களுடைய ஏற்பாட்டிற்குத் தமிழ்நாடு அரசு தன்னுடைய ஒப்புதலைத் தெரிவிக்கின்றது. காவிரிப் பிரச்சினைக்காக நடுவர் மன்றத்தினுடைய இடைக்கால ஆணையை நிறைவேற்ற நீங்கள் உருவாக்குகின்ற முயற்சிகளுக்கு என்னுடைய ஒப்புதலைத் தருகிறேன்".

"I thank you for the initiative you have taken for creating a suitable administrative machinery for monitoring the implementation of the Interim Orders of the Cauvery Water Disputes Tribunal".

"காவிரிப் பிரச்சினைக்காக நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நிறைவேற்ற நீங்கள் நிர்வாகம் இயந்திரம் ஒன்றை உருவாக்குகின்ற முயற்சிகளுக்கு என்னுடைய ஒப்புதலைத் தருகிறேன்" என்று எழுதியிருக்கிறார்.

எதிர்க்கருத்து என்றால் கூட ஒன்பது மாதம் தாமதமாகியிருக்கலாம். இது ஒன்பது மாதங்கள்

தாமதிக்கக்கூடிய விஷயமா? உடனடியாகப் பதில் அளித்திருக்க வேண்டிய விஷயமல்லவா?

ஏற்றுக் கொள்கிறேன் என்று எழுதுவதற்கு ஒரு முதலமைச்சர் ஒன்பது மாதங்கள் காலம் எடுத்துக் கொண்டார் என்றால், காவிரிப் பிரச்சினையிலே அவர்களுக்கு எவ்வளவு அக்கறை இருந்திருக்கின்றது என்பதைத் தயவு செய்து நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும்.

93ஆம் ஆண்டு இந்தப் பிரச்சினைக்காக சம்மதம் தெரிவித்து ஜெயலலிதா அவர்கள் கடிதம் எழுதிய பிறகும் அந்தக் குழு அமைக்கப்படாத காரணத்தால் 18–7–93 அன்று ஒரு உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்.

அந்த உண்ணாவிரதம் எப்படி நடைபெற்றது? காந்தீய வழியிலா? கயிற்றுக் கட்டில் போட்டுக்கொண்டா? கீழே சாதாரண துணியை விரித்துப் போட்டா? சாப்பிடாமலா? இதையெல்லாம் என்னைக் கேட்காதீர்கள். ஆனால் உண்ணாவிரதம் நடைபெற்றது.

அந்த உண்ணாவிரதத்தின் குறிக்கோள் என்ன என்பதை - அந்த உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்த கவர்னர் சென்னா ரெட்டியிடம் குறிப்பிட்டது பத்திரிகைகளிலே வெளி வந்திருக்கின்றது. அதையும் அப்படியே படிக்கிறேன்;

“காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்தும்படி அரசியல் சட்டத்தின் 256ஆவது விதியின்கீழ், கர்நாடக அரசுக்கு பிரதமர் நரசிம்மராவ் உத்தரவிட வேண்டும்; அதுவரை நான் எனது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட மாட்டேன்”

அப்பொழுது நரசிம்மராவ் பிரதமராக இருந்தார். அவர், அவருடைய அமைச்சரவையிலே இருந்த அமைச்சர் சுக்லாவை சமாதானத்திற்கு அனுப்பினார். சுக்லா வந்தார். செல்வி ஜெயலலிதாவை உண்ணாவிரத மேடையிலே சந்தித்தார். காவிரிப் பிரச்சினைக்காக உண்ணாவிரதம், காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்; நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு 205 டி.எம்.சி. தண்ணீரை வழங்க வேண்டுமென்று நரசிம்மராவ் கர்நாடக முதலமைச்சருக்குக் கட்டளை இடவேண்டும்; அப்படிக் கட்டளையிட்டால்தான் நான் உண்ணாவிரதத்தை நிறுத்துவேன், இல்லாவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் என்றார்.

நரசிம்மராவ் உத்தரவிட்டாரா? இல்லை. உண்ணா விரதத்தை இவர் கை விட்டாரா? இல்லையா? அது உங்களுக்கே தெரியும். கைவிட்ட காரணத்தினால்தான் இன்றைக்கும் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றார்.

பிரதமர் நரசிம்மராவ் கர்நாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடமாட்டேன் என்று கூறியவர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டார். எப்படி? மத்திய அமைச்சர் சுக்லா சென்னைக்கு வருகிறார். வந்து "ஒரு குழு அமைக்கப்படும்" என்று கூறுகிறார். முதலிலே கடிதம் எழுதி, அதனை ஜெயலலிதா ஒப்புக் கொண்டார் அல்லவா? அது போன்ற குழு அமைக்கப்படும் என்று சுக்லா சொல்கிறார். உடனே "வெற்றி, வெற்றி" என்கிறார்கள்.

சுக்லா கொண்டு வந்த யோசனை என்ன தெரியுமா? ஒரு பெரிய கமிட்டி, ஒரு சிறிய கமிட்டி - அந்தப் பெரிய கமிட்டியில் மத்திய அரசினுடைய செயலாளர், தமிழ்நாடு அரசின் செயலாளர், கர்நாடக அரசின் செயலாளர், கேரள அரசின் செயலாளர், புதுவை அரசின் செயலாளர் என்று நான்கு செயலாளர்களும் இருப்பார்கள். இவர்களுக்கெல்லாம் தலைமையேற்பவராக மத்திய அரசின் செயலாளர் இருப்பார். இது ஒரு கமிட்டி.

அந்தக் கமிட்டியினுடைய தாக்கீதுகளை நடைமுறைப்படுத்த ஒரு கண்காணிப்பு கமிட்டி (நடைமுறைக் கமிட்டி) இருக்கும். இப்படி இரண்டு கமிட்டிகள் அமைக்கப்படுமென்று சுக்லா, அம்மையாரிடம் உறுதியளித்தார். இந்த உறுதியையே வெற்றி, வெற்றி என்று ஜெயலலிதா கொண்டாடினார். அறிக்கை விடுத்தார். வெற்றி வந்து விட்ட காரணத்தினால் உண்ணாவிரதத்தைக் கைவிடுகிறேன் என்று சொல்லி தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கொண்டார். ஆனால் அந்தக் கமிட்டிகள் அமைந்தனவா என்றால் இல்லை. மத்திய அரசின் தலைமைச் செயலாளரைக் கொண்ட கமிட்டியும் அமையவில்லை; கண்காணிப்புக் கமிட்டியும் அமையவில்லை; கடைசிவரையிலே அவைகள் அமையவே இல்லை.

குழு போடுவதாகச் சொன்னதற்கே வெற்றி வெற்றி என்று சொன்னார்கள். இன்றைக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் தர கர்நாடக அரசே ஒப்புக் கொண்டுள்ளது. இது தீர்வு அல்லவாம். ஜெயலலிதாவும், அவருடைய கூட்டணிக் கட்சித் தலைவர்கள் சிலரும் சொல்கிறார்கள். இது நல்ல தீர்வு

அல்ல என்கிறார்கள். மாறாக மோசடி, துரோகம் என்றும் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

அந்த உண்ணாவிரதத்தைக் கைவிட்டதும் 1993ல் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் ஒலிபெருக் கியிலே பேசுகிறார். என்ன பேசுகிறார் தெரியுமா?

“காவிரி தந்த கலைச்செல்வி இப்போது காவிரிக்குத் தண்ணீரை மீட்டுக்கொண்டு வந்திருக்கிறார். இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் அண்ணா சமாதிக்கும் புரட்சித்தலைவர் சமாதிக்கும் சென்றுவிட்டு இல்லம் செல்லுவார்” என்று அறிவிக்கிறார்.

இல்லம் சென்ற ஜெயலலிதா செய்தியாளர்களைச் சந்திக்கிறார். அப்போது ஜெயலலிதா விளக்கம் அளிக்கிறார். அது வருமாறு:

“காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து அமைக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல் நடத்துவது தொடர்பான அடிப்படை அம்சங்களைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புக் குழு அமைக்க மத்திய அரசு சம்மதித்துள்ளது. மேலும் மத்திய அமைச்சரவையின் செயலாளர் மற்றும் காவிரி ஆறு ஓடும் மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களைக் கொண்ட அமலாக்கக் கமிட்டியும் அமைக்கப்படும்”

உண்ணாவிரதத்தை நிறுத்திவிட்டு செய்தியாளர்களைச் சந்தித்த ஜெயலலிதா அளித்த பேட்டியின் போது தந்த விளக்கம் இது. மேலும் ஜெயலலிதா கூறுகிறார்;

“கண்காணிப்புக் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, இடைக்காலத் தீர்ப்பை அமல் நடத்துவதை இந்தக் கமிட்டி உறுதிப்படுத்தும். இது நமக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும்” என்று ஜெயலலிதா கூறுகிறார். செய்தியாளர்கள் தொடர்ந்து அவரைக் கேட்கிறார்கள்.

வினா : இந்த உடன்பாடு உங்களுக்குத் திருப்தி அளிக்கிறதா?

ஜெயலலிதா : நமக்கு மகத்தான வெற்றி கிடைத்துள்ளது. நடுவர்மன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டு, இரண்டாண்டுகளுக்கு மேல் ஆகியும் இதற்காக எந்தவொரு அமைப்பும் நியமிக்கப்படவில்லை.

வினா : நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை கர்நாடக அரசு ஏற்றுக்கொள்கிறதா?

ஜெயலலிதா : அது நம்முடைய நோக்கம் அல்ல. மத்திய அரசு இதில் தலையிட வேண்டும். நடுவர்மன்றத் தீர்ப்பு அமல்படுத்தப்படவேண்டும் என்று கோரி வந்தோம். அதில் மகத்தான வெற்றி கிடைத்துள்ளது.

என்று ஜெயலலிதா நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலே கூறியிருக்கிறார். இதையெல்லாம் நீங்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டும்.

நான் உங்களைக் கேட்கிறேன். 91-ஆம் ஆண்டில் அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு 91,92,93,94,95 - இந்த ஐந்து ஆண்டுக்காலம் முதலமைச்சராக இருந்தவர் அந்த இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தாரா? அல்லது வெற்றி பெற்றாரா? இல்லை. 97ஆம் ஆண்டில் பிரதமராக இருந்த குஜ்ரால் அவர்களை தி.மு.கழகத்தின் சார்பில் கழக ஆட்சியின் சார்பில் வலியுறுத்தி அவர் தயாரித்த திட்டம்தான் இன்றைக்குப் பிரச்சினைக்குரியதாக பேசப்படுகின்ற திட்டம்.

காவிரிப் பிரச்சினைக்குக் கிடைத்திருக்கின்ற தீர்வு - எல்லோரும் வரவேற்று மகிழ்கின்ற இந்தத் தீர்வு குறித்து தமிழகத்திலே உள்ள பல இயக்கங்கள், மாநில அளவிலும், தேசிய அளவிலும் வளர்ந்துள்ள இயக்கங்கள் - அதன் தலைவர்கள் எல்லாம் வரவேற்று மகிழ்கின்ற நேரத்தில், ஒரேயொரு குரல் மாத்திரம் - அந்தக் குரலுக்கு ஒரிரு பக்க வாத்தியங்களோடு - இது ஒரு துரோகம் என்று வசைபாடுவதை நாம் காண்கின்றோம்.

எது துரோகமாம்? கர்நாடக அரசு நடுவர்மன்ற இடைக்கால தீர்ப்பை ஒத்துக்கொண்டு 205 டி.எம்.சி. தருவதற்கு ஒத்துக் கொண்டதின் அடிப்படையில்; ஒரு அதாரிட்டியும், மற்றொரு கமிட்டியும் போடப்பட்டிருப்பது துரோகமாம். பிரதமருடைய தலைமையில் நான்கு முதலமைச்சர்களையும் கொண்டு ஒரு ஆணையம் (அதாரிட்டி – Authority); அந்த ஆணையத்தின் கீழே ஒரு கண்காணிப்புக்குழு (மானிட்டரிங் கமிட்டி – Monitoring Committee); அமைக்கப்பட்டுள்ளது. இதைத் துரோகம் என்று கூறுகிறார்கள்.

காவிரிப் பிரச்சினையோடு இணைந்து, வாழ்ந்து வளர்ந்தவன் நான். காவிரிப் பிரச்சினையில் தமிழர்களை

காட்டிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு நயவஞ்சகம் கொண்டவன் அல்ல நான். காவிரிப் பிரச்சினை எப்போது தீரும்? எப்போது தமிழர்களுடைய க்ண்ணீர் துடைக்கப்படும் என்று ஏங்கியவன் நான். இன்னும் சொல்லப்போனால், காவிரித் தண்ணீரைக் குடித்து வாழ்ந்த தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் நான்.

பிரதமர் வாஜ்பாய் அவர்கள், நான்கு முதலமைச்சர் களையும் அழைத்தார். நேராக வாருங்கள் பேசுவோம். 12ஆந் தேதி சுப்ரீம் கோர்ட்டு இந்தத் திட்டத்தைப் பற்றிய அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறது. அதற்குள்ளாக நீங்கள் சேர்ந்து ஒரு நல்லமுடிவு எடுக்கலாம் வாருங்கள் என்று அழைத்தார்.

நான் ஏறத்தாழ 40-க்கும் மேற்பட்ட கட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்துப் பேசினேன். அதிலே ஏறத்தாழ 30 பேர் டெல்லிக்குச் சென்று பேசவேண்டும் என்று எனக்குக் கட்டளையிட்டார்கள். ஒரு 10, 11 பேர் போகக்கூடாது என்றார்கள். நான் கேட்கிறேன். ஜனநாயகத்திலே 30 பேர் சொல்வதைக் கேட்பதா? 10 பேர் சொல்வதைக் கேட்பதா? அது மாத்திரமல்ல. தமிழர்களுக்கு ஒரு நியாயம் கிடைக்கப்போகிறது என்கிற நேரத்தில் நழுவவிடலாமா? அதை நழுவ விட நானும் விரும்பவில்லை மற்றவர்களும் விரும்பவில்லை; போகச் சொன்னார்கள். போனேன்.

எல்லாப் பிரச்சினைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, அங்கு நாங்கள் சென்றோம். நான், துரைமுருகன், ஆ்லடி அருணா சென்றோம். அதிகாரிகள் வந்தார்கள். 9

மணி நேரம் இடைவிடாமல் இரண்டு நாட்கள் எங்களோடு உட்கார்ந்து பேசி, இந்தப் பிரச்சினைக்கு பிரதமர் ஒரு தீர்வினைக் கொண்டு வந்திருக்கிறார். இன்றைக்குக் (10-8-1998) காலையிலே இந்த அம்மையார் அறிக்கை விடுகிறார், "இது எங்களுக்கு உடன்பாடல்ல. நாங்கள் நிராகரிக்கிறோம்" என்று.

ஆனால், இன்று மாலையில் எனக்கு - புதுடெல்லியில் இருந்து வந்த செய்தி.

The Centre today (10-8-1998) completed the formalities connected with the notification of a revised scheme to implement the interim award of the Cauvery water tribunal notwithstanding the threat from the ruling coalition constituent, the A.I.A.D.M.K.

- அ.தி.மு.க. மிரட்டல் ஒரு பக்கத்திலே இருந்தாலும் கூட, அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், மத்திய அரசு இந்தத் திருத்தப்பட்ட திட்டத்தை வெளியிடுவதற்காக எல்லா விதமான தயாரிப்புகளையும், அதற்கான சாங்கியங்களையெல்லாம் நிறைவேற்றி முடித்துவிட்டது.

கொடுத்த வாக்குறுதியைப் பிரதமர் மதிப்பார் என்பதற்கு அடையாளமாக இந்த நல்ல செய்தி கிடைத்திருக்கிறது. இயற்கை, தமிழன்னை, தமிழர்களாகிய நீங்கள், கர்நாடகத்து மக்கள், கேரளத்து மக்கள், புதுவை மக்கள் அத்தனை பேரும் சேர்ந்து

கருணாநிதிக்கு அளித்த பவளவிழாப் பரிசு என்று எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

இப்போது என்ன நிலைமை தெரியுமா? கர்நாடகம், ஏழு ஆண்டிற்கு முன் ஏற்றுக்கொள்ள மறுத்ததை - தொடர்ந்து ஏழாண்டுகளாக மறுத்து வந்ததை - இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அப்போது மத்திய அரசின் செயலாளரைத் தலைவராகக் கொண்டு நான்கு மாநிலச் செயலாளர்களும் உறுப்பினர்களாகக் கொண்ட கமிட்டி, இப்போது மத்திய அரசின் பிரதமரைத் தலைவராகக் கொண்டும், நான்கு மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்டும் 'அதாரிட்டி' அமைக்கப்பட்டு விட்டது. மேலும் இந்த ஸ்கீம் (திட்டம்) நடைமுறைப்படுத்தப்படும் என்று நோட்டிஃபிகேஷன் என்பார்களே, அது அரசிதழில் வெளியிடப்பட்டு விட்டது. அந்த அத்தாரிட்டிக்குக் கீழே - ஒரு மானிட்டரிங் கமிட்டி (கண்காணிப்புக்குழு)யும் அமைக்கப்பட்டு - அந்தக் கண்காணிப்புக்குழு, அத்தாரிட்டி இடுகின்ற பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும், அதற்குப் பணிகள் வகுத்து அளிக்கப்பட்டு உச்சநீதிமன்றத்திலே - அந்த அரசிதழிலே வெளியான அறிவிப்பு தரப்பட்டு விட்டது.

இதிலே என்ன தோல்வி? கமிட்டிகள் அமைக்கப்படும் என்று கூறி உண்ணாவிரதத்தை நிறுத்தி 93, 94, 95, 96 வரையில் கமிட்டியே அமைக்கப்படாமல், அதை வெற்றி என்று கொண்டாடியவர்கள், கருணாநிதி இன்றைக்குத் தமிழ் நாட்டிற்குத் துரோகம் செய்துவிட்டான் என்று சொல்ல, எந்தத் தகுதியைக் கொண்டிருக்கின்றார்கள்? எண்ணிப் பார்க்க வேண்டாமா?

அதுவும் கருணாநிதியா துரோகம் செய்வான்? தஞ்சை மண்ணிலே பிறந்தவன் நான், நஞ்சை குலுங்கும் தஞ்சை - அப்படிக் குலுங்குவது தஞ்சைக்காக மாத்திரமல்ல; தமிழகத்திற்காகத்தான் தஞ்சை குலுங்குகின்றது. அந்த தஞ்சையிலே விளைகின்ற நெல், உணவு தானியம்தான் தமிழக மக்களுடைய வயிறார - அவர்களுடைய பசியைப் போக்க இன்றைக்குப் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது.

காவிரித் தீர்வைப் பற்றி, தமிழகத்தில் உள்ள நல்லவர்கள் அனைவரும் தங்களுடைய பாராட்டுக்களை, வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இதை வரவேற்று மகிழ்ந்து பிரதமர் வாஜ்பாய் அவர்களையும், என்னையும் பாராட்டி வாழ்த்தியிருக்கின்றார்கள்.

**10.8.98.** அன்று காலையில் வெளிவந்த "இந்து" பத்திரிகை ஒரு பெரிய தலையங்கமே எழுதியிருக்கிறது. தலையங்கத்தினுடைய தலைப்பே "எ வெல்கம் அக்ரிமெண்ட்" **(A Welcome Agreement)** என்பது. அதாவது "வரவேற்கத்தக்க ஒப்பந்தம்" என்று "இந்து" பத்திரிகை எழுதியிருக்கிறது. "இந்து" பத்திரிகை எதையும் அவசரப்பட்டு எழுதக்கூடிய பத்திரிகை அல்ல. நிதானமாக சிந்தித்து, உண்மை நிலவரங்களை அறிந்து, இதனால் மக்களுக்கு, பயன் உண்டா இல்லையா என்பதைத் தெரிந்து, புரிந்து அதனடிப்படையில்தான் கருத்துகளைச் சொல்லும். அந்தப் பத்திரிகை "எ வெல்கம் அக்ரிமெண்ட்" என்று தன்னுடைய தலையங்கத்தை எழுதியிருக்கின்றது.

"எக்ஸ்பிரஸ்" பத்திரிகை - அதுவும் துணிச்சலோடு கருத்துகளைச் சொல்லக்கூடிய ஆங்கிலப் பத்திரிகையிலே ஒன்று. அந்தப் பத்திரிகையின் தலையங்கத்திற்குத் தலைப்பே ''பிரிட்ஜ் ஓவர் காவேரி'' **(Bridge Over Cauvery)** என்று. ''**காவிரிக்குப் பாலம் அமைக்கப்பட்டது**'' என்ற அந்தக் கருத்துப்பட, இந்த ஒப்பந்தத் தீர்வை வரவேற்று ஒரு தலையங்கம் எழுதியிருக்கின்றது. நடுநிலையோடு நடத்தப்படுகின்ற **"தினமணி"** பத்திரிகை **"விவசாயிகளுக்குப் பரிசு"** என்ற ஒரு தலையங்கத்தைத் தீட்டி, இப்போது ஏற்பட்டுள்ள காவிரிப் பிரச்சினைக்கான தீர்வை விளக்கி வரவேற்று மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கின்றது.

தஞ்சை என்னைப் பாராட்டுகிறது. தாய் மகனைப் பாராட்டினால் அதில் எப்படி வியப்பில்லையோ, அதைப்போல தஞ்சை என்னைப் பாராட்டுவதில் எந்த விதமான வியப்பும் இல்லை. ஆனால் இந்தப் பாராட்டு விழாவையும், நன்றி தெரிவிக்கும் விழாவையும் ஏற்பாடு செய்து, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களை காவிரி தீரத்து விவசாயப் பெருங்குடி மக்களை பல்லாயிரக் கணக்கிலே இங்கே என்னை வாழ்த்த வகைசெய்த நம்முடைய அருமை நண்பர் மன்னை ரெங்கநாதன் அவர்களுக்கும், அவருக்குத் துணையாக இருந்து ஒத்துழைத்த என்னுடைய அன்புத் தம்பி உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி.மணி அவர்களுக்கும், ஏனைய கட்சிகளின் நிர்வாகிகளுக்கும், என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தத் தரணியிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம், ஏற்பட்டுள்ள சுமுகமான தீர்வை, நீங்கள் அனைவரும் இன்றைக்கு ஆதரிக்கின்றீர்கள். ஆதரிக்க வில்லை என்று சொல்கிறவர்கள்கூட, தங்களுடைய தலைமைக்குப் பயந்து, ஏதோ ஒரு கட்டுப்பாட்டுக்காகத்தான் தங்களுடைய தலைமை என்ன சொல்லுமோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் ஆதரிக்கவில்லை என்று வாயளவில் சொல்கிறார்களே அல்லாமல்; இதைத் தவிர வேறு என்ன நல்ல தீர்வு காணமுடியும் என்று அவர்களுடைய மனதிற்குள்ளே எண்ணிக் கொண்டுதான் இருக்கிறார்கள். நேரடியாக இங்கே வந்து அமர்ந்து இந்தத் தீர்வைப் பாராட்டாவிட்டாலுங்கூட, எங்கேயோ ஒரு மூலையிலே இருந்து பாராட்டிக்கொண்டுதான் இருப்பார்கள். எனவே, அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

விவசாயிகளின் நாடு இந்திய நாடு. இங்கே எத்தனை தொழில்வளம் வந்தாலுங்கூட, வேளாண்மைத் தொழில்தான் இந்தியாவின் முதன்மையான தொழில். வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள்தான் ஏராளமானவர்கள், இந்தியத் திருநாட்டில். அதைப்போல தமிழகத்திலே, குறிப்பாக தஞ்சை மாவட்டமும், அந்தக்காவிரி நதி தீரமும் - தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் அடங்கிய அந்தப் பகுதியைப் போல் உலகத்திலே வேறு எந்தப் பகுதியிலும் இப்படிப்பட்ட ஒரு பரந்த அளவிற்கு - ஒரு டெல்டா கிடையாதென்று நானல்ல - விவசாயத்திலே மிகுந்த அனுபவம் பெற்ற மன்னை ரெங்கநாதன் அவர்கள் ஒரு அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து நான் மகிழ்ந்தேன். அப்படிப்பட்ட ஒரு பெரும் பகுதியைக் கொண்ட தஞ்சைத் தரணியிலே

பிறந்த நான், அங்கு ஓடுகின்ற காவிரித் தண்ணீரைக் குடித்து வளர்ந்த நான் - துரோகம் செய்கின்றேனாம். இரவலுக்காக வந்தவர்கள், எதற்கோ வந்தவர்கள், எப்படியோ வந்தவர்கள் காவிரிப் பிரச்சினையைத் தீர்த்து, தமிழர்களைக் காப்பாற்றுவார்களாம்.

**1924**ஆம் ஆண்டு பிறந்தேன். நான் பிறந்தபோதுதான் வெள்ளைக்காரனுடைய ஆட்சியில் அன்றைய மைசூர் - இன்றைய கர்நாடகம் அன்றைய சென்னை ராஜதானி, இன்றைய தமிழ்நாடு இரண்டிற்கும் காவிரி ஒப்பந்தம் ஏற்பட்டது. நான் பிறந்த ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தம் காவிரி ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்திற்கும் இப்போது 75 வயதாகிறது; எனக்கும் 75 வயதாகிறது. அந்த ஒப்பந்தத்திற்கும் பவளவிழா - எனக்கும் இன்றைக்குப் பவளவிழா. என்னுடைய பவளவிழாவிலே இன்னும் நான் சாதிக்க வேண்டியது ஏராளம் இருக்கின்றன. அதற்கான வயது எனக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் காவிரிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. அடுத்து இந்த இடைக்காலத் தீர்வைத் தொடர்ந்து, நடுவர் மன்றத்திலிருந்து இறுதி அறிக்கை ஒன்று வரவிருக்கின்றது. அதற்கும் நாம் தொடர்ந்து பணியாற்றவிருக்கிறோம். வாதாடவிருக்கிறோம். நம்முடைய எண்ணம் எல்லாம் கர்நாடகத்திலே உள்ள மக்களைப் பகைத்துக் கொள்ளக் கூடாது. கர்நாடகத்திலே உள்ள முதலமைச்சரைப் பகைத்துக் கொள்ளக்கூடாது என்பதல்ல, அதைப்போல அங்கே உள்ளவர்களுக்கும் தமிழ்நாட்டிலே உள்ள முதலமைச்சரைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதல்ல, நான் கருதுவது, கர்நாடகத்திலோ, கேரளத்திலோ உள்ள தமிழர்கள் -

அதைப்போலவே தமிழகத்திலே கன்னடர்கள், மலையாளிகள் எல்லாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும். ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் ஒரு சிறுபொறி பறந்து, பெரிய தீயாக மாறி, எத்தனை தமிழர்கள் கர்நாடகத்திலே அவதிப்பட்டார்கள்? எத்தனை பேர் உயிர்விட்டார்கள்? எத்தனை பேர் வீடு வாசல்களை இழந்தார்கள்? எத்தனை பேர் தமிழகத்திற்கு விரட்டப்பட்டார்கள் என்பதையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நான் தமிழன் என்ற காரணத்தினால் - தமிழன் அங்கே சாவதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே தான் யுத்தம் வேண்டாம், சுமுகமான முடிவுக்கு வருவோம் என்ற அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக ஆனேன். அதிலே நாம் சோடை போகவில்லை. சுமுகமான தீர்வு, நான்கு மாநில மக்களுக்கும் ஏற்ற தீர்வு, குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற்ற தீர்வு கிடைத்துள்ளது.

# காவிரி உடன்பாடு :

# செய்தியாளர் கேள்விகளுக்கு முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

***7-8-1998 அன்று, புதுடெல்லியில் பி.பி.சி. செய்தியாளர் மற்றும் 50க்கும் மேற்பட்ட செய்தியாளர்களுக்கு முதல்வர் கலைஞர் அளித்த பேட்டி:-***

**செய்தியாளர்** : காவிரிப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு காணப்பட்டுள்ளதை, நீங்கள் வெற்றியாகக் கருதுகிறீர்களா ?

**கலைஞர் :** *1990-ஆம் ஆண்டு வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பு 91-ஆம் ஆண்டு வெளியாகி, 7 ஆண்டுக் காலமாக அந்த இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருந்தபோது, உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் காரணமாக இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கான திட்டம் (ஸ்கீம்) குஜ்ரால் பிரதமராக இருந்தபோது வகுக்கப்பட்டது.*

*இப்போது வாஜ்பாய் பிரதமராக இருக்கும்போது அந்தத் திட்டம் அமலுக்கு வரவும், நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பான 205 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்கவுமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.*

*இந்த மூன்று பிரதமர்களுடைய காலத்திலும் நான் முதலமைச்சர் பொறுப்பில் இருந்திருக்கிறேன் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.*

*செய்தியாளராகிய நீங்கள் கேட்பது போல, இதை நான் வெற்றி என்று கூற மாட்டேன். ஏனென்றால் கர்நாடகத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் ஏதோ போராட்டம் நடைபெற்றதாக நான் கருதிக் கொள்ளவில்லை. இரண்டு மாநில முதலமைச்சர்களும், அத்துடன் கேரள, புதுவை மாநில முதல்வர்களும் ஒருமித்த கருத்துடன்*

அவரவர்களுடைய மாநில மக்கள் பயனடையவும், பொதுவாக நான்கு மாநில மக்களும் பயனடையவும் எடுக்கப்பட்ட சுமுகமான முடிவு. இதில் நான்கு முதலமைச்சர்களுக்கும் மகிழ்ச்சியே தவிர, ஒருவருக்கொருவர் வெற்றி என்று கூறிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

### *7-8-1998 அன்று, புதுடெல்லியிலிருந்து சென்னை தொலைக்காட்சிக்கு, தொலைபேசி மூலம் முதல்வர் கலைஞர் அளித்தப் பேட்டி :-*

இந்தப் பேச்சுக்களினால் தமிழக விவசாயிகளுடைய நலன்கள் நிச்சயமாகப் பாதுகாக்கப்படும் என்று நம்புகிறேன். தமிழக விவசாயிகள் மாத்திரமல்ல, எல்லா மாநில விவசாயிகளுடைய நலன்களும் பாதுகாக்கப்படும் என்றே நான் நம்புகிறேன்.

இது நீண்ட நாட்களாக இருந்து வரும் பிரச்சினை. 1990-ஆம் ஆண்டு வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது நடுவர்மன்றம் அமைக்கப்பட்டது.

பிறகு, குஜ்ரால் காலத்திலே இந்தத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இப்போது பிரதமர் வாஜ்பாய் காலத்திலே அது நடைமுறைக்கு வந்திருக்கிறது. இது ஒரு மகிழ்ச்சியான செய்தி, இந்த மூன்று முறையும் நான் முதல்வராக இருந்திருக்கிறேன் என்பதுதான்.

ஆகஸ்ட்-3ஆந் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எனக்கு நல்ல அறிவுரைகள் சொன்ன எல்லா தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமருக்கும் நன்றி. பிரதமரோடு இருந்து எங்களுக்கு நல்ல உதவிகள் ஆற்றிய நம்முடைய திட்டக்குழு துணைத் தலைவர் ஜஸ்வந் சிங் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

***8-8-1998** அன்று, புதுடில்லியிலிருந்து சென்னை திரும்பிய முதல்வர் கலைஞர் அவர்கள், சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:-*

**செய்தியாளர்** : தற்போது ஏற்பட்டுள்ள முடிவை வெற்றி என்று கருதுகிறீர்களா?

**கலைஞர்** : *தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி ஆகிய நான்கு மாநில விவசாயிகளுக்கும் கிடைத்த வெற்றியாகக் கருதுகிறேனே தவிர, தனிப்பட்ட முறையில் எனக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதவில்லை.*

**செய்தியாளர்** : எடுத்துள்ள முடிவுக்கு, கால நிர்ணயம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எப்போது முதல் இது அமலுக்கு வரும்?

**கலைஞர்** : *SCHEME (திட்டம்) இன்றைக்கு (Finalise) முடிவாகிவிடும். Monitoring Committee (கண்காணிப்புக்குழு) பற்றி நேற்றிரவு மத்திய அமைச்சரவைச் செயலாளர் மற்றும் நான்கு மாநில தலைமைச் செயலாளர்கள், செயலாளர்கள், பொறியாளர்கள் எல்லாம் கலந்து பேசியிருக்கிறார்கள். நேற்றிரவு 12 மணி வரை நடைபெற்ற பேச்சு விவரம் எனக்குக் கிடைத்தது. அநேகமாக திட்டம் இன்று முடிவு பெற்றுவிடும். இதற்குப் பிறகு எல்லாவற்றையும் இணைத்து, திட்டத்தை மத்திய அரசு அறிவிக்கும். அதனை 12ஆம் தேதிக்கு முன்னாலேயே அறிவிக்கலாம். அல்லது உச்சநீதி மன்றத்தில் அறிவிப்பார்கள்.*

**செய்தியாளர்** : கண்காணிப்புக்குழு பற்றி கேரளா நடுநிலை வகிக்கிறதே?

**கலைஞர்** : அதைப்பற்றி திரு. நாயனார் அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

**செய்தியாளர்** : கண்காணிப்புக்குழு பற்றி மாறுபாடான கருத்துக்கள் இருப்பதாகக் கூறப்படுகிறதே?

**கலைஞர்** : கண்காணிப்புக் குழுவின் வேலைகள் என்ன என்பதிலே ஓரளவு மாறுபாடான கருத்துக்கள் இருக்கின்றன. அதெல்லாம் விரைவில் சரியாகிவிடும். அந்தக் கருத்து மாறுபாடுகள் காரணமாக தற்போது எடுக்கப்பட்டுள்ள முடிவுகளுக்கு எந்தவிதமான கேடும் வந்து விடாது.

**செய்தியாளர்** : Authority (ஆணையம்) ஒன்று பிரதமர் தலைமையிலே இருக்கும்போது கண்காணிப்புக்குழு என்று தனியாக ஏன் அமைக்கப்படுகிறது?

**கலைஞர்** : பள்ளிகளிலே, ஆசரியர்கள் எல்லாம் இருந்தும் ''மானிட்டர்'' என்று ஒருவரை நியமிப்பதில்லையா; அதைப்போலத்தான் இதுவும்!

**செய்தியாளர்** : இந்த ஆணையம் நிரந்தரமாக இருக்குமா?

**கலைஞர்** : நடுவர் மன்றத்தின் இறுதி அறிக்கை வரும்போது நடுவர் மன்றமே எப்படியெல்லாம் இவைகளை அமல்படுத்த வேண்டுமென்று சொல்லக்கூடும். இப்போது கூறப்பட்டுள்ள Authority (ஆணையம்), Monitoring (கண்காணிப்பு) எல்லாமே நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதைப் பற்றித்தான். இந்தக் குழுக்களை நிரந்தரமாக்குவது பற்றி அப்போதுள்ள நிலைமைகளைப் பொறுத்து முடிவாகும்.

**செய்தியாளர்** : கர்நாடக மாநிலம் இந்த முடிவுப் படி நடப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

**கலைஞர்** : *இதற்குத்தான் ஆணையம் இருக்கின்றது. அதை மீறி நடந்தால் மத்திய அரசு அதற்கான நடவடிக்கையை எடுக்கும். உங்கள் கேள்வியே அவசியமற்ற கேள்வி என்று கருதுகிறேன். மத்திய அரசின் பிரதமர் தலைமையிலே நான்கு மாநில முதலமைச்சர்களும் கலந்துபேசி முடிவு செய்யப் பட்டுள்ளது. அதற்குக் குந்தகம் ஏற்படும் வகையில் உங்கள் கேள்வி இருத்தலாகாது.*

**செய்தியாளர்** : பிரதமரும், முதலமைச்சர்களும் அடங்கிய ஆணையம் அடிக்கடி கூட முடியுமா? இந்த முடிவு நடைமுறை சாத்தியமாக இருக்குமா?

**கலைஞர்** : *பொதுப்படையாக விஷயங்களைப் பேசி முடிவு எடுத்திருக்கிறோம். இதைப்பற்றி திட்டம் விவரமாகத் தயாரிக்கப்பட்டு வெளியான பிறகுதான் விவரங்கள் கூறமுடியும்.*

**செய்தியாளர்** : தேசிய நீர்க் கொள்கை வகுக்கப்பட வேண்டுமென்று கர்நாடக முதலமைச்சர் கூறியிருக் கிறாரே?

**கலைஞர்** : *தேசிய நீர்க் கொள்கை வகுக்கப்பட வேண்டும் என்பதிலே எனக்குக் கருத்து மாறுபாடு கிடையாது. நான் இதைப்பற்றி சட்டப்பேரவையிலே சொல்லியிருக்கிறேன். காவிரிப் பிரச்சினை வேறு, இதுவேறு.*

*குறிப்பாக **1990**ஆம் ஆண்டு வி.பி.சிங் பிரதமராக இருந்தபோதுதான் நீண்ட நாள் கோரிக்கையான நடுவர்*

மன்ற கோரிக்கை நிறைவேற்றப்பட்டு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. ஏழு ஆண்டுக்காலமாக நடுவர் மன்றத்தின் தீர்ப்பை அமல்படுத்துகின்ற நிலைமை ஏற்படவில்லை. அந்த நிலை ஏற்படுவதற்காக, தமிழகம் நீண்ட காலமாக கோரிக்கை வைத்திருக்கிறது.

1997ஆம் ஆண்டு குஜ்ரால் அவர்கள் பிரதமராக இருந்தபோது நடுவர்மன்றத்தினுடைய இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்காக ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டது. அந்தத் திட்டம் இப்போது வாஜ்பாய் அவர்கள் பிரதமர் பொறுப்பிலே இருக்கும்போது நடைமுறைக்கு வருகிறது. இதிலே எனக்கு மகிழ்ச்சி என்னவென்றால், இந்த மூன்று பிரதமர்களுடைய காலகட்டத்திலும் நான் முதலமைச்சராக இருந்து தமிழ்நாட்டு மக்களுக்காகவும் விவசாயி களுக்காகவும் வாதாடுகின்ற வாயப்பு பெற்றதுதான்.

இன்னும் சொல்லப்போனால், 1968ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்களுடைய ஆணைப்படி அன்றைக்கு முதன் முதலாக காவிரி பேச்சு வார்த்தைக்காக டெல்லிக்குச் சென்று மத்திய அமைச்சர் கே.எல்.ராவ் முன்னிலையில், கர்நாடக முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்ற வாய்ப்பும் எனக்குத்தான் கிடைத்தது. முப்பதாண்டுகளுக்குப் பிறகு கர்நாடக முதலமைச்சர் படேலுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்ற வாய்ப்பு பிரதமர் முன்னிலையில் இப்போது கிடைத்து அது நான்கு மாநிலங்களுக்கும் சுமுகமாக முடிவுற்றிருக்கின்றது.

**செய்தியாளர்** : ''எக்ஸ்பிரஸ்'' ஏட்டில் இது முழுமையாக முடிவில்லை என்பதுபோல எழுதியிருக் கிறார்களே ?

**கலைஞர்** : *நடுவர்மன்றம் கொடுத்திருப்பதே இடைக்கால நிவாரணம்தானே! முழு அறிக்கைக்காக காத்துக் கொண்டிருக்கின்றோம்.*

**செய்தியாளர்** : நடுவர்மன்றத்தின் இறுதி அறிக்கை விரைவிலே வரவேண்டுமென்று கர்நாடக முதல்வர் வலியுறுத்தி யிருக்கிறாரே ?

**கலைஞர்** : *அதை யாரும் மறுக்கவில்லை. கர்நாடக முதமைச்சர் இறுதி அறிக்கை சீக்கிரமாக வரவேண்டு மென்று விரும்புகிறார். நாங்களும் விரும்புகிறோம்.*

**செய்தியாளர்** : பொதுவாக இந்த வெற்றியைப் பற்றி.. ?

**கலைஞர்** : *நான் இதை வெற்றியாகக் கருதவில்லை. ஏனென்றால் தமிழ்நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் இடையே யுத்தம் ஒன்றும் நடக்கவில்லை. எனவே, நான் இதை வெற்றியாக எடுத்துக் கொண்டு ஆரவாரம் செய்ய விரும்பவில்லை. தமிழ்நாட்டு மக்களும் கர்நாடக மக்களும், இந்தப் பிரச்சினையால் கசப்புணர்வுக்கு ஆட்பட்டுவிடக்கூடாது என்பது என்னுடைய நீண்ட நாளைய கருத்து. அதனால்தான், இந்தப் பிரச்சினையில் ஆரவாரம் இல்லாமல் அடக்கமான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் பல நேரங்களில் சொல்லியிருக்கிறேன். அதனால் இதை யாருக்கும் கிடைத்த வெற்றியாக கருதத் தேவையில்லை.*

***9-8-1998** அன்று, முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:-*

**செய்தியாளர்** : Monitoring Committee அதாவது கண்காணிப்புக் குழுவிற்கு Statutory Power இல்லை என்று கூறுவதைப் பற்றி ?

**கலைஞர்** : *7ஆந் தேதி இரவே மத்திய அமைச்சரவை செயலாளருடைய தலைமையில் நான்கு மாநில தலைமைச் செயலாளர்களும், பொறியாளர்களும் சந்தித்துப் பேசிய கூட்டத்தில் இரவெல்லாம் விவாதித்து இறுதியாக முடிவெடுக்கப்பட்டு Monitoring Committee அதாவது கண்காணிப்புக் குழுவின் பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். இது நான்கு மாநில முதலமைச்சர்களின் ஒப்புதலைப் பெற்றதாகும். எனவே இதில் வேறுபாடான கருத்துக்களுக்கிடமே இல்லை.*

**செய்தியாளர்** : கண்காணிப்புக் குழுவிற்கு வெறும் ஆலோசனை வழங்கும் அதிகாரம்தான் என்று சொல்லப்படுகிறதே ?

**கலைஞர்** : *கண்காணிப்புக் குழுவிற்கு என்னென்ன அதிகாரம் என்று இன்று எல்லா ஏடுகளிலும் வந்துள்ளது. (முதலமைச்சர் கண்காணிப்புக் குழுவின் நான்கு அதிகாரங்களையும் செய்தியாளர்களுக்குப் படித்துக் காட்டினார்.) The Monitoring Committee shall assist the Authority in monitoring the implementation of the decisions of the Authority. In case, any difficulty arises in implementation, the Monitoring Committee shall report the position to the Authority. ஆணையத்தின் முடிவுகளை அமல்படுத்துவதைக் கண்காணிப்பதில், ஆணையத்திற்கு கண்காணிப்புக் குழு உதவி செய்யும். அவ்வாறு அமல்படுத்துவதில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால், நிலைமையை, கண்காணிப்புக் குழு ஆணையத்திற்குத் தெரிவிக்கும்.*

**செய்தியாளர்** : இந்த உடன்பாடு ஏற்படுவதற்கு மத்திய அரசின் பங்கு எவ்வாறு இருந்தது ?

**கலைஞர் :** மத்திய அரசு இதில் மிகவும் ஆர்வத்தோடு ஒத்துழைத்தது. எப்படியும் ஒரு தீர்வு காண வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்தோடு இருந்தது. நேற்று நான் விமான நிலையத்திலே கூறியதைப்போல, இதற்காக பல அலுவல்களை ஒதுக்கி வைத்து விட்டு பிரதமர் வாஜ்பாய் அவர்கள் ஒன்பது மணி நேரம் எங்களோடிருந்து விவாதித்திருக்கிறார். இன்னும் சொல்ல வேண்டுமென்றால் அகில இந்திய அளவில் 6ஆந் தேதியன்று ஒரு மணிக்கு சுற்றுலாத் துறை அமைச்சர்களுடைய மாநாடு இருந்தது. அதற்கு வேறு யாரையோ அனுப்பிவிட்டு எங்களுடன் பேச்சு வார்த்தையிலே கலந்து கொண்டார். மேலும் நாடாளுமன்றத்தில் அன்று இறுதி நாள். அன்றைக்கு உள்துறை அமைச்சர் திரு.அத்வானி அவர்களின் பதில் உரை இருந்தது, அதற்கே கடைசியாகத்தான் போய்ச் சேர்ந்தார். அதுவரை எங்களோடு இருந்தார். அன்று மாலையில் அமைச்சரவை கூட்டம் இருந்தது. அதையும் ஒத்தி வைத்து விட்டார். அதைப் போலவே மறுநாளும் அவருக்கு இருந்த அலுவல்களை எல்லாம் ஒத்தி வைத்துவிட்டு, பேச்சுவார்த்தையில் சுமுகமான முடிவு காண உடனிருந்தார். அதே மாதிரி, மத்திய, திட்டக்குழுவின் துணைத் தலைவர் திரு.ஜஸ்வந்த் சிங் அவர்களும், மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களும் உடனிருந்து ஒத்துழைத்தனர்.

**செய்தியாளர் :** காவிரிப் பிரச்சினையை எதிர்க் கட்சியினர் அரசியலாக்கப் பார்ப்பதால் அரசியலையும் மீறி ஒப்பந்தம் அமல்படுத்தப்படும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?

**கலைஞர் :** நிச்சயமாக இருக்கிறது.

***23-8-1998 அன்று, திருச்சியில் முதல்வர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:-***

**செய்தியாளர்** : காவிரி நீர் பிரச்சினையில் செம்மையான முறையில் பிரதமர் முன்னிலையில் தீர்வு கண்டிருக்கிறீர்கள். ஆனால் ஜெயலலிதா காவிரிப் பிரச்சினையில் மோசடி நடந்திருப்பதாகக் கூறுகிறாரே?

**கலைஞர்** : *நீங்களே காவிரி வட்டாரத்து செய்தியாளர்கள். நீங்களே என்னை காவிரிப் பிரச்சினைக்காக வரவேற்றுப் பாராட்டி, வாழ்த்தி, சால்வையும் அணிவித்திருக்கிறீர்கள். இதற்கு மேல் ஜெயலலிதாவின் கூற்றைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. மோசடி அரசியல் நடத்துபவர்களுக்கு எல்லாமே மோசடியாகத்தான் தெரியும்.*

**செய்தியாளர்** : ஜெயலலிதா கூறும்போது காவிரி நீர் மாதாந்திர, வாராந்திர அளவிலே விடப்படுவதைப் பற்றித்தான் முக்கியமாக கூறியிருக்கிறார்...

**கலைஞர்** : *நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பிலேயே ஜூன் மாதம் தொடங்கி மே மாதம் வரையில் ஒவ்வொரு மாதமும் எத்தனை டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்கு கர்நாடகம் தரவேண்டும் என்பதைப் பற்றிய விவரமான கணக்கை அறிவித்திருக்கின்றது. அதையெல்லாம் படிக்க ஜெயலலிதாவிற்கு நேரம் இல்லாவிட்டாலும் படிக்கக் கேட்டாவது தெரிந்து கொள்ளலாம்.*

*ஜூன் மாதம் முதல் மே மாதம் வரை ஒவ்வொரு மாதமும் எவ்வளவு தண்ணீர் தரவேண்டுமென்று நடுவர்மன்றத் தீர்ப்பிலேயே இருக்கிறது. அந்த இடைக்காலத் தீர்ப்பைத்தான் இதுவரை ஏற்றுக்கொள்ள கர்நாடகம் மறுத்து வந்தது. இப்போது பிரதமர் முன்னிலையிலேயே விரிவாக*

விவாதிக்கப்பட்டு அனைவரும் மகிழத்தக்க ஒரு உடன்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

**27.8.1998 அன்று, தலைமைச் செயலகத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

**செய்தியாளர் :** காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாட்டிற்கு நீங்கள் துரோகம் செய்துவிட்டதாக வைகோ தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கின்றாரே?

**கலைஞர் :** அவர் என்னைக் குற்றஞ்சாட்டுகிறாரா அல்லது வாஜ்பாயைக் குற்றஞ்சாட்டுகிறாரா என்று தெரியவில்லை. ஏனென்றால் வாஜ்பாய் தலைமையில் அவருடைய கட்சி கூட்டணி அரசில் இடம் பெற்றிருக்கின்றது. ஜெயலலிதா கட்சி வாஜ்பாய் கூட்டணியிலிருந்து விலகினாலும் தான் விலக மாட்டேன் என்று அந்தக் கூட்டணியில் ஒட்டி உறவாடுகிறவர் வைகோ. காவிரிப் பிரச்சினையில் ஏற்பட்ட உடன்பாடு தமிழ்நாட்டிற்குச் செய்த துரோகம் என்றால் அவர் யாரைக் கூட்டணித் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்றாரோ அந்தப் பிரதமர் மேலேயே துரோகக் குற்றம் சாட்டுகிறார் என்றுதான் பொருள். எனவே அதற்குப் பிரதமர் வாஜ்பாய் தான் பதில் சொல்ல வேண்டும்.

**செய்தியாளர் :** உடன்பாட்டிற்குப் பிறகு நமக்கு வரவேண்டிய தண்ணீர் வந்து கொண்டிருக்கின்றதா?

**கலைஞர் :** இதிலே முக்கியமான விஷயம். நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு. அந்த இடைக்காலத் தீர்ப்பின்படி ஜூன் மாதம் முதல் மே மாதம் வரையில், ஒவ்வொரு ஆண்டும் மாதந்தோறும் எவ்வளவு அளவு தண்ணீர்விட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. அப்படி மாதந்தோறும் விடப்படுகின்ற தண்ணீர் வாராந்தரமாகவும் விடலாம் என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஒரு வாரம் தவறினால் அதையும் சேர்த்து அடுத்த வாரம் அந்தத் தண்ணீரை வழங்கலாம் என்று இருக்கின்றது.

இப்படி ஜூன் மாதம் முதல் மே மாதம் வரையில் மொத்தம் 205 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்கு வழங்க வேண்டுமென்று நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றது. அதைத்தான் நடைமுறைப்படுத்த முடியாமல் ஏழாண்டு காலமாக பிரச்சினை இருந்து வந்தது. இப்போது நடுவர்மன்றம் என்ன இடைக்காலத் தீர்ப்பை வழங்கியிருக்கிறதோ அந்த இடைக்காலத் தீர்ப்பை வழங்குவதற்காகத்தான் பிரதமர் தலைமையில் நான்கு மாநில முதலமைச்சர்களையும் கொண்ட ஆணையம் (Authority) அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த ஆணையத்தின் கீழே ஒரு கண்காணிப்புக்குழு (Monitoring Committee) அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கண்காணிப்புக் குழுவிற்கு மத்திய அரசின் நீர் வளத்துறை செயலாளர் தலைவராக இருப்பார். மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்களும், தலைமைப் பொறியாளர்களும் அடங்கிய 11 பேர் உறுப்பினர்களாக அந்தக் கண்காணிப்புக் குழுவிலே இருப்பார்கள்.

இந்தக் கண்காணிப்புக் குழு அவ்வப்போது கர்நாடகம் தமிழகத்திற்குத் தண்ணீர் வருவதை ஆராய்ந்து அத்துடன் நான்கு மாநிலங்களிலும் உள்ள பிரச்சினைகளையும் ஆராய்ந்து செயற்படுத்துவதில் ஏதாவது சிக்கல் வருமேயானால், அதை ஆணையத்திற்கு (Authority) தெரிவிக்கும். இதுதான் இப்போது ஏற்பட்டுள்ள உடன்பாடு. இதில் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய நான்கு மாநில

விவசாயிகளுக்கும் எந்தத் தீங்கும் ஏற்படாத வண்ணம்தான் இந்த உடன்பாட்டின் முக்கியத்துவம் ஆகும்.

இதைவிட குறைவான 'அதிகாரம் படைத்த கமிட்டிகளைத்தான் 1993-ஆம் ஆண்டில், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா உண்ணாவிரதம் இருந்து பெற்றார். ஆனால், அந்தக் கமிட்டிகள் அமைக்கப்படவே இல்லை. இப்போது அந்தக் கமிட்டிகளை விட அதிக அதிகாரங்கள் படைத்த நிலையில் பிரதமருடைய தலைமையில் ஒரு ஆணையம் (Authority) அமைந்திருக்கின்றது.

நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்புக்குப் பிறகு, அதனை கர்நாடகம் மறுத்த நேரத்தில் ஒரு குழு அமைப்பதற்காக அன்றைய மத்திய அமைச்சர் திரு.சுக்லா அவர்கள் அன்றைய தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு 92ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆந் தேதி ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில்

*" Dear Jayalalithaji,*

*Keeping in view the interim order of the cauvery water disputes tribunal, it is proposed to assign the responsibility of monitoring its implementation to Central Water Commission in co-operation with the basin states. Shri Vaithialingam, Chief Minister of Pondicherry has generally agreed with this proposal. The joint regulation committees to be headed by the Chief Engineer. CWC would include representatives of the respective State Governments also. I will be*

*obliged if you could please communicate your concurrence with such an arrangement. Formal orders notifying the constitution of the regulation committee will be issued thereafter".*

அதாவது, மத்திய அமைச்சர் சுக்லா, அன்றைய முதல்வர் ஜெயலலிதாவிற்கு **9.6.92** அன்று காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவது பற்றி நடைமுறைப்படுத்த ஒரு குழுவினை அமைக்கலாமா என்றும், அதற்கு உடனடியாக ஜெயலலிதா ஒப்புக் கொண்டு கடிதம் எழுதினால் உடனடியாக ஆணை பிறப்பிக்கலாம் என்றும் எழுதுகிறார்.

காவிரி பிரச்சினை மீது அக்கறை உள்ள இந்த அம்மையார், இந்தக் கடிதத்திற்கு **30.3.1993** அன்றுதான் பதில் எழுதுகிறார். மத்திய அரசு விரும்பும் குழுவிற்கு மாறுபட்ட கருத்தை தெரிவிப்பதாக இருந்தால் கடிதம் எழுதுவதில் தாமதம் என்று கூறலாம். அதுவும் இல்லை. மத்திய அரசின் கருத்தை ஏற்றுக்கொண்டு, குழு அமைக்க ஒப்புக் கொண்டு கடிதம் எழுதுவதற்கு ஒன்பது மாதங்கள் ஆகியிருக்கின்றது.

இன்னும் இதிலே வேடிக்கை, வேதனை என்னவென்றால் முதலமைச்சர் **30.3.93** அன்று, கையெழுத்திட்ட இந்தக் கடிதம், **14.4.93** அன்றுதான் அனுப்பப்பட்டுள்ளது. (Despatch) இவ்வளவு அக்கறையுள்ள அம்மையார்தான் காவிரிப் பிரச்சினையில் நான் துரோகம் செய்து விட்டேன் என்று கூறுகிறார்.

அந்த அம்மையார் உண்ணாவிரதம் **93**ஆம் ஆண்டு இருந்தபோதே செய்தியாளர்களாகிய நீங்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போது - சாதரணமான குழு

போடுவதற்கு ஒப்புக்கொள்வதாகத் தெரிவித்ததையே - "நமக்கு மகத்தான வெற்றி கிடைத்துள்ளது. நடுவர் மன்றத். தீர்ப்பு அமல்படுத்தப்பட வேண்டும் என்று கோரி வந்தோம். அதில் மகத்தான வெற்றி கிடைத்துள்ளது" என்று உங்களிடம் கூறி அப்போதைய அரசின் "தமிழரசு" இதழிலேயே வெளி வந்துள்ளது.

மேலும் 8.7.91 அன்று, தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்திலும் ஜெயலலிதா "நடுவர் மன்றத்தின் ஆணையைச் செயல்படுத்தும்படி, கர்நாடக அரசை வலியுறுத்துமாறு மைய அரசை தமிழக அரசு கேட்டுக் கொள்கிறது" என்றும் தெரிவித்திருக்கிறார்.

இப்போது, வாஜ்பாய் தலைமையிலே உள்ள மத்திய அரசு அந்த இடைக்காலத் தீர்ப்பை செயல்படுத்த உடன்பாடு செய்து கொண்டிருக்கின்றது. இதில் என்ன முரண்பாடு இருக்க முடியும்? இதில் என்ன துரோகம் இருக்க முடியும்?

# காவிரி உடன்பாடு :
# தலைவர்கள் பாராட்டு

# தலைவர்கள் பாராட்டு

**கா**விரி நதிப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். அரசியல்வாதிகளால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்ற என் கருத்தினை **(கலைஞர்)** தாங்கள், பொய்ப்பித்து விட்டீர்கள். இந்த முடிவின் மூலம் இலட்சக்கணக்கான விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளீர்கள்.

**- சி.சுப்பிரமணியம்**
முன்னாள் ஆளுநர்
9-8-1998

**கா**விரி நதி நீர்ப் பங்கீடு குறித்து, பாரதப் பிரதமர் வாஜ்பாய், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்களோடு நடத்திய சமரசப் பேச்சுவார்த்தையின் விளைவாக நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக எவ்வித உடன்பாட்டிற்கும் வர முடியாத தமிழக மற்றும் கர்நாடக அரசுகள், சில அடிப்படையான விஷயங்களில் மனமொத்த கருத்துக்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பது, இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் முக்கியமான மைல் கல்.

அரசியல் நிர்ப்பந்தங்களைக் கடந்து, தங்கள் நிலைகளிலிருந்து சம்பந்தப்பட்ட அனைவரும் சற்று இறங்கி வந்து, எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வினை உருவாக்க நல்ல முயற்சிகளை மேற்கொண்ட பிரதமர் **வாஜ்பாயையும்,** தமிழக முதல்வர் **கலைஞர் கருணாநிதியையும்,** கர்நாடக முதல்வர் **ஜே.எச்.பட்டேலையும்** மற்றும் கேரள, புதுவை மாநிலங்களின் முதல்வர்களையும்

தமிழ்மாநில காங்கிரஸ் சார்பாக நெஞ்சாரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

**- ஜி.கே.மூப்பனார்**
த.மா.கா.
**9-8-1998**

காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை தொடர்பாக, பிரதமர் முன்னிலையில், நான்கு மாநில முதல்வர்கள் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டினை மார்க்சிஸ்ட் கட்சி வரவேற்கிறது. இந்த உடன்பாடு சிறப்பானதொரு ஏற்பாடு என்று மார்க்சிஸ்ட் கட்சி கருதுகிறது.

காவிரிப் பிரச்சினை தொடர்பாக இப்பொழுது ஏற்பட்டுள்ள உடன்பாடு, மற்ற மாநிலங்களுக் கிடையிலேயான நதிநீர் தாவாக்களைத் தீர்க்கவும் ஒரு முன்மாதிரியான உடன்பாடாக விளங்குகிறது.

இந்த உடன்பாட்டின்படி, நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்புக்கேற்ப, தமிழகத்திற்குக் காவிரியில் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட கர்நாடகம் ஒப்புக்கொண்டுள்ளது. இது ஒரு முக்கியமான அம்சம். தமிழ்நாட்டிற்கு 205 டி.எம்.சி. தண்ணீர்விடக் கூடாது என்று கர்நாடக சட்டமன்றத்தில் இரண்டுமுறை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதை மனதில் கொண்டு பார்த்தால், இதன் முக்கியத்துவம் புரியும்.

**- சங்கரய்யா**
இ.கம். (மார்க்சிஸ்ட்)
**9-8-1998**

நீண்டகாலமாகத் தீர்வு ஏற்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு, நிரந்தரத் தீர்வு காணும் வழியில் ஒரு மைல் கல்லாக இம்முடிவு ஏற்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. தொடர்ந்து பல ஆண்டுகளாகப் போராடி வந்த காவிரிப் பாசன விவசாயிகளுக்கு நம்பிக்கை தருவதாகும். இரு மாநில விவசாயிகள் நலனும் பாதுகாக்கக் கூடிய வகையில் தீர்ப்பை அமலாக்கக் காவிரி நதி நீர் ஆணையம் ஏற்பட்டுள்ளது.

காரைக்கால் உள்ளிட்ட தமிழ்நாட்டுக்கு 205 டி.எம்.சி தண்ணீர் வழங்க வேண்டுமென்ற நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை, கர்நாடக அரசு அங்கீகரிக்காமல் இருந்தது. இந்த முடிவின்படி, நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பை ஒத்துக்கொண்டிருப்பது தமிழக விவசாயிகளின் சாகுபடிக்கு உத்தரவாதமளிப்பதாக அமைந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழ் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு, மிகக் கடுமையான பிரச்சினையாக இருந்துவரும் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் அனைத்துத் தரப்பினர் கருத்தறிந்து, இடைவிடாத முயற்சி மேற்கொண்ட தமிழக முதல்வர் கலைஞரின் அக்கறையும், தமிழ்நாடு அரசின் செயல்பாடும் இந்த உடன்பாடு ஏற்பட முக்கியக் காரணமாகும். இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வரவேற்கிறது.

- இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு மாநில செயற்குழு
9-8-1998

பாரதப் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற தமிழகம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி முதல்வர்கள் பேச்சுவார்த்தையில், காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு கண்டறியப்பட்டிருக்கிறது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழக விவசாயிகள், பொது மக்களின் உணர்வுகளை மிகத் தெளிவாக எடுத்துக் கூறி சுமுகமான தீர்வுக்கு வழிகாட்டியிருக்கிறார். தமிழக முதல்வருக்குத் தமிழக மக்கள் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

**- அப்துஸ் சமது**
இந்திய யூனியன் முஸ்லிம் லீக்
**9-8-1998**

காவிரி நதி விவசாயிகளுக்கு வாழ்வு அளிப்பதோடு, தமிழ்நாட்டின் வளமார் - வரலாற்றிலும் தமிழர்தம் இலக்கிய வாழ்விலும் நடு நாயகமாக விளங்கி வருவதை எல்லோரும் அறிவர். இந்நிலையை கேள்விக் குறியாக்க, செய்யப்பட்ட முயற்சிகள் அனைத்தையும் பொன்னியின் செல்வர் கலைஞர் முறியடித்து உள்ளார். எத்தனையோ வகையில் தமிழ்நாட்டுக்குத் தொண்டாற்றி உள்ள கலைஞர் அவர்கள், விடா முயற்சியும், விவேகமும் நிறைந்தவர் என்பதற்கு காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டுக்கு அவர் தேடித்தந்துள்ள இந்த வெற்றி வரலாற்றில் இடம் பெறக்கூடிய ஒன்று.

**- எம்.ஏ.லத்தீப்**
இந்திய தேசிய லீக் தலைவர்.
**9-8-1998**

தமிழக, கர்நாடக மாநிலங்களுக்கிடையே நீண்ட நாட்களாக நிலவி வந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு கிடைத்திருப்பது தமிழகத்திற்கு மகிழ்ச்சியான செய்தியாகும். உச்சநீதிமன்றத்தின் ஆணையின் வழியிலேயே தீர்வு கிடைத்திருப்பது மிகவும் நல்லதாகும். இந்த விஷயத்தில் **முதல்வர் கலைஞர்** நமது பாராட்டுக்குரியவராவார்.

**- திண்டிவனம் இராமமூர்த்தி**
தமிழ்நாடு காங்கிரஸ்
9-8-1998

பல்லாண்டு காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. மாநிலங்களில் பயன்படுத்துவது போக, மீதி தண்ணீரைக் கால்வாய் மூலம் இணைத்து அக்கால்வாய்க்கு "சுதந்திரக் கால்வாய்" என்று பெயர் சூட்டும் திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

**- குமரி அனந்தன்**
தமிழ்நாடு காங்கிரஸ்
9-8-1998

காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பான 205 டி.எம்.சி. தண்ணீரை, தமிழகம் பெறுவதற்கு உறுதி செய்து கொடுத்த இந்தியப் பிரதமர் அவர்களுக்கும், இந்த உறுதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை உச்சநீதி மன்றத்தின் மூலம் மேற்கொண்டு, தொடர்ந்து, நடுவர் மன்றம் அமைவதற்கும், இடைக்காலத் தீர்ப்பைப் பெறுவதற்கும் இப்பொழுது இடைக்காலத் தீர்ப்பை சட்டப்படி நிறைவேற்றுவதற்கும் முயற்சிகள் மேற்கொண்டு தன்னுடைய ஆட்சிக்காலத்தில் வெற்றி பெற்று,

தமிழகத்திற்கு நன்மையைப் பெற்றுத் தந்த தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்களுக்கும், பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- ஆர்.எம்.வீரப்பன்**
எம்.ஜி.ஆர். கழகம்.
**9-8-1998**

**கா**விரி நதிநீர் பிரச்சினையில் பிரதமர் **வாஜ்பாய்** அவர்கள் முன்னிலையில் தமிழக முதல்வர், கர்நாடக முதல்வர், புதுவை முதல்வர், கேரள முதல்வர் ஆகியோர் பேசி, ஒரு இணக்கமான முடிவுக்கு வருவதை தமிழ்நாடு ஜனதாதளம் வரவேற்கிறது.

பல காலமாக தீர்க்கப்படாத இந்தப் பிரச்சினைகளில், தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளின் எண்ணங்களையும் அறிந்து, தமிழக நலன் சிறிதேனும் பாதிக்காத வண்ணம் செயல்படும் தமிழக முதல்வரைப் பாராட்டுகிறேன்.

**- ஜி.ஏ.வடிவேலு**
ஜனதாதளம்
**8-8-1998**

**தீ**ரவே தீராது என்று பலராலும் கருதப்பட்ட காவிரி நதிநீர்ப் பிரச்சினை நல்ல முறையில் தீர்ந்திட வழிவகை பிறந்துள்ளது.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களது **விவேகத்திற்கும்,** கர்நாடக முதல்வர் பட்டேல் அவர்களது **இணக்கமான அணுகுமுறைக்கும்** நல்ல பயன் கிட்டியிருக்கிறது.

பிரச்சினைக்கு ஏதாவது சுமுகத் தீர்வு வேண்டுமென்று ஒன்பது மணி நேரத்திற்கு மேல் தீர்க்கமாகச் செயல்பட்ட பிரதமர் **வாஜ்பாய்** அவர்களையும் நாம் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம்.

**- திருவாரூர் தங்கராசு**
**9-8-1998**

**8** ஆண்டுகளுக்குப் பிறகு நடுவர் மன்ற இடைக்கால உததரவு நிறைவேற்றப்பட்டிருப்பதை வரவேற்கிறோம்.

**- எஸ்.திருநாவுக்கரசு**
எம்.ஜி.ஆர். அ.தி.மு.க
**9-8-1998**

கடந்த 7 ஆண்டுக் காலமாக நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருந்த காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பான 205 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைத்திட, பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற மாநில முதல்வர்கள் கூட்டத்தில் திறம்படச் செயலாற்றி, சாதுர்யமாக முதற்கட்ட வெற்றியைப் பெற்று வந்துள்ள தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் அதற்கு ஒத்துழைப்பு நல்கி பேச்சுவார்த்தைக்கு அனுப்பி வைத்த தமிழகத்தின் அனைத்துக் கட்சி மற்றும், அனைத்துச் சமுதாய, விவசாய சங்கங்களைச் சார்ந்தவர்களுக்கும் செயற்குழு பாராட்டுக் களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது. காவிரி நதி நீரில் தமிழ்நாட்டின் உரிமையை முதற்கட்டமாக வெற்றியுடன் பெற்றுத்தந்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு பா.ம.க. (2) மாநில செயற்குழு "காவிரி கொண்டான்" என்னும் பட்டத்தைப் பெருமையுடன் வழங்கிப் பாராட்டுகிறது.

**- தீரன்**
பா.ம.க.(2)
**9-8-1998**

நீண்டகாலமாக உள்ள காவிரி பிரச்சினை பிரதமர் வாஜ்பாயினால் தீர்ந்து உள்ளது. முதல்வர் கருணாநிதி

வெற்றி பெற்றார். இது தமிழகத்திற்குக் கிடைத்த வெற்றி. இதை பிரதமர் வாஜ்பாய் செய்து சாதனை படைத்து உள்ளார்.

- இல. கணேசன்
பா.ஜ.க.
8-8-1998

காவிரிப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு ஏற்பட்டிருப்பது முதல்வர் கலைஞரின் விடா முயற்சிக்கும், அணுகு முறைக்கும் கிடைத்த வெற்றி.

- பேராயர் எஸ்றா சற்குணம்
இந்திய சமூக நீதி இயக்கம்.
10-8-1998

காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு ஏற்பட்டுள்ளது தமிழக மக்களுக்குக் கிடைத்துள்ள மகிழ்ச்சியான செய்தியாகும். நீண்ட நெடுங்காலமாக தீர்க்கப்படாத காவிரி நதிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது என்று எண்ணும் போது, ஏதோ ஆச்சரியம் நிகழ்ந்துள்ளதாகத் தோன்றுகிறது. முயன்றால் எதையும் சாதிக்கலாம் என்ற பெருமைக்கும் பெருந்தன்மைக்கும் உரிய சாதனையாளராகத் திகழ்கின்றார் தமிழக முதல்வர் கலைஞர்.

தமிழக வரலாற்றில் காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு கண்டு வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்கக்கூடிய புதிய சரித்திரத்தைப் படைத்துள்ளார் தமிழக முதல்வர் கலைஞர். நல்ல உள்ளம் கொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களின் துணையோடு அவர்

எடுத்துக்கொண்ட முயற்சிக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது.

**வை.பாலசுந்தரம்**
- அம்பேத்கர் மக்கள் இயக்கம்.
9-8-1998

காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவது தொடர்பாக கர்நாடகம், தமிழ்நாடு மாநிலங்களுக்கிடையே ஏற்பட்டிருக்கும் உடன்பாட்டைத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வரவேற்கிறது.

1924-ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்பாடு 1974-ஆம் ஆண்டுடன் முடிவடைந்து விட்டது, இனி தமிழ்நாட்டிற்குக் காவிரி நீர் பெறுவதில் உரிமை இல்லை என்று கர்நாடகம் கூறிவந்த நிலையில், இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கும் உரிமை உண்டு என்ற உத்தரவாதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழகக் காவிரிப் பாசன விவசாயிகள் அமைதியாக நடத்திவந்த வலுவான போராட்டங்களுக்குக் கிடைத்த பலனாகும். மேலும், அண்டை மாநிலங்களுடன் நல்லுறவும் தேச ஒற்றுமையும் வலுவடைய இந்த ஒப்பந்தம் துணை புரியும்.

காவிரிப் படுகை விவசாயத்தை நம்பி வாழும் இலட்சக்கணக்கான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் மகிழ்ச்சியடைவார்கள்.

**- தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்**
9-8-1998

**கா**விரி நீர் தாவா பிரச்சினை குறித்து, நடுவர் மன்றத் தீர்ப்பை அமல் படுத்துவது சம்பந்தமாக, டில்லியில் பிரதமர் தலைமையில் 6.8.98 அன்று தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் மற்றும் பாண்டிச்சேரி மாநில முதலமைச்சர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வரவேற்கக்கூடியதாகும். கடந்த பல்லாண்டுகளாக இருந்துவந்த பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு எட்டப்பட்டது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பிரதமர் தலைமையில் 4 மாநில முதலமைச்சர்களும் கொண்ட ஆணையம் அமைக்கப்பட்டு 205 டி.எம்.சி. தண்ணீர் உத்தரவாதம் செய்வது என்று தீர்மானித்திருப்பது, தமிழ்நாடு விவசாயத்தைப் பாதுகாக்கப் பெரிதும் உதவும். மேலும் இந்த முடிவு, சம்பந்தப்பட்ட மாநில மக்களின் ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் அதிகம் உதவுவதாக இருக்கும் என்பதுடன், சுமுகமான நிரந்தரத் தீர்வுக்கு நம்பிக்கை தரும் விதத்தில் அமைந்துள்ளதும் வரவேற்கத்தக்கதாக உள்ளது.

**வி.ஏ.கருப்புசாமி**
விவசாயிகள் சங்கம்.
9-8-1998

**கா**விரி டெல்டா பகுதியில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களும், தஞ்சை வாழ் மக்களும் **காவிரிப்** பிரச்சினையில் வெற்றி கண்டு, **தமிழக மக்களின் உரிமைகளை மீட்டுத் தந்த கலைஞரை நெஞ்சார வாழ்த்துகிறார்கள்.** அவர்களோடு இணைந்து, தமிழ் மாநில

முஸ்லிம் லீக் சார்பில் எங்களின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**- தமிழ் மாநில முஸ்லீம் லீக்.**
9-8-1998

தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சினையான காவிரி நதிநீர்ப் பிரச்சினையினை, எந்தவித பிரச்சினையும் இல்லாமல், தனது **அரசியல் முதிர்ச்சியால்**, தமிழக விவசாயிகளைக் காப்பாற்றுகின்ற வகையில், ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து **விவசாயிகளின் பாதுகாவலனாக இருக்கும் தமிழக முதலமைச்சரை வாழ்த்தி**, தமிழக விவசாயிகள் சார்பாக, உழவர் உழைப்பாளர் கட்சி தனது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

**ஆர்.பி.ராமசாமி**
- உழவர் உழைப்பாளர்க் கட்சி.
10-8-1998

கடந்த முப்பது ஆண்டுகளாகத் தீராமல் இருந்த காவிரி நீர்ப் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு காண்பதற்கு முயன்ற **பிரதமர் வாஜ்பாய்யையும்** நான்கு மாநில முதல்வர்களையும் பாராட்டுகின்றோம்.

காவிரிப் பிரச்சினையில் தமிழக முதல்வர் **கருணாநிதி** அரசியல் ஆதாயக் கண்ணாடி அணிந்து, தமிழர்களின் உணர்வுகளை உசுப்பிவிடும் தவறான நோக்கில் தன் பார்வையைச் செலுத்தாமல், தேசிய நலன் சார்ந்த பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டது அவருடைய அரசியல் முதிர்ச்சியைக் காட்டுகிறது.

**- லோக்சக்தி**
10-8-1998

# காவிரி உடன்பாடு :
# பத்திரிகைகள் பாராட்டு

# பத்திரிகைகள் பாராட்டு

**கா**விரி நடுவர்மன்றத்தின் 1991-ஆம் ஆண்டு இடைக்கால உத்தரவை அமல்படுத்துவதற்கான “திட்டம்” குறித்து முதலமைச்சர்கள் கூட்டத்தில் ஏற்பட்டுள்ள விரிவான ஒப்பந்தம் பிரச்சினைக்குரிய மாநிலங்கள் எதார்த்த உணர்வுடன் செயல்பட்டுள்ளன என்பதைக் காட்டுவதால் பாராட்டுக்குரியது. குறிப்பாகக் கர்நாடக மாநிலம் தேவையில்லாமல் 7 ஆண்டுகளாக நீடித்து வந்த மோதலுக்குத் தீர்வு காண்பதில் எதார்த்த உணர்வை வெளிப்படுத்தியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மிகவும் ஆக்கபூர்வமான அம்சம், இதுவரை அங்கீகரிக்க மறுத்துவந்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைக்கு மதிப்பளிக்க கர்நாடகமே உறுதி அளித்துள்ளது. இதற்கு நடைமுறை அர்த்தம் தமிழ்நாட்டுக்கு ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. தண்ணீர் தருவதற்கு கர்நாடகம் ஒத்துக் கொண்டுள்ளது என்பதாகும்.

தமிழ்நாட்டின் தரப்பில் இது ஒரு பலனளிக்கக்கூடிய அம்சமாகும்.

நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையையும், அந்த ஆணையை அமல்படுத்துவதற்கென உருவாகும் எவ்வித அமைப்பையும் கர்நாடக மாநிலம் தொடர்ந்து எதிர்த்தே வந்திருக்கிறது.

இத்தகைய எதிர்மறையான நிலைப்பாட்டை கர்நாடகம் தற்பொழுதும் தொடர்ந்திருக்குமானால், இப்பொழுது உருவாகியுள்ள நல்ல தீர்ப்பின் பலனை, அது புறந்தள்ளிய நிலைக்கு ஆளாகியிருக்கும்.

டெல்லி கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள திட்டத்தின் அமைப்பு, ஏற்கெனவே மத்திய அரசால் கூறப்பட்ட திருத்தப்பட்ட வரைவுத் திட்டத்திலிருந்து மாறுபட்டுள்ளது. இதில் காவிரி நதி ஆணையம் அதிகாரிகளும், வல்லுநர்களும் அடங்கிய பிரதிநிதித்துவ அமைப்புக்குப் பதிலாக, பிரதமரையும் (தலைவர்) காவிரி தீர முதலமைச்சர்களையும் கொண்ட அரசியல் தோற்றம் கொண்டுள்ள்து. இந்த ஆணையத்திற்கு உதவியாக சட்டபூர்வமல்லாத 'கண்காணிப்புக் குழு' சம்பந்தப்பட்ட மாநிலங்களால் நியமிக்கப்படும் அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

தங்களுடைய அறிவிக்கப்பட்ட நிலைகளில் கண்காணிப்புக்குழுவின் பங்கு மற்றும் நடைமுறைச் செயல்பாடுகள் குறித்து, கடுமையான வேறுபாடுகள் இருந்தபோதிலும், கர்நாடகமும் தமிழ்நாடும் அதிக பரபரப்பின்றி அதை ஒத்துக்கொண்டுள்ளன. இதன் மூலம் இடைக்கால ஆணையைச் செயல்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை உருவாக்கி, அதை அரசிதழில் வெளியிடும் தன்னுடைய சட்டபூர்வக் கடமையை நிறைவேற்ற மத்திய அரசு தயார் நிலையில் உள்ளது. கண்காணிப்புக் குழுவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் பற்றிப் பரிசீலிக்கும்போது, அது, வழக்கமான புள்ளி

விவரங்கள் சேகரித்தல், நன்கு வடிவமைக்கப்பட்ட நீர் மற்றும் வானிலை இணைப்பு அமைப்பை (நெட்வொர்க்) உருவாக்குதல் என்ற அளவிலேயே கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

அனைத்து முடிவுகள் எடுத்தல் மற்றும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அதிகாரங்கள், கட்டுப்படுத்தும் அமைப்புக்குப் பதிலாக ஆணையத்தில் பிரதிநிதிப்படுத்தப்பட்டுள்ள அரசாங்கங்களின் அரசியல் நிர்வாகிகளிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. தனது செயல்படும் முறைகளைத் தாங்களே வகுத்துக் கொள்ளச் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள - அதன் முடிவுகள் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலேயே இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன - ஆணையம், இணக்கமான நிர்ப்பந்தமற்ற அமைப்பாக இருக்கும்.

**- இந்து (10.8.98)**

**ம**த்தியில் உள்ள கூட்டணி அரசுக்கு இது ஒரு சிறப்புச் சேர்க்கும் நல்ல செய்தி. காவிரி பேச்சு வார்த்தையில் சாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் வெற்றியின் மூலம், நதிதீர மாநிலங்களுக்கு இடையிலான தாவாவால் தொடர்ந்து வந்த அச்சுறுத்தலிலிருந்து விடுதலை கிடைத்துள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியதன் மூலம் ஒரு அரசியல் சிக்கல் தவிர்க்கப்பட்டுள்ளது. காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக உச்ச நீதிமன்றம் விதித்த கெடுவுக்குள் பிரச்சினையைத் தீர்க்க இந்த ஒப்பந்தம் அரசுக்கு

உதவியுள்ளது. குறிப்பாக, பொறுமையான, தொடர்ந்த முயற்சிகளின் பின்னணியில் பிரதமர் கொண்டிருந்த அரசியல் உறுதி குறிப்பாகப் பாராட்டுக்கு உரியது.

பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் தனிப்பட்ட தலையீடு மாநில அரசியலால் தொடர்ந்து நிலவி வந்த தேக்க நிலையிலிருந்து, விடுவிக்க நிச்சயமாகத் துணை புரிந்துள்ளது. காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை அமல்படுத்துவது தொடர்பான 7 ஆண்டு மோதலுக்கு ஒரு முடிவு ஏற்பட்டுள்ளது என்ற முக்கியத்துவத்தை அலட்சியப் படுத்திவிடக்கூடாது. அதை அமல்படுத்துவதற்குக் காவிரி தீர ஆணையம் அமைக்க ஒப்புக் கொண்டதன் மூலம், கர்நாடகம் கடைசியாக அந்தத் தீர்ப்புக்கான கொள்கை ரீதியான ஒப்புதலை வெளிப்படுத்தியுள்ளது. தமிழ்நாடு தனது பங்குக்கு, மேல்நிலை நதிதீர மாநிலத்திற்குக் கடுமையான சட்ட அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதால், தனது முந்தைய வற்புறுத்தலை விட்டுக்கொடுத்து காவிரி தீர ஆணையம் உருவாக வாய்ப்பளித்துள்ளது. இந்த ஒப்பந்தம், கேரளா மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் நலன்கள் புறக்கணிக்கப்படாமல் பார்த்துக் கொண்டுள்ளது.

**- இந்தியன் எக்ஸ்பிரஸ் (10.8.98)**

**கா**விரிப் பிரச்சினையில், முதல் முறையாக ஆக்கபூர்வமான முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. பிரதமர் தலைமையில் நான்கு மாநில முதல்வர்கள் கூடி, நடுவர்

மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கான திட்டத்தை இறுதி செய்தது பாராட்டத்தக்க சாதனை.

தமிழகத்துக்கு 205 டி.எம்.சி. நீர் அளிக்க கர்நாடகம் சம்மதித்திருக்கிறது. பாசன அணைகளின் மீதான கட்டுப்பாடு பறிபோய் விடுமோ என்ற கர்நாடக விவசாயிகளின் அச்சம் நீக்கப்பட்டு விட்டது. இரு மாநில விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்காக நடத்திய பேச்சு தோல்வியடைந்தபோதிலும் இம்முறை அம்முயற்சியில் வெற்றி கண்டுவிட்டனர்.

விவசாயிகளுக்குக் கிடைத்த சுதந்திரப் பொன்விழாப் பரிசாக இந்த உடன்பாட்டைக் கூறலாம். நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பை நிறைவேற்றுவதிலும் இதுபோன்ற அணுகுமுறை மேற்கொள்ளப்படும் என்ற நம்பிக்கை துளிர்விட்டுள்ளது....

**- தினமணி (10.8.98)**

**கா**விரி நடுவர் மன்றம் 1991-ல் அளித்த இடைக்காலத் தீர்ப்பை அமலுக்குக் கொண்டுவர ஏழு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன!

காவிரி கண்காணிப்புக் குழுவுக்கு இந்த இடைக்காலத் தீர்ப்பு வழங்கிய அதிகாரங்கள் கர்நாடக மாநிலத்துக்கு ஏற்புடையனவாக இல்லை. 205 டி.எம்.சி தண்ணீர் தமிழகத்தக்குத் தந்தே ஆக வேண்டும்; அவ்வாறு தராவிட்டால், கண்காணிப்புக் குழு கர்நாடக மாநிலத்தில் பலவந்தமாகச் செயல்பட்டு, தண்ணீரைத் திறந்துவிடச் செய்யலாம் என்கிற அளவுக்கு அதிகாரங்கள்

வழங்கப்பட்டிருந்தன. இடைக்காலத் தீர்ப்பின் இப்பகுதியைத்தான் கர்நாடகா அரசு பலமாக எதிர்த்தது. இதில் வியப்பில்லை.

ஆட்சேபணைக்குரிய இதுபோன்ற பகுதிகளை மாற்றி, காவிரி நதி ஆணையம் ஒன்றை நிறுவி, அதற்கு இந்தியப் பிரதமரைத் தலைவராக்க, சம்பந்தப்பட்ட நான்கு மாநிலங்களும் ஒப்புக்கொண்டுள்ளன. உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டினாலும் அது நிர்ணயித்த ஆகஸ்ட் 12 கெடுவினாலும்தான் இக்காரியம் நிகழ்ந்திருக்கிறது.

காவிரி பிரச்சினைக்குப் பிறந்துள்ள 'தீர்வை' பி.ஜே.பி. ஒரு வெற்றியாகவே கொண்டாடுகிறது. தமிழக முதல்வர் அதை நன்றியுடன் வரவேற்றிருக்கிறார். எதிர்பார்த்தது போலவே ஜெயலலிதா புதிய காவிரி பகிர்வுத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்துச் சாடியிருக்கிறார்.

நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அப்படியே அமல்படுத்தியிருந்தால் என்ன ஆகியிருக்கும்...? இதற்கென்றே காத்திருந்தது போல பிரச்சனையை அரசியலாக்கி, உள்ளூர் தமிழர்களை 'உண்டு - இல்லை' என்று பண்ணிவிட, கர்நாடகத்தில் வன்முறைக் கூட்டம் காத்திருக்கிறது. இலட்சக்கணக்கான தமிழர்களின் உயிர், உடைமைக்கும் வேலை வாய்ப்புக்களுக்கும் பெரும் கேடு உண்டாகும்.

எவ்வகையில் அணுகித் தீர்க்கப்பட்டிருந்தாலும், காவிரிப் பிரச்சனையானது ஏதேனும் ஒரு தரப்புக்கு அதிருப்தியையும் ஏமாற்றத்தையுமே அளித்திருக்கும். தற்போது கண்டுள்ள

தீர்வு, இருதரப்புக்கும் அதிருப்தியை குறைந்தபட்சமாக ஆக்கியிருக்கிறது என்று சொல்லலாம். எனவே எதிர்க்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக இந்தத் திட்டத்தை ஜெயலலிதா எதிர்ப்பதென்பது, அவருக்கு கௌரவத்தைச் சேர்க்கப்போவதில்லை, குறைக்கவே செய்யும்.

**- கல்கி (23.8.98)**

**ஒ**ரே ஒரு சொல்-காவிரி. ஆனால் அது எழுப்பும் நினைவலைகள் எத்தனை! கரிகாலன், ராஜராஜன், இளங்கோ, கம்பன், ஞானசம்பந்தர், ஆழ்வார்கள், தாயுமானவர், தியாகய்யர், அருணாச்சல கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதி, ஊத்துக்காடு வெங்கட சுப்பையர், உ.வே.சா., மாயூரம் வேதநாயகம் பிள்ளை, கல்கி, ந.பிச்சமூர்த்தி, தி.ஜானகிராமன் கால வெள்ளத்தில் கரைந்து போகாத கல்வெட்டாய் நிலை கொண்ட பெயர்கள். அனைத்திற்கும் வளம் சேர்த்தவள் காவிரி. தமிழர்களுக்கு காவிரி தண்ணீர் அல்ல, தாய்ப்பால். கலாச்சாரத் தொட்டில், இசை, இலக்கியம், பக்தி, சரித்திரம், ஞானம், புத்திக்கூர்மை என்று எத்தனையோ முத்திரைகளின் முகவரி.

காவிரி நீர், இனி, தமிழர்களுக்குக் கானல் நீராக ஆகி விடுமோ என்ற அச்சம் கடந்த வாரம் தீர்ந்தது. நெருடலாகத் துவங்கிய பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்தது குறித்து மகிழ்ச்சி அடையாதவர்கள் இருக்க முடியாது. அக்கறை, அனுபவம், சீண்டப்படுகிற நேரத்திலும் சிதறி விடாத பொறுமை, என்ற தங்கள் பலங்களைப் பயன்படுத்தி மூத்த தலைவர்கள் இந்தத் தீர்வினைக் கண்டிருக்கிறார்கள்.

**- குமுதம் (20.8.98)**

காவிரிப் பிரச்சினையில் இருக்கும் சிக்கல்கள் குறைவதற்கு, பல வருடங்கள் கழித்து இப்போது ஒரு வாய்ப்பு உருவாகி இருக்கிறது. பிரச்சினை தீர்ந்து விட்டது என்று நினைப்பது சிறுபிள்ளைத்தனமாக இருக்கும்; அதே சமயத்தில் பிரச்சினை தீர்வதற்கான பாதை போடப்பட்டிருக்கிறது என்பதை உணர மறுப்பது, வெறும் அடாவடித்தனமாகத்தான் இருக்கும்.

பலரும் சேர்ந்து இரு மாநிலங்களுக்கிடையே உணர்ச்சிகளைக் கிளப்பி விட்டு, ஒரு குரோத பாவத்தை வளர்த்துவிட்ட நிலையில், பேச்சு வார்த்தைகள் மூலம் இந்த அளவு ஒருமித்த கருத்து ஏற்பட்டதே ஒரு சாதனைதான் என்பதில் சந்தேகமில்லை. **இதற்காகக் கடும் முயற்சி செய்த பிரதமர் வாஜ்பாய், அரசியல் விவேகத்தைக் காட்டிய தமிழக முதல்வர் கருணாநிதி, துணிவுடன் செயல்பட்ட கர்நாடக முதல்வர் பட்டேல் ஆகிய மூவரும் அரசியல் ஆதாயங்களுக்கு அப்பாற்பட்டு நின்று, இரு மாநில மக்களுக்கும் நன்மை செய்ய முயற்சித்திருக்கிறார்கள்.**

"காவிரி ட்ரிப்யூனலின் இடைக்கால உத்தரவின்படி 205 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டிய கர்நாடகம், அதற்குச் சற்று குறைத்துக் கொடுக்க ஒப்புக் கொண்டாலும், தமிழகம் அதை ஏற்று, பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும்'' என்பதுதான் நமது கருத்தாக இருந்து வந்திருக்கிறது. இப்போதோ தமிழகம் இப்படி விட்டுக் கொடுப்பதற்குக் கூட அவசியம் இல்லாமல், 205 டி.எம்.சி. தண்ணீர் தர கர்நாடகம் இசைந்துள்ளது. ஏழு ஆண்டுகளாக,

தான் காட்டி வந்த பிடிவாதத்தை, இப்போதுதான் முதன் முறையாகக் கர்நாடகம் தளர்த்தி இருக்கிறது.

காவிரிப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக நாம் கூறவில்லை. ஆனால், நாம் ஏற்கெனவே சொன்ன மாதிரி அதற்கான பாதை போடப்பட்டிருக்கிறது. அதில் பயணம் செய்யும்போது ஆங்காங்கே தடங்கல்கள் வரத்தான் செய்யும். அவ்வப்போது பேச்சு வார்த்தை மூலம்தான் அந்தத் தடங்கல்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. என்ற உத்தரவை, கர்நாடகம் ஏற்கிறது என்பது - ஏழு வருடங்களாக நடக்காத அதிசயம். அவர்கள் இதில் விட்டுக் கொடுத்திருக்கும் போது, தமிழகமும் கொஞ்சம் விட்டுக் கொடுத்து, அவ்வப்போது ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டால், அதில் தவறில்லை.

இரு மாநில மக்களிடையே விரோதத்தை வளர்த்துக்கொண்டிருந்த ஒரு விவகாரத்தில், ஒரு உடன்பாடு ஏற்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம். வாஜ்பாய், கருணாநிதி, பட்டேல், மற்றும் கேரள, பாண்டிச்சேரி முதல்வர்கள் பாராட்டுக் குரியவர்கள்.

- துக்ளக் (19.8.98)

அப்பாடா, நினைக்கும்போதே உள்ளத்தில் காவிரி பாய்கிறது, எத்தனை ஆண்டுகள்! எத்தனை போராட்டங்கள்! எத்தனை பிடிவாதம்! எத்தனை அரசியல்! எல்லாமே முடிந்து போய் இப்போது சுபம்.

காவிரி வரட்டும்; பயிர்களுக்கு விளைச்சல் தரட்டும். பூமித்தாய் தாகத்தை,காவிரித்தாய் தீர்க்கட்டும். பார்த்துப் பரவசப்படுவோம்.

வயிற்றுக்குக் கிருஷ்ணா நீர், வயலுக்குக் காவிரி நீர் என்று கொண்டு வந்தவர் கலைஞர் என்று வரலாறு குறித்துக் கொள்வதை விட, அவருக்குப் பெரிய பாராட்டு விழா வேறு என்ன இருக்க முடியும்!

**- சாவி (20.8.98)**

பிரதமர் தலைமையில் புதிதாக ஒரு காவிரி ஆணையம், அதை அடுத்து,கண்காணிப்புக் குழு உருவாகப் போகிறது. இடைக்காலத் தீர்ப்பாக 205 டி.எம்.சி.காவிரி நீர் தமிழகத்துக்குத் திறந்து விடப்படுகிறது. ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு தீர்ப்பு அமலாகிறது!

"காவிரிப் பிரச்சினையை வெறும் அரசியல் ஆக்க விடாமல், நியாய உணர்வோடு அணுகுவோம்... முழு உடன்பாடு காணுவோம்" என்று இரு மாநிலத்திலும் மக்கள் சுமுகமாக நினைத்தாலேயே பிரச்சினை தீர்ந்துவிடும்.

சுதந்திரப் பொன்விழா கொண்டாட்டங்கள் முடிவடையும் இத்தருணத்தில் காவிரிப் பிரச்சினையும் ஒரு முடிவுக்கு வந்தால், அதுவே நமக்கெல்லாம் சிறந்த பொன்விழாப் பரிசு!

**- ஆனந்த விகடன் (16.8.98)**

பல வருடங்களாகத் தீராமல் இருந்த காவிரிப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைத்திருக்கிறது. ஒரு மவுன யுத்தம் முடிவுக்கு வந்திருக்கிறது. மக்கள் மத்தியில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

தனது அரசுக்குக் கிடைக்கும் வாக்குகளை விட, வாக்குறுதியை மதிப்பவர் என்பதை பிரதமர் வாஜ்பாய்

நிரூபித்திருக்கிறார். அரசியலமைப்புக்கு உட்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரும், மற்ற நான்கு மாநில முதலமைச்சர்களும் கூடிப்பேசி, விவாதித்து எடுத்த முடிவு இது. புதிய வரைவுத்திட்டம் உடனடியாக அரசிதழில் மத்திய அரசால் வெளியிடவும் பட்டிருக்கிறது. பத்திரிகைகள், பொது மக்கள் உட்பட எல்லோரும் இதை வரவேற்றுக் கொண்டாடுகிறார்கள்.

**- குங்குமம் (21.8.98)**

**கா**விரிப் பிரச்சினையில் புதிய திருப்பம் கிடைத்திருக்கின்றது. தமிழ்நாட்டுக்குப் பெரும் வெற்றி - கடந்த பல ஆண்டுகாலமாக நிலுவையில் இருந்த பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வு கிடைத்துள்ளது - வரைவுத் திட்டத்தை உச்சநீதி மன்றத்தில் மய்ய அரசு சமர்ப்பிக்கும் என்கிற செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எல்லாம் நல்லவிதமாக அமைந்து, யாரும் பாதிக்கப்படாமல் இந்தப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு கிட்டுமானால் அதைக்கண்டு மகிழ்ச்சி அடைவது திராவிடர் கழகமாகத்தான் இருக்கும்.

**- விடுதலை (10.8.98)**

**பி**ரதமர் முன்னிலையில் தமிழக, கர்நாடக, கேரள, புதுவை முதல்வர்கள் நடத்திய பேச்சு வார்த்தையின் பலனாக, நீண்ட காலமாக இருந்துவந்த காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் நல்லதொரு உடன்பாடு ஏற்பட்டுள்ளது. பிரச்சினையில் தொடர்புடைய அனைத்து மாநிலங்களாலும் இந்த உடன்பாடு ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி, கர்நாடகம் தமிழகத்திற்கு

ஆண்டொன்றுக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிடுவது என்பது இந்த உடன்பாட்டின் மூலம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நான்கு மாநிலங்கள் தொடர்புடைய காவிரிப் பிரச்சினையை நீதிமன்ற நடவடிக்கை மூலம் மட்டும் தீர்த்துவிட முடியாது. பரஸ்பர நலனைக் கருத்தில்கொண்டு எந்த ஒரு தரப்பிற்கும் பாதகம் ஏற்படாமல், பேச்சு வார்த்தை மூலமே தீர்க்கப்பட முடியும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. இதன்படி, இப்பொழுது நான்கு மாநில முதல்வர்களும் பேச்சு வார்த்தை நடத்தி நல்லதொரு உடன்பாட்டினை ஏற்படுத்தியுள்ளனர்.

**- தீக்கதிர் (11.8.98)**

**பி**ரதமர் வாஜ்பாய் அவர்களின் தீவிர முயற்சி காரணமாகவும், **முதல்வர் கலைஞர் அவர்களின் அறிவார்ந்த அணுகுமுறை** காரணமாகவும், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களின் முதல்வர்கள் அளித்த ஒத்துழைப்பின் காரணமாகவும், காவிரிப் பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வு ஏற்பட்டிருக்கிறது.

நாட்டோரும், நடுநிலையாளர்களும், ஏடுகள் பலவும் இந்த ஒப்பந்தத்தைப் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பாராட்டியிருக்க - இலட்சக்கணக்கான விவசாயிகளின் மனங்களைக் குளிரச் செய்யும் வகையில் அமைந்துள்ள இந்த ஒப்பந்தத்தைப் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள்.

1968ஆம் ஆண்டு தொடங்கி, சுமார் முப்பது ஆண்டுக்காலமாகக் காவிரி டெல்டாப் பகுதி விவசாயிகளைத் தவிக்கவைத்துக் கொண்டிருந்த காவிரிப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வர அரும்பெரும் முயற்சிகளை

மேற்கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள் மிக்க அடக்கத்துடன்,

"இந்த வெற்றியை எனது தனிப்பட்ட வெற்றியாகக் கருதவில்லை. நான்கு மாநில விவசாயப் பெருமக்களுக்குக் கிடைத்த வெற்றியாகவே இதைக் கருதுகிறேன்"

- என்று ஒருமுறை அல்ல; இருமுறை அல்ல; திரும்பத் திரும்ப இந்தக் கருத்தை வலியுறுத்தியபடியே இருக்கிறார்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும், அரசியல் பகை காரணமாகவும் ஆத்திரப்பட்டு - காவிரிப் பிரச்சினையைச் சிலர் அரசியலாக்க முனைவது எந்த விதத்தில் நியாயம்?

அறுபதாண்டுக் காலத்திற்கு மேல் இந்தத் தமிழினத்திற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு அரும்பணியாற்றி வரும் கலைஞர் ஒரு நெருப்பு. அந்த நெருப்பில் ஈக்கள் மொய்ப்பதாக - யாராவது கூறினால் அப்படிச் சொல்பவரின் புத்திசாலித்தனம் சந்தேகத்திற் குரியது என்பதை தமிழ்மக்கள் அறிவார்கள். மொத்தத்தில் சொல்லப்போனால் - காவிரிப் பிரச்சினையில் கலைஞரை குறை சொல்வது - பெற்ற தாயையே சந்தேகப்படுவதற்கு ஒப்பாகும்.

- முரசொலி (12.8.98)

காவிரி பிரச்சினை தொடர்பாக பிரதமர் முன்னிலையில் புதிய திட்டத்திற்கு 4 மாநில முதல்வர்களும் ஒப்புதல் தெரிவித்துள்ளனர். தமிழ்நாட்டுக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் தர கர்நாடகம் ஒப்புக் கொண்டது. தமிழக முதல்வர் கருணாநிதி தீவிர முயற்சியால் காவிரி பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டு உள்ளது.

– தினகரன் (8.8.98)


□ □ □

தமிழரசு அச்சகம், சென்னை-600 002.

சிங்கப்பூர் - மலேசியாவில்

# கலைஞர்





# சிங்கப்பூர் – மலேசியாவில்
# கலைஞர்

சிங்கப்பூரில், 6–1–1999 அன்றும்,
கோலாலம்பூரில், 9–1–1999 அன்றும்,
தமிழ் அமைப்புகள் அளித்த வரவேற்பில்
முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
ஆற்றிய உரைகளின் தொகுப்பு.

*வெளியீடு:*
இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

சிறப்பு வெளியீடு எண் : 16

'தமிழரசு' இலவச வெளியீடு

ஜனவரி – 1999

*வெளியிடுபவர் :*

இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை–600 002.

# சிங்கப்பூரில், தமிழ் அமைப்புகள் அளித்த வரவேற்பில், முதலமைச்சர் கலைஞர் 6–1–1999 அன்று, ஆற்றிய உணர்ச்சிமிகு உரை.

"சிங்கப்பூரில் 4ஆம் தேதி காலையில் வந்து இறங்கிய நான், வணிகத்துறை நண்பர்கள், தொழில் முனைவோர், அவர்கள் சார்ந்துள்ள குழுக்கள் சந்திப்புடன் சிங்கப்பூர் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு. மா போ டான் அவர்களையும் தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. ஜார்ஜ் இயோ அவர்களையும், சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் துணைத் தலைவர் திரு. கூன் கோக் லூன் அவர்களையும், நேற்று மாலையில் சிங்கப்பூர் நாட்டின் பிரதமர் மாண்புமிகு கோ சோக் டோங் அவர்களையும் சந்தித்துப் பேசியிருக்கிறேன்.

இப்போது உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். அவர்களிடமெல்லாம் நான் பேசினேன். இப்போது பேசாமல் உங்களையெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது. அந்த நிலையில் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

கெழுதகை நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல், என்னுடைய அறுபதாண்டு காலப் பொதுவாழ்க்கையில் இந்தச் சிங்கப்பூருக்கு வரவேண்டும், வரவேண்டும் என்று பலமுறை முயற்சியெடுத்தும் கூட வர இயலாத சூழல் ஏற்பட்டு – கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் மாத்திரம் கலந்துகொள்ள ஒரு நாள் வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றுத் திரும்பினேன்.

இப்போது சிங்கப்பூரில் மூன்று நாட்களும் மலேசியாவில் மூன்று நாட்களும் என்று தமிழகத்திற்குத் தேவையான சில பிரச்சினைகளை பேசுவது மாத்திரமல்லாமல், எனக்கு மிகமிகத் தேவையாக இருக்கின்ற உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

நான் உங்களையெல்லாம் "என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே" என்று அழைக்கும்போது நீங்கள் மாத்திரம் உணர்ச்சி வயப்படவில்லை; மகிழ்ச்சி அடையவில்லை; நான் எந்த அளவிற்கு உணர்ச்சி வயப்படுகிறேன் என்பதை நீங்கள் அனைவரும் நன்கறிவீர்கள்.

இன்று சிங்கப்பூரில் நடைபெறுகின்ற இந்த விழா மேடையில் எனக்கொரு புது அனுபவம். எப்போதும் நான் பேசுகின்ற விழா மேடையானாலும், மாநாடு ஆனாலும் மேடையிலே பல தலைவர்கள் இருப்பார்கள், அமைச்சர்கள் வீற்றிருப்பார்கள், எங்கள் கட்சியின் முன்னணித் தளபதிகள் வீற்றிருப்பார்கள். இன்று என்னைத் தன்னந்தனியனாக மேடையிலே நிறுத்தி நீங்கள் வேடிக்கை பார்க்கிறீர்கள். என்னை நீங்கள் தன்னந்தனியாக நிறுத்தினாலும் உங்களை நான் தன்னந்தனியனாக ஆக்கமாட்டேன் என்ற உறுதியை இந்த நல்ல நிகழ்ச்சியில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அன்பு மழையில் நனைய வாய்ப்பளித்தமைக்கு நன்றி

மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும் என்று சிலப்பதிகார வரிகள் செப்புவதைப் போல இன்றைக்குச் சிங்கப்பூர் தமிழர்கள் பலர் அந்த வரிகளை மாற்றி மாமழை தூற்றுதும், மாமழை தூற்றுதும் என்று கூறுகின்ற அளவிற்கு வரவேண்டுமென்று நினைத்த இன்னும் பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்கள் வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். ஆனால், இந்த மழையிலும் நான் உங்கள் அன்பு மழையில் நனைவதற்கு ஒரு வாய்ப்பை அளித்தமைக்காக என்னுடைய நன்றியை உங்கள் காலடிகளில் காணிக்கையாக்குகிறேன்.

நான் உங்களில் ஒருவன். தமிழகத்தில் தஞ்சைத் தரணியில் திருக்குவளை என்கிற ஒரு கிராமத்தில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்த நான் இங்கே வந்தமர்ந்ததும் மேடையை உற்றுப் பார்த்தேன். அதிலே வைக்கப்பட்டுள்ள பதாகையைக் கவனித்தேன். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்று எழுதியிருக்கும் இந்தச் சொற்றொடர்கள் எல்லாம் உங்களுடைய அன்பு எனக்கு வழங்கியது. அந்தச் சொற்றொடரின் தொடர்ச்சியாக இருக்கின்ற ‘கருணாநிதி’ என்பதுதான் எனக்குச் சொந்தமானது. மற்ற சொற்கள் எல்லாம் உங்களுக்குச் சொந்தமானவை – நீங்கள் வழங்கியவை. அந்தப் பாச உணர்வோடு சில கருத்துக்களை இந்த மேடையில் நின்று உங்களோடு பரிமாறிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

## உலகம் ஒன்றே ஆனாலும் தனித்தனி நாடுகள் உள்ளன

இன்று உலகம் விஞ்ஞான யுகத்தில் மிக மிகச் சுருங்கிக்கொண்டே வருகிறது. ஒரு காலத்தில் லிங்கன் கொல்லப்பட்ட செய்தி ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் இலண்டன் மாநகருக்கே கிட்டியது என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்குத் தகவல் தொடர்பு பஞ்சமாக இருந்த கால கட்டம் அது. ஆனால், இன்றைக்கு உலகத்தையே சுருங்க வைக்கக்கூடிய வசதி வாய்ப்புகள், தகவல் தொடர்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. குளோபலிசேஷன் (Globalisation) என்று சொல்கிற இந்த ஆங்கில வார்த்தைக்கு உலக மயமாக்குதல் என்று பொருள். எனினும் Think Globally Act Locally என்றும் சொல்கிறார்கள்.

உலக மயமாகிக் கொண்டிருப்பதால் நாட்டின் எல்லைக் கோட்டை யாரும் அழித்துவிட விரும்புவதில்லை. ஒரே உலகம் என்று சொல்லப்பட்டாலும் தனித்தனி நாடுகள் இருக்கின்றன. அந்தத் தனித்தனி நாடுகளில் தனித்தனி தேசிய இனங்கள் இருக்கின்றன. அந்தத் தேசிய இனங்கள் வாழ்கின்ற தனித்தனி மாநிலங்கள் இருக்கின்றன.

## இந்திரா காந்தியின் வார்த்தையால் நான் அடைந்த மகிழ்ச்சி

ஆனால், நம்முடைய சங்க காலத்துப் புலவர் கணியன் பூங்குன்றன் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று ஒரே உலகத்திற்கு அழைப்பு விடுத்தார். பிரகடனம் செய்தார். அதை இந்தியாவின் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ருஷ்ய நாட்டிற்குச் சென்றிருந்தபோது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற இந்தத் தமிழ்ச் செய்யுளின் முதல் வரியை எடுத்துச் சொல்லி, இந்தப் பாடலைப் பாடியவர் தமிழ்நாட்டுப்புலவர் என்று சொன்னபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆனால் மன்னித்துக் கொள்ளவேண்டும் – தமிழர்களில் சிலர் கேளிர் என்பதை கொஞ்சம் நீட்டி யாதும் ஊரே யாவரும் கேளீர் – எல்லா ஊரும் நம்முடையதே, அதை எல்லோரும் கேளுங்கள் என்று அந்தப் பொருளினைக் கருதுகின்ற நிலை இருப்பதையும் நான் எண்ணி நாணாமல் இருக்க முடியவில்லை. யாதும் ஊரே யாரும் கேளிர் என்று ஒரே உலகச் சிந்தனையோடு அன்றைக்குப் பாடல் எழுதிய கணியன் பூங்குன்றன் கூட, தன்னுடைய ஊரை மறக்கவில்லை. அந்தப் புலவனுடைய பெயர் கணியன். அவன் பிறந்த ஊர் பூங்குன்றம். அந்தப் பூங்குன்றத்தின் பெயரை மறக்காமல் தன் பெயரான கணியன் என்பதுடன்

இணைத்து கணியன் பூங்குன்றன் என்று தன்னை அழைக்குமாறு செய்தார்.

அதைப் போல உலகத்தில் வாழ்கிற நாம் நம்மைத் தமிழர்கள் என்று அடையாளம் காட்டிக் கொள்வது கணியன் பூங்குன்றன் தான் பூங்குன்றத்திற்குச் சொந்தக்காரன் என்பதை அடையாளம் காட்டிக் கொண்டதைப் போன்றதாகும். அந்த உணர்வின் காரணமாகத்தான் சிங்கப்பூரில் கூட Speak Mandarin என்ற பிரச்சாரம் நடைபெற்று வருகிறது. மொழி என்பது உள்ளங்களோடு உறவாட, தொடர்பு கொள்ள ஒரு கருவியாகப் பயன்படுகிறது என்பது மொழி ஆய்வாளர்களும், ஆராய்ச்சியாளர்களும் உணர்ந்த ஒரு உண்மை. மொழி ஒன்று தான் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் பொதுவானது.

நிகழ்காலம், கடந்த காலம், எதிர்காலம் என்ற இந்த மூன்று காலங்களுக்கும் தொடர்புடையது மொழிதான். நமது தமிழ்மொழியைப் பொறுத்தவரை மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியம் தோன்றியது என்ற வரலாற்றுப் பெருமை கொண்டது.

## தொல்காப்பியத்திற்கும் முற்பட்டது தமிழ்மொழி

தொல்காப்பியத்தின் கால கட்டம் 3,000 ஆண்டுகள் என்றாலுங்கூட அதற்கு முன்பே தமிழ் இலக்கியங்கள் தோன்றிவிட்டன என்றே சொல்லவேண்டும். எப்போதும் ஒரு மொழி உருவான பிறகுதான் அந்த மொழி சார்ந்த இலக்கியங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோன்றிய பிறகுதான் இலக்கணம் அதற்காக வகுக்கப்படும். அப்படித்தான் **3000** ஆண்டு காலத்தைக் கொண்ட தொல்காப்பிய இலக்கணம் வரையப்பட்டிருந்தால் அதற்கு முன்பே மூத்த மொழியாக நம்முடைய தமிழ் மொழி இந்த உலகத்தில் விளங்கி இருக்கின்றது. தொல்காப்பியத்திலே கூடப் பல இடங்களில் இலக்கணத்தை வகுத்துச் சொல்கின்ற நேரத்தில் – முன்னோர் சொல்லியிருப்பது போல – என்ற எடுத்துக்காட்டுகள் வரும்.

உதாரணமாக

*“நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென*
*வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே”*

– என்று தொல்காப்பியம் கூறுகிறது.

அதாவது கடந்த காலத்தில் உரைத்திருக்கிறார்கள் என்று தொல்காப்பியத்திலே இலக்கணம் குறிப்பிடுகிறதென்றால் தொல்காப்பியத்திற்கும் முற்பட்டது நம்முடைய தமிழ் மொழி.

## தொல்காப்பியமும் திருக்குறளும்

அத்தகைய தமிழ்மொழிக்கு சொந்தக்காரர்களாகிய நமக்குக் கிடைத்த மற்றொரு கருவூலம் உலகம் போற்றும் கருவூலம் – உலகப் பொதுமறையாகப் பாராட்டப்படுகின்ற கருவூலம் திருக்குறள். அது ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. மதச்சார்பற்ற பொதுவான இலக்கியம், மறை, கீர்த்தி வாய்ந்த இலக்கண இலக்கியங்களுக்கு நாம் சொந்தக்காரர்கள் என்பதை நிலை நாட்டுகின்ற அடையாளங்களாகத்தான் தொல்காப்பியமும் திருக்குறளும் நிலவுகின்றன.

உங்களுக்குத் தெரியும். உலகப் புகழ் எய்திய கிரேக்கப் பாரம்பரியம் இப்போது இல்லை. எகிப்திய மொழிக் கலாச்சாரமும் இப்போதில்லை. ஆனால், இன்னமும் இலங்கையில் தொல்காப்பியத் தமிழைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ர–என்ற எழுத்து சொல்லின் முதலில் வரக்கூடாது என்பது இலக்கணவியல். ஆனால் நாம் “ரத்தம்” என்றுதான் ர–என்ற எழுத்தைச் சொல்லின் முதலில் வைத்து எழுதிக் கொண்டிருக்கிறோம். இலங்கையில் இ–என்ற எழுத்தைச் சேர்த்து “இரத்தம்” என்றுதான் எழுதுவார்கள். எனவே இலங்கைவாழ் தமிழர்கள் இன்னமும் தொல்காப்பிய காலத்தை மறக்கவில்லை. இது ஒரு எடுத்துக்காட்டு.

## புரட்சிக்கவிஞன் பாரதிதாசனின் அழகிய சித்தரிப்பு

நம்முடைய தமிழுக்கு எத்தனையோ பொருள் உண்டு. இனிமை என்றும் புதுமை என்றும் பழமை என்றும் எத்தனையோ பொருள் உண்டு. எத்தனையோ சிறப்பு உண்டு. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அழகான வரி ஒன்றினால் சித்தரித்தார். “தமிழுக்கும் அமுதென்று பேர்” என்று பாரதிதாசன் எழுதினார். அது என்ன தமிழுக்கும் என்கிற அந்த உம் தேவைதானா என்றால் தேவைதான். ஏனென்றால் அமுது என்று ஏற்கெனவே ஒன்று இருக்கின்றது. அமுதுக்கு அமுது என்று பெயர் இருக்கின்ற காரணத்தால் தமிழுக்கும் அதுதான் பெயர் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னார்.

## அமிர்தம் குறித்து திருக்குறளில் விளக்கம்

நான் அமிழ்து என்று சொல்கிற நேரத்தில் பலருக்கு – பகுத்தறிவு எண்ணம் படைத்தவர்களுக்கு – அப்படியானால் அந்த எண்ணம் எனக்கில்லை என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது – பகுத்தறிவு எண்ணம் உள்ள எல்லோருக்குமே இதென்ன கருணாநிதி திடீரென்று அமிர்தம் என்பதை நம்புகிறானே – அமிர்தம் என்றால் தேவாமிர்தம் என்று சொல்வார்களே அதுவல்லவா என்று எண்ணக்கூடும். ஆனால் வள்ளுவர் அமிர்தம் என்றால் என்ன என்பதை விளக்குகிறார். அவரே அமிர்தத்தை ஒரு அதிகாரத்திலே குறிப்பிடுகிறார்.

மக்கட்பேறு என்ற 7வது அதிகாரத்தில் திருவள்ளுவர்

*"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்*
*சிறுகை அளாவிய கூழ்"*

– என்று குறிப்பிடுகிறார்.

உழவுத் தொழில் செய்துவிட்டு வீட்டிற்குக் கணவன் வருகிறான். அருந்துவதற்கு என்னவிருக்கிறது என்று கேட்கிறான். ஆருயிர் மனையாள் கூழ் கலயத்தைக் கொண்டுவந்து எதிரே வைக்கிறாள். இன்றைக்கும் இதுதானா என்று அலுத்துக்கொண்டே கேட்டு, அதைக் குனிந்து பார்க்கிறான். அப்பொழுது தாழ்வாரத்தில் தவழ்ந்து கொண்டிருந்த மழலைக் குழந்தை தவழ்ந்து, தவழ்ந்து, தவழ்ந்து வந்து அந்தக் கலயத்திற்குள்ளே தன் பிஞ்சுக் கையை விடுகிறது. இன்றைக்கும் இதுதானா என்று கேட்டவன் "ஆகா, கூழ் அமிழ்தமாகி விட்டது" என்கிறான். ஏன்? குழந்தையினுடைய சிறுகை அந்தக் கூழை அளாவிவிட்டக் காரணத்தால் அது

*"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்*
*சிறுகை அளாவிய கூழ்"*

– என்று குறிப்பிடுகிறார். குழந்தையினுடைய கை கூழிலே பட்டால்கூட அதை அருந்த முதலிலே அலுத்துக் கொண்டவன், ஆதங்கப்பட்டவன் அது அமிழ்தமாகிவிட்டதென்று அகமகிழ்கிறான்.

## திருவள்ளுவர் குறிப்பிடும் அமிழ்தம்

இந்த அமிழ்தம் எந்த அமிழ்தம் – எதைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர்? மேருமலையை மத்தாகக் கொண்டு வாசுகி என்கிற நீண்ட பாம்பைக் கயிறாகக் கொண்டு அந்தப் பாம்பின் தலைப்பக்கத்தைக் கோழையான(?) அசுரர்களும் வால் பக்கத்தை வீரர்களான(?) தேவர்களும் பிடித்துக் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்து அப்பொழுது தோன்றியதுதான் அமிழ்தம்.

அமிழ்தமும் தோன்றியது, அதே நேரத்தில் இன்னொரு பக்கத்தில் விஷமும் தோன்றியது. பாடுபட்ட(?) தேவர்கள் அமிர்தத்தை எடுத்துக் கொண்டார்கள். அசுரர்களுக்கு விஷம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அதை விரும்பாத காரணத்தால் அந்த விஷத்தின் வேகம் உலகத்தையே அழித்துவிடுமென்று பயந்து எல்லோரும் சிவனிடம் சென்று முறையிட்டார்கள்.

நான் எழுதிய கதையல்ல இது; ஏற்கெனவே இருக்கின்ற புராணக்கதை இது!

முறையிட்டவுடனே விஷத்தினால் உலகம் அழிந்து விடக் கூடாதென்று கருதிய ஆண்டவன் சிவன், அந்த விஷத்தையெடுத்துப் பருகினான். பருகும்போது பக்கத்திலே இருந்த பார்வதி தேவியார் முழுமையாக விழுங்கிவிட்டால் சிவனுக்கு ஆபத்து வருமேயென்று பயந்து, அது தொண்டைக்குள் போகும்போதே கழுத்துக் கண்டத்தைப் பிடித்துவிட்டாள். விஷம் அங்கேயே நின்றுவிட்டது.

விஷம் நின்ற இடம் சிவனுடைய கழுத்திலே ஒரு கண்டமாக மாறிவிட்டது. அது முதல் உலகத்திலே இருக்கின்ற எல்லா ஆண்களுக்கும் கழுத்திலே ஒரு கண்டம் முடிச்சு போன்ற பகுதி ஏற்பட்டது. இப்படி உருவானதுதான் அமிர்தம் என்ற சொல். அப்படி உருவான அந்த அமிர்தத்தை நானும் குறிப்பிடவில்லை. வள்ளுவரும் குறிப்பிடவில்லை.

எதை அமிழ்தம் என்கிறார்? நான் 7ஆவது அதிகாரத்திலே மக்கட்பேறில் அமிழ்தம் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறாரே அந்த அமிழ்தத்தை 2ஆவது அதிகாரத்தில் எப்படி குறிப்பிடுகிறார் தெரியுமா?

வான் சிறப்பு என்ற அந்த அதிகாரத்தில் அமிழ்தம் பற்றி குறிப்பிடும்போது;

*"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்*
*தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று"*

– வானத்திலிருந்து உலகம் உய்ய வழங்கப்படுகின்ற காரணத்தினால் மழையை அமிழ்தம் என்று அழைக்கிறோமென்று குறிப்பிடுகிறார். உலகத்தை, மனிதர்களை வாழவைக்க, வானத்திலிருந்து உலகத்திற்கு வழங்கப்படுவதால் அதை அமிழ்தம் என்று அழைக்கிறோமென்று குறிப்பிடுகிறார்.

ஆக வள்ளுவர் குறிப்பிட்ட அமிழ்தம் தேவாசுரர்கள் திருப்பாற்கடலிலே எடுத்த அமிழ்தம் அல்ல, அவர் மழையின் வாயிலாக எடுத்த அமிழ்தம் – மழைதான் மக்களுக்கு அமிழ்தம் – மழை இல்லாவிட்டால் மக்களுக்கு வாழ்வில்லை. மக்கள் இயங்க முடியாது. எனவே, அதுவே அமிழ்தம், அந்த அமிழ்தம்போலக் குழந்தையின் பிஞ்சு விரல் பட்ட கூழ் மாறிவிட்டது என்று வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார் என்றுதான் நாம் கொள்ளவேண்டும்.

நம்முடைய மொழியின் சிறப்பை நாம் படித்தறிந்திருக்கிறோம். கேட்டறிந்திருக்கிறோம். நம்முடைய மொழிக்குள்ள தனிச்சிறப்பு – மொழி – அது பெயர்ச்சொல்லாகவும் பயன்படும்; வினைச் சொல்லாகவும் பயன்படும். ஒருவரைப் பார்த்து – மொழி – என்று சொன்னால் அங்கே அது வினைச் சொல். என்னுடைய மொழி என்று சொன்னால் அங்கே அது பெயர்ச்சொல். ஆனால் ஆங்கிலத்திலே இந்த நிலை இல்லை. அது உலகத் தொடர்புடைய மொழியானாலுங்கூட, அதிலே இல்லாத அந்த ஆற்றலைத் தமிழ் பெற்றிருக்கிறது.

ஆங்கிலத்திலே Language என்கிறோம். அதற்கு வினைச் சொல்லாக வேறு சொற்கள்தான் இருக்கின்றன. say என்றோ, tell என்றோ speak என்றோ தான் சொற்கள் இருக்கின்றன. நம்முடைய தமிழ் மொழிக்குத்தான் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் மொழி என்ற சொல் அமைந்திருக்கின்றது.

## வாடிக்கொண்டும் வாழ்ந்துகொண்டும் இருக்கும் தமிழர்கள்

இத்தகைய சிறப்புக்குரிய மொழிக்குச் சொந்தக்காரர்களான தமிழர்கள் உலகில் பல பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வாழ்ந்துகொண்டும் இருக்கிறோம். வாடிக்கொண்டும் இருக்கிறோம்.

நான் இங்கே வந்து அமர்ந்ததும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஆரூர் தோழர் ஒருவர் ஆர்க்காடு வீராசாமி மூலமாக ஒரு மடலை என்னிடம் தந்தார். அதைப் படித்துப் பார்த்தேன். என்ன எழுதியிருக்கிறாரென்றால் முன்பெல்லாம் இங்கே சாதாரண சாமான்ய தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தமிழர்கள் தாயகத்திற்குத் திரும்ப வேண்டுமென்றால், கப்பலிலே சென்றுவந்தோம். இப்போது விமானத்திலேதான் செல்ல வேண்டியிருக்கிறது. காரணம், சிதம்பரம் கப்பல் எரிந்த பிறகு எங்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. எனவே, முதலமைச்சர் அவர்களே உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இல்லாவிட்டால் நீங்களே மற்றொரு சிதம்பரனாராக மாறி அந்தக் கப்பல் பயணத்தை எங்களுக்கு ஏற்பாடு செய்துகொடுங்கள் என்று எழுதியிருக்கிறார். கடிதம்தான் அது. வந்து அமர்ந்ததும் என் உள்ளத்தைக் கவலை கொள்ளச் செய்த கடிதம். கவனிக்கப்பட வேண்டிய கடிதம் அது என்பதை நான் உணருகிறேன்.

என்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். மத்திய அரசிலே எனக்கு எந்த அளவிற்குச் செல்வாக்கு இருக்கிறது என்பதை இதைப் பயன்படுத்துவதிலே நான் காணுகின்ற வெற்றியைப் பொறுத்துத்தான் நீங்கள் கணிக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்று – நேற்றைய தினம் பிரதமரைச் சந்தித்தபோது கூட – இங்கு சில எத்தர்களால் ஏமாற்றப்பட்டுச் சிங்கைக்கு அழைத்து வரப்பட்டு "பெரிய வேலை வாய்ப்பில் ஈடுபடுத்துகிறேன் கவலைப்படாதே" என்று கூறப்பட்டு, அதை நம்பி, தன்னுடைய நிலபுலன்களையெல்லாம் விற்று விட்டு, நகை நட்டுகளையெல்லாம் அடமானம் வைத்துவிட்டு சிங்கைக்கு வந்து, அழைத்தவர்கள் எங்கே போனார்கள் என்று தெரியாமல், சில தனியார் கம்பெனிகளிலே

வேலைக்கு அமர்ந்து, அவர்களால் கைவிடப்பட்டு சிங்கை வீதிகளிலே அலைந்து கொண்டிருக்கின்ற தமிழர்களையும் எண்ணிப் பார்க்கிறேன். எனவே, தமிழன் உலகத்தின் பல பகுதிகளில் வாழ்ந்து கொண்டும் இருக்கிறான். வாடிக்கொண்டும் இருக்கிறான்.

வாடிக் கொண்டிருக்கின்ற தமிழனுக்கு ஒரு வழி காண வேண்டுமென்று நேற்று உங்களுடைய பிரதமரிடத்திலே கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவரும் இதை மிகுந்த அக்கறையோடு கேட்டு நிச்சயமாகத் தகுந்த தீவிரமான நடவடிக்கை எடுக்க நான் உதவுகிறேன் என்றார். இதை – ஏமாந்த தமிழர்களுக்கு ஒரு நல்ல செய்தியாக நான் அறிவிப்பதோடு இனியும் ஏமாறாமல் இருக்க உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

### அண்ணாவின் வார்த்தைகளை வேதமாகக் கொண்டுள்ளோம்

தமிழ்ச் சமுதாயம் பல இடங்களில் பல இனங்களோடு சேர்ந்து வாழ வேண்டியிருக்கின்றது. இனம் கண்டு வாழ வேண்டியிருக்கின்றது. சிங்கப்பூரானாலும், மலேசியாவானாலும், எங்களுடைய தலைவர், எங்கள் **அண்ணன், பெரியார் வழி வந்த பேரறிஞர் அண்ணா** அவர்கள் – "ஆங்காங்கு வாழும் தமிழர்கள் அந்த மண்ணுக் குரியவர்களாக – அந்த மண்ணின் நலன்களில் நாட்டம் உடையவர்களாக – அதே நேரத்தில் மொழியை, இனத்தை, மொழி உணர்வை, இன உணர்வை மறக்காதவர்களாக வாழவேண்டும்" என்று சொன்ன அந்த வார்த்தைகளை நான் வேதமாக என்னுடைய நெஞ்சிலே செதுக்கி வைத்திருக்கிறேன். அதை இங்கே வெளியிடுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

அண்ணா அவர்கள் எத்தனைப் புலவர்கள் சங்க காலக் கட்டத்திலே வாழ்ந்தார்கள் என்று கணக்கெடுத்துப் புறநானூற்றுப் புலவர்களுடைய பட்டியலை மாத்திரம் வெளியிட்டு, தம்பிக்கு எழுதிய கடிதத்திலே சுட்டிக் காட்டியிருந்தார். நான் அதைப் படித்துப் பார்த்தவுடனேயே அண்ணா புறநானூற்றுப் புலவர்களை மாத்திரம் குறிப்பிட்டிருக்கிறார். அகநானூற்றுப் புலவர்களையும் சேர்க்க வேண்டுமேயென்று அந்தக் கணக்கையும் எடுத்து நான் சேர்த்துப் பார்த்தேன். ஏறத்தாழ அந்தப்

புலவர்களின் எண்ணிக்கை 210ஐ எட்டுகிறது; 210பேர் அகநானூறு, புறநானூறு பாடல்களை எழுதியிருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்களைச் சொன்னால் அந்தக் காலத்தில் எப்படிப்பட்ட பெயர்களை அவர்கள் கொண்டிருந்தார்கள் என்ற அந்த உண்மை நமக்குத் தெரியும்.

**அகநானூறு - புறநானூறு பாடிய புலவர்கள்**

1. அடை நெடுங்கல்வியார்
2. அண்டர்மகன் குறுவழுதி
3. அரிசில்கிழார்
4. அள்ளூர் நன்முல்லையார்
5. அந்தி இளங்கீரனார்
6. அம்மூவனார்
7. ஆடுதுறை மாசாத்தனார்
8. ஆலங்குடி வங்கனார்
9. ஆலத்தூர் கிழார்
10. ஆலியார்
11. ஆவூர் கிழார்
12. ஆவூர் மூலங்கிழார்
13. ஆர்க்காடுகிழார் மகனார் வெள்ளைக்கண்ணத்தனார்
14. ஆலம்பேரிச் சாத்தர்
15. நக்கண்ணையார்
16. இடைக்காடனார்
17. இடைக்குன்றூர்க் கிழார்
18. இரும்பிடர்த்தலையார்
19. ஈழத்துப் பூதன் தேவனார்
20. உலேச்சனார்
21. உறையூர் இளம்பொன் வாணிகனார்
22. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
23. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
24. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
25. உறையூர் முதுகூத்தனார்
26. உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார்
27. உரோடகத்துக் கந்தரத்தனார்
28. உலோச்சனார்

29. ஊட்டியார்
30. ஊன்பொதி பசுங்குடையார்
31. எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்
32. எயினந்தை மகனார் இளங்கீரனார்
33. எருவை வெளியனார்
34. எருவை வெளியனார் மகனார் கடலனார்
35. ஐயாதிச் சிறுவெண்டரையர்
36. ஐயூர் முடவனார்
37. ஐயூர் மூலங்கிழார்
38. ஒக்கூர் மாசாத்தனார்
39. ஒக்கூர் மாசாத்தியார்
40. ஒருசிறைப் பெரியனார்
41. ஒரு உத்தனார்
42. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
43. ஓரம்போகியார்
44. ஓரேருழவர்
45. ஔவையார்
46. கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி
47. கண்ணகனார்
48. கணியன் பூங்குன்றன்
49. கபிலர்
50. கயமனார்
51. கருங்குழலாதனார்
52. கருவூர்க் கதப்பிள்ளை
53. கருவூர்க் கண்ணம் புல்லனார்
54. கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார்
55. கருவூர்ப் பூதஞ்சாத்தனார்
56. கல்லாடனார்
57. கழாத் தலையார்
58. கழைதின் யானையார்
59. கள்ளில் ஆத்திரையனார்
60. கடுந்தொடைக் காவினார்
61. கணக்காயனார் மகனார் நக்கீரனார்
62. காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்

63. காரிகிழார்
64. காவட்டனார்
65. காவற்பெண்டு
66. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
67. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்
68. காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்
69. காவன் முல்லைப்பூதனார்
70. குட்டுவன்கீரனார்
71. குடபுலவியனார்
72. குடவாயிற் கீரத்தனார்
73. குண்டுகட் பாலியாதன்
74. குறமகள் இளவெயினி
75. குறுங்கோழியூர்க்கிழார்
76. குன்றூர்க்கிழார் மகனார்
77. குறுங்குடி மருதனார்
78. குன்றியனார்
79. கூகைக் கோழியார்
80. கூடலூர்க்கிழார்
81. கோடைபாடிய பெரும்பூதனார்
82. கோதமனார்
83. கோப்பெருஞ்சோழன்
84. கோவூர்க்கிழார்
85. கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார்
86. சங்கவருணரென்னும் நாகரியர்
87. சாகலாசனார்
88. சாத்தந்தையார்
89. சிறுவெண்டரையார்
90. சீத்தலைச் சாத்தனார்
91. செல்லூர்க் கோசிகன் கண்ணனார்
92. சேரமான் கணைக்காலிரும்பொறை
93. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை
94. சேந்தம் பூதனார்
95. சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்
96. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

97. சோழன் நல்லுருத்திரன்
98. சோழன் நலங்கிள்ளி
99. தன்காற்பூட் கொல்லனார்
100. தங்கால் முடக்கொற்றனார்
101. தாமப்பல கண்ணனார்
102. தாயங்கண்ணனார்
103. தாயங்கண்ணியார்
104. திருத்தாமனார்
105. தும்பி சோகினனார்
106. துறையூர் ஓடைக்கிழார்
107. தொடித்தலை விழுத்தண்டினார்
108. தொண்டைமான் இளந்திறையன்
109. நரிவெரூஉத் தலையார்
110. நல்லிறையனார்
111. நன்னாகனார்
112. நக்கீரனார்
113. நல்லாவூர் கிழார்
114. நல் வெள்ளியார்
115. நன்பலூர் சிறுமேதாவியார்
116. நெட்டியமையார்
117. நெடுங்கழுத்துப்பாணர்
118. நெடும்பல்லியத்தனார்
119. நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழார்
120. நொச்சி நியமங்கிழார்
121. நோய்ப் பாடியார்
122. பக்குடுகை நன்கணியார்
123. பரணர்
124. பாண்டரங்கண்ணனார்
125. பாண்டியன் அறிவுடைநம்பி
126. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
127. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
128. பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி
129. பாலை பாடிய பெருங்கடுங்கோ
130. பெருந்தேவனார்

131. பாரி மகளிர்
132. பிசிராந்தையார்
133. பிரமனார்
134. புல்லாற்றூர் எயிற்றியனார்
135. புறத்திணை நன்னாகனார்
136. பூங்கணுத்திரையார்
137. பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு
138. பெருங்குன்றூர்க் கிழார்
139. பெருங்கோழிநாய்க்கன் மகள் நக்கண்ணையார்
140. பெருஞ்சித்திரனார்
141. பெருந்தலைச்சாத்தனார்
142. பெரும்பதுமனார்
143. பெருந்தேவனார்
144. பேய்மகள் இளவெயினி
145. பேரெயின் முறுவலார்
146. பேரி சாத்தனார்
147. பொத்தியார்
148. பொய்கையார்
149. பொருந்திலிளங்கீரனார்
150. பொன்முடியார்
151. போந்தைப் பசலையார்
152. மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்
153. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
154. மதுரை இளங்கண்ணி கௌசிகனார்
155. மதுரை இளம்பாலாசிரியர் சேந்தன் கூத்தனார்
156. மதுரை எழுத்தாளனார்
157. மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார்
158. மதுரைக் கணக்காயனார்
159. மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரனார்
160. மதுரைக் கள்ளின் கடையத்தன் வெண்ணாகனார்
161. மதுரை கவுணியன் பூதத்தனார்
162. மதுரை காஞ்சிப் புலவர்
163. மதுரை செங்கண்ணனார்
164. மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார்

165. மதுரைத் தமிழ்க் கூத்தனார்
166. மதுரை நக்கீரர்
167. மதுரைப் படைமங்க மன்னியார்
168. மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார்
169. மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்
170. மதுரைப் பூதனிள நாகனார்
171. மதுரைப் பேராலவாயார்
172. மதுரைப் போத்தனார்
173. மதுரை மருதனிள நாகனார்
174. மதுரை வேளாசான்
175. மருதனிள நாகனார்
176. மருதம் பாடிய இளங்கடுங்கோ
177. மாங்குடிக் கிழார்
178. மாதி மாதிரத்தனார்
179. மார்க்கண்டேயனார்
180. மாமூலனார்
181. மாற்பித்தியார்
182. மாறோக்கத்து நப்பசலையார்
183. மாற்றூர்கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்
184. முடங்கிக் கிடந்த சேரலாதன்
185. முரஞ்சியூர் முடிநாகராயர்
186. மோசிகீரனார்
187. மோசி சாத்தனார்
188. வடம நெடுந்தத்தனார்
189. வடம வண்ணக்கண் தாமோதரனார்
190. வடம வண்ணக்கண் பெருஞ்சாத்தனார்
191. வடம வண்ணக்கண் பேரிசாத்தனார்
192. வடமோதங்கிழார்
193. வன்பரணர்
194. வண்ணப்புறக் கந்தரத்தனார்
195. வான்மீகியார்
196. விரிச்சியூர் நன்னாகனார்
197. விரியூர் நக்கனார்
198. வீரை வெளியனார்

199. விற்றூற்று மூதெயினனார்
200. வெள்ளாடியனார்
201. வெள்ளி வீதியார்
202. வெண்ணிக் குயத்தியார்
203. வெள்ளெருக்கிலையார்
204. வெள்ளைக்குடி நாகனார்
205. வெள்ளை மாளர்
206. வெறிபாடிய காமக்கண்ணியார்
207. வேம்பற்றூர்க் குமரனார்

– இதுவே, அகநானூறு – புறநானூறு பாடிய புலவர்கள் பட்டியலாகும்.

**வள்ளுவர் குறளுக்கு நான் எழுதிய உரை**

பெரியார் வந்த பூமி இது. அறிஞர் அண்ணா அவர்கள் வந்து உரையாற்றிய பூமி இது, ஆன்மீகக் கருத்துக்களை இங்கே வந்து வழங்கிய குன்றக்குடி அடிகளார் வந்த பூமி இது. இங்கே அடியேனும் வந்து உங்களைக் காணுகின்ற வாய்ப்புக் கிடைத்துள்ளது.

நம்முடைய இலக்கியங்களிலே இன்றைக்கு நான் முதலிலே குறிப்பிட்டதைப் போலப் பொதுமறையாக இன்றைக்கும் போற்றப்படுவது குறள். இந்தத் திருக்குறளுக்கு நான் உரை எழுதியிருக்கிறேன். குறளோவியம் மாத்திரமல்ல; உரையும் எழுதியிருக்கிறேன். அந்த உரை எழுதும்போது கற்பனையாக அல்ல, வேண்டுமென்றே வலிந்து அல்ல, இப்படித்தான் வள்ளுவர் எழுதியிருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு நானே மாத்திரமல்ல; பல புலவர்களோடு கலந்து பேசி நான் இந்த உரையை எழுதியிருக்கிறேன். நான் எழுதியதைக்கூடத் திருத்த வேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஏற்கெனவே,

*“தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை”*

– என்ற குறளுக்குப் பரிமேலழகர் போன்றவர்களும், அதைப் பின்பற்றி டாக்டர் மு.வ. போன்றவர்களும் எழுதியுள்ள உரை என்னவென்றால், தெய்வத்தைக்கூட தொழாமல் கணவனையே

தெய்வமாகக் கொண்டு வணங்குகின்ற பெண் "மழையே வா – மழையே பெய்" என்று சொன்னால் மழை பெய்யுமென்று எழுதியிருக்கிறார்கள். இது ரொம்ப ஆபத்தானது. ஏனென்றால் மழை பொழியாத காலத்திலே வீட்டுக்காரியைக் கூப்பிட்டு மழை வரச்சொல் என்று சொல்லி அது வரவில்லை என்றால் என்ன ஆகும்? எனவே அந்த உரை பொருந்தாது என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அப்போதே கூறியிருக்கிறார்.

**புரட்சிக் கவிஞரின் குறள் விளக்கம்**

அவர் என்ன கூறினாரென்றால் தெய்வத்தைக்கூடத் தொழாமல் கணவனைத் தொழுகின்ற பெண் எப்படிப்பட்டவள் என்றால் நாம் மழை பெய் என்றவுடன் மழை பெய்தால் அந்த மழை எந்த அளவிற்குச் சிறந்ததோ அந்த அளவிற்குச் சிறப்பானவள் என்று எழுதினார். இந்தக் குறளுக்கு நான் உரை எழுதும்போது எனக்கு இந்தக் கருத்தை மேலும் மெருகேற்ற வேண்டுமென்று தோன்றியது. அந்தப் பெண்ணுக்கு மேலும் உரிமை அளிக்கவேண்டுமென்று தோன்றியது. அந்த உரிமையை வள்ளுவர் அளித்திருக்கிறார் என்று எனக்குப் புரிந்தது.

தெய்வத்தைக்கூட தொழாமல் கணவனைத் தொழுகின்ற பெண் – பெய் என்று சொன்னவுடன் பெய்கின்ற மழையைப் போன்ற அடிமை ஆவாள். மழை பெய் என்று சொன்னால் – பெய்துவிடுமா? பெய்துவிடாது. இயற்கை நிலை அது. ஆணையிட்டுப் பெய்யக் கூடியதல்ல மழை. ஆணையிட்டுப் பெய்கின்ற மழையைப் போன்றவள் பெண் என்று சொன்னால் அவள் ஒரு அடிமையாகத்தான் இருப்பாள். ஆகவே, பெய்யெனப் பெய்யும் மழையாக அவள் ஆகிறாள். தெய்வத்தைக்கூடத் தொழாமல் கணவனையே தெய்வமாகக் கருதிக் கொண்டிருக்கின்ற பெண் இருக்கிறாளே, அவள் பெய் என்று சொன்னவுடன் பெய்கின்ற மழையைப் போன்ற அடிமையாவாள் என்ற அந்தக் கருத்தைத்தான் 'கலைஞர் உரை' என்ற புதிய நூலிலே நான் எழுதியிருக்கிறேன்.

## என் மூலம் வாழ்த்தும் தமிழக மக்கள்

நீண்டநேரம் இலக்கிய உரை இங்கே உங்கள் முன்னிலையில் உங்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. இறுதியாக நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் தமிழக மக்கள் உங்களை என் வாயிலாக வாழ்த்திக்கொண்டிருக்கின்றார்கள். உங்களுடைய வாழ்த்துக்களையெல்லாம் என் நெஞ்சிலே ஏந்தி அவர்களுக்குக் காணிக்கையாக்க நான் இருக்கிறேன்.

நாளையதினம் மலேசியப் பயணத்தை மேற்கொள்கிறேன். மலேசியப் பயணத்தில் சில தொழில்துறைப் பிரச்சினைகளைப் பற்றியும் நீண்ட காலமாகத் தமிழ்நாட்டிற்கும் அந்த நாட்டிற்கும் உள்ள கலாச்சாரத் தொடர்பு பற்றியும் அங்கேயும் பேசவிருக்கிறேன். நம்முடைய தொடர்பு என்றென்றும் அறுந்துபோகாமல் தொடர்ந்துகொண்டே இருக்கக்கூடிய ஒரு உறவாகும். உங்களையெல்லாம் பார்க்கிறேன். மகிழ்கிறேன். என்னுடைய பேச்சு நிறைவுபெறப் போகிறதே, உங்களைப் பிரிய நேரிடுகிறதே என்கின்ற அந்தக் கலக்கத்தோடு, நான் உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன். என்றென்றும் நாம் உடன்பிறப்புகளாக – ஒரின உணர்வுமிக்கவர்களாக வாழ்வோம் என்று கூறி விடைபெறுகிறேன்".

# கோலாலம்பூரில், தமிழ் அமைப்புகள் அளித்த வரவேற்பில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.

“பெருமதிப்புக்கும் மரியாதைக்கும், பாசத்திற்கும் உரிய டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் தமிழ்க்கடல் வரப்போகிறது, தமிழ்க் கடல் வரப்போகிறது என்று கூறினார்கள். ஆமாம், என் எதிரே கடலே வந்து நிற்கிறது. இந்தக் கடலில் நான் இருக்கின்ற இந்த மேடை ஒரு தெப்பமாக மிதந்து கொண்டிருக்கின்றது.

மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்குக் கலாச்சார உறவை உறுதிப்படுத்துகின்ற வகையிலும் அத்துடன் தொழில் துறை, வணிகத் துறை, கல்வித் துறை ஆகியவற்றின் தொடர்புகளை வலுப்படுத்துகின்ற வகையிலும் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தில் ஐந்தாவது நாளாக இன்று உங்களையெல்லாம் சந்திக்கும் நல்ல வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

தமிழகத்தில், இந்தியத் திருநாட்டில் நான் மேற்கொண்டிருக்கின்ற அரசியல் இயக்கத்திற்கு எத்தனையோ சோதனைகள், வேதனைகள் வந்தன என்றும், அவற்றை அங்குள்ள மக்கள் மாத்திரமல்லாமல் கடல் கடந்து வாழ்கிற நீங்களும் உங்களுடைய அன்பால் ஆதரவால் தாங்கிக் கொண்டு அந்த இயக்கத்தைத் தூக்கி நிறுத்தியிருக்கிறீர்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்.

தொலைவில் இருந்தாலும் உங்களுடைய கருணைப் பார்வை என் மீதும் நான் தலைமையேற்றிருக்கின்ற அரசியல் இயக்கத்தின் மீதும் என்றைக்கும் மாறாமல் இருந்துகொண்டு வருகின்றது. இதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது. இருப்பினும் அரசியல் வெப்பத்தைத் தணித்துக் கொள்ள நான் அடிக்கடி இலக்கிய அரங்கிற்குச் செல்வதை என்னுடைய வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். கோடையில் இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் தருவாக – தரு நிழலாக இருப்பது எனக்கு இலக்கியம்தான் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.

அந்த இலக்கியத்தை இந்த மாமன்றத்திலே இன்றைக்கு உங்களோடு பரிமாறிக் கொள்வதற்காக உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

## எனது எழுதுகோல்

என்னுடைய ஆருயிர் நண்பர் மறைந்த கண்ணதாசன் ஒருமுறை என்னைப் பற்றிக் கூறும்போது – "கருணாநிதி, உன்னுடைய செங்கோலை ஒருவேளை யாராவது பறித்தாலும் பறிக்கலாம், ஆனால் உன் கையில் இருக்கின்ற எழுதுகோலை எவராலும் பறிக்கமுடியாது" என்றார். அந்த நம்பிக்கை எனக்கு என்றைக்கும் உண்டு. அந்த நம்பிக்கையை எனக்குத் தருவதற்காக உங்களைப் போன்ற உடன்பிறப்புக்கள் இலட்சோப இலட்சம் பேர் இந்த உலகத்தின் பல பகுதிகளிலே உண்டு. அந்தத் துணிவோடுதான் உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கிறேன்.

தமிழகத்திற்கும், மலேசிய நாட்டிற்கும் சிங்கப்பூர் நாட்டிற்கும் இன்று நேற்றல்ல – நீண்ட நெடுங்காலமாக நம்முடைய சாதனைச் செம்மல் சாமிவேலு அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போலத் தொடர்பும் உறவும் சொந்த பந்தமும் உண்டு. அந்த அடிப்படையில்தான் உங்களையெல்லாம் சந்திக்க இரண்டாவது முறையாக நான் வந்திருக்கிறேன். இங்கே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின்போது நான் வந்தேன். அப்போது விமான நிலையம் கோலாலம்பூர் நகருக்கு அருகே இருந்தது. அதனால் பல்லாயிரக்கணக்கில் நீங்கள் விமான நிலையத்திற்குத் திரண்டு வந்து என்னைக் கசக்கிப் பிழிந்து அந்த மண்டபத்திற்குள் சாறாகக் கொண்டு வந்து சேர்த்தீர்கள். அதே சிரமம் அருமை நண்பர் சாமிவேலு அவர்களுக்கும் வேறு சில அமைச்சர்களுக்கும் அன்றைக்கு ஏற்பட்டதை நான் நன்றாக அறிவேன். இன்றைக்கு அந்த இன்பத் தொல்லையிலிருந்து என்னைக் காப்பாற்றுவதற்காக நம்முடைய சாமிவேலு அவர்கள் உபாயம் செய்து கொல்லைப்புற வழியாக என்னை அழைத்து வந்துவிட்டார்.

பொதுவாகக் கொல்லைப்புற வழியாக வருவது எனக்குப் பிடிப்பதில்லை. அது அரசியலில் ஆகட்டும், இலக்கியமாகட்டும், அதிலே கொல்லைப்புற

வழியை நான் என்றைக்கும் தேர்ந்தெடுப்பதில்லை. ஆனால் உங்களுடைய அன்பு, பாசம் நீங்கள் என் மீது கொண்டிருக்கின்ற உணர்வு மிக்க உறவு, அதன் காரணமாக நான் இங்கே முழுமையாக வந்தால்தான் ஏதாவது பேசமுடியும் என்பதற்காக – ஒருவர் கையை, ஒருவர் காலை என்று ஆளுக்கொரு உறுப்பை எடுத்துக்கொண்டால் கருணாநிதி இங்கே வந்ததாகத் தகவல் என்பதைத்தான் சாமிவேலு அவர்களால் இங்கே கூற முடியும்! எனவேதான் இந்த வழியைத் தேர்ந்தெடுத்து உங்களைச் சந்திக்கின்ற அரிய வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

நான் சிங்கப்பூரில் தமிழ் மக்களிடையே உரையாற்றும்போது ஒன்றைச் சொன்னேன் – சிங்கப்பூரில் பிரதமரைச் சந்தித்தேன், அமைச்சர் பெருமக்களைச் சந்தித்தேன், வணிகப் பெருமக்களைச் சந்தித்தேன், அவர்களுடைய குழுக்களை, நிறுவனத்தினரை எல்லாம் சந்தித்து அவர்களோடு பேசினேன். ஆனால் இப்போது உங்களைச் சந்திக்கின்றேன், பேச முடியாமல் நிற்கிறேன். உங்களைப் பார்த்துக் கொண்டே இருந்தால் போதும்போல் இருக்கிறது – என்று சொன்னேன்.

அங்கே சொல்லிவிட்டு இங்கே சொல்லாவிட்டால் நீங்கள் என்னைப் பற்றி என்ன கருதுவீர்கள் என்பதற்காக அல்ல; உண்மையிலேயே ஒரு நாள், இரண்டு நாள் அல்ல – இங்கேயே நின்றுகொண்டு உங்களுடைய திருமுகங்களை எல்லாம், என்மீது நீங்கள் வீசும் அன்புப் பெருக்கையெல்லாம், உங்களுடைய கனிவான பார்வையையெல்லாம் அனுபவித்தவாறு விழி மூடாமல் பார்த்துக்கொண்டிருந்தால் என்ன என்ற நிலையில்தான் உங்கள் முன்னால் உங்களுடைய அன்பன், உங்களுடைய சகோதரன் – உங்கள் அடிமை, நான் நின்றுகொண்டிருக்கின்றேன்.

இலக்கிய உரை இங்கே நான் ஆற்றுவேன் என்று கடந்த நான்கைந்து நாட்களாக நடத்தப்படுகின்ற விளம்பரங்களில் நம்முடைய டத்தோ அவர்களால் குறிப்புக் காட்டப்பட்டிருக்கின்றது. தமிழர்களுக்கு இலக்கியம் என்பதைத் தவிர வேறு வரலாறு கிடையாது. வரலாறு இருக்கிறது, ஆனால் எழுதப்படவில்லை. எழுதப்படாத காரணத்தால் தான், இந்தியாவின் வரலாறே தமிழகத்திலிருந்து எழுதப்பட வேண்டுமென்று மனோன்மணீயம் சுந்தரனார் சுட்டிக்காட்டியதையும், அது குறித்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள்

பேசியதையும் நான் பலமுறை நினைவுப்படுத்தியிருக்கிறேன். இந்தியநாட்டு வரலாறு கங்கைக் கரையிலிருந்து எழுதப்பட்டதற்குப் பதிலாகக் காவிரிக்கரையிலிருந்து எழுதப்பட வேண்டுமென்பது தான் வரலாற்றுப் போராசிரியர்களுடைய துணிவான – திட்டவட்டமான – தெளிவான முடிவாகும்.

அப்படி எழுதப்படாத காரணத்தால் நமக்கென்று வரலாறு கிடையாது; எழுதப்படாத காரணத்தால் வரலாறே இல்லை என்று ஆகிவிடுமா என்றால் கிடையாது. வரலாறு உண்டு. ஆனால் எழுதப்படவில்லை. நமக்குக் கிடைத்த இலக்கியங்கள்தான் வரலாற்றுச் சான்றுகளாக இருக்கின்றன. நான் நம்முடைய பழைய வரலாறுகள், சேர சோழ பாண்டியர்களுடைய வரலாறுகளைப் பற்றி நினைப்பதற்கு முன்பு அண்மையில் 200 ஆண்டுக் காலத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சி ஒன்றை – தமிழகத்திற்கும் மலேசியாவிற்கும் ஏற்பட்ட தொடர்பு எத்தகையது என்பதை விளக்குவதற்காகக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில், வெள்ளையரை எதிர்த்து முதலிலே களம் சென்று கட்கம் ஏந்தி இறுதியாக சுதந்திரத்திற்காகத் தன்னையே பலி கொடுத்துக் கொண்ட பூலித்தேவன், தொடர்ந்து வீரபாண்டிய கட்டபொம்மன், தொடர்ந்து மருது பாண்டியர்கள் ஆகியோரைத் தொடர்ந்து 1802ஆம் ஆண்டு மருதுபாண்டியர்களின் வழித்தோன்றல்கள், அவர்களுடைய உறவினர்களை – அந்தப் புரட்சிக் காரர்களை – போராளிகளை எஞ்சிய விடுதலைப்போர்த் தளபதிகளைத் தூத்துக்குடியிலிருந்து கப்பலில் ஏற்றி ஜேம்ஸ் வால்ஷ் என்பவர் லெப்டினென்ட் ராக் ஹெட் என்பவரின் தலைமையில் மொத்தம் 73 பேரை 76 நாட்கள் பயணம் செய்ய வைத்து, கடைசியாகக் கொண்டுவந்து விட்ட இடம் பினாங்கு. மலேசியப் பகுதியிலே உள்ள பினாங்கில்தான் அவர்கள் கொண்டுவந்து விடப்பட்டார்கள். இது 'சவுத் இண்டியன் ரிபல்லியன்' என்ற தலைப்புள்ள புத்தகத்தில் காணப்படுகின்ற உண்மை.

## நாடு கடத்தப்பட்டோர்

தூத்துக்குடியிலிருந்து 73 பேர் 76 நாட்கள் கப்பலில் பயணம் செய்தார்கள். அவர்களுடைய கைகளிலே கால்களிலே விலங்கு மாட்டப்பட்டிருந்தது. நான்கைந்து பேர்களின் கைகள்தான் கட்டப்படவில்லை. காரணம் – அவர்கள் கப்பலில் சமையல் வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தார்கள். அவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் விலங்கிடப்பட்டு பினாங்கில் 76 நாள் பயணத்திற்குப் பிறகு சேர்க்கப்பட்டார்கள். நான் அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட அந்த நூலிலே உள்ள 73 பேரின் பெயர்களையும் உங்கள் முன்னால் படிக்க விரும்புகிறேன். அதுதான் நாம் அவர்களுக்கு ஆற்றுகின்ற கைமாறு. அவர்களுக்காக நாம் செய்கின்ற வீர வணக்கம். 73 பெயர்களைப் படிக்கும் போது கொஞ்சம் உங்களுக்கு அயர்வு ஏற்படலாம். ஆனால் அயர்வு ஏற்படக் கூடாது. அயர்வில்லாமல் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்ட மான மறவர்களின் பெயர்களைப் படிக்கின்ற நேரத்தில் அயர்வுக்குப் பதிலாக உணர்வு ஏற்பட வேண்டும். எனவே படிக்கின்றேன்:

1. வேங்கம் பெரிய உடையத்தேவர், சிவகங்கை
2. துரைசாமி (தந்தை பெயர் மருதுபாண்டியன்)
3. வேரப்பூர் பொம்ம நாயக்
4. ஜெகநாத அய்யர், ராமனாதபுரம்
5. ஆண்டியப்பத் தேவன்
6. சடமாயன்
7. கோனியாமி தேவன்
8. தளவாய் குமராசாமி நாயக், பாஞ்சாலங்குறிச்சி
9. மேலூரர் குமாரத் தேவர்
10. பாண்டியன்புத்தூர் பாண்டியன்
11. முத்துவீரா, அரங்குளம்
12. சாமி, மணக்காடு
13. ராமசுவாமி
14. இருளப்பதேவர், நாங்குனேரி
15. பாண்டியன் நாயக், கம்பாடி
16. மாடத்தேவன்

17. மாலயில்மாடன்
18. சின்ன பிச்சத் தேவன்
19. வீரபாண்டியத் தேவன்
20. வீரப்பெருமாள் தேவன்
21. கருப்பத் தேவன்
22. சுலோமோனியா
23. நந்தசாமி
24. பெருமாள்
25. சின்ன பிச்சத்தேவன் உடையத்தேவன்
26. சின்ன பிச்சத்தேவன் மகன் தேவிநாயக்
27. முத்துராமத் தேவன்
28. மண்டத் தேவன்
29. பேயன்
30. அழகநம்பி
31. வைகுண்டத் தேவன்
32. சிரியண்ணத் தேவன்
33. கோனியாலும்
34. முல்லைவடிவு
35. சந்தானம்
36. வீரபத்திரன்
37. சிலம்பன்
38. பேயன்
39. ராமசாமி
40. இருளப்பன்
41. குமாரசாமி
42. வீரபாண்டியன்
43. வெங்கட்டராயன்
44. உடையார்
45. முத்துராக்கு
46. முத்துராக்கு, அணக்குளம்
47. சொக்குத்தலவான்
48. இருளப்பத் தேவன்
49. மல்லையநாயக்கன்

50. சுலோமணி நாயக்கன்
51. தொமச்சிநாயக்
52. சுலோமணிநாயக்
53. ராமசாமி
54. பிச்சாண்டி நாயக்
55. கல்லுமாடம் தளவாய்
56. சின்னமாடன்
57. வைத்திமூர்த்தி
58. தளவாய்பிள்ளை
59. சுப்ரமணியம்
60. பெத்தண்ணநாயக்
61. கிருஷ்ணமநாயக்
62. மயிலேனன்
63. வயலமுத்து
64. ராமன்
65. பாளையநாயக்
66. குமரன்
67. வெள்ளைய கொண்டன்
68. ராமன்
69. அழகுசொக்கு
70. சேக் உசேன்
71. அப்பாநாயக்
72. ராமன், சூளை
73. குப்பண்ண பிள்ளை

இப்படி 73பேர் 1802ஆம் ஆண்டு பினாங்கில் இறக்கிவிடப்பட்ட பிறகு, இதில் மூன்றில் ஒரு பங்குப் பேர் பல்வேறு காரணங்களால் இறந்துவிடுகின்றனர்.

இவர்களைக் கப்பலேற்றி அனுப்பிய ஜேம்ஸ் வால்ஷ் 1818ஆம் ஆண்டு பினாங்குக்கு வருகிறான். அங்கே அவன் கண்ணில் பரட்டைத் தலையோடு, பராரி கோலத்தோடு, ஒடிந்து விழும் உடல் அமைப்போடு, எலும்பும் தோலுமாக, வாலிப வயதினன் – ஆனாலும் வயதானவனைப் போன்ற தோற்றமுடைய ஒருவனை அங்கே பார்க்கிறான். பார்த்தவுடன்

அவன் யார் என்று தெரிகிறது; சந்தேகத்தோடு அவனைப் பார்த்து – "உன்பெயர் துரைசாமி தானே?" என்று கேட்க, அவன் "ஆமாம்" என்கிறான். அந்தத் துரைசாமி யார் தெரியுமா? நான் படித்தேனே பட்டியல் – அதில் இரண்டாவதாகப் படித்த மருதுபாண்டியனின் இளையமகன் – வீரப்போரிட்டு மடிந்தானே வெள்ளையரை எதிர்த்து, அந்த மருது பாண்டியனின் மகன் துரைசாமி தான் அவன். அவன் தான் ஈளை கட்டி இருமலோடு – பரட்டைத் தலையோடு – பராரி கோலத்தோடு பரங்கியருக்கு முன்னால் நின்றான்.

இதைப்பற்றி அந்தப் பரங்கியன், ஜேம்ஸ் வால்ஷ் என்ன எழுதியிருக்கிறான் என்பதையும் நான் உங்களிடம் படித்துக்காட்ட விரும்புகிறேன் – 'துரைசாமி என்ற பெயரைக் கேட்டதும் என் நெஞ்சில் யாரோ கட்டாரியால் குத்தியது போன்ற உணர்வைப் பெற்றேன். நான் சிறைபிடித்துக் கப்பலிலே 15 வயது பையனாக ஒப்படைத்த கைதிதான் இன்று பினாங்கில் என்முன் நின்றான். வெளித் தோற்றத்திலே மாற்றங்கள், ஆனால் உள்ளம் அதே உள்ளம். கடந்த கால நினைவுகளை என் முன்னால் எதிரொலித்தது. என்பெயரை அவன் சாதாரணமாகத் தெரிந்து கொண்டதும் என்னுடைய பழைய கால நட்பை நினைவு கூர்ந்து தன்னுடைய குடும்பத்தாரிடம் ஒப்படைக்கும்படி ஒரு கடிதத்தைக் கொடுக்கக் கூடிய அளவிற்கு நம்பிக்கை வயப்பட்டான். ஆனால் அப்போதிருந்த ஆங்கிலேய அரசின் ஆணையின்படி அது விதிக்கு மாறானது என்பதால், நான் அந்த உதவியைச் செய்ய முடியவில்லை' என்று எழுதியிருக்கிறான்.

## மருதுபாண்டியன் மகன் துரைசாமியின் வாரிசுகள்

இவ்வாறு மருதுபாண்டியனின் மகன் துரைசாமி பிச்சைக்காரக் கோலத்தில் இருந்து தன்னைச் சிறைப்பிடித்துத் தூத்துக்குடியிலிருந்து அனுப்பிய ஜேம்ஸ் வால்ஷ் இடமே ஒரு கடிதத்தை உறவினர்களிடம் தரமுடியுமா என்று கொடுத்தபோது "அதை வாங்க மறுத்துவிட்டேன்" என்று வருத்தத்தோடு குறிப்பு எழுதியிருக்கிறான். அந்தத் துரைசாமி என்ன ஆனாரோ, எப்படியானாரோ; இன்று துரைசாமியின் வாரிசுகளாக வந்தவர்கள் எத்தனைப்பேர் இந்த மண்டபத்தில் அமர்ந்திருக்கிறார்களோ எனக்குத் தெரியாது.

வீரப்பரம்பரையின் வழித்தோன்றல் துரைசாமி விடப்பட்ட நாடு மட்டுமல்ல இது. தமிழகத்தின் சோழ மன்னன் இந்தக் கடல் பரப்பில், கடாரம் வரையில் வந்து சென்றான் என்ற வரலாறு நமக்கு உண்டு. இன்றைக்கும் மலேசிய நாட்டின் மாநிலங்களில் ஒன்றாக இருக்கிற – கடா தான் அந்தக் காலத்து கடாரம். அதை நினைவுப்படுத்தும் வகையில் இன்றைக்கும் திருவாரூருக்கு அருகே கடாரங்கொண்டான் என்ற ஊர் தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறது. அந்த ஊர் வழியாகச் செல்லும்போதும் கடாரங்கொண்டான் என்ற பெயரைக் கேட்கும் போதெல்லாம் சோழமன்னனுடைய நினைவு மாத்திரமா வருகிறது? அந்தக் கடாரம் இருக்கின்ற பகுதியிலே என்னுடைய தமிழ் மக்களாகிய நீங்கள் எல்லாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றீர்களே என்கின்ற அந்த நினைவும் அல்லவா எனக்கு வருகின்றது!

சோழ மன்னர்கள் மாத்திரமல்ல; பாண்டிய மன்னனுடைய தூதுவர்கள் ஒரு காலத்தில் ரோமாபுரியிலே அகஸ்டஸ் மன்னனுடைய மாளிகையிலே அத்தாணி மண்டபத்திலே பாண்டிய நாட்டுத் தூதுவர்களாக வீற்றிருந்தார்கள் என்ற வரலாறும் நமக்கு உண்டு.

தமிழ்நாட்டு முத்துக்களை கிளியோபாட்ரா, தான் குடிக்கின்ற மதுவிலே போட்டு குலுக்கிக் குடித்தாள் என்கின்ற அந்த வரலாறும் நமக்கு உண்டு. இதெல்லாம் நம்முடைய வாழ்வின் சிறப்பை, வீரத்தை விளக்கக்கூடிய வரலாறுகள். இப்படி இந்து மகாக் கடலையும் சுற்றியுள்ள கடல்களையும் தாங்கள் நீச்சல் அடிக்கின்ற ஏரிகளாக மாற்றிக்கொண்டு வாழ்ந்தவர்கள்தான் தமிழர்கள். இன்று பல கல் தொலைவு பயணம் என்பதும் – பல கல் தொலைவில் கலாச்சாரத் தொடர்புகள் ஏற்படுவது என்பதும் எளிதாகிவிட்டது. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய தகவல் தொடர்புகள், கலாச்சாரத் தொடர்புகள் உறுதிப்படுத்துவதும், ஒன்றோடொன்று சந்திப்பதும் இயலாத காரியங்களாக இருந்தன. நான் சிங்கப்பூரில் கூடக் குறிப்பிட்டேன். ஆப்ரகாம் லிங்கன் கொலை செய்யப்பட்ட செய்தி இலண்டன் நகரிலே ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் கிடைத்ததாம். தந்திக் கம்பி வசதிகள் இருந்த அந்தக் காலத்திலும் கூட ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் அந்தச் செய்தி கிடைத்திருக்கின்றது. அந்த அளவிற்குத் தகவல் தொடர்பு தொலை

தூரத்தில் இருந்த காலம் மாறி, இன்றைக்கு நான் இங்கே பேசிக் கொண்டிருக்கும்போதே அதை இங்கிலாந்தில் கேட்கலாம். ஒலிபரப்புவார்களோ என்னவோ எனக்குத் தெரியாது; ஆனால் கேட்கலாம்!

உலகம் இன்றைக்குச் சுருங்கிவிட்டது. விஞ்ஞானம் இன்றைக்கு உலகத்தைச் சுருங்க வைத்துவிட்டது. ஒரே உலகம் என்றாலுங்கூட – உலகம் சுருங்கிவிட்டது என்றாலுங்கூட ஒரே உலகம் என்று சொல்வோம். ஆனால் அதே நேரத்தில் நாம் நம்முடைய நாட்டின் எல்லைகளைக் காப்பாற்றுவோம், அழிக்காமல் இருப்போம் என்கின்ற அந்த உணர்வு ஒவ்வொரு நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் இருக்கின்றது.

உலகத்தில் உள்ள மொழிகளையெல்லாம் விட நம்முடைய மொழி மூத்தமொழி. இதை நான் தற்பெருமைக்காகச் சொல்லவில்லை; உண்மையைத்தான் சொல்கிறேன். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்ற பழமொழியின் நிலையிலே இதை நான் சொல்ல வில்லை; உள்ளபடியே இது பொன்குஞ்சுதான். மூத்த மொழிதான் நம்முடைய தமிழ்மொழி.

ஒருமுறை தந்தை பெரியார் அவர்கள், தமிழ் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னபோது சிலர் கோபித்துக் கொண்டு ஒரு மேடையிலே ஒரு முறை நான் பேசும்போது எனக்கொரு சீட்டு அனுப்பினார்கள். பெரியார் இப்படிச் சொல்கிறாரே என்று கேட்டிருந்தார்கள். அதற்கு நான் தந்தை பெரியார் காட்டுமிராண்டி என்று சொன்னது உண்மைதானே என்றேன்; திடுக்கிட்டார்கள். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி இது. அதாவது கல்லும் மண்ணும் தோன்றுவதற்கு முன்பு காட்டுமிராண்டிகளாகத் தான் மக்கள் இருந்தார்கள். அந்தக் காலத்திலேயே இந்த மொழி பிறந்தது என்று நான் கூறினேன். அதைப் போலவே திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கணிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வளவு கீர்த்தி வாய்ந்த இலக்கியங்கள் நமக்குச் சொந்தமானவை. உலகப் புகழ் பெற்ற கிரேக்கப் பாரம்பரியம் இப்போதில்லை. எகிப்திய மொழிக் கலாச்சாரம் இப்போதில்லை. ஆனால் புயலுக்கும், சூறாவளிக்கும், பெரு வெள்ளத்திற்கும், ஊழிக்கும், பூகம்பத்திற்கும், நில நடுக்கத்திற்கும் ஆடாமல் அசையாமல் இருக்கின்ற ஒரு மொழியாக நம்முடைய

தமிழ்மொழி இருக்கிறது. அதனால்தான் இன்னமும் இலங்கையில் தொல்காப்பிய காலத்துத் தமிழைத்தான் பேசுகிறார்கள். நம்மால் இலங்கையை நினைக்கமுடியாமல் இருக்குமா, தமிழில் சொல்லின் முதலில் 'ர' என்ற எழுத்து வரக்கூடாது என்பது இலக்கணம். நானே கூட 'ர' என்றுதான் எழுதுகிறேன். ஆனால் இலங்கையிலே 'ர'விற்கு முன் 'இ' என்ற எழுத்தைச் சேர்த்து இரத்தம் என்று எழுதுகிறார்கள் எனும்போது, அவர்கள் என்னை விட மேலானவர்கள்தான்.

## இரண்டு அம்புகள்!

இந்தத் தமிழில் பல இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அந்த இலக்கியங்களை வெறும் வர்ணனை இலக்கியம், கற்பனை இலக்கியம் என்றில்லாமல், அறிவுரைகளைத் தருகின்ற பல இலக்கியங்களைப் புலவர்கள் மாத்திரமல்ல, அரசர்களே எழுதியிருக்கிறார்கள். அரசர்கள் மாத்திரமல்ல, வணிகப் பெருமக்களும் புலவர்களாக மாறி எழுதியிருக்கிறார்கள். பெண்களே கூடப் பெரும் புலவர்களாக இருந்து எழுதியிருக்கிறார்கள். அகநானூறு, புறநானூறு பாடல்களை எழுதிய புலவர்கள் ஏறத்தாழ 210 பேர்கள் என்ற கணக்கை நான் சிங்கப்பூரில் பேசும்போது குறிப்பிட்டேன். அந்த அளவிற்கு அரசர்களும், வணிகர்களும், மகளிரும் புலவர் பெருமக்களாக இருந்து தமிழை வளர்த்து – தமிழ்ப் பண்பாட்டை வளர்த்திருக்கிறார்கள்.

ஒன்றைச் சொல்கிறேன், நீங்கள் ஒப்பிட்டுப் பாருங்கள். இரண்டு ஒப்பீடுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு அம்புகளைப் பற்றிச் சொல்லப்போகிறேன். ஒரு அம்பு இராம பிரானுடைய அம்பு. இன்னொரு அம்பு ஓரியின் அம்பு. ஓரி என்றால் உங்களுக்குத் தெரியும். கடையெழு வள்ளல்களில் ஒருவன். பாரி, ஓரி, காரி என்பவர்கள் வரிசையிலே ஒருவன். நம்முடைய சாமிவேலு அவர்களுடைய மகன் பெயர் கூட வேள்பாரி தானே! அந்த வரிசையிலே கொல்லி மலை மன்னனாக வாழ்ந்தவன் ஓரி மன்னன். அவனுடைய ஆற்றலை, திறமையைப் பாடுகின்ற புலவன் அவன் ஒரு அம்பை எய்தால் அது என்ன செய்யுமாம்? புறநானூற்றில் கபிலர் பாடுகிறார் :

*'வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி*
*பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்*
*புழற்றாலைப் புகர்க்கலை யுருட்டி யரற்றலைக்*
*கேழற் பன்றி வீழ வயல*
*தாழற் பற்றத் துடும்பிற் செற்றும்*
*வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்*
*புகழ்சால் சிறப்பி னம்புமிகத் திளைக்கும்*
*கொலைவன் யார்கொலோ கொலைவன் மற்றிவன்*
*விலைவன் போலான் வெறுக்கைநன் குடையன்*
*ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்*
*சார லருவிப் பயமலைக் கிழவன்*
*ஓரி கொல்லோ வல்லன் கொல்லோ'*

இதில் ஓரி என்பதுதான் உங்களுக்குப் புரியும். இது புறநானூற்றுத் தமிழ். இதற்கு என்ன பொருள் தெரியுமா? ஓரி மன்னன் வில் வளைத்து நாண் ஏற்றி அம்பெய்தால் அந்த அம்பு முதலில் ஒரு யானையைத் துளைத்து, அதைத் தாண்டிச் சென்று ஒரு புலியை வீழ்த்தி, அந்தப் புலியை ஊடுருவிச் சென்று ஒரு கலைமானின் தலையை உருட்டி, அதையும் தாண்டிச் சென்று உரல் போன்ற பன்றியை வீழ்த்தி, அதையும் தாண்டிச் சென்று தரையில் இருக்கின்ற உடும்பின்மீது சென்று தைக்கும். இதுதான் அதற்குப் பொருள். ஓரி விழா கொல்லிமலையில் நடைபெற்றது. நானும், மறைந்த குன்றக்குடி அடிகளாரும் கலந்துகொண்டோம். இந்தப் பாடலை ஒருவர் பாடிவிட்டுப் பேசும்போது சொன்னார். யானையைத் தாக்கிய பிறகு எப்படி உடும்பின் மீது அந்த அம்பு பாய முடியும்? யானையின் உயரமென்ன, உடும்பின் உயரமென்ன? யானையின் மீது பாய்ந்தால் அம்பு அதற்கு நேராகத்தானே செல்லும்? எப்படி உடும்பின் மீது பாய்ந்தது என்று ஒரு கேள்வியை எழுப்பினார்.

நான் உரையாற்றும்போது அதைப்பற்றிச் சொன்னேன். ஓரி வாழ்ந்த இடம் கொல்லிமலை. கொல்லிமலையின் உச்சியிலிருந்து அம்பெய்தால் – முதலில் யானை நின்றால் அந்த மலைச்சரிவில் யானை, புலி, மான், பன்றி கடைசியாக உடும்பு என்று மேலிருந்து கீழ்நோக்கி அம்பு செல்லும்போது

எல்லாவற்றையும் வீழ்த்தக்கூடிய ஆற்றல் அந்த அம்புக்கு உண்டு என்று குறிப்பிட்டுவிட்டுச் சொன்னேன்.

இன்னொரு அம்பைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா – இராமபிரான் எய்த அம்பு. அது ராவணனைக் குறி பார்த்து எய்யப்பட்ட ராம பாணம் – ராவணனுடைய பத்துத் தலையையும் அறுத்துவிட்டு, அவனைக் கொன்று விட்டு, அவன் உடலைத் துளைத்து, பிறகு அங்கிருந்து புறப்பட்டு தன்னுடைய உடலிலே (அம்பின் மீது) இருக்கின்ற இரத்தத்தைக் கழுவிக் கொள்வதற்காகக் கடலுக்குச் சென்று இரத்தத்தையெல்லாம் கழுவிக்கொண்டு பிறகு அங்கிருந்து புறப்பட்டுத் திரும்பி வந்து ராமனுடைய அம்புறாத்தூளியிலே உட்கார்ந்துகொண்டது என்று கூறப்படுவதை – அந்த அம்பை நம்புகிறீர்களே, இந்த அம்பை நம்பக் கூடாதா என்று கேட்டேன்.

இப்படி இயற்கையோடு எய்த அம்பு ஓரியின் அம்பு. இயற்கைக்கு முரண்பட்ட அம்பாக இராமனின் அம்பு சித்தரிக்கப்படுகிறது. இதை நான் அன்றைக்கு எடுத்துக்காட்டினேன்.

அரசர்கள் புலவர்களாக இருந்துவிட்டு நாட்டு மக்களுக்குத் தேவையானதைச் சொன்னார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

*'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே*
...... ...... ...... ......
...... ...... ...... ......
*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்*
*மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே!'*

எப்படியாவது படிக்கவேண்டும், 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' என்று கூறிய பாண்டிய மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழிய மன்னன், கீழானவன் என்று கூறப்படுகிறவன் படித்துவிடுவானேயானால், அவன்

மேலே இருப்பவனை வெல்வான் என்று எழுதியிருக்கிறான். புலவர்களுக்கும் அரசனாக அவன் வீற்றிருந்தான்.

அரசன் கோப்பெருஞ்சோழன் பாடிய பாடலில் குறிப்பிடுகிறான்.

*'அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து*
*பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்*
*உரவோர் உரவோர்ஆக மடலம்ஆக நாமே...'*

பொருளுக்காக, பணத்துக்காக, செல்வத்துக்காக, ஏதோவொரு இலாபத்திற்காக அன்பையும், அருளையும் பாசத்தையும் விடுத்துவிட்டுப் பிரிந்து செல்பவர்கள் – இவனைப் பிரிந்த காரணத்தினால் நமக்குப் பொருள் கிடைத்தது, ஆகவே நாம் அறிவுடையவர் என்று சொல்லிக் கொள்வார்களேயானால் அப்படி தம்மை அறிவுடையவர் என்று கூறிக் கொள்பவர்கள் அறிவுடையவராகவே இருக்கட்டும், நாம் மூடர்களாகவே இருப்போம். எவ்வளவு பொருள் பொதிந்த பாடல். பொருளுக்காக அன்பையும் அருளையும் விட்டுப் பிரிகிறவன் தாங்கள் பெரிய கெட்டிக்காரன் புத்திசாலி என்று கருதிக்கொண்டால் அப்படிப்பட்டவன் புத்திசாலியாகவே இருக்கட்டும் – நாம் பொருளுக்காக எந்தக் காரியத்தையும் செய்யாமல் மூடர்களாகவே இருப்போம் என்று கோப்பெருஞ் சோழன் அன்றைக்குப் பாடியிருக்கிறான். இது பொருளுக்காக மனைவியைப் பிரிந்து செல்கிற ஒரு ஆணுக்கும் – அவனால் படுகின்ற கவலையின் காரணமான பெண்ணுக்கும் பொருந்தும். இந்த மண்ணுக்கும் பொருந்தும் என்ற காரணத்தினாலேதான் இதை நான் குறிப்பிட்டேன்.

## புதுமையான கருத்துக்கள்

புதுமையான கருத்துக்களை – பொதுவுடமைக் கருத்துக்களை எடுத்துச் சொன்ன புலவர்களும் இருந்திருக்கிறார்கள். பக்குடுக்கை நன்கணியார் என்பவர் அப்படிப்பட்டவர்களில் ஒருவர். உடுத்தியிருக்கின்ற உடையைக் கூட நன்றாக அணியமாட்டார். அவ்வளவு எளிமையான கோலத்திலே உள்ளவர். அவர் கூறுகிறார்.

*'ஓரில் நெய்தல் கறங்க ஓர் இல்*
*ஈர்ந்தண் முடிவின் பாணி ததும்பப்*

*புணர்ந்தோர் பூவணி அணியப் – பிரிந்தோர்*
*பைதல் உண்கண் பனிவார்ப்பு உறைப்ப*
*படைத்தோன் மன்ற, அப்பண் பிலாளன்*
*இன்னாது அம்ம, இவ்வுலகம்*
*இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே'*

– என்று புறநானூற்றில் நன்கணியார் பாடியிருக்கிறார். இதற்கு என்ன பொருள்?

ஒரு வீட்டிலே மகிழ்ச்சியும் இன்னொரு வீட்டிலே துயரமும் – ஒரு வீட்டிலே நல்ல முரசின் ஒலியும் இன்னொரு வீட்டிலே இழவு முரசின் ஒலியும் கேட்கின்ற இந்த வேறுபாடு நாட்டிலே இருக்கலாமா? இருக்கக்கூடாது. இப்படிப்பட்ட வேறுபாட்டை உண்டாக்கியவன் நிலைப் படுத்தியவன் பண்பாளனாக இருக்க முடியுமா என்று கேட்டு இல்லாமை ஒழிய வேண்டும் என்ற அந்தப் பொதுவுடைமைக் கருத்தை இந்தப் புலவர் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

**ஔவையார் காட்டிய தாய்!**

பெண்பாற் புலவர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். சங்கக் காலத்தில் அவ்வையார் மிகச் சிறந்த புலவர். அவருடைய பாடல் ஒன்று. பாடலைச் சொன்னால் அது உங்களுக்குப் புரியாது இருந்தாலும் கூறுகிறேன்.

*'வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்*
*தன்னோர் அன்ன இளையர் இருப்பப்*
*பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்*
*கால்கழி கட்டிலிற் கிடப்பித்*
*தூவெள் அறுவை போர்ப்பித் திலதே'*

*(புறநானூறு – ஔவையார்)*

இந்தப் பாட்டிற்கு என்ன பொருள் என்றால், வெள்ளாட்டு மந்தை போலப் பல இளைஞர்கள் மன்னன் பின்னால் போனாலுங்கூட, மன்னன் எல்லோரையும் விட அதிகமாகத் தேறலை (தேறல் என்றால் ஒருவகையான உணர்வை ஊட்டக்கூடிய பானம்) என்னுடைய மகனுக்குத்தான் கொடுத்தான். அப்படிக் கொடுத்து, அதைக் குடித்த என்னுடைய மகன் இதுவரையில் இன்னும் பாடையில் படுக்கவில்லையே – போர்க்களத்திலே

உயிர் துறக்கவில்லையே என்று வீரத்தாய் ஒருத்தி கவலைப்படுகிறாளாம். இதை அவ்வையார் பாடிக் காட்டியிருக்கிறார். அந்தத் தாயின் மன நிலையைப்பற்றி, இதைப் புரியும்படியாக நான் சங்கத் தமிழிலே எழுதியிருக்கிறேன். அதை உங்கள் முன்னால் வைக்கிறேன் :

*'பனிமுட்டை அடை காக்கும்*
*பசும்புல்லின் தரை மீது*
*மணித் தேர் அசைவது போல்*
*மாதொருத்தி நடந்துவந்தாள்*
*கனித் தமிழ்ச் சொல் உதிர்க்கும் புலமை மிக்காள்*
*காக்கைப் பாடினி பொன்முடியார்க்குத் தமிழில் அவள் அக்காள்!*

*அதியமான் நெடுமானஞ்சி – வேள்பாரி வள்ளல் நாடன்*
*சேரமான் மாவெண் கோவன்,*
*கானப்பேர் தந்த வழுதி – மற்றும்*
*சோழனாம் பெருநற்கிள்ளி*
*ஆகியோர் புகழ்ந்துப் பாடித் தமிழுக்கு*
*அணி பல பூட்டி நின்ற*
*அறிவொளி ஔவை நல்லாள்.*

*காலைக் கதிரவன்போல் கை சிவக்கக் கொடை வழங்கும்*
*காவலர்கள் வாழ்ந்திருந்த தமிழ்நாடு!*
*ஓலை கொண்டொருவன் போர் வந்துவிட்டால்*
*மாலை சூடுகின்ற வேளையென்றும் பாராமல்*
*தோளைத் தொத்துகின்ற பெண்கிளியைப் புறம் விடுத்து,*
*வாளைக் கூரேற்றி வான் நோக்கி நிமிர்கின்ற வீரமறவர்களின் தாய்வீடு*

*பாலை, குறிஞ்சி முல்லை, நெய்தல், மருதமென்று*
*நிலம் வகுத்து வாழ்கின்ற தமிழரிடை*
*சோலைப் பூவினம் போல் தமிழ்க் கவிதை மலரவைத்தாள்.*
*தாயகத்துக் கற்பிறை பிறழாத*
*காதல் சொன்னாள் – களம் சென்றார் வீரம் சொன்னாள்.*

*களத்தில்,*
*சாதல் இன்னே வாட்டுமென்று சென்றுவிட்ட தலைமகனும்*
*சந்தனத்துக் கட்டை போல மணக்கட்டும் இலக்கியத்தில் எனக்கூறிப்*

பாதம்முதல் உச்சிவரை குளிர்கின்ற தாய்க்குலத்தை
எண்ணியெண்ணிப் பெருமை கொண்டாள், தன்
பூவடிகள் புல்மீது அழுந்தியதால் பனித்துளிகள் அழிந்துவிடும்.
போரடியில் நெல்மணி போல் பகைவர்களின் சிரம் வீழும்
அமர்க்களத்தில்!
இதை நினைத்து, நடக்கின்றாள் ஔவையம்மை!
நாமணக்கும் தமிழம்மை! அறிவம்மை! அழகம்மை!

காலூன்றிப் பணியொற்றி வருகின்ற தாயின் முன்
கோலூன்றிப் பிறிதொரு தாய் வந்து நின்றாள்;
அடி தும்பை மலர் முடிதாங்கி
துவண்டுவிட்ட காலிரண்டும் வாழைத் தண்டாய்க்
குளிர்ந்துவரும் நேரத்தில் நீஏன் வந்தாய்
விற்புருவம் என்றுன் ஆளன்
அழைத்திட்ட காலம் போய்
வில்லுருவம் முதுகில் பெற்ற இள நங்காய்!
விழியிரண்டும் வேலென்றார் அன்று;
வழி இருண்டு போனதென்று
கோல்கொண்டாய் இன்று!

தமிழ்நாட்டு முத்தெல்லாம் தீர்ந்ததென்று பல் சுழற்றிப்
பிறநாட்டு வாணிபத்தைச் செய்தவளே!
எங்கெழுந்தாய் ஏன் பதைப்பு
என்ன வாட்டம் எனக் கேட்டுக்
குறும்பு செய்தாள் ஔவையம்மை!
வேலி போட முடியாது இளமைக்கென்று தெரிந்த பின்னும்
கேலி பேசும் உன் போக்குப் புரியவில்லை
என மறித்து அந்தத்தாய் பேசலானாள் –
புண்பட்ட என்னகத்தில் புலமைத் தாயே! உந்தன் கேலி
பண்பட்ட தமிழ் மருந்தாய் பாய்வதை நான் உணருகின்றேன்.

கண்கெட்ட கிழவி எந்தன் கரம்தொட்டு வணங்கிச் சென்ற
காளையை நான் மறக்கவில்லை.

*மண் மூட்டி எழுந்து நிற்கும் மாங்கன்றின் தளிர்தான் மேனி.*
*பொன்கொட்டிக் கொடுத்தாலும் வளையாத மனவலிமை*
*புலிக்குட்டி விளையாடும் அவன் மடியில்*
*அந்த மகன் ஆசை மகன் அணிவகுத்தான்*
*சொந்த மண்ணின் நலங்காக்கப் பணி வகுத்தான்*
*முடிக்கவில்லை முதியவளும்*
*பொறுக்கவில்லை ஔவைக்கு –*
*குறுக்கிட்டாள்.*

*களம் சென்ற மகன் வீரம் புகழ்ந்து கூறி,*
*கண்கலங்காத் தாய் வீரம் காட்டுதலே தமிழர் மரபு*
*முதியவளே மறவர் குல வழக்கிற்குப்*
*புதியவளாய் இருக்கின்றாய் – வியக்கின்றேன் என்றாள்.*
*முழுதும் கேள் பெருமாட்டி*
*பழுதொன்றும் காணமாட்டாய் என் நிலையில்*
*அழுதழுது என் விழிகள் வீங்கியதை மறுக்கவில்லை.*
*பொழுதெல்லாம் கவலையினால் புலம்புவது பொய்யல்ல*
*ஏனென்று தெரிந்துகொள்வாய்*
*நானொன்றும் மறைக்கவில்லை*
*சொல் என்றாள் ஔவை;*
*சொன்னாள் அவள்!*

*கொற்றக் குடை சாயாத கொடித்தேர் மன்னர்*
*கற்றறிந்த பாவாணர் கடமைமிகு மாவீரர்*
*மற்றவர்க்கும் பெருந்தலைவர் அறிவாய் நன்று*
*அவர் படையில் இருக்கின்றோர் பல்லோர் வீரர்!*

*ஆட்டுக்கடா அணிவகுத்துச் செல்வது போல்*
*அரசன் பின் நடப்பதற்குத் தயங்கமாட்டார்*
*ஆயிரம்பேர் மன்னர்க்குப் பின்னால் இருந்தும்*
*அவர் மட்டும்என் மகன்பால் அளவற்ற அன்புகொண்டார்*
*போர்முனையில் ஓய்வெடுத்துக் கிடக்கும்போது*
*தேறல் என்னும் உற்சாகச் சாறுதனைத் திறல்மறவர்*
*அருந்துதற்குத் திரண்டு நிற்பார்.*

*அப்போது மன்னரவர் என் மகனை அருகழைத்து*
*அனைவரினும் அதிகபானம் அளித்து மகிழ்வார்.*
*என்வாட்டம் இப்போது கேட்பாயம்மா!*
*என்புகளைத் தெப்பமாக்கி நரி மிதக்கும்*
*போர்க்களத்தில்*
*தலையுருட்டிப் பந்தாடும் பறவையினம்!*

*அத்தலையில் ஒரு தலையாய் என்மகன் தலையும்*
*இருந்தாலன்றோ இறைவனளித்த தேறலுக்கும்*
*பெருமையுண்டு!*
*மன்னன் அன்பை மிகையாய்ப் பெற்றான்*
*மண்டையில் தேறலும்அதிகம் பெற்றான்*
*மாண்டனன் போரில்; புகழ்*
*பூண்டனன் எனும் காட்சி*
*காண்டிடல் அரிதோ எனக் கலங்கினேன் அம்மா*
*தவறா என்றாள்!*
*அந்தத் தாயாக நான் இல்லையே என்று*
*அகமிக நொந்தாள் ஔவைப் பிராட்டி!'*

இது ஔவையின் அந்தக் கடினமான பாட்டுக்கு எளிய முறையிலே நான் எழுதிய சங்கத் தமிழ் ஆகும்.

**தாயும் மகளும்!**

இன்னொரு பெண்பாற் புலவர் நக்கண்ணை என்பவர், சோழ இளவலைக் காதலிக்கிறாள். அந்தக் காதல் நிறைவேறவில்லை. அதைத் தாய் தடுக்கிறாள். அவசரப்படாதே என்று தாய் சொல்லுகிறாள். அதற்கொரு எளிய நடைக் கவிதை. நக்கண்ணையிடம் தோழி வந்து ஆறுதல் சொல்லித் தேற்றுகிறாள்.

*'ஆய்ந்து பார் ஆரணங்கே*
*காய்ந்து சினந்து கடிந்துகொண்டாலும் அன்னை,*
*தேய்ந்திடு நிலவாய் நின்காதல் ஆகாதிருக்கவே*
*எச்சரிக்கின்றாள் உன்னை!*

*வளர்பிறையாய் உம் காதல் வளர்ந்து*
*குளிர் நிலவாய் அமுதமழை பொழிந்தால்*
*குலமகளே உமைவாழ்த்தாமல்*
*உன்தாயின் மனமென்ன;*
*நிலமகழ்ந்து எடுத்திட்ட*
*இரும்பாகப் போமோ*
*கருவுற்ற காலத்தில் அவள் நாவினைக்*
*கசப்பாக்கித் தொல்லை தந்த போது*
*திருவுற்ற அந்தத் தாய்*
*புளிப்பாலே கசப்பு போக்கி – உன்*
*புன்னகை காணத் தவமிருந்தாள்!*

*ஆலின் இலைபோன்ற அவள் அழகு வயிற்றை – ஒரு*
*சாலின் வடிவாக்கி நீ அலங்கோலம் தந்தபோதும்,*
*உன்கோலம் காண்பதற்கே – அவள்*
*உயிர்வாழ்ந்து கொண்டிருந்தாள்*
*மணி வயிற்றுக்குள்ளிருந்து நீ*
*மாறிமாறி உதைத்த போதும்,*
*வலி பொறுத்துக் கொண்டபடி*
*அணியென்ன பூட்டலாம் அந்தக் காலுக்கென்று*
*ஆயிரம் சிந்தனை செய்திருந்தாள்!*
*ஊதையில் துரும்பெனத் தாயுடல்அலைக்கழித்து*
*உலகில் நீ பிறந்துருண்டு அழுதபோது – இன்ப*
*போதையில் துன்பமெலாம் மறந்திருந்தாள்!*

*இன்றவள், உன்*
*பாதையில் பாடம் சொல்லல் ஒரு பாபமா*
*பூவைத்துப் பொட்டிட்டு முத்தமாரி பெய்தபோது – நீ*
*பூவையாய் ஆவது எப்போதென்று ஆண்டெண்ணிக் கிடந்த*
*அன்னை,*
*கோவையாய்ச் சிவந்த உன் இதழைக்*
*கிளியொன்று*
*கொத்துமென்று தெரியாத பேதையா என்ன?*

*ஆற்றில் இறங்கிக் குளிக்கத் தடை*
*கூறவில்லை அன்னை*
*ஆழம்தெரிந்து இறங்கென்று கூறுகின்றாள்;*
*அவ்வளவே!*

*அதற்குள் நீ அவன் வருமட்டும்*
*வழிபார்த்துக் காத்திருந்து*
*அல்லும் பகலும் உறக்கமின்றி வாடி வதங்கி,*
*உடலைக் கெடுத்துக் கொள்கின்றேன் என்றால்*
*உனை உயிராக நினைக்கின்ற பெற்றோர்*
*ஒப்புவரோ?*
*உன்தோழி கெஞ்சுகின்றேன்; உடனே கேள்!*
*உறங்கிஎழு, உற்சாகமாக இரு!*
*உறையூர் எங்கும் ஓடிவிடாது – உன்*
*அறையூரில் அடங்கத்தான் போகிறது!'*

– என்று இந்தப் பாடலை எளிமையாக்கியதுதான் சங்கத்தமிழ்.

என்னுடைய சுற்றுப்பயணம் குறித்து கவிஞர் வைரமுத்து காலையில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு – சிங்கப்பூர் பேச்சைப் பத்திரிகையிலே படித்துப் பார்த்தேன், நீங்கள் அந்தப் புறநானூற்றுத் தாய் பற்றிய பாடலை அங்கே சொல்லவில்லையே என்றார். அதற்கு நான், ஆமாம் சொல்லவில்லை வேறு பிரச்சினைகள் பற்றிப் பேசினேன் என்று கூறினேன்.

மலேசியாவில் அவசியம் அதைச் சொல்லவேண்டுமென்றார். ஏற்கெனவே ஒரு முறை சொல்லிவிட்டேனே என்றேன். எத்தனை முறை சொன்னாலும் கேட்பார்கள், சொல்லிவிட்டு வாருங்கள் என்றார். சொன்னால் கேட்பீர்களா?

## புறநானூற்றுப் பாடல்

காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்ற புறநானூற்றுப் புலவர் பாடிய பாடல் –

*'நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்தோள்*
*முளரி மருங்கின் முதியோள் சிறுவன்*
*படையழிந்து மாறினன் என்றுபலர் கூற*
*மண்டமார்க் குடைந்தன னாயின் உண்டவென்*
*முலையறுத் திடுவென், யானெனச் சினைஇக்*
*கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்*
*செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய*
*படுமகன் கிடக்கை காணூ*
*ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே!'*

இதில் ஏதாவது உங்களுக்குப் புரிகிறதா? மகன் போர்க்களம் போகிறான். அங்கே முதுகிலே காயம் பட்டு இறந்துவிட்டான் என்று கேள்விப்பட்டதால் வருத்தப்பட்டு அங்கே போய்ப் பார்க்கிறாள். முதுகில் காயம் இல்லை. மார்பில் காயம்பட்டுக் கிடக்கிறான். பார்த்து மகிழ்ச்சி அடைகிறாள். இதுதான் பாடல்! இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், அது நம்முடைய குற்றமே தவிர, எழுதியவர்களின் குற்றமல்ல. அந்தக் காலத்தில் தமிழ் அப்படி இருந்திருக்கின்றது. இன்றைக்கு அதைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் அற்றவர்களாக நாம் இருக்கிறோம். அந்த ஆற்றல் இல்லாத காரணத்தால் அதை எளிய முறையில் மாற்றித் தரவேண்டுமென்பதற்காக நான் எழுதிய பாடல் என்ன தெரியுமா?

இன்றைக்கும் அதைப் பார்க்காமல் என்னால் சொல்ல முடியும். இங்கே வீடியோ படக்காட்சியில் பார்த்தீர்களே – நான் எழுதி, நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் 'மனோகரா' படத்தில் பேசும் வசனம் –

*"பொன்னும், மணியும், மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து, கண்ணே முத்தே, தமிழ்ப் பெண்ணே, என்றெல்லாம் குலவிக் கொஞ்சி, தந்தத்தால் ஆன கட்டிலிலே, சந்தனத் தொட்டிலிலே, வீரனே! என் விழி*

*நிறைந்தவனே! தீரர் வழி வந்தவனே! என்று யாரைச் சீராட்டிப் பாராட்டினீர்களோ, அவனை! அந்த மனோகரனை சங்கிலியால் பிணைத்து சபை நடுவே நிறுத்தி, சந்தோஷம் கொண்டாட வேண்டுமென்ற உங்கள் தணியாத ஆசைக்குப் பெயர் கட்டளையா தந்தையே?"*

– எனக்கு எப்படி இது மனப்பாடம் – அப்போது எழுதியது என்று கருதலாம். எப்படி மனப்பாடம் என்றால் சங்கிலி போல் ஒன்றோடொன்று சொற்கள் கோர்த்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் ஒரு சொல்லுக்குப் பிறகு இன்னொரு சொல் தானாக வந்து சிக்கிக்கொள்ளும்.

அப்படித்தான் 45ஆம் ஆண்டு ஈரோட்டில் பெரியாருடைய அலுவலகத்திலே தொண்டனாக இருந்தபோது குடியரசு பத்திரிகையில் துணையாசிரியராக இருந்தபோது எழுதப்பட்டது தான் இங்கே படித்துக் காட்டினேனே கடினமான அந்தப் புறநானூற்றுப் பாடல், தாய் தன்னுடைய மகன் போர்க்களத்தில் முதுகிலே காயம்பட்டான் என்று வருந்தி, களத்திலே சென்று அவனைத் தேடி மகிழ்ச்சி அடைந்தாள் என்று – இதனை எளிய நடையில் அன்றைக்கு நான் எழுதியது தான் "குடிசைதான் ஒரு புறத்தில்" என்ற கவிதை –

**இதோ அந்தக் கவிதை –**

*'குடிசை தான்! ஒரு புறத்தில் கூரிய வேல்வாள்*
*வரிசையாய் அமைந்திருக்கும் – வையத்தைப்*
*பிடிப்பதற்கும் வெம்பகை முடிப்பதற்கும்*
*வடித்துவைத்த படைக்கலம்போல் மின்னும்*
*புலியின் குகையினிலே அழகில்லை – புதுமையல்ல!*
*கிலியும் மெய்சிலிர்ப்பும் கீழிறங்கும் தன்மையும் தலைகாட்டா*
*மானத்தின் உறைவிடம் – மறவன் மாளிகை*

*இல்லத்தின் வாயிலிலே கிண்ணத்துச் சோறோடு*
*வெல்லத்தைச் சிறிது கலந்து வயிற்றுக்குள் வழியனுப்ப*
*பொக்கை வாய்தனைத் திறந்து*

*பிடியன்னம் எடுத்துப்போட்டாள் பெருநரைக் கிழவியொருத்தி!*
*ஓடிவந்தான் ஒருவீரன் "ஒருசேதி பாட்டி!" என்றான்.*

"ஆடிவந்த சிறுமிபோல் பெருமூச்சு வாங்குகின்றாய்
ஆண்மகனா நீதம்பி! அவசரம் வேண்டாம்!
மூச்சுக்குமூச்சு இடைவேளை ஏற்படட்டும்; பின்,
பேச்சுக்குத் துவக்கம் செய்" என்றாள் – அந்தக்
கிண்டலுக்குப் பேர்போன கிழட்டுத் தமிழச்சி!

"வேடிக்கை நேரமல்ல பாட்டி – உன்
வாடிக்கைக் கேலியை விட்டுவிடு!
மடிந்தான் உன்மகன் களத்தில்" என்றான் – மனம்
ஓடிவந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி ஒருமுறை!
"தாயம் ஆடுகையில் காய்களை வெட்டுவதுண்டு – களமும் அதுதான்
காயம் மார்பிலா முதுகிலா கழறுவாய்" என்றாள்
'முதுகிலென்றான்',
கிழவி துடித்தனள்
இதயம் வெடித்தனள்
வாளை எடுத்தனள்
முழவு ஒலித்த திக்கை நோக்கி முடுக்கினாள் வேகம்.

"கோழைக்குப் பால் கொடுத்தேன்; குப்புற வீழ்ந்து கிடக்கும்
மோழைக்குப் பெயர் போர்வீரனாம்; முன்பொருநாள்
பாய்ந்துவந்த ஈட்டிக்குப் பதில்சொல்ல மார்பைக் காட்டி
சாய்ந்து கிடந்தார் என் சாகாத கண்ணாளன்;
அவருக்குப் பிறந்தானா? அடடா மானமெங்கே – குட்டிச்
சுவருக்கும் கீழாக வீழ்ந்துபட்டான் வெட்கம்! வெட்கம்!
இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் – இங்கு
வீணை நரம்பினிலே இசை துடிக்கும்!
அதுவும் மானம் மானமென்றே முழக்கும்!
மதுவும் சுராவும் உண்டு சாவும்
மானமற்ற ஆரியத்தின் வம்சமா நீ – ஏடா
மறத்தமிழ்க் குடியிலே மாசு தூவி விட்டாய்
மார்பு கொடுத்தேன் – மகனாய் வளர்த்தேன் – தின்று கொழுத்து
திமிர்பாய்ந்த தோள்களெங்கே? தினவெடுக்கவில்லையா? அந்தோ!
வேலுக்கு வழிசொல்ல வகையற்ற கோழையே! என் வீரப்

*பாலுக்கு வழி சொல்வாய்!"*
*என்று கதறினாள், எண்பதை நெருங்கிய ஏழைக் கிழவி!*
*சென்றடைந்து செருமுனையில் சிதறிக் கிடக்கும்*
*செந்தமிழ்க் காளைகளைப் புரட்டிப் பார்த்தாள்; அங்கு*
*நந்தமிழ் நாட்டைக் காக்க ஓடிற்று ரத்த வெள்ளம்!*
*பிணக்குவியலிலே பெரு மூச்சுவாங்க நடந்தாள்.*
*மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சி அடையவில்லை – மகன்*
*பிறந்த போதும் மகிழ்ச்சிக்கு எல்லையுண்டு – அவன்*
*இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்பு காட்டி!*
*இதைக் கண்டாள்; இதயங்குளிர்ந்தாள்.*
*"எதைக் கண்டாலும் இனிக்கவலை இல்லை*
*என்மகன் வீரனாய் இறந்தான்" என்றாள்.*
*"அறுத்தெறிய இருந்தேன் அவன் குடித்த மார்பை, அடடா!*
*கருத்தெரியப் பொய் சொன்ன கயவனெங்கே?*
*வாளிங்கே! அவன் நாக்கெங்கே?...'*

– இதுவே அந்தக் கவிதை.

*(முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் இந்தக் கவிதையை உணர்ச்சிப் பெருக்கோடு மனப்பாடமாகக் கூறியதைக் கூட்டத்தினர் பலத்த கையொலிக்கிடையே வரவேற்று மகிழ்ந்தனர்.)*

ஒன்றை மாத்திரம் நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். வீரத்தமிழ், அழகுத் தமிழ், நளினத் தமிழ், இன்பத் தமிழ் மாத்திரம் இருந்தால் போதாது. அறிவியல் தமிழும் வேண்டும். அதை வளர்க்கின்ற முயற்சியிலே நாம் மென்மேலும் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். அதைத்தான் சாதனைச் செம்மல் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் இங்கே ஒரு கணினிப்பெட்டியை வழங்கும்போது அறிவியல் துறையிலே தமிழை வளர்க்க இந்த முயற்சி என்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதற்காகத்தான் தமிழகத்திலே வருகின்ற பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தமிழ் இணையத்தை விரிவாகப் பெருக்கிட ஒரு பெரு முயற்சி

செய்யப்படுகிறது. ஏற்கெனவே இந்த வட்டாரத்திற்கு வந்த தமிழகத்தின் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் இதுபற்றிக் கலந்து ஆலோசித்திருக்கிறார். இது குறித்து நானும் தம்பி 'முரசொலி' மாறனும் கலந்துபேசி ஒரு குழுவை அதற்காக அமைத்து, உலகத்தில் இருக்கின்ற பல்வேறு தமிழ் அறிஞர்களையும் அழைப்பதென்றும், ஒவ்வொரு நாட்டிலும் இருக்கின்ற முக்கியப் பிரமுகர்களை டத்தோ போன்றவர்களையெல்லாம் அழைத்து தமிழ் இணையம், அறிவியல் தமிழ், தகவல் தொடர்புத் தமிழ், இண்டர்னெட்டில் இன்றைக்கு 'வோர்ல்டு டெல்' மூலமாகத் தமிழகத்தில் ஆயிரம் இடங்களில் கணிணியைப் பொறுத்துவதன் மூலமாகத் தமிழைப் பரப்புகின்ற முயற்சியில் இன்னும் நான்கைந்து மாதங்களில் ஈடுபடவிருக்கிறோம். மேலும் இந்த ஆண்டு 100 பள்ளிகளில் மாணவர்களுக்குக் கணிணி மூலமாகப் பாடம் சொல்லித் தரவிருக்கிறோம். இந்த அதிவேக முற்போக்கான தகவல் தொடர்பு மற்றும் தமிழ் இணையத்தின் முன்னேற்றத்திற்காகத்தான் பிப்ரவரியில் தமிழகத்திலே மாநாடு நடத்தவிருக்கிறோம்.

### யோசனைகளைச் சொல்லுங்கள்

இங்கே என்னை வரவேற்றுக் கவிதை படித்த கவிஞர் பூபாலன் ஒரு வேண்டுகோள் விடுத்தார். உலகத் தமிழ் மாநாட்டை நடத்துங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

மாநாடு நடத்தினால் மாத்திரம் போதாது, தமிழை நம் மனம் நாட வேண்டும், அதுதான் மாநாடாக இருக்கும். அறிவியல் தமிழை நாம் நாடவேண்டும். அதைச் சொல்லும்போது டத்தோ என்னைப் பார்த்துச் சொன்னார். உலகத் தமிழ் மாநாட்டைத் தமிழகத்திலே நடத்துங்கள் – நாங்களும் நிதி திரட்டித் தருகிறோமென்றார். நான் நிதிக்காக மாத்திரமல்ல; அந்த மாநாடு இதுவரை நடைபெற்ற மாநாடுகளைப் போல இல்லாமல் அறிவியல் தமிழை வளர்க்கின்ற மாநாடாக அது சிறந்து விளங்கிட, டத்தோ போன்றவர்கள் தங்களுடைய அரிய யோசனைகளைச் சொல்லவேண்டும்.

மலேசியா, சிங்கப்பூர் நாடுகளிலே வாழ்கின்ற பெருமக்கள், அறிவார்ந்த தமிழகப் பெருமக்கள், புலவர் பெருமக்கள், ஆராய்ச்சியாளர்கள், உலகம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற தமிழ்ச் சமுதாயத்திற்கிடையே இன்றைக்கு மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருக்கின்ற பெருமக்கள் அனைவரும் தங்களுடைய அரிய யோசனைகளைச் சொல்லவேண்டும். அப்போதுதான் தமிழகம் சிறக்கும். தமிழகம் சிறந்தால் உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் எல்லாம் சிறப்பார்கள். என்றென்றும் உங்களுடைய அன்புக்கும் பாசத்திற்கும் கட்டுப்பட்ட கருணாநிதி – உங்கள் முன்னால் அந்தச் சூளுரையை மேற்கொண்டு ஒன்றுபடுவோம், நாம்.

நம்மிடத்திலே இல்லாதது ஒரே ஒரு **மை தான்.** நம்மிடத்திலே **உண்மை** இருக்கிறது. **வாய்மை** இருக்கிறது. **இனிமை** இருக்கிறது. **தூய்மை** இருக்கின்றது. எல்லாம் இருக்கிறது தமிழர்களே! ஆனால் நம்மிடையே **ஒற்றுமை என்கிற மை தான் இல்லை** என்று கூறி, உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்".

